# பூவையும் பொன்னும்

பழைய தமிழ்ப் பழக்கங்கள், கிராமியக் காட்சிகள், டில் பிறந்த தேன் துளிகள்போல் உள்ள பழஞ் )கள் முதலியவைகளைப் படிக்க வேண்டுமானால், ணத்தில் பிறந்தவர்கள் எழுத்தில் படிக்க முடி து. கிராமவாசியின் எழுத்தில்தான் அவற்றைப் க்க முடியும்.

சென்னையில் பல குழந்தைகள் இன்னும் நெல் என்பதையே பார்த்திருக்க மாட்டார்கள். பாராத ஒன்றைப் படித்துவிட்டு, நெற்பயிரை 'நெல்லு காய்க்கும் செடி'யாக நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

கிராமவாசியாகிய பூவை ஆறுமுகத்துக்கு எழுத்தில் பழைமை பழுத்து குலுங்குகிறது; புதுமையும் பூத்துக் குலுங்குகிறது. பாவம், அவர் என்ன காரணத்தாலோ, பூவை ஆறுமுகம் என்றே தன்னை ஆக்கிக் கொண்டு விட்டார். இல்லையேல், அவர் எழுத்துக்குப் பொன்னை யல்லவா வைக்கவேண்டும்!

'ஜாதி ரோஜா' என்ற கதையைப் படித்தேன். இதுநாள் வரை எனக்கு சாதிப்பேச்சே கூடாது என்பதுதான் அபிப்பிராயம். ஆனால் அவர் கதையில் வரும் கதாநாயகியை அழகிய குணமும், குறும்பும் உடையவளாகப் படைத்து அவளையே ஜாதி ரோஜாவாக ஆக்கியிருக்கிறார். இம்மாதிரி ஒரு கதாநாயகியைப் படைத்து 'ஒழுக்கமும் குணமும் தான் உயர் ஜாதி' என்று சொல்லி யிருப்பதால், நானும் இம்மாதிரி சாதியை ஒப்புக்கொள்ளுகிறேன். அந்தப் பெண்ணிடம் புதுமைத் துடிப்பும் இருக்கிறது; பழைமைப் பிடிப்பும் இருக்கிறது.

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

பாவம், அழகி ஒரு நல்ல கதாசிரியை. ஒரு நாவலுக்கு ஐயாயிரம் பரிசை எதிர்பார்க்கிருள். அந்த வரையில் அதைப் பிறர்க்குக் கொடுக்காவிட்டாலு எழுத்தாளன் கற்பனையால் 'அந்தி நிலா'வுக்கு, தானே பரிசை அள்ளிக்கொடுத்திருக்கிருர்! அதோடு இவருடைய நாவலில் அழகி, பிள்ளையார்சுழி போட்டல்லவா நாவல் எழுத ஆரம்பிக்கிருள்! அழகிக்குக் கிடைத்த பரிசு, அதாவது பணம், இவருக்கு எப்போதும் நிறையக் கிடைக்கவேண்டுமென்று, அந்த விநாயகரை நான் பிரார்த்திக்கிறேன்.

நாவலின் கடைசி முடிவைப் படிக்கும்போது, உள்ளம் உருகுகிறது. அந்த ரோஜா மணம் வீசி, இதழ் இதழாக உதிரும் தருணத்தில், கண்களில் நீர் பெருகுகிறது. ஆனால், பிள்ளையார்சுழி போட்ட பலன், பண்புக்கு மாறுதல் இன்றி, அழகியை உயர் நிலையில் வைத்திருக்கிருர் நாவலின் ஆசிரியர்.

'ஜாதி ரோஜா' தங்க எழுத்து; பண்பு, மணம் இரண்டும் நிரம்பியது. பூவை ஆறுமுகம் தங்கமானவர். அவர் எழுத்து படித்தவர்களுக்கு நல்லதைத்தான் செய்யும். இதற்கு நான் பொறுப்பு.

லாயிட்ஸ் ரோடு,
சென்னை-14.

கொத்தமங்கலம் சுப்பு.

# திருமதி அழகியின் இதயம்—என் பேனு

படைப்பின் புதிர் எனக்குத் தெரியாது. ஆனால், படைத்தவனின் படைப்புப் பொருள் நான் என்னும் உண்மையை நான் அறிவேன். ஆண்டவனை நம்புபவன் நான்.

ஆனால், எனக்கு அறிமுகமான திருமதி அழகி தொடக்கத்தில் தெய்வத்தை நம்ப மறுக்கிருர்கள். அந்தக் கதாசிரியை—நாவலாசிரியையின் சொந்தக் கருத்துக்களில் குறுக்கிட எனக்கு உரிமை கிடையாது. அழகியின் வாழ்க்கைக் கதையை எண்ணிப் பார்க்கின்றேன்; அவர்கள் மீது எனக்கு அனுதாபம் பிறக்கின்றது.

நான் வாழ்க்கைப் பாதையில் அதிசயமான பல மனித உள்ளங்களைப் படிக்க நேரிட்டிருக்கிறது. 'நான் மனமறிந்து யாருக்கும் எந்த இன்னலும் செய்யவில்லை; ஆனல் கடவுள் ஏனோ என்னை இப்படிச் சோதனை செய்கிருர்!' என்று அழகி சொல்லியதை நான் காது கொடுத்துக் கேட்டது உண்டு. துயரத்தின் உச்சநிலைக் கட்டத்தில் அம்மாதிரி மனிதர்கள் நிற்கும்போது—அல்லது, நிறுத்திவைக்கப்படும் நேரத்தில், அவர்கள் வடிக்கும் கண்ணீர்த் துளிகள் படைத்தவனை ஏசும் 'சிருஷ்டி ரகசியம்' சூன்யப் பெருவெளியிலே நின்று புன்னகை புரிவதை யாருமே உணர இயலாது. ஆண்டவன் ஆண்டவனேதான்!—மனிதன் மனிதனேதான்! ஆம்; இதுதான் வாழ்க்கை!

மேற்சொன்ன விளக்கம் அழகியின் கதைக்குப் பொருந்தும். அழகியின் காதல்—முதற்காதல் புனி

தம் நிறைந்தது. ஆனால், அது வெற்றி கொள்ள வில்லை. அழகியின் துயரக்கதை அவர்களது திருமணப் பந்தலிலேயே இடம் பிடித்துக்கொள்கின்றது. கதா சிரியை அழுகிருர்கள்; அழகியைக் கைத்தலம் பற்றிய அழகேசனே எக்காளச் சிரிப்புச் சிரிக்கிருர். 'விதியை நான் வென்றுவிட்டேன் ; விதி என்னிடம் தோற்று விட்டது!' என்று மனப்பால் குடிக்கிருர்.

மங்கலநாண் அறிமுகம் செய்வித்த அழகி—அழ கேசன் வாழ்வு புதுத் திருப்பம் அடையவேண்டுமே யென்று அல்லும் பகலும் நெஞ்சம் நெக்குருகப் பரம் பொருளை வேண்டினேன். அலகிலா விளையாட்டுடை யானை நம்பும் பண்பு பிறக்கவேண்டுமேயென்று அழகி யின் தரப்பில் நின்று பிரார்த்தனை செலுத்தினேன். என் எண்ணம் நல்ல சொல்லை எழுதிக் காட்டியது. நான் ஆனந்தக்கடலாடினேன். திருமதி அழகி கதை யின் இறுதிக் கட்டத்தில் — அதாவது, அவர்களது புது வாழ்வின் தொடக்கப் பகுதியில் ஆண்டவனைத் தூய இதயத்தோடு அண்டுகிருர்கள்.

“சாகா வரம் அளிக்கும் நின் கரம் தீண்டியதும், என் ஏழை உள்ளம் இன்பத்தின் எல்லை தாண்டி, நின் வண்மையைப் பாட ஆரம்பிக்கிறது,” என்ற 'கீதாஞ் சலி'யின் வாக்கு என்னை மெய்ம்மறக்கச் செய்கிறது.

அழகி தமிழ்ச்சாதிப் பெண் ; சாதி ரோஜா—ஜாதி ரோஜா !

'உமா'வில் தொடர்கதையாக வந்தபோது 'ஜாதி ரோஜா'வின் முதல் மடலின் மணம் நுகர்ந்து நண்பர் கள் பலர் என்னைப் பாராட்டினுர்கள். கதைக் கருவில் 'தனித்தன்மை' இருப்பதை உணர்ந்தார்கள்; என் நம் பிக்கை ஆனந்தம் அடைந்தது.

அந்த என்னுடைய நன்னம்பிக்கை இப்போது இரட்டிப்பு மகிழ்ச்சி எய்தும். 'ஜாதி ரோஜா' நூல்வடி

வுக்குள் தன் மணத்தைப் பரப்ப ஆரம்பிக்கிறது. இதன் சுகந்தம் இப்போது மேடையிலும் பரவத் தொடங்கியிருக்கிறது; திரையுலகத்திலும் ரோஜாவின் எழில் படம் காட்டப்படும் என்பது என் நினைவு. 'பூவை' என்ற இரண்டெழுத்துப் பெயரில் நான் என் றென்றும் நம்பிக்கை பூண்டவன்.

**ம**திப்பிற்குரிய திரு கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் என்னை இதயபூர்வமாக வாழ்த்தியிருக்கிறார் கள்; அவர்கள் பல்கலைச் செல்வர்; கலைமணி. அவர் களது நல்லாசி எனக்குப் புது வாழ்வைக் கொடுக்கும் என்ற தன்னம்பிக்கை வளரத் தொடங்கியிருக்கிறது. அவர்களுடைய அன்புக்கு முன்னே பணிவுடன் கை கூப்பித் தலை வணங்குகிறேன்.

'உமா'—என்னுடைய இலக்கிய வாழ்வில் உண் மையான-சிறந்ததொரு திருப்பத்தை உண்டாக்கித் தந்த தாய் அவள்; 'உமா'வை என் வாழ்நாளிலே என்றென்றைக்குமே மறக்கமுடியாது; 'பூவை' என்ற பெயரைப் பரவச்செய்த அன்னையல்லவா?

என் எழுத்துக்களில் நல்லெண்ணமும் நம்பிக்கை யும் கொண்டு எனக்குச் 'சுதந்தரம்' அளித்து வருபவர் என் அதிபர்—'உமா' ஆசிரியர் திரு ஜி. உமாபதி அவர் கள். அன்னாரது பாசத்திற்கும், அன்புக்கும் இந் நவீனத்தைக் காணிக்கை யாக்குகின்றேன்.

'ஒளவை நூலகத்'தினரை நான் எங்ஙனம் மறக்க முடியும்?—என் இதயத்தைத் தமிழன்பர்கள் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தவர்கள் அவர்களேயல்லவா? வணக்கம்.

'உமா'
14—1—1958

பூவை எஸ். ஆறுமுகம்

# ரோஜா இதழ்கள்

## பகுதி ஒன்று


| எண் | அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பாலும் தேனும்! | ... | 9 |
| 2. | நீலக்கடல் அலை | ... | 13 |
| 3. | நல்லதோர் வீணை செய்து...! | ... | 20 |
| 4. | 'சொல்லடி பராசக்தி!' | ... | 26 |
| 5. | "ஒரு வரம் தா!" | ... | 30 |
| 6. | புரட்சிப் பெண் அழகி | ... | 38 |
| 7. | நல்லவர்கள் வாழ்வதில்லை | ... | 42 |
| 8. | கண்ணீரின் இதயம் | ... | 49 |
| 9. | "நானே, புது நிலவு" | ... | 56 |
| 10. | பாலைவனத்தில் சுடர் விளக்கு | ... | 62 |
| 11. | ஆறு புகைப்படங்கள் போட்ட ஒரு விடுகதை | ... | 67 |
| 12. | 'கன்னி வயதில் உன்னைக் கண்டதில்லையோ?' | ... | 71 |


## பகுதி இரண்டு


| | | | |
|---|---|---|---|
| 13. | சிரிக்காத ரோஜா சிரித்தது | ... | 76 |
| 2. | 'அந்தி நிலா'வும் அந்தி நிலாவும்! | ... | 81 |
| 3. | "எனக்கு நானே விடுகதை ஆனேன்!" | ... | 84 |
| 4. | "ஆம்; அழகிக்கு ஓர் அயோத்தி!" | ... | 89 |
| 5. | எழுதிச் செல்லும் விதியின் கை | ... | 94 |
| 6. | யார் இந்த முரளி...? | ... | 102 |
| 7. | மாங்கல்யத்தின் உயிர் | ... | 108 |
| 8. | அழகி! இதோ, எரிமலை...புயல்...பூகம்பம்! | ... | 113 |
| 9. | இறங்காத விஷம்—மாருத சாபம் | ... | 121 |
| 10. | 'அழகி வெறும் ரோஜா அல்ல—ஜாதி ரோஜா!' | ... | 129 |
| 11. | அந்திச் செவ்வானம் அப்போதே மழை! | ... | 136 |
| 12. | தெய்வத் திருவிளக்கு ஏற்றி வைத்தாள்! | ... | 148 |

# ஜாதி ரோஜா

## பகுதி—ஒன்று

## முள்

### 1. ~~சாவும் சிதறும்!~~

'கெட்டி மேளம் !...கெட்டி மேளம் !'

மணமகள் நாணித் தலை குனிந்தாள் ; மூன்று முடிச்சுக்கள் இடப்பட்டன.

ஒளிப்படக் கருவிகள் சிரித்தன !

சோமநாதன் அவர்களை ஐந்தாறு பேர் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு வந்து உட்கார்ந்தார்கள். "கற்பகாம்பிகை !......என் மகனையும் மருமகளையும் நல்லபடியாகக் காப்பாற்று...... !" என்று முணமுணத்தார்.

உறவும் நட்பும் மலர் இதழ்களை உரிமையுடன் வாரி இறைத்தன. அவனையும் அவளையும், 'அவனுடைய அவளாக'வும், 'அவளுடைய அவனாக'வும் பதிவு செய்ய, நாலு நாட்கள் முன்னதாக வந்திருந்து திருமணத்துக்குச் சீர் சேர்த்துக் கொடுத்த பெரியவர்களுக்கு மகிழ்ச்சி நிலை கொள்ளவில்லை—வாழ்ந்து காட்டியவர்கள் ஆயிற்றே ?

மணமகன் மணமகளைப் பார்த்தான்; நகைக் கீற்று ஒன்று பளிச்சிட்டது. 'விதியை நான் வென்றுவிட்டேன்; விதி என்னிடம் தோற்றுவிட்டது!' என்ற அறிவிப்பு குரல் கொடுத்தது.

அவன் இப்பொழுது 'முழு மனிதனாக' ஆகிவிட்டான்...!

மணமகள் குனிந்த தலையை உயர்த்தவே யில்லை. வெட்கமா? நல்ல வெட்கம்! பாவம், வெட்கம் பூராவும் அப்படியே வியர்வையாக வழிந்தோடி விடும்போலிருக்கிறதே...?

மணப் பந்தலில் சிலர் வாய்ப்பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள், ஒரு பக்கம். அன்றைய அரசியல் உலகம் அவர்கள் முன் பம்பரமாகச் சுற்றியது; சுழன்றது. அவர்கள் அந்த உலகத்தின் பாதத்தில் நின்று கொட்டாவி விட்டதுடன் சரி! அமரர்கள் சிலருக்குப் புதுவாழ்வு கொடுப்பதில் ஒரு கும்பல் ஈடுபாடு செலுத்தியிருந்தது; உயிரோடிருப்பவர்களுக்கு அமரத்வம் அளித்தது ஒரு கூட்டம்—அவர்கள் எழுத்தாளர்கள். ஒரு பகுதியில் சங்கீதத்துக்கு யோகம் பிறந்தது. நாகசுரம் மறந்துவிட்ட பாட்டை நினைவூட்டி, 'ராக சர்ச்சை' புரிந்து கொண்டிருந்தனர் மூவர்—அது நாதபரம்பரை. ஆமாம்; அது பெண்டிர் குழாம். நாகரிகம் வளர, தாங்கள் வாழ்வதில் 'பற்று'க் கொண்டவர்கள் ஓரிருவர்; 'பெண்மை' நிலைக்க, பெண்களாகக் காட்சியளித்தனர் மிகுதிப் பேர்.

"அழகி அதிர்ஷ்டக்காரி!"

"அம்பிகைக்கு அவள் எடுத்துப்போட்ட பூ நல்ல பூ!"

"கண் நிறைந்த கணவர்!"

"கை நிறையப் பொன்!"

"அழகி—அழகுக்கேற்ற பெயர்!"

"பெயருக்கேற்ற அழகு!"

"முதல் பிரம்மாவுக்கு இந்த இரண்டாவது பிரம்மா மீது அக்கறை இல்லாமல் இருக்குமா, என்ன?"

"இலக்கணம் தவறுகிறது...!"

"ஓ. கே!...புரிகிறது...!"

"அம்மணி பூங்குழலி, ஏதேது நீ கூட நம்ப அழகி மாதிரி கதை கிதை எழுதப் போறீயா, என்ன? உன் அப்பா கிட்டே சொல்லி இப்பவே ஒரு நூறு ரூபாய்க்கு வெறும் ஒரு அணா ஸ்டாம்பாக வாங்கி ஸ்டாக் பண்ணிப்பிடு. உங்கிட்டே பாதியும் பத்திரிகைக்காரங்க கிட்டே பாதியுமாகப் பிரிச்சு அனுப்ப வேணுமா?... அதுமட்டும் போதாது. வெள்ளைத் தாள் வேறே வேணும்!...ஒரு பேல் பேப்பருக்கும் ஆர்டர் கொடுத்திடச் சொல்லு. அப்படியே

கட்டைப் பேனு நூறு, மைபாட்டில் நாலு டஜன், குண்டூசி ஆயிரம், அப்புறம்....?..."

"உன் தலே... !"

"ஓஹோ, அவசியந்தான் உனக்கு. ஏன் தெரியுமா? உனக்கு 'மேல்மாடி' காலி...இந்த ரகசியம் எனக்கு மட்டுந்தான் இதுவரை தெரிஞ்சிருந்துச்சு. இப்போ முகூர்த்த நேரம் பார்த்து அதையும் அம்பலப்படுத்தியாச்சு. கொஞ்சம் ஜாடை காட்டியிருந்தா, இதையுங்கூட ஒரு விழாவாக நடத்தியிருக்கலாமே ?..."

"அல்லி, தயவு செய்து நீ வாயை மூடமாட்டே ?..."

"உத்தரவு தாயே, உத்தரவு !...டி.எஸ்.பி. பொண்ணுகிட்டே இதுக்கு மேலேயும் உரிமை கொண்டாட முடியுமா ஒரு ஏழை வாத்தியார் மகளாலே ?"

"பூங்குழலி, இது அரசியல் ஞானேதயமா ? இல்லே, பொருளாதார ஞானேதயமா ? இல்லே, இலக்கிய ஞானேதயமேதானு ?"

"கோமதி, வாடி போகலாம் அழகியிடம் சொல்லி விட்டு...!"

தேங்காய் பழம், வெற்றிலே பாக்குப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. உறைகள் நன்றி மொழிந்தன—திருமண வீட்டாரின் சார்பிலே.

தித்திக்கும் தேனும் பாலும் கைக்குக் கை மாறின. சுவைத்த உதடுகள் நன்றி கூறின—தம்பதிகளுக்கு.

ரோஜாப்பூக் கும்பலுக்குப் பிரிவினே ஆசை வந்துவிட்டது. நான் முந்தி, நீ முந்தி ' என்று போட்டா போட்டி.

பங்களாவையும் கல்யாண மண்டபத்தையும் நோட்டம்விட்டான் கரிகாலன். தமிழ் மறை இல்லற இயல் போதித்தது.

ஒலி பெருக்கி பேசத் தொடங்கியது : ' திருமணத்திற்கு வந்திருந்து சிறப்பித்த அன்பர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள்—பரிசுகள் வழங்கிய அன்பர்களுக்கும் மணமகன் அழகேசன் சார்பிலும் மணமகள் அழகி சார்பிலும் நன்றியைத் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றேம்.'

நன்றியை ' வரவு ' வைத்துக்கொண்ட திருப்தி ஜனக் கும்பலுக்கு. அது கலேயத் தொடங்கியது. மயிலாப்பூரில் சந்தடி குறைய ஆரம்பித்தது.

வானத் தாம்பாளத்தில் சிதறியோடிய சிந்தூரக் குழம்பு காய்ந்து கொண்டிருந்தது.

“ மிஸ்டர் கரிகாலன், புறப்படலாமா ?” என்ற குரல் கேட்ட வுடன், கரிகாலன் திரும்பிப் பார்த்தான் ; எழுந்தான் ; புறப் பட்டான்.

“ கரிகாலன், உங்களுடைய ‘ ரசிகமனம் ’ இப்போதுதான் நிம்மதிப்பட்டிருக்குமென்று நம்புகிறேன் ,” என்ருன் சோழன்.

“ ஆமாம் ; இந்த ஐந்தாறு வருஷமாக என் இலக்கிய மனத்துக் குக் கதை விருந்தளித்து வந்த திருமதி அழகியை நேரில் காண முடிந்ததே ஒரு பெரிய அதிர்ஷ்டந்தான் ; அதைவிடப் பெரிய பாக் கியம், என்ரோ எழுதிய என் பாராட்டுக் கடிதத்தை ஞாபகம் வைத் துக் கொண்டு எனக்கு அழைப்பு அனுப்பியது !”

“ அதைவிடப் பெரிய விஷயம், கதாசிரியையின் கல்யாணத் தைக் கண்டு களித்தது...அப்படித்தானே, கரிகாலன் ?”

“ ஆஹா !”

அந்த ஒரு நாள்—

கரிகாலன் எண்ணிப் பார்த்தான் : ‘ தமிழ்த் தொண்டு ’ பத் திரிகையில் அழகியின் கதை யொன்று வெளியாகி யிருந்தது. ‘ புதுமைப் பெண் ’ என்று கதைக்குத் தலைப்பு. பெண் சுதந்தரம் வேண்டிப் புருஷனுடன் வாதாடி வெற்றி பெற்றதாகக் ‘ கதை நாயகி ’யைச் சித்திரித்தாள் ஆசிரியை. கரிகாலன் பாராட்டுத் தெரி வித்து, அந்தப் பத்திரிகையின் மேற்பார்வையிட்டு அழகிக்குக் கடிதம் எழுதினன். பதில் வந்தது.

தஞ்சை—ஜனவரி, ’54.

“ அன்புடையீர், வணக்கம்.

தங்களது பாராட்டுக்கு ரொம்பவும் நன்றி. எனக்கெனத் தனித்த சில குறிக்கோள்கள் உள்ளன. அவை என் கதை உறுப் பினர்கள் வாயிலாக எதிரொலிக்கின்றன. பாரதியின் ‘ புதுமைப் பெண் ’ எனக்கு நிரம்பவும் பிடித்தவள் !

இப்படிக்கு,
**அழகி.”**

மயிலாப்பூரினின்றும் ஜார்ஜ் டவுன் பிரிந்தது !

அதே சமயத்தில்—

‘ திடுதிப் ’பென்று மணப்பந்தலில் பரபரப்பு ஏற்பட்டது. அதற்கு ஈரம் இருந்தது. அது சொன்னது : “ பாவம், இருந்திருந் தாற்போல, அழகிக்கு மயக்கம் வந்து விட்டது. சுயநினைவே இல்லை யாம்...கல்யாண வீடு அமளிதுமளிப்படுகிறது....பாவம்...!”

## 2. நீலக்கடல் அலை

கண்ணுமூச்சி என்றால் ரொம்பவும் இஷ்டம். அதற்காகத்தான் அந்த வெண்பஞ்சுக் கும்பல்கள் அழகு நிலாவை அண்டி அண்டிச் சென்றன. நிலவுக்கு நாடாறு மாதம் என்றால்தான் கொஞ்சம் தென்பு வரும். இந்தக் குறைந்த வேளையில், மேகங்களின் இம் மாதிரி நச்சரிப்பு என்றால், பிறைமதிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். ஆகவேதான், அது விலகி விலகி ஓடியது.

கரிகாலன் அந்தக் கடுதாசியைச் சுருட்டிச் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான்; மூளை சூடேறி விட்டது; புத்தி குழம்பி விடும் போலிருந்தது. பொல்லாத சிந்தனைகளுக்கு மணியம் கொடுத்துவிட்டால், நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டக் கேட்கவேண்டுமா? தன் நினைவு சிலிர்த்தெழுந்தது. அவன் என்றால், அதற்குக் கடமைக்கும் அப்பாற்பட்ட அன்பு. எழுந்தான்; கடல் மணலைச் சுருட்டிக் கொண்டுபோக அவனுக்கு உரிமை கிடையாதல்லவா? எனவே, நின்றது நின்றபடியே, சட்டையை உதறினான்; பையை உதறினான்; கைக்குட்டையையும் சேர்த்து உதறினான். உடம்பைச் சோம்பல் முறித்துக்கொண்டான். ஒளிக்கதிர்கள் சில அவனுடைய முகத்தில் கண்ணுமூச்சி விளையாடின; சற்றுமுன் மணல் பட்டபாடு தெரியும் போலிருக்கிறது—பைய நழுவி ஓடிவிட்டன.

கரிகாலன் மெல்ல நடந்தான்; சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு ஈ, காக்கை இருக்கவேண்டுமே? ஊஹூம்...! அவன் இப்போது தனி மனிதன்—ஆதி மனிதன் அல்ல!

முன்னம் ஒரு நாள் ஊழிக்கூத்து ஆடினாராமே, ஆண்டவன்? ஒருகால், இந்த அலை கடலைத்தான் ஆடரங்காக ஆக்கிக் கொண்டாரோ?—சாந்தியைப் பிறப்பிக்கும் சாந்தி பூமிதான் அவரது கூத்து மேடை என்று தெரிந்தவர்கள் சொல்வதுண்டு. பின், ஏன் இப்படி இந்தக் கடல் சினந்து சீறி எழுகிறது? ஓஹோ...! பொங்கும் உள்ளங்களுக்கு அமைதி தந்த பிறகு ஏற்பட்ட வறட்சியோ?... ஆனந்த வெறியோ?

காலத்தின் மணல் வெளியில் பதிந்த அடிச்சுவடுகள் ஈரம் காய்ந்து உலர்ந்து போய்க்கொண்டிருந்தன.

கடற்கரையின் பாதத்தில் அடையாளம் பரப்பிக்கிடந்த நிழல்—மனித நிழல் முன்னேறியது.

'சடக்'கென்று நின்றான் அவன்—'ஸ்கிப்பிங்' விளையாடும் பாப்பாவின் பாதத்தில் கயிறு அகப்பட்டுக் கொண்டால், அப்படியே குழந்தை தடுமாறி மலைத்து நின்றுவிடுமே, அதுமாதிரி.

பாதங்கள் கண்களுக்குச் சேதி சொல்லின. பார்வையிலே ஒரு மின்னல். மூளை விழித்துக் கொண்டது. முந்திரிக் கொட்டைக்கும் இந்தக் கண்களுக்கும் ஏக ஒற்றுமை.

'ஆ, டம்பப்பை ஒண்ணு!... புஸ்தகம் ரெண்டு...! உதிர்ந்த ரோஜாப் பூக்கள்...!' என்று கரிகாலன் தனக்கு மட்டும் கேட்கும் அளவுக்குக் குரலைச் சரிப்படுத்தியவாறு சொல்லிக் கொண்டான். அவனுக்கு மண்டையில் கனம் ஏறியது; கைகளில் பாரம் ஏறியது; வழி மிதித்து வழி நடந்தான்.

பட்டணத்தின் கண்களிலே தூக்கம் ஊஞ்சலாடியது; போதை அம்மானை கொட்டியது.

காலக் கடிகாரத்தில் மட்டும் 'மெயின் ஸ்பிரிங்', 'பாலன்ஸ் ஸ்டாப்' இவற்றுக்கெல்லாம் பழுதே ஏற்படாதோ?...'அவன்' புத்திசாலியாய்த் தான் இருக்க வேண்டும்!

டங்க்...டங்க் – ! இரண்டல்ல— மணி பத்து. தெருவிளக்கு சிந்தித்துக் கொண்டிருந்தது.

கரிகாலனின் நெஞ்சில் 'டக், டக்' என்று ஒரு சத்தம் புறப்பட்டது. பரிசோதனைக்குழாயில் சோதனைக்கு ஆளாக்கப்படும் திரவப் பொருள் சூடுபட்டுக் கொதிக்கும் அல்லவா, அம்மாதிரி ஒரு நிலை அவனுள் எழுந்தது. கைகள் மாத்திரமல்ல, உடம்பு பூராவுமே பயம் காட்டியது. அந்த டம்பப்பை, புத்தகங்கள், பேனா— பையைப் பிரித்தான். அழகுச் சாதனங்கள் இருந்தன. பெண் ஒருத்தியின் பெயர் காணப்பட்டது. திருமணப் பரிசாக இருக்க வேண்டும். முதலில் இருந்த புத்தகத்தைப் புரட்டினான். அவனுக்கு 'திக்' என்றது. முகப்புப் பக்கத்தில் முகமன் கூறி ஓடின வரிகளுக்குப் பேசத்தானா தெரியாது?

"**மணமகன் திரு அழகேசன் — மணமகள் திருமதி அழகி:**

வாழ்க்கை என்பது முள் ரோஜா என்கிறார்கள். இருந்து விட்டுப் போகட்டுமே? முள் இல்லையென்றால், ரோஜா ஏது? 'முள் ரோஜா'வில்–'ரோஜா முள்'ளில் 'முள்' என்னும் அந்த ஒரு சொல்லை மட்டும் நீக்கும் சக்தி, வாழ்க்கையை அமைத்துக் காட்டுபவர்களின் கையில் அல்லவா இருக்கிறது? முள் நீங்கினால், அப்புறம் ரோஜாதான் வாழ்க்கை; வாழ்க்கையே ரோஜாதான்!

அன்புடன்
**கரிகாலன்.**"

கல்யாணக் கொட்டகையில், 'பாவம், இருந்திருந்தாற்போல அழகிக்கு மயக்கம் வந்துவிட்டது; சுய நினைவே இல்லையாம்!' என்று எதிரொலித்த வார்த்தைகள் காதுகளில் 'டேரா' போட்டன; கண்களில் அழகி தோன்றினாள், மாலையும் கழுத்துமாக— முல்லை முறுவலும் முதற்பிறையுமாக. குழப்பமான எண்ணங்களைத் தான் மனத்திற்குப் பிரதிபலிக்கத் தெரியுமோ? இந்த மனம் பலே சந்தர்ப்பவாதி!

ஜார்ஜ் டவுன் அவனை 'வா, வா' என்று ஜாடை காட்டி, மோடி பண்ணிக் கூப்பிட்டது. நடந்தான். பாதரஸ விளக்கு மாதிரி ஒளிர்ந்தது நிலவு. 'வால்யூம்' சரிப்படுத்தப் படுவதற்குள் ரேடியோ 'கர் புர' வென்று ஓலமிடும் பாவனையில் கடல் முழக்கம் செய்தது.

மெரினா நீந்தும் குட்டைக்கு 'இரவு வணக்கம்' தெரிவித்தான். மாகாணக் கல்லூரிக் கட்டடத்துக்கும் சேர்த்துத்தான். வழி வளர்ந்தது. நடந்தான்; நடந்து கொண்டே இருந்தான்.

பிறந்த மண்ணில் பிஞ்சுக்கால் பதித்துக் குறுநடை பழகத் துடிக்கும் பிள்ளைக்கனி பின்னி விழுவதுண்டே?—அந்தப் பாணியில் அவன் கால்கள் தடுமாறின. விழப்போனான். பார்வை தரைக்குச் சாடி ஓடியது. திரைப் படங்களில் தொற்றிக் கொண்ட பெருமையில் அந்தப் பாலம் கர்வம் ஏறிக் காணப்பட்டது.

மறுகணம், "ஆ!" என்று வீரிட்டான் கரிகாலன்.

மந்திர சக்தி வாய்ந்த இந்த இரவு வேளையிலே, ஆயிரக்கணக்கான கனவுகள் உருப் பெற்றுக் கொண்டிருக்கும் இந்தப் பொழுதிலே, அழகே உருவான மோஹினிப் பெண் ஒருத்தியா ?

அவனுக்குத் திக்கும் புரியவில்லை; திசையும் மட்டுப்பட மறுத்தது. கை நொடிப்பொழுது கடந்திருக்கும். "ஆ!...அழகி!" என்று கூப்பாடு போட்டான். நினைவு தடம் புரண்ட நிலையில் அவள் தரையில் சாய்ந்து கிடந்தாள். கல்யாணப் பெண்ணுக்கு மயக்கம் வந்துவிட்டதாக எழும்பிய பேச்சும் சிந்தைக்குள் முடங்கிக் கொண்டது. சற்றுமுன், மெரினாவின் விளிம்பில் கிடந்தெடுக்கப்பட்ட அந்தப் பை, பேனா, புத்தகம் முதலியனவற்றையும் மனக்கண் எடுத்துக் காட்டிற்று. மனக்கண் இருக்கையில், இந்த 'டெலிவிஷன்' எதற்காம்?

அவளுடைய முகத்திரை தெப்பமாக நனைந்து கிடந்தது. பண்பைக் காக்கத் துடித்த மார்புச் சேலைக்கு அரண் கட்டிக் காத்துக் கிடந்தது அந்த மங்கல நாண். சேலைத்தலைப்பில் அங்கங்கே தண்ணீர் சொட்டியது.

அவளுடைய பூங்கரத்தில் தவழ்ந்து கிடந்தது ஒற்றை ரோஜாப் பூ. மெல்ல அதை எடுக்க எண்ணினான். அதன் மூலமாவது அவள்

விழித்துக்கொள்ளலாம் என்ற நினைப்பு அவனுக்கு. ரோஜாப்பூ அவன் கைக்கு மாறியதுதான் கண்ட பலன். அவள் அவளாகவே இருந்தாள்—அழகியாக ஆகவில்லை. கையில் சுழன்ற பூ மூக்குக்குத் தாவியது.

அடுத்த விநாடி—

கரிகாலன் மயங்கிச் சுருண்டு விழுந்தான்.

மறுபடி அவன் கண் விழித்த சமயம், வழியோரத்தில் சைக்கிள் ரிக்ஷா ஒன்று நின்று கொண்டிருப்பதைக் கண்டான் அவன். கண்களைத் துடைத்துக்கொண்டு, வியர்வைத் துளிகளைத் தூர எறிந்தவாறே, "ஏம்பா, செம்புதாஸ் தெருவரைப் போகணும். புறப்பட்றியா ?......" என்று படபடப்புடன் கேட்டான்.

"அம்மாவுந்தானே, சாமி?" என்று 'பெரிய' சந்தேகத்தைக் கிளப்பித் தொலைத்தான் ரிக்ஷாவாலா.

"ஆமா...ஆமா...துட்டுக்கு யோசிக்காதே! நான் பட்டணத்துக் காரன்தான்...புறப்படு......!" என்று துரிதப்படுத்தினான் கரிகாலன்.

செம்புதாஸ் தெரு—பராக் ! பராக் !

இரை தின்ற பாம்பை ஞாபகமூட்டிய பாணியில் இருந்தது 'பர்ஸ்'—இப்போது ஓரளவு குறைந்தது.

"அக்கா, அக்கா!" என்று சத்தம் போட்டான் கரிகாலன். ரோந்து சுற்றி வந்த கூர்க்கா அவனையும் அந்தப் பெண்ணையும் ஒரு கணம் நின்று பார்த்து விட்டு நகர்ந்தான்.

வாசற் கதவுகள் வழிவிட்டன.

"அக்கா..." என்றான் கரிகாலன். மறுபடியும் அவனுக்கு உடம்பை என்னவோ செய்தது. எண்சாண் உடம்பு கூனிக் குறுகியது.

அக்காள் காரியின் அழகிய நெற்றிப் புருவங்களின் கறுமையில் அதிசயக் குறிகளும் வினாக் குறிகளும் தோன்றின.

"இந்தப் பெண் கல்யாணத்துக்குத்தான் காலையிலே நான் போயிருந்தேன். பொழுது பட்டதும் அங்கிருந்து புறப்பட்டேன். அந்தப் பெண்ணுக்கு மயக்கம் வந்து விட்டதாகப் பேச்சு கிளம்பியது. என் மனசு வேதனைப்பட்டது. நான் கிளம்பி வந்துகொண்டிருந்தேன். வழியிலே இந்தச் சாமானெல்லாம் கிடந்துச்சு...அப்புறம் பாலத்துக் கோடியிலே இவங்க மயக்கமாய்க் கிடந்தாங்க...என்ன

விஷயம்னு தெரியல்லே...ரிக்ஷாவிலே கொண்டாந்தேன்..." என்றான் கரிகாலன்.

அவள் சிரிப்பு எந்தக் குறிப்பையாவது சொல்லும் உரைகல்லாக அமையவில்லை. அந்தப் பெண்ணைத் தன் தோளில் சார்த்தி, இடது கையைத் தன் இடது கையோடு சேர்த்து அணைத்தபடி வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள் அவள்.

அழகியின் முகத்தில் நிலாக்கதிர்கள் விளையாடின. நெற்றிப் பரப்பிலிருந்து நழுவிய மயிரிழைகள் மூன்று அவளுடைய அழகுக் கன்னங்களில் தஞ்சமடைந்திருந்தன.

சுசீலா—கரிகாலனின் தமக்கை தொடுத்த கண் எடுக்காமல் அழகியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

" அக்கா, இந்தப் பெண்ணுக்கு மயக்கம் தீர ஏதாவது செய்யுங்களேன்..." என்றான். சொல்லும் போதே அவனுடைய கண்கள் கலங்கி வந்தன.

பச்சைத் தண்ணீர் வந்தது; காப்பி வந்தது. வேறு சில உபகரணங்கள் வந்தன. அழகி கண் மலர்ந்தாள். திகைப்பு; பெருமூச்சு; சோகப் புன்னகை. அவளுடைய இமைவரம்பில் கண்ணீர்த் துளிகள் காத்திருந்தன. "நான்...நான்..." என்று தடுமாறினாள். பிறகு, கரிகாலனையும் சுசீலாவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அப்பொழுது அவனது கண்கள் அவளை நாடி ஓடின.

" அக்கா..." என்று பலத்த குரலில் அழைத்தான். ஏதோ சைகை செய்தான். அவளும் திகைத்தாள்.

" ஐயோ, பாவம்!...கழுத்திலே ஏது இத்தனை ஊமைக் காயங்கள்? எல்லாம் ஒரே புதிராக இருக்கிறதே? மின்னுமல் இடி விழுவது கிடையாதே...?" என்றாள் அவள்.

" புதிரல்ல...எல்லாம் சதி!..." என்று மட்டுமே அழகியால் பேச முடிந்தது. உதடுகள் துடித்தன. கூறைப்புடவை—கல்யாணச்சேலை படபடத்தது. வலது கை விரலில் அப்பியிருந்த மஞ்சள் தூளைத் துடைத்தாள்.

இதழ்கள் உதிர்ந்து கிடந்த அந்த ஒற்றை ரோஜாப்பூவை அழகி எடுத்தாள். கையிலிருந்த பூவைக் கசக்கி வீசி எறிந்தாள். கட்டிலில் இருந்தவாறு, உடைகளைச் சீர்ப்படுத்திக் கொண்டாள். "அம்மா, ஐயா! உங்கள் இருவரையும் நான் மறக்கமாட்டேன். அதற்காக, உங்களை நான் கண்கண்ட தெய்வங்களாக ஆக்கிவிட மாட்டேன், பயப்படாதீர்கள். உங்களிடமுள்ள ஈரத்தை, மனிதத் தன்மையை

என்றென்றும் என்னால் மறக்க முடியாது. ரொம்பவும் நன்றி!'' என்றாள் அழகி. அப்பொழுது கடிதமொன்று தரையில் விழுந்தது. அழகி அதை எடுக்கப்போனாள்.

அந்தத் தருணத்திலே —

கதவை யாரோ பலங்கொண்ட மட்டும் இடித்தார்கள். கரிகாலன் மூன்று கூடங்களையும் கடந்து வந்து திறந்தான். அங்கே, சிகரெட்டுடன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். 'வில்லன் வேஷத்தைக் கலைக்கக்கூட நேரமில்லாமல் எந்த ஸ்டுடியோவிலிருந்து வந்திருக்கிறாய்?' என்று கேட்க ஓடியது. வாசலில் நின்ற பிளஷரும், சூழ நின்ற கை ஆட்களின் உருவங்களும் அவனுக்குத் தடை உத்தரவாயின.

"என் மனைவி அழகி எங்கே?— நீ சைக்கிள் ரிக்ஷாவிலே அவளைக் கடத்திப்போவதைப் பார்த்து நான் காரை வேகமாக ஓட்டி வந்தேன். என் போதாத காலம் கார் ஒரு மரத்தில் மோதித் தொலைத்தது. அதுதான் நீ தப்பித்தாய்! என் ஆட்கள் உன்னைத் தொடர்ந்ததை பாவம், நீ எப்படி அறியப்போகிறாய்? ம்...சிக்கிரம்!...அழகியை என்னிடம் ஒப்படைத்து விடு!...'' என்று வெறி பிடித்தாற்போலக் கூவினான் அவன்.

'ஆம், இவன்தான் அழகேசன். அழகியின் உயிருள் உயிராகக் கூடு விட்டுக் கூடு பாய்ந்தவன். பாவம், இந்த அழகி எப்படி நினைவிழந்தாள்? ஏன் நினைவிழக்குமாறு ஆக்கப்பட்டாள்? இவன் இவளைத் துரத்தி வந்ததன் காரணம் என்ன? இவள் இவனை விட்டு ஏன் பிரியவேண்டும்?' என்று அவனைக் குறுக்கு விசாரணை பண்ணியது அவனுடைய உள் மனம்.

மாடு நினைத்த இடத்தில் தொழுவம் கட்டுவார்களா?

'உரிய பொருளை உரிய இடத்தில் சேர்க்க வேண்டியதுதான்... ம்...அத்தான் வேறு ஊரில் இல்லை...ஊர் வம்பு நமக்கு எதற்கு?... ஆனால், அழகி 'சதி கிதி' என்றாளே? ஒரு வேளை...'—மேற்கொண்டு அவன் எண்ணிப் பார்க்க அவகாசம் கிடையாது.

அழகேசன் உள்ளே பாய்ந்தான்.

சுசிலா வெளியே வந்தாள்.

கரிகாலன் அவனைக் கடந்துபோய் அவனுக்கு முன்பு நின்றான்.

"அதோ, அந்த அறையில்தான் படுத்திருக்கிறார்கள் உங்கள் மனைவி...பாதையிலே உங்கள் சொத்து தன் நினைவு இழந்து கிடந்தது. நான் என் கடமையைச் செய்தேன். நீங்களே கூப்பிடுங்கள்...!

கதவைத் திறவுங்கள்...!'' என்றான் கரிகாலன், நாலும் தெரிந்த அமைப்புடன்.

அழகேசன் கதவுகளைத் திறந்தான். "அழகி...அழகி!'' என்று ஆதங்கம் பொங்கக் கூவினான். சூன்யம் அவனைப் பைத்தியம் என்று முடிவுகட்டியதுடன் நின்றிருந்தால் தேவலாம்; கைகொட்டி வேறு சிரித்தது. கடிதம் ஒன்று கண்ணில் பட்டது.

**"அழகேசன், துரோகி நீர்!...என்னைக் கூண்டுக் கிளி யாக்கப் பார்க்கும் உம் கனவு பலிக்காது.**

இப்படிக்கு,
**அழகி.''**

கடவுளை அழைத்துக் கொண்டிருந்தார்கள்—சுசிலாவும் கரிகாலனும். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றார்கள்—தம்பியும், தமக்கையும்.

"அழகி...அழகி...!''—அழகேசன் பேயாக மாறினான்; மறு கணம் அவன் "ஐயோ!'' என்று கூக்குரல் எழுப்பினான்!

# 3. நல்லதோர் வீணை செய்து.....!

அச்சுப் பதுமையாக அமைந்தான் கரிகாலன். வீசி யிருந்த பார்வையை விலக்கி விடவில்லை. நெற்றிப் பரப்பில் நரம்புகள் தடித்துக் கொண்டிருந்தன. முகமண்டலத்தில் சிந்தனைகள் முகில் களாக மாறின—நீருண்ட மேகங்கள் அவை; மழை பொழிந்தன. கண்களிலே நீர்த் துளிகள் மின்னின.

" தம்பி...தம்பி !"

" ..........."

" கரிகாலா... !"

சுசீலா தன் தம்பி உட்கார்ந்திருந்த சாய்மான நாற்காலியின் சமீபத்தில் வந்து நின்றாள். அவளுடைய கையில் இருந்த தட்டில் இட்டிலி-காப்பி இருந்தன.

" தம்பி..."

கரிகாலன் கண் திறந்தான். இமை வட்டங்கள் நனைந்திருந் தன. கை விரல்களுக்குக் கண்ணீர் மாற்றப்பட்டது.

" சாப்பிட்டீங்களா, அக்கா ?"

" ஆமா."

" ரொம்ப நேரமா நிற்கிறீங்களா ?"

" ஆமாம்..."

" அக்கா, கேட்டதுக்கு 'ஆமாம்' என்கிற பதிலோடே நின் னிட்டீங்களே, கோர்ட்டிலே வக்கீல் கேட்கிற கேள்விக்கு சாட்சிக் காரன் பதில் சொல்கிற மாதிரி...!"

" கோர்ட் விவகாரத்துக்கு உன் அத்தான் ஒருத்தர் உயிரை விடுகிறது போதும் !... இப்போ என்ன உனக்கு அப்படி மாளாத சிந்தனை ? பத்து நிமிஷமாய் நின்னுகிட்டே யிருக்கேனே ? ம்... எந்த லோகத்திலே யாத்திரை செஞ்சியாம் ?"

" அக்கா, தாயறியாத சூலுண்டா, என்ன ?"

" ஓஹோ, அந்தப் பெண் அழகியைப் பற்றிய கவலை இன் னும் உன்னை விட்டு நீங்கவில்லையா ?"

"அவள் அபலையாச்சே, அக்கா ?"

"அழகியைப் பற்றிக் கவலை கொள்ளத்தான் அவள் புருஷன் அழகேசன் இருக்கிருரே ?"

"உலகமே அறியாதவர் கணக்கில் பேசுகிறீர்களே ?"

"உலகம் அறிந்ததால்தான் இப்படிப் பேசுகிறேன் !"

"அப்படியென்ருல் அன்பு காட்ட வேண்டாமென்று சொல்கிறீர்களா...?"

"நான் பேயல்ல, பெண் ! அன்பு செலுத்தப்படுவதற்கு இடம், பொருள், ஏவல் என்றெல்லாம் இருக்கிறதே ?"

"அபலை ஒருத்தி அனுதையாகத் தன்னை மறந்து வழியிலே கிடந்தாள். பட்டு மெத்தையிலே எழில் சிந்திக் கிடக்கவேண்டிய ரோஜா, கடற்கரை மணலிலே உலர்ந்து கிடந்தது. மனச்சாட்சியின் இருதயத்தில் அமர்ந்து, சத்தியத்தின் பக்கபலத்துடன் அழகியைக் காப்பாற்றி, தமிழ்ப் பண்பின் மூச்சுடன் அவளை இங்கு கொண்டு வந்து உங்கள் வசம் அடைக்கலம் வைத்தது என் தவரு ?"

"விதியின் பிழை என்றுதான் என்னுல் சொல்ல முடியும் !"

"ஆண்டவன் படைத்த உடலிலே, மனிதன் படைத்துக் கொண்ட உள்ளத்தைச் சூன்யமாகத்தான் வைத்துக்கொள்ள வேணுமா, அக்கா ?"

"ஒரே வரியில் சொல்லி விடுகிறேன், கரிகாலா. அழகேசன் புராண காலத்தில் பிறந்திருக்க வேண்டிய வில்லன். அவனுடைய சொந்த வாழ்க்கையில் குறுக்கிட உனக்கு அதிகாரம் கிடையாதல்லவா ? இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்கு நிச்சயமாகக் குலை அறுப்பான் !..."

"வார்த்தைகளைக் கச்சிதமாக அளந்து பேசுகிறீர்கள்.... உங்கள் யோசனைக்கு—புத்திமதிக்குத் தலை வணங்கக் கடமைப்பட்டவன் நான். ஆனுல், அழகியை நினைக்கிறபோது—அவள் தலையில் விழுந்த வெடி, வெடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறதை எண்ணுகிற பொழுதுதான்—மனசுக்குத் தாங்க முடியவில்லை, அக்கா."

"வம்பை விலைக்கு வாங்கத் தீர்மானம் செய்து விட்டாய் போலிருக்கிறது ?"

"இல்லை, இல்லை ! அன்பை விலைக்கு வாங்க எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறேன்...!"

"அப்படியானுல், உன்னுடைய கல்யாணத்தைப்பற்றி உன் முடிவுதான் என்ன ?"

"ஒரு கல்யாணம் குழப்பத்தை உண்டுபண்ணி விட்டது. கண்கள் கண்ட கனவு கானல் கண்ட கனவாகிப் போய்விட்டது. அழகி தீக்கொழுந்திடைப்பட்ட செவந்திப் பூவாகக் கருகி உலர்ந்து கொண்டிருக்கிறுள். இந்நிலையிலே இன்னொரு கல்யாணம் கூடவும் வேண்டாம்... —ஒருமனப்பட வேண்டியவர்கள் இருமனப்படவும் வேண்டாம்—நீங்களே என் சார்பில் எழுதிவிடுங்கள், அக்கா."

"அப்படியென்றுல் நீ சொல்கிற அந்த அன்புக்கு அர்த்தம்?..."

"அந்த அன்பு அசல் அன்பேதான். தூய அன்பு அது; தெருவிலே நடைவண்டி ஓட்டிச் செல்லும் பிள்ளைக் கனியமுது அலறிக் கீழே விழுந்துவிட்டால், நாம் ஓடிப்போய்க் குழந்தையைத் தூக்கியெடுத்து அன்பு காட்டுகிறேமில்லையா? அதே அன்பு தான்."—கரிகாலனின் நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது. எதிர் பாராத தாக்குதல்கள்; வேண்டாத கேள்விகள்; விரும்பாத சந்தே கங்கள். அவன் நடந்தான்.

காலடியில் கவனிப்பாரற்றுக் கிடந்த அந்தக் கிழிசல் தாளில் சொற்கள் சில காணப்பட்டன.

'அன்பு கடமையை மாத்திரம் எதிர்பார்ப்பது கிடையாது; உரிமையையும் எதிர்பார்க்கும்.'

பனித்துளிகளில் வானவில் தோன்றிக் கொண்டிருந்தது.

அந்தக் கடிதம் மேஜை மீது கிடந்தது.

அழகி, அன்றைக்குத் தன்னைக் காப்பாற்றியதற்கு நன்றி தெரி வித்த சமயத்தில், அவளிடமிருந்து கடிதமொன்று விழுந்ததல்லவா? அவள் அதை எடுக்க விரைந்த போதுதானே கதவு தட்டப்படும் ஓசை காதுகளைச் செவிடுபட அடித்தது?... அதற்கப்புறம்தானே எதிர்பாராத அந்தச் சம்பவம்கூட நடந்தது?

சம்பவங்கள் இல்லையென்றால் வாழ்க்கைப் புத்தகத்தில் ரசனை சேர்க்கப்பட முடியாது.

'உங்கள் மனம் கேட்கவில்லை போலிருக்கிறதே? வேண்டு மானுல் இன்னுமொரு தடவை படியுங்களேன்!' என்ற பாவனை யில் அந்தக் கடிதம் திரும்பவும் துடிதுடித்தது, தன் மீதிருந்த கண்ணு டிக் கல்லையும் மீறி எகிறிக் கொண்டு.

**"அன்பு கனிந்த தோழி அழகிக்கு,**

க்ஷேமம். உன்னுடைய அழைப்பு கிடைக்கப் பெற்றேன். சந் தோஷம். சென்ற வாரம் என்னைச் சந்திக்க நீ தஞ்சைக்கு என் வீட்டுக்கு வந்தபொழுது, உன் கலியாண விஷயமாக நீ ஒன்றுமே

பிரஸ்தாபிக்க வில்லையே?... உன்னுடைய எதிர்காலக் கணவர் "எப்படி எப்படி இருக்கவேண்டும், எப்படி எப்படி இருப்பார்' என்றெல்லாம் ஏதேதோ பிரமாதமாகச் சொல்வாயே? ஆமாம்; யார் இந்த அழகேசன்? உன் இஷ்டப்படிதான் கல்யாணம் நடைபெறுகிறதா? அழகேசன் சென்னையிலுள்ள பெரிய பணக்காரப் புள்ளி என்ற அளவில் என் தகப்பனுர் தகவல் சொன்னுர். சென்னையில் மயிலாப்பூரிலிருக்கும் என் சகோதரியிடமிருந்து வந்த கடிதம், அழகேசன் பயங்கரமான ஆள் என்ற ரகசியத்தைத் தெரிவித்தது. என் கடிதம் உனக்கு நன்மை எதுவும் செய்யாவிட்டாலும், வரவிருக்கும் கெடுதல்களிலிருந்தாவது உன்னைத் தற்காத்துக் கொள்ள வழி சொல்லும் என்ற நினைப்பில்தான் இதை அவசரம் அவசரமாக எழுதுகிறேன்.

செந்தாமரை."

"அக்கா..." என்று அழைப்பைத் தூதுவிட்டுக் கொண்டே கூடத்துக்குள் நடந்தான் கரிகாலன். கையிலிருந்த காலித் தட்டைத் தரையில் வைத்துவிட்டு நிமிர்ந்தான். சுவரோடு சுவராகப் பொருத்தி வைக்கப்பட்டிருந்த அலமாரியில் அந்தப் பேனு, அந்த டம்பப்பை, அந்த ரோஜாப்பூ காணப்பட்டன. இம்மூன்று பொருள்களும் அவனை முன்னூறு முறை குடைராட்டினம் சுற்றிவிட்டன. அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கதை ஒளிந்துகொண்டு சாகஸம் செய்வதாகப் பட்டது அவனுக்கு. அவன், திருமணத் தம்பதிகளுக்குப் பரிசாகக் கொடுத்த புத்தகத்தில் எழுதிய வரிகளைப் படித்தான். 'முள் ரோஜாவில்—ரோஜா முள்ளில் 'முள்' என்ற அந்த ஒரு சொல்லைமட்டும் நீக்கும் சக்தி, வாழ்க்கையை அமைத்துக் காட்டுபவர்களின் கையில் அல்லவா இருக்கிறது?'—அப்படியே மூடிவிட்டான். அழகியின் வாழ்க்கை விதியை ஊகித்து நிர்ணயிக்கும் 'தீர்க்க தரிசனம்' அவன் எழுதிய வரிகளில் எப்படி ஒட்டிக் கொண்டதோ?

"அக்கா...." என்று மறுபடியும் அழைத்தான்.

சுசீலா தலையை உயர்த்தினுள். அவளுடைய கண்கள் கலங்கியிருந்தன. வழிந்து நழுவிய முத்தொன்று அவள் விரித்திருந்த பத்திரிகையில் தஞ்சமடைந்தது.

"தம்பி, பார்த்தாயா இதை?" என்று சொல்லிச் செய்தித்தாளை அவனிடம் நீட்டினுள். அழகியும் அழகேசனும் தம்பதி சமேதராகப் படத்தில் காட்சியளித்துக் கொண்டிருந்தார்கள்....!

"தம்பி, விதியின் விளையாட்டைப் பார்த்தாயா?" என்று கேட்டாள் சுசீலா.

"விதியாவது, மண்ணாங்கட்டியாவது? சந்தர்ப்பங்கள் வாழ்க்கைக்கு இடும் சோதனைக் கட்டங்கள் இவையெல்லாம்!" என்று கருத்து விளக்கம் தந்தான் கரிகாலன்.

"உன் கருத்துக்கள் எப்போதுமே புதிராகத்தான் இருந்து வருகின்றன!"

"ஏன், உங்கள் கருத்துக்களுந்தான்!"

"காரணம்?"

"சற்றுமுன் உங்கள் கண்கள் சிந்திய கண்ணீருக்குக் காரணம்...?"

"அன்பிற்கு அடையாளம். அனுதாபத்திற்கு அமைக்க வேண்டிய நினைவுச் சின்னம் இது."

"ஆரம்பத்திலிருந்தே கவனித்துத்தான் வருகிறேன். அழகாக, அற்புதமாகப் பேசுகிறீர்கள். அத்தான் நீதி மன்றத்திலே செய்யும் வாதத்தை நீங்கள் வீட்டிலே செய்து காட்டுகிறீர்கள்! நான் சற்றுமுன் அழகிக்காகக் காட்டிய அன்பின் பரிவுக்குக் காரணம் கேட்டீர்கள். சொன்னேன். ஒரு சிறிதேனும் ஒப்ப மறுத்தீர்கள். இப்பொழுது அதே அன்புக் கயிறு உங்கள் மனத்தையும் சுற்றிவிட்டிருக்கிறது. நான் மனமார வரவேற்கிறேன். எப்படியோ, அழகியின் பேரில் அனுதாபங் காட்ட இரண்டு உள்ளங்கள் கிடைத்துவிட்டன. அத்தான் ஊரிலிருந்து திரும்பிவிட்டால், இரண்டு மூன்றாகும் வெற்றி கிடைக்கக்கூட ஏது இருக்கிறது. சந்தைக்கு வந்தவர்கள் வழித்துணைக்கு ஏன் வரமாட்டார்கள்?"

"தம்பி, என்னை மன்னித்துவிடு. உன் அன்புக்கும் அனுதாபத்துக்கும் அர்த்தம் தெரிந்துகொள்ள வேண்டித்தான் சற்றுநேரம் உன்னைப் பரீட்சை செய்துபார்த்தேன். அவ்வளவுதான்."

"நிஜமாகவா?"

"நான் பெண்குலமாயிற்றே?"

மௌனம் விழுங்கிக் கொண்டிருந்தது, இரண்டே இரண்டு நிமிஷங்களை.

கரிகாலன் 'சடக்'கென்று திரும்பினான். அலுவலகத்திற்குப் புறப்பட வேண்டுமென்ற பதட்டம். கூடத்தைத் தாண்டியிருந்த கொல்லைப்புற வழியின் நுழை வாசலில் அவன் பார்வை சென்று திரும்பியது. அங்கங்கே ரத்தத் துளிகள் சில அப்பிக் கிடந்தன.

"அக்கா, அழகி நிஜமாகவே ஒரு புதிராகத்தான் இருக்கிறாள். இந்த மூன்று நாளாக எங்கெல்லாமோ தேடினேன். அழகி

யைப் பற்றிய விவரம் ஒன்றுகூடத் தெரியவில்லையே......... ?" என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னான் அவன்.

" இதோ பார்," என்று கூறிய சுசீலா அவனிடம் கடிதமொன்றைக் கொடுத்தாள்.

**" உயிருக்கும் மேம்பட்ட தமக்கை சுசீலா அவர்களுக்கு,**

வணக்கம்.

கதைகளில் மாத்திரமே சந்திக்கக்கூடிய அதிசயப் பெண் என்று என்னை நீங்கள் எடை போட்டிருப்பீர்கள். என் வாழ்க்கை நம்ப முடியாத சம்பவங்களையல்லவா உள்ளடக்கிச் சிறைகொண்டு விட்டிருக்கிறது ! நான் என்ன செய்யட்டும் ? என் வாழ்வு பயங்கரமான, விந்தை நிறைந்த விநோதக் கதை. ஆனால் நான் பயங்கரப் பெண் அல்ல ; விந்தைமிக்கவளல்ல ; விநோதப் பிறப்பும் அல்ல ; என்னுடைய அடுத்த கடிதம் என் கதையை ஆதியோடந்தமாகச் சொல்லும். நூலிழையில் ஊசலாடும் உள்ளத்திற்கு இதற்கு மேல் வலு இல்லை. நல்லதொரு வீணை செய்து அதைப் புழுதியில் வீசிவிட விதி நினைக்கிறதாம் – நான் எப்படி அனுமதிப்பேன் ?

தங்கள் தங்கை,

**அழகி."**

கடிதத்தை முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்தான் கரிகாலன். எந்த ஊரிலிருந்து அது வந்திருக்கிறதென்பதை அவனால் அனுமானிக்கவே முடியவில்லை. " எல்லாம் ஒரே குழப்பமாக யிருக்கிறதே ?" என்றான்.

" பாவம், அவள் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே குழப்பம் விதைக்கப்பட்டுவிட்டதே, தம்பி !" என்று சன்னமான குரலில் பதில் சொன்னாள் சுசீலா.

## 4. 'சொல்லடி பராசக்தி!'

அழகி சிரித்துக் கொண்டிருந்தாள். மாதுளை இதழ்களுக்கு முத்துப் பற்கள் அழகு கூட்டின. எடுப்பாக அமைந்த மூக்கின் வலது பக்கம் தேங்கியிருந்த ஒற்றை வெள்ளைக் கல் மூக்குத்தி அவளுடைய கதுப்புக் கன்னங்களுக்கு சுழல் விளக்காக அமைந்து ஒளி வீசிக் கொண்டிருந்தது. கண்கள் இன்பக் கனவுகளை உரு வாக்கிக் கொண்டிருந்தன.

மோடி கிறுக்கியது. அழகேசன் அதற்குமேல் ஆழ்ந்து ரசிக்க நினைக்கவில்லை. "ஹஹ்ஹா...." என்று வாய் விட்டுச் சிரித்தான் அவன். 'டை'யைச் சுருக்கிட்டுச் சரி செய்வதற்குப் பத்து விநாடிகள் தேவைப்பட்டது. மேற்கு மலைச்சரிவு போலிருந்தது கிராப். வாசனைத் திரவியம் மண்டைக்கு ஏறிக் கொண்டிருந்தது.

வர்ணப் புகைப்படம் இடம் மாறியது.

'டீபா'யின் மீது கிடந்த மணமாலை அவன் கண்களுக்குத் தெரிந்தது. பட்டு மெத்தையிட்ட சோபாவில் கிடந்த அன்றையப் பேப்பரிலே வந்திருந்த அவனுடைய திருமணப் படத்தில் ஒரு கணம் கண்ணோட்டம் விட்டான். அழகிக்கு கரிகாலன் திருமணப் பரிசு கொடுக்கும் படத்தைக் கண்டவுடன், அழகேசனின் கண்களில் அந்திச் செவ்வானத்தின் சிவப்பு மிதந்தது.

'அழகேசன் ஸில்க் எம்போரிய'த்தின் தலைச்சன் பிள்ளைக்கு 'பியூக்' காருக்குத்தானா பஞ்சம்?

கடைசித் துண்டு சிகரெட்டை பூட்ஸ் காலால் துவம்சம் செய்து விட்டுக் கடைப் படியேறிச் சென்றான்.

திருமணத்துக்கு நான்கு நாட்கள் முன்னதாக வந்திருக்கக் கடமைப்பட்ட உறவினர் மூவர் கலியாணத்திற்குப் பதினைந்தாம் நாள் வந்தனர்.

நான்காமவன் ஓர் இளைஞன். வாட்ட சாட்டமாக இருந்தான். "அழகிக்குச் சொந்தம் நான். எனக்கு அத்தைபெண் வேண்டும். முறைப் பெண்ணுங்கூட, அந்த நாளிலே. அவசியம் ஒரு முக்கிய காரியமாக அழகியைப் பார்க்க வேண்டும்," என்றான் அவன்.

"உங்கள் பெயர்?"

"முரளி!"

"ஊர் ?"

"அழகியின் ஊரேதான்!"

"தஞ்சாவூர் என்று சொல்லுங்கள்!"

"ஆமாம்."

"என்றால் ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்க முடியாது. அழகியைப் பார்க்க வேண்டும். உங்கள் அனுமதிக்காக..."

"அழகியை நீர் பார்க்க நான் சம்மதிக்க முடியாது. இப்பொழுதே இங்கிருந்து புறப்பட்டு விடுங்கள்."

"காரணம்?"

"அவள் கழுத்திலே தவழ்ந்து கிடக்கும் அந்தத் தாலியைக் கேளுங்கள், நண்பரே !"

"அர்த்தமில்லாத எதிர்ப்பு..."

"ஆமாம்; இன்னும் ஒரு விநாடி தாமதித்தால்கூட, அர்த்தமில்லாத சம்பவம்தான் நடக்கும். உங்களை ஏற்கெனவே நன்றாக அறிவேன். இரும்பு வியாபாரியின் மகனுக்குப் பொன்மனம் எப்படி வந்ததென்று சந்திர மண்டல ஆராய்ச்சி செய்ய எனக்குத் தேவை கிடையாது. நான் ஜவுளி வியாபாரி மகன்; அதற்காக வெளிப் பூச்சுக்கு தளுக்காக நடந்து கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. அழகேசன்உமக்குப் புதிராகத் தோன்றுகிறானா ?......என்னை நானே ஆக்கிக் கொண்டதன் விளைவு இது. போகப் போக அழகேசனைப் பற்றி நீர் அறிவீர்; உங்கள் உறவு அறியும்; குடும்பம் அறியும். நான் உணர்ச்சி வசப்பட்டவன். தயவு செய்து இங்கிருந்து புறப்பட்டு விடுங்கள்."

"சூழ்ச்சிக்கு அப்பாலும் ஓர் உண்மை உலகம் உண்டென்பதை நீர் மறந்துவிடாதீர். நான் வருகிறேன். போய் வருகிறேன். வர மாட்டேன், போகிறேன்...!"

முரளீதரன் அடுத்த விநாடியில் அங்கிருந்து கிளம்பி விட்டான்.

சருகு தணலுக்கு அஞ்சத்தான் வேண்டும்.

பையன் கொண்டுவந்து வைத்த பத்திரிகைகள் அவனைக் கவர்ந்தன. கடைசியில் இருந்ததை முதலில் எடுத்தான். முதலில் இருந்த கதையைக் கடைசியில் புரட்டினான். அழகி என்ற பெயருக்குத் தலைப்பிலிருந்த 'சொல்லடி, பராசக்தி' என்ற கதையின் பெயரைப் படித்தான். பிறகு கதையைப் படித்தான், சித்தம் தடுமாறியவனைப் போல, சிந்தை தடுமாறினான்; அந்தப் பத்திரிகை உருக்குலைந்து சின்ன பின்னமாய் விட்டது !

மூன்றுவது முறை 'போன்' வந்தது. வீட்டிலிருந்து அவனுடைய வயதான தந்தை சோமநாதன் பேசினுர். உடம்பெங்கும் படபடப்பு ஏற்பட்டது. புறப்படப் போனுன். நுழை வாசல் முகப்பில் 'டங்' கென்ற சத்தம் எழுந்தது. குனிந்து பார்க்கலானுன். ஒற்றை வளையல் அது. மெல்லிய நூலிழையில் வைரக் கற்கள் கர்வத்தோடு பிரகாசத்தைக் கக்கிக் கொண்டிருந்தன. 'ஆ, என்ன அதிசயம் இது?' அழகிக்கு நான் செய்து போட்ட வளையலாயிற்றே இது? ஜோடி வளையல்களிலே இந்த ஒன்று மட்டும் இங்கே எப்படி வந்தது?' என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

ஆத்திரம் ஏறுமுகத்தில் இருந்தது; வேதனை இறங்கு முகத்தில் இருந்தது.

அவனது ஆள்காட்டி விரலில் ஆலவட்டம் சுழன்ற அந்த ஒரே ஒரு வளையலை மறுபடியும் மறுபடியும் பார்த்தான். கண்களில் திரை படர்ந்தாற்போலிருந்தது; கசக்கிக் கொண்டு பார்த்தான். சில வரிகள் எழுதப்பட்டிருப்பது மாதிரி தெரிந்தது; 'ஒற்றை வளையலைப் பற்றிப் பிரமாதமாகச் சிந்திக்கிருயே ? ஒற்றை ரோஜாத்தி—உனக்குரிய ராஜாத்தியைப் பற்றி நீ ஏன் கவலைப் படவில்லையா ?'

ஒரு பூச்சியைத் தின்று ஜீரணித்து, இன்னெரு இரையைத் தேடி ஓடும் பிராணி மாதிரி அவன் புறப்பட்டான். அவனது அடிநெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது.

**த**ணல் சருகுக்குக்கூட அஞ்சுவது உண்டா ?

"வாருங்கள்...மிஸ்டர் அழகேசன்!"

"ஓ, நீங்களா?"

" ஆமாம், நான்...நானே தான், கஜேந்திரன்!"

"தம்பி..." என்று கூப்பிட்டுக் கொண்டே வயதான சோமநாதன் தடியை ஊன்றியவாறு தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தார்.

"பெற்ற பாசம் அடையும் வேதனை என்னை உயிரோடு சாகடித்துவிடும் போலிருக்குது" என்றுர் சோமநாதன். அவர் குரலில் சொல்லுக் கடங்காத சஞ்சலம் மிஞ்சியிருந்தது.

"ஒன்றும் நடக்காது, அப்பா, நீங்கள் ஏன் கவலைப்படவேணும் ? நான் தவறு ஒன்றும் செய்யவில்லையே ?" என்று தந்தைக்குச் சமாதானம் சொன்னுன் மகன்.

" நீர் செய்த தவறு, நீர் விரித்த மாயவலை, நீர் தோண்டிய குழி இம்மூன்றும் வெகு சீக்கிரம் உமக்கே உலை வைத்துவிடப் போகின்றன என்பதைச் சொல்லிப் போகத்தான் வந்தேன்... உங்கள்

அப்பாவுடன் தகராறு செய்யும் உங்கள் தம்பிக்கு சில மணி நேரம் மனத்தைக் கட்டுப்படுத்திவிட்டு, அவனுடைய திருமணத்தை நடத்த வேண்டுமென்று என்னிடம் யோசனை கேட்டீர். உண்மையென்று நம்பி, எண்ணங்களைக் கட்டுப்படுத்தும் சக்திகொண்ட அதிசய மை ஒன்றைத் தந்தேன். கடைசியில் நீர் அதை துஷ்பிரயோகம் செய்திருக்கிறீர். உமக்கு வாழ்க்கைப்பட மறுத்த அதே பெண்ணுக்கு அதைப் பயன்படுத்தி, இப்பொழுது ஓர் அபலைப் பெண்ணைக் கூண்டுக்கிளியாக்கப் பார்க்கிறீர். என்றாவது ஒருநாள் நீர் ஆண்டவனிடம் பதில் சொல்லித்தான் தீரவேண்டும். அதற்கு முன் சட்டத்திற்கும் நீர் ஜவாப் கூறவேண்டிய சந்தர்ப்பம் வராமல் போகாது. ஏன், உங்கள் மனச்சாட்சியிடம் பாவ மன்னிப்பு கேட்காமல் தப்பவே முடியாது என்பதையும் உமக்கு எச்சரிக்கை செய்துவிட்டுப் போகத்தான் நான் வந்தேன்...'' என்று பொரிந்து தள்ளிவிட்டு மறைந்து சென்றார் கஜேந்திரன்.

ஈரேழு உலகம் என்று சொல்லப்படும் அந்தப் பதினான்கு உலகங்களையும் தாண்டிப் புதியதொரு உலகிலே அழகேசன் சஞ்சரித்துக் கொண்டிருந்தான்!

அப்பொழுது, அழகேசனின் பெயருக்கு ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து தந்தியொன்று வந்தது.

> ''தங்கள் மனைவி அழகிக்கு உடல்நிலை அபாயம். உடனே வரவேண்டும்.''

# 5. "ஒரு வரம் தா!"

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. உலகத் தாய் விழித்துக் கொண்டாள். அன்னை செய்த தவம் பலித்து விட்டது ; ஞாயிறைப் போற்றினாள். ஒன்றல்ல, ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தைச் செலுத்தியவாறு பூமியைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தான் சூரியன்.

காலைக் கதிரவனின் கதிர் முத்தம் அந்தப் பெரிய கட்டடத்தைத் தட்டி யெழுப்பியது. உயிர்க்கயிற்றிலே பாசத்தையும் பந்தத்தையும், ஆசையையும் ஆதங்கத்தையும் ஊசலாடவிட்டவாறு துடித்துக் கொண்டிருந்த உள்ளங்கள் இரவுப்பொழுதில் வடித்துக் கொட்டிய கண்ணீர் வெள்ளம் மெல்ல மெல்ல உலர ஆரம்பித்தது.

ஆம் ; அதுதான் ஜெனரல் ஆஸ்பத்திரி. 'மாயை' என்ற சொல்லைத் திரிசங்கு சொர்க்கமாக்கி வேடிக்கை பார்க்கும் மாய சக்தி கொண்ட அதிசய உலகம் அது. எந்தப் பட்டணம் என்ன தான் கொள்ளை போகட்டும், அதற்குத் துளி கவலை இருக்க வேண்டுமே? ஊஹூம். அதுதான் கிடையாது!... கிடையவே கிடையாது.

சென்னை மண்ணை ஆங்கிலேயர்கள் மறந்தாலும், சென்னை அவர்களை மறக்கமுடியாத அளவுக்கு அமைந்துவிட்ட இக்கட்டான நிலைக்கு இந்த விடுதியும் ஓர் அத்தாட்சி. அங்கே மேல் தளத்தில், கட்டில் ஒன்றில் படுத்திருந்தாள் அழகி. அப்போதுதான் டாக்டர் வந்து பார்த்து 'நோய்க் குறிப்பு'ப் புத்தகத்தில் என்னவோ 'கிறுக்கி' விட்டுச் சென்றார். அவளுடைய கண்கள் விழித்துக் கொண்டுதான் இருந்தன. ஆனால், அந்தக் கண்ணின் மணிகளிலே உறக்கம் ஊஞ்சலாடியது. அது தாலாட்டுப் பாட அழைத்தது அழகியை. அவள் அப்போது அங்கிலையிலா இருந்தாள்...?

இருந்திருந்தாற்போல அவளுடைய விழிகளிலே கண்ணீர்த் துளிகள் சில உறவு கொண்டாட ஓடோடி வந்தன. 'சற்றே விலகிரும் பிள்ளாய்!' என்று நயமாகச் சொன்னாள்; அவை கேட்கவில்லை. பயமாகச் சொன்னாள்; அப்பொழுதும் அவை பணிய வில்லை. ஒட்டிய உள்ளத்தைத் திரைபோட்டு மறைக்கப் போர்த்தியிருந்த மார்புச் சேலையில் அவை ஊடும் பாவுமாக ஒட்டிக் கொண்டன. வாய் விட்டுச் சிரிக்க எத்தனம் செய்தாள். கடைசியில் வாய்விட்டு அழுதுவிட்டாள்.

யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. தலையை நிமிர்த்திப் பார்த்தாள் அழகி. அவசரம் அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். பிறகு, "வாருங்கள், நர்ஸ் அம்மா!" என்று வரவேற்றாள்.

நர்ஸ் சிரித்தாள். "ஏதேது, அம்மா பட்டத்தை அற்புதமாக உச்சரிக்கிறாயே, மட்டும் மரியாதையை மறந்து விடாமல்?" என்று கேட்டாள் அவள்.

" ஆஸ்பத்திரிக் காம்பவுண்டுக் குள்ளே நீ எனக்கு நர்ஸ் அம்மா தானே ? மற்ற இடமாயிருந்தால் தான், நீ என்னுடைய ஆருயிர்த் தோழி செந்தாமரை!" என்றாள் அழகி, மென்மையான சிரிப்போடு.

" நீ கதை எழுதுபவள் அல்லவா ? உன்னுடைய வாதப் பிரதிவாதங்களுக்கு என்னால் ஈடுகட்டிப் பதில் சொல்ல முடியுமா, என்ன?"

" ஏன், நீ வேண்டுமானால் கதை எழுத ஆரம்பியேன்...!"

" அப்படியென்றால், நீ நர்ஸாக ஆகி விடலாமென்று ஆசைப்படுகிறாயா ?"

" அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைப் பற்றி இதுவரைச் சிந்தித்துப் பார்க்கக் கூட எனக்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. இப்போது தானாகவே அதற்கு வாய்ப்பு உண்டாகி யிருக்கிறது. கொண்ட காதலும், கண்ட கனவும், பூண்ட ஆசையும் நிறைவேறாமல் போனால், உடனே கதாநாயகியை விரக்தியடையச் செய்வதுடன் நிற்காமல், ஒரு பாவமும் செய்யாத சமூகத்தை வாய்க்கு வந்தபடி ஒரு மூச்சு ஏச வேறு செய்வார்கள் சில கதாசிரியர்கள். அப்போதாவது அவர்களின் பேனா நிம்மதி யடையுமா என்றால், அது தான் கிடையாது. அந்தப் பெண்ணை எப்பாடுபட்டாவது நர்ஸாக்கிவிட்டால்தான் பேனாவைத் தரையில் போடுவார்கள் அவர்கள். அதே மாதிரி..." என்று மேலும் தொடர வாய் தூக்கினாள் அழகி. அதற்குள் நர்ஸ் செந்தாமரை குறுக்கிட்டாள்.

" அழகி, இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது. வேறு சில எழுத்தாளர்கள், அந்த அபலைப் பெண் பேரிலே அனுதாபம் காட்ட எண்ணி அவளது காதலனை அந்த நர்ஸ் வேலை பார்க்கும் அதே ஆஸ்பத்திரிக்கு நோயாளியாகக் கொண்டு வந்து சேர்த்து, கடைசியில் கதைக்கு 'வாழிய செந்தமிழ்' பாடிவிடுவதும் உண்டல்லவா...?" என்று வினவினாள் அவள்.

கண் இதழ்கள் இணைந்து பிரியும் நேரம் சும்மா இருந்தாள் அழகி. "ஓஹோ. இப்போதுதான் புரிகிறது. சுற்றி வளைத்துப் பேசிக்

கடைசியில் என்னையே தாக்க ஆரம்பித்துவிட்டாயே? நான் சமீபத்தில் எழுதியிருந்த 'சொல்லடி, பராசக்தி!' என்ற கதையை மனசில் வைத்துக்கொண்டுதான் இவ்வளவு அமர்க்களமாகப் பேசினுயா? பேஷ், பேஷ்!" என்று கூறிச் சிரித்தாள் அழகி. அந்தச் சிரிப்பில் உயிர் இல்லை.

"அழகி, உன்னுடைய ஜீவனற்ற சிரிப்புக்கு ஜீவன் அளிக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை."

"செந்தாமரை, முதலில் உன் விரக்திச் சிரிப்பிற்கு மாற்றுக் கண்டுபிடித்து விட்டாயா?...நான் சற்றுமுன் சொன்ன நர்ஸ் ஒருத்தியின் நிறைவேருத காதலின் கதையைத் திருத்தியமைக்க நீ வழி வகுத்துச் சொல். உன் சொந்தக் கதைக்கு இன்ப முடிவைக் காட்ட என் கடைசி மூச்சுவரை என்னுலான கடமையைச் செய்கிறேன்!" என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசிஞள் அழகி. பத்து நாட்கள் வரை ஆஸ்பத்திரிப் படுக்கைக்குள்ளே முடங்கிக் கிடந்த அவளது வெளிறிய முகத்திரையில் இப்போது அங்கும் இங்குமாக செந்நிறத் துளிகள் பாய்ந்தோடிக் கொண்டிருந்தன.

"முரளி என்னை மறந்தார். நான் இந்த உலகத்தையே மறந்து விட்டேன். இப்போது அது வேண்டாத சிந்தனை. காதல் ஓர் அவசியத்தேவை என்பதை அறிவேன். ஆனுல், என்னுடையதைக் காட்டிலும் உன் பிரச்னைக்குத்தான் வெகு விரைவாக முடிவு ஏற்படுத்த வேண்டும். அதோ, உன் அழகுக் கழுத்தில் அற்புதமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் உன்னுடைய உரிமைச் சொத்தான அந்த மங்கல நாண் எனக்கும் இடும் கட்டளை இது. நீ இன்றைக்கு டிஸ்சார்ஜ் செய்யப்படுவதற்கும் உன்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போக உன் கணவர் இங்கே வருவதற்கும் சரியாக இருக்குமென்று நான் நம்புகிறேன்," என்ருள் செந்தாமரை. அவளது பேச்சின் முன் பகுதியில் கடமையுணர்ச்சியின் உத்வேகமும், பிற்பகுதியில் நம்பிக்கையின் வலுவும் குரல் கொடுத்தன.

கண்கள் சிவக்க, உதடுகள் துடிக்கக் கோபாவேசத்துடன் அழகி கேட்டாள், "என்ன புதிர் போடுகிருய், செந்தாமரை?" என்று.

"புதிர்போட்டு உலகத்தை ஆட்டிப்படைத்து வேடிக்கை பார்ப்பதற்குத்தான் ஆண்டவன் ஒருவன் இருக்கிருனே?—நான் எதற்காக புதிர் போடவேண்டும்? நின்று நிதானித்து உன்னுடைய 'சொல்லடி பராசக்தி' கதையை மறுபடியும் நினைத்துப்பார். ஒருவன் ஒருத்தியை வலுக்கட்டாயமாகக் கல்யாணம் செய்து கொள்கிருன். அவளோ அவனை விட்டுப் பிரிந்து விடுகிருள். ஒரு நாள் அவள்

சாவுடன் மன்றாடிக் கொண்டிருப்பதாகச் சேதி அனுப்புகிறாளல்லவா அவளது சிநேகிதி?..." என்று குறுக்குக் கேள்வி விடுத்தாள் மருத்துவப் பணிப்பெண்.

அதற்குள் குறுக்கிட்ட அழகி, "அப்படியென்றால், நீ மயிலாப்பூருக்குத் தகவல் சொல்லி விட்டாயா?" என்று அச்சத்தோடு கேள்வி கேட்டாள்.

" ஆம்; உன் கணவர் வீட்டில் போன் வசதி உண்டல்லவா? போனில் விஷயத்தைச் சொல்லத்தான் முதலில் நினைத்தேன். அப்புறம், அதன் விளைவு ஏதாவது விபரீதத்தில் போய் முடியுமோ என்று பயந்து, ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து இந்த வார்டுக்குப பொறுப்பான டாக்டர் அனுப்புவது போல தந்தி கொடுக்கச் செய்தேன். உனக்கு விசித்திரமாகத் தோன்றும். ஆனால் உன்னிடம் ஒன்றே ஒன்று கேட்டுக் கொள்கிறேன். உன் கதையில், புருஷனை வெறுத்துத் தள்ளி உதறிபெறிந்து விட்டு மனைவி நித்திய கன்னியாக வாழ்க்கை நடத்துவதாக முடித்திருக்கிறாயே, அம்மாதிரி நீ உன்னை ஆக்கிக்கொண்டுவிடாதே! 'சொல்லடி பாராசக்தி'யின் முடிவை உனக்குச் சரியாக அமைக்கத் தெரியவில்லை; உன் எழுத்துத் துறையில் நான் குறுக்கிட மாட்டேன். அதற்கு எனக்கு அருகதையும் கிடையாது. ஆனால், உன் வாழ்க்கைக் கதை இன்ப முடிவைத்தான் பெறவேண்டும்...அப்படித்தான் நடக்கவும் போகிறது......!" என்று வேகமான குரலில் உறுதி தொனிக்கப் பேசி நிறுத்தினாள் செந்தாமரை. அவளுடைய முகத்தில் நீர்த்துளிகள் சில ஓடின. அவை வியர்வையல்ல!

விண்ணில் மின்னல் படரும் நேரம், அழகி மண்ணை மறந்தாள். மண் உயிர் பெற்றது. மயிலாப்பூரில் அவள் கணவன் அழகேசனின் பங்களா, லஸ் முனையிலிருந்த 'அழகேசன் ஸில்க் எம்போரியம்' எல்லாம் அவளிடம் பேசின.

" செந்தாமரை..." என்று கூப்பிட்டவள், ஏனோ அப்படியே நிறுத்தி விட்டாள். எதிர்த்திருந்த 'பிளாக்கு'களைப் பார்வையிட்டுக் கொண்டு வந்த தலைமை டாக்டர் அவ்வழியே நடந்து சென்று கொண்டிருந்தார். செந்தாமரை மரியாதையாக எழுந்து நின்றாள்.

நர்ஸைப் பார்த்துவிட்டு அழகி, கம்'மென்று இருந்தாள்.

மின்சார ரயில் காதைத் துளைத்துச் சென்றது; சென்ட்ரல் ஸ்டேஷன் நிழலாடிக் கொண்டிருந்தது!

" செந்தாமரை, என்னுடன் கூடப் பிறந்தவள் யாரும் இல்லை; அதற்கு நான் பாக்கியமும் செய்யவில்லை. ஆனாலும் ஒருத்தி எனக்குச் சகோதரியாகக் கிடைத்து விட்டிருக்கிறாள்; என்னைப் பெற்

றெடுத்து, பாரத மண்ணின் ஜனத்தொகையில் ஒரு உயிரை அதிகப் படுத்திவிட்ட சந்தோஷத்திலே என் தாயார் இறந்து விட்டாள். அந்த அன்னை விட்டுச்சென்ற இடை வெளியை இட்டு நிரப்ப எனக்கு ஓர் அம்மா கிடைத்து விட்டிருக்கிருள். தாய்க்குப் பிறகு, தந்தை! ரத்ததானத்துக்கு விஞ்ஞானம் கற்றுத் தந்திருக்கிற வழிகளைப்போல இந்த உயிர்த்தானத்துக்கும் வழி ஏற்படாமலேயே, என் அப்பா என்னுள் தன் உயிரை அர்ப்பணித்து விட்டு என்னைப் பேணிக் காப்பாற்றினுர். ஆனுல் அவரது உயிரைக் காப்பாற்ற எனக்குத் தெம்பில்லை. மாங்கல்யமும் கழுத்துமாக எனனைக் கண்குளிரப் பார்த்துப் பரவசமடைய வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்த என் அப்பாவை இந்தப் பாழாய்ப் போன திருமண ஒப்பந்தம் சாகடித்து விட்டது. தந்தையின் ஸ்தானத்திற்கு எனக்கு ஓர் அப்பாவும் கிடைத்து விட்டிருக்கிருர். அதற்கு நான் முன் பிறவியில் எவ்வளவோ பூஜா பலன் செய்திருக்கத்தான் வேண்டும். என்ன அப்படிப் பார்க்கிருய், தாமரை?...நான் இழந்து விட்டிருக்கும் வெவ்வேறு வகைப்பட்ட மூன்று உருவங்களும் ஒன்று சேர்ந்த அந்த அதிசயப் பிறவி, யாரென்று யோசிக்கிருயா? உன் மூளைக்கு இப்போது வேலை கொடுக்கவேண்டாம். அந்த உருவம் வேறு யாருமல்ல; சாட்சாத் என் செந்தாமரையேதான்! ஆமாம்; நீயேதான்...!"

'ஆமாம், நீயே தான்!' என்ற சொற்கள் அவளது உதட்டிலிருந்து வெளி வந்தபோது அழுகையும் சேர்ந்து பீரிட்டு வந்தது. சரிந்து விழவிருந்த மேலாடையைச் சரி செய்து கொண்டாள் அழகி. செந்தாமரை அவளை நெருங்கி அவளது கண்ணீரைத் துடைத்து விட்டாள். நெற்றி மேட்டில் வம்பு செய்து கொண்டிருந்த மயிரிழைகளை ஒதுக்கி விட்டாள்.

"செந்தாமரை, நீ எனக்கு ஒரு வரம் தா!..." என்று தேம்பியவாறு கேட்டுக்கொண்டே, கட்டிலை விட்டு எழுந்தாள் அழகி. எழுந்தவள், அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டாள். பிறகு, அவளுடைய வலது கன்னத்தில் தன் வலது கையை வைத்துக் கெஞ்சியவாறு, "செந்தாமரை, செந்தாமரை..." என்ருள். மறுபடியும் விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டாள் அழகி.

"அழாதே, அழகி! என்னிடம் நீ வரம் கேட்கும் அளவுக்கு நான் இன்னும் தெய்வ்மாகவில்லையே...? நான் வெறும் மனிதப் பிறவியாயிற்றே?..."

"நான் தெய்வமாக நினைத்தவர்கள் மனிதர்களாகி விட்டார்கள். ஆனுல் நீ என்வரை தெய்வமேதான்! . வெறுங் கல்லாய் சமைந்து நிற்கும் சிலைகளையே தெய்வமென நம்பி வாழ்க்கை நடத்தும் இந்த உலகத்திலே, எனக்கெனச் செய்த நன்மைகளைக் கொண்டு பார்த்

தால்கூட நீ என்னுடைய தெய்வமே என்பதற்குத் தடை என்ன இருக்கிறது ?...இந்த அழகேசன் அவர்களைப்பற்றி—ஆம் ; என்னுடைய கணவர் என்ற பட்டப்பெயர் பெற்றிருக்கும் இந்த அழகேசனைப் பற்றின சில அதிசயச் செய்திகளை முதன் முதலில் எனக்குத் தெரிவித்தவள் நீயே அல்லவா ? என் கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறிய அன்றைக்கு, நான் என்னை மறந்த மயக்கத்திலே கடற்கரை வழியிலே கிடந்தேன். சைக்கிள் ரிக்ஷாவில் வைத்து கரிகாலன் என்னை அழைத்துச் சென்றார், தன் தமக்கையார் வீட்டுக்கு.

"அங்கே வேளை கெட்ட வேளையிலே அழகேசன் என்னைத் தேடி வந்துவிட்டார். நான் படுத்திருந்த அறையை அவர் காட்டியிருக்கிறார். அழகேசனைக் கண்டதும், எனக்கு யோசிக்கக் கூட நேரமில்லை. என்னைத் தடுத்து நிறுத்தப் பிரயத்தனப்பட்ட கதவுகளைத் தட்டி எறிந்துவிட்டு, பிராட்வே சந்து முனையில் ஓடினேன். அபயக்குரல் கேட்டு அபயம் அளிக்கவேண்டிய ஒரு ஆம்புலன்ஸ் வண்டி எனக்கு எமனாக வந்தபோது, நீ அதிலிருந்து தெய்வமாகத் தோன்றி என்னைக் காப்பாற்றினாய் !..... சில நாட்களாக உயிருடன் போராடின எனக்குச் சிகிச்சையும் அளித்து வருகிறாய் !—இதையெல்லாம் நான் எப்படி மறக்க முடியும் ?..."—குடல்களிலே இரைப்பெடுத்தது. ஒரு மடக்கு சுடு தண்ணீர் அருந்தினாள் அழகி.

" அன்பு காட்டினேன், நானும் மனிதப் பூண்டின் ஒரு பகுதி என்பதை மறந்து விடாமலிருப்பதற்காக ; கடமையைச் செய்தேன், என் உடலில் மின்னும் இந்த வெள்ளை ஆடைகளுக்குக் கட்டுப்பட்டு ; உரிமைகளைக் கோரினேன், நீயும் என் இனமானபடியால் !.....தெய்வங்களுக்குத்தான் இப்போதெல்லாம் நிரம்பச் சோதனைக் கட்டங்கள் வருகின்றன ; ஆனால் மனிதர்களோ அவற்றிலிருந்து நாசூக்காகத் தப்பித்து வருகிறார்கள். ஆகவே, என்னை விட்டுவிடு... அழகி...!"

செந்தாமரை பேச்சை நிறுத்தினாள். அழகி சிரிப்பை நிறுத்திவிட்டாள்.

" இன்னும் சற்றுநேரம் நீ சிரி, அழகி. உன் முகத்தில் புன்னகையைக் காணவே முடிவதில்லையே ? ஆமாம் ; சிரி, தோழி !"

" நான் சிரிப்பது இருக்கட்டும் ; இப்போது உன்னிடம் நான் கேட்கப்போகும் வரத்தை நீ அறிந்தால், நீ அழுதுவிடுவாய், செந்தாமரை !"

" மனங்கொண்டது மாளிகை. என்ன வரம் வேணும் ? ம்... சொல், அழகி !"

" உயிரைப் பணயம் வைத்து எந்தப் புலியிடமிருந்து தப்பித்து வந்தேனோ, அதே புலியிடம் திரும்பவும் என்னை ஒப்புவித்து விடாதே! ஒரு அழகிக்கு ஒரு அழகேசன்தான் தெய்வமாக அமையக் கொடுத்து வைக்கவில்லை ; ஒரு செந்தாமரையாவது அமையட்டுமே ? அழகேசனின் நிழல் பட்டால்கூட என் **உயிர்ப்** பூ வாடிக் கருகிவிடும்...அவர் என்னை மீண்டும் தேடி வந்தாலும், தயவு செய்து என்னை அவரிடம் காட்டிவிடாதே, செந்தாமரை !..."

மேல் மூச்சு வாங்கியது. தாலி எம்பி எம்பிக் குதித்துக்கொண் டிருந்தது.

" அழகி ! நேற்று இரவு நீ சொன்னாய்—அழகேசன் உன்னைக் கூண்டுக் கிளியாக்கச் சதி செய்வதாக. ஆனால், இப்போது அவரே கூண்டுப் புலியாக ஆகப் போகிறார். நீ இன்று டிஸ்சார்ஜ் ஆனவுடன், எங்கள் நர்ஸ் விடுதியில் நான் உன்னிடம் தனித்துப் பேசவேண்டிய சில விஷயங்கள்—ஆம் ; அழகேசனைப் பற்றிய ரகசியங்கள் இருக்கின்றன. எனக்கு ட்யூட்டிக்கு நேரமாய் விட்டது. அதோ, உனக்குக் காலை ஆகாரம், பால் எல்லாம் காத்திருக் கின்றன. பிறகு சந்திக்கிறேன்..."

உடைகளைச் சரிசெய்து கொண்டாள் ; தலையில் கட்டப்பட் டிருந்த டவலை நெற்றிப் பக்கம் தளர்த்தினாள் ; கைக்கடியாரத்தைப் பார்த்தாள் ; ' விர் 'ரென்று நடந்தாள் செந்தாமரை.

அழகிக்கு மறுபடி சுய ஞாபகம் வந்தது. மேஜைமீது கிடந்த 'மார்பியா', 'பெனிஸிலின்', இன்னும் ஏதேதோ ஊசி மருந்து வகை களும், குளுகோஸ் மாவு டப்பாக்களும், பலவகை மருந்துச் சீசாக் களும் அவள்முன் சுற்றத் தொடங்கின, உருட்டிவிடப்பட்ட கோலிக் குண்டுகளாக.

மத்தியான்னம் அழகிக்கு ஆஸ்பத்திரியிலிருந்து ' விடுதலை ' கிடைத்தது. நர்ஸ் விடுதிக்குத் தன் சிநேகிதியையும் அழைத்துச் சென்றாள் நர்ஸ் செந்தாமரை. அங்கேயே இருவரும் உணவு கொண்டு, ஓய்வு எடுத்துக் கொண்டார்கள்.

" இரவு ஒன்பது மணிக்கெல்லாம் நான் திரும்பி வந்து விடு வேன். நிறையப் பேச வேண்டுமென்று சொன்னேன் அல்லவா ? உனக்குத்தான் தனிமை ரொம்பப் பிடிக்குமே? ஒன்று எழுது ; அல்லது படி. கூடாது, கூடாது ! இந்த இரண்டையுமே இன்னம் கொஞ்ச நாளைக்கு மூட்டை கட்டிப் போட்டு வை. அப்போதுதான் ' மயக்க நோய் ' உனக்குத் திரும்பவும் வராமல் இருக்கும் ; உடல் நலமும் பாதிக்கப்படாமல் இருக்கும். வேண்டிய மட்டும் தூங்கு.

சரி, நான் போய் வரட்டுமா ?'' என்று விடை கேட்டபடி, இடதுகை மணிக்கட்டில் கடிகாரத்தை கட்டிக்கொண்டாள் செந்தாமரை.

" உனக்காக நான் காத்துக் கொண்டிருப்பேன். சீக்கிரமே வந்து விடு, செந்தாமரை !'' என்று நினைவு படுத்தினாள் அழகி.

" ஆகட்டும் !''—செந்தாமரை பிரிந்து சென்றாள்.

இரவு வந்தது ; ஆனால், நிலவு வரவில்லை.

" தாமரை, தாமரை !'' என்று கைதட்டிக் கூவியழைத்த தோழிகள் கூட்டத்துக்கெல்லாம் அவசரப் பதிலை வாரி யிறைத்து விட்டு நடக்கலானாள் செந்தாமரை. போக்குவரத்துக் கட்டுப்பாடுகளுக்குப் பணிந்தாள். அழகி அவள் கண்ணுக்குள்ளே நின்றாள்.

" அழகி, அழகி !'' என்று குரல் கொடுத்துக்கொண்டே தன் அறையின் கதவைத் தட்டினாள் செந்தாமரை. வெளித் தாழ்வாரத்தின் விளக்கு விசையைப் பொருத்தினாள். கதவு பூட்டப்பட்டிருந்தது.

அடுத்த அறையிலிருந்த நர்ஸ் ஒருத்தி அவளிடம் கடிதம் ஒன்றையும், சாவி ஒன்றையும் கொடுத்துவிட்டுப் போனாள்.

செந்தாமரை கடிதத்தின் உறையைத் தாறுமாறாகக் கிழித்தாள். பெருமூச் செறிந்தபடி வெளியே தலை நீட்டிய கடிதம் அறிவித்த தகவல்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

''அன்புள்ள தாமரை,

என்னை நீ அறிவாய். ஆனால், என் கதையை நீ அறியமாட்டாய். நானே உன்னிடம் அழகேசனைப் பற்றிய சில ரகசியங்களைச் சொல்லவேண்டுமென்றிருந்தேன். அதற்குள் நீயே அவரைப் பற்றின ரகசியச் செய்திகள் பலவற்றை இன்று சொல்லப் போவதாகப் புதிர் போட்டாய். என் மஞ்சள் தாலி என்னை நிமிஷத்துக்கு நிமிஷம் நையாண்டி பண்ணிக்கொண்டே யிருக்கிறது. என் மனம் விநாடிக்கு விநாடி ரத்தக் கண்ணீர் வடித்துக்கொண்டே யிருக்கிறது. இப்படிப்பட்ட சித்திரவதையை என்னால் தாளவே முடியவில்லை—அதுதான் புறப்பட்டு விட்டேன். என்னை வரவேற்க இந்த உலகத்திலே வேறு யார் இருக்கிறார்கள், உன்னைத் தவிர ? ஆகவே, விரைவிலேயே உன்னைச் சந்திப்பேன். அப்போது அழகியிடமிருந்து புதிய பல திடுக்கிடும் விஷயங்களை நீ அறிந்து கொள்வாய்...! அதோ, விதி சிரிக்கிறதே, கேட்கவில்லையா ?

இப்படிக்கு,

அழகி.''

செந்தாமரை கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

## 6. புரட்சிப் பெண் அழகி !

'தமிழ்த் தொண்டு' பத்திரிகை ஆசிரியர் பரிமேலழகரைக் கண்டவுடன், கரிகாலனுக்கு ஏதோ பெரும் நிதி கிடைத்தாற்போல அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. 'ஹமில்டன் கம்பெனி'யின் ஞாபகம் இல்லை; 'ரெமிங்டன் டைப் ரைட்டர்' நினைவும் இல்லை. இலக்கிய உலகம் கரிகாலனின் முன்னே இன்பப் பண்பாடிச் சுற்றியது; ரசிகன் அவ்வுலகத்தின் பாதத்தில் அமர்ந்து ரங்க ராட்டினம் ஆடிக் கொண்டிருந்தான்.

ஒரு மணி நேரம் அதிகாரியிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, ஆசிரியருடன் புறப்பட்டான் கரிகாலன். சைனு பஜார் முனையில் காப்பி பலகாரம் சாப்பிட்டார்கள். பிறகு நடந்தார்கள். பட்டணத்தின் நாகரிகத்தின் வளர்ச்சியைக் கண்டு கண்கள் அகல விரிந்தன—ஆச்சரியத்தினால். பசிக் கொடுமையின் வளர்ச்சியைப் பார்த்தவுடன் அவை இன்னும் அகலமாக விரிந்தன—அனுதாபத்தினால்.

வழி நிழலில் சற்றுநேரம் நின்று பேசினார்கள் இருவரும்.

"இப்படிப்பட்ட இருதுருவக் காட்சிகள் இல்லையென்றால், எழுத்தாளர்களுக்கு அப்புறம் வேலையில்லைதானே, ஸார்?" என்று கேட்டான் கரிகாலன்.

"ரொம்பவும் துணிச்சலான கேள்விதான். வாழ்க்கையைப் படித்து எழுதினால்தானே கற்பனை சிறக்க முடியும்!" என்று விடையளித்தார் ஆசிரியர்.

"வாழ்க்கையைப் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறதற்கு முன்னமேயே சிலர் கதைகள் எழுத ஆரம்பித்து விடுகிறார்களே?"

"அது அவரவர்களின் கற்பனை வளத்தைப் பொறுத்த விஷயம்...! எங்கள் பத்திரிகையில் 'அழகி' என்றொரு பெண் கதைகள் எழுதி வருகிறார்கள். நீங்கள் கட்டாயம் படித்திருப்பீர்கள். அறுபது வயது நிரம்பியவர் மாதிரி அவ்வளவு தத்ரூபமாகக் கதைகள் எழுதுகிறார்கள்..." என்றார் பரிமேலழகர்.

"அழகியின் எழுத்துக்கள் என்றால் எனக்கு ரொம்பவும் பித்து, ஆசிரியர் ஸார். அழகிக்கு சமீபத்தில்தான் கல்யாணம் நடந்தது."

"நான் அப்போது ஊரில் இல்லை. திருமணத்திற்குப் போக முடியவில்லை. இரண்டுநாள் முந்தி அழகியைத் தேடிப் போனேன், மயிலாப்பூருக்கு. அங்கே அழகியின் கணவர்தான் இருந்தார். விஷயத்தைச் சொன்னேன். அழகி ஊருக்கு போயிருப்பதாகச் சொன்னார். பயனுள்ள எழுத்துக்களை மட்டுமே எழுதும் இந் நாளைய கதாசிரியர்களின் இலக்கியப் புத்தகங்கள் நான்கை அழகி யின் பெயரிட்டுத் திருமணப் பரிசாகக் கொடுத்துவிட்டுத் திரும்பி னேன். அது சரி; பார்த்தீர்களா, நான் உங்களைத் தேடி வந்ததன் காரணத்தைச் சொல்லாமல் வம்பளந்து கொண்டிருக்கிறேன்! அழ கிக்கும் அழகேசனுக்கும் ராசி யில்லையாமே? இந்த ரகசியத்தைக் காலையில்தான் அறிந்தேன். என்னிடம் அழகியின் இருப்பிடத்தின் விலாசம் கேட்டு அவள் உறவினர் ஒருவர் வந்திருந்தார். முரளி என்று பெயர். அழகேசனிடம் போய், அழகியைத் தனியே கண்டு பேச வேண்டுமென்றும் அவள் தன்னுடைய அத்தை பெண் என் றும் சொன்னாராம். அழகேசன் ஒப்பவில்லையாம். கொடுக்கப்பட வேண்டிய மரியாதையைத் தன் பங்கிற்கு எடுத்துக்கொண்டு தாறு மாறாகப் பேசி அனுப்பி விட்டாராம். முரளி பம்பாய்க்குத் தொழில் விஷயமாகப் போய்த் திரும்பும் ஒருமாத இடைவெளிக்குள் ஏகப் பட்ட குழப்பங்கள் நடந்துவிட்டனவாம். முதலில் அழகியை அவர் தான் கைப்பிடிப்பதாக இருந்ததாம்... !" என்று விவரித்தார் பரிமே லழகர்.

"ஐயா, அழகிக்கு அழகேசன் உறவா? கேட்டீர்களா?"

"அழகிக்கு ஒன்றுவிட்ட முறையில் 'அத்தான்' ஆகவேண்டு மாம் அழகேசன்!"

"ஆமாம், இப்போது அழகியை எங்கே கண்டு தேட முடியும்?"

"அதுதான் புரியவில்லை. 'சொல்லடி பராசக்தி'யை அனுப்பி யிருந்தபோது ஒரு விலாசத்தையும் குறிப்பிடவில்லை. சன்மா னத்தை எந்த விலாசத்துக்கு அனுப்புவதென்றும் புரியவில்லை. இனி ஏதாவது கதை வரும்போது, விலாசம் எழுதப்பட்டிருந்தால், நான் உங்களுக்குச் செய்தி அனுப்புகிறேன். நாம் இருவரும் போய்ப் பார்க்கவேண்டும். திருமணத்தின் உதயத்திலேயே குழப்ப மும் வேதனையும் ஏற்படுவதென்றால், பாவம் அழகிக்கு எப்படித் தான் மனசுக்கு நிம்மதி ஏற்பட முடியும்? கல்யாணக் கப்பல் புறப்பட்டுவிட்டது; வாழ்க்கைத் துறைதான் அப்படியே எஞ்சி நிற் கிறது!...படைத்தவனை நோவதைத் தவிர, எய்தவனையோ அல்லது அம்பையோ நோவதற்கு நாம் யார்?" என்று பொருள் பொதிந்த

சொற்களை நிதானமாக அளந்து சொன்னார் 'தமிழ்த் தொண்டு' ஆசிரியர்.

வார்த்தைக்கு வார்த்தை தலையை ஆட்டி ஆமோதிக்கும் கரிகாலன், எங்கேயோ பார்வையை ஆணியடித்து வைத்தபடி இருந்தான். அந்த ஒரு நாளில் அழகியைக் காப்பாற்றி அழைத்து வந்தபோது அவளது கழுத்திலே ஏற்பட்டிருந்த ஊமைக்காயங்களை எண்ணிப் பார்த்தான். மயக்கம் தரவல்ல அந்த ஒரு ரோஜாப் பூவின் சாகஸத்தையும் நினைத்துப் பார்த்தான்.

அப்பொழுது—

"மிஸ்டர் கரிகாலன், அப்படியென்றால் நான் புறப்படட்டுமா?"

"நல்லது. என்னுடைய சகோதரிக்கு விரைவில் லெட்டர் போடுவதாக அழகி போன மாதம் எழுதினார்கள்...கடிதம் வந்ததும், நான் உங்களை அவசியம் வந்து பார்க்கிறேன்."

ஆசிரியர் பரிமேலழகரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு, கரிகாலன் வீட்டுக்குப் புறப்பட்டான். டக்கர் மாதாகோயிலில் பிரார்த்தனையில் சிலர் ஈடுபட்டிருந்தனர். அவன் திரும்பினான். அந்தி மயக்கத்தில்—தங்க வெயிலில் செம்புதாஸ் தெருகூடப் பார்ப்பதற்கு அழகாகத்தான் இருந்தது.

ஊரிலிருந்து திரும்பிவிட்ட தன் அத்தானைக் கண்டதும், கரிகாலனுக்குச் சந்தோஷம் தலைகால் புரியவில்லை.

"என்ன மைத்துனர் ஸார், விசேஷம் ஏதாவது உண்டா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் ராமலிங்கம்—சுசீலாவின் கணவர்.

"நீங்கள்தான் சொல்லவேண்டும். அத்தான்!" என்று பவ்யமாகக் கேட்டான் கரிகாலன்.

"அப்படியா? இதோ நான் சொல்லிவிடுகிறேன். உன் அப்பா உனக்கு ஒரு பெண்ணைப் பார்த்து முடிவு செய்திருக்கிறார். அடுத்த வாரம் திருச்சிக்குப் பெண் பார்க்கப் போகவேணும்," என்றார் ராமலிங்கம்.

கரிகாலன் இதை எப்படி எதிர்பார்த்திருப்பான்? தன் கல்யாணத்திற்கு இப்போது அவசரம் இல்லையென்றுதான் முன்பே தெரிவித்து விட்டானே?......

தன்னுடைய இன்ப துன்பங்களிலே சமபங்கு பெற, எங்கோ பிறந்திருக்கும் எவளோ ஒருத்தியைப் பற்றிக் கற்பனை பண்ணினன். மங்கலான சித்திரங்கள் மாதிரி என்னென்னவோ பெண் உருவங்கள் தோன்றின. ஆனல் அவையெல்லாவற்றையும் தூரத் தள்ளி விட்டு, ஓர் அழகுப் பதுமை தோன்றியது. மறுகணம், அவன் பயங்கரக் கனவு கண்டவன்போலத் திடுக்கிட்டான்: "ஆ, அழகியா?" என்று அலறினன்.

அவனுக்கு உடம்பில், உள்ளத்தில், உணர்வில் ஏற்பட்ட பெரும் அதிர்ச்சி ஒருநிலைப்பட எட்டே எட்டு நிமிஷங்கள் போதுமா, என்ன?

அப்பொழுது அங்கே வந்தாள் சுசீலா. "தம்பி, காலையிலே மயிலாப்பூருக்கு கபாலி கோயில் உற்சவத்துக்குப் போயிருந்தேன். நம்ப அழகியோட புருஷன் அழகேசன் ஜவுளிக் கடையிலே நேற்று ராத்திரி கொள்ளை போயிடுச்சாம். அதுமட்டுமா? அழகிக்கு வந்த மயக்க நோய் கணக்கிலே அவருக்கும் வந்திருக்காம்!" என்றுள் அவள்.

எவ்வித விளைவுமின்றி இருந்தான் கரிகாலன். கிழிக்கப்பட்டிருந்த ஓர் உறைக் கடிதத்தை அவனிடம் நீட்டினள் சுசீலா. கடிதத்தைப் படித்து முடித்த கரிகாலன், "அக்கா, இதைப் படிச்சிருப்பீங்களே?... நம்பவே முடியலையே?... அழகி புதுமைப் பெண் என்று மட்டுந்தான் நான் நெனைச்சிருந்தேன். இப்போது புரட்சிப் பெண்ணுகவும் ஆகி விட்டாங்களே?..." என்று சொல்லி நிறுத்தினன்.

தரையில் நழுவி ஓடிய அழகியின் அந்தக் கடிதத்தை எட்டிப் பிடிக்க ஓடிவந்த அந்த உருவத்தைக் கண்டதும், அடித்து வைக்கப்பட்ட சிலையானன் கரிகாலன்.

# 7. நல்லவர்கள் வாழ்வதில்லை!

"யார் நீங்கள்?" என்ற கேள்வியை அதிகார தோரணையில் கேட்டான் கரிகாலன்.

"............"

வெடித்துச் சிதறிய இளஞ்சிரிப்பின் அலைகள் கூடத்தில் மோதிக் கொண்டிருந்தன. எழுந்த கேள்விக்கு எழும் சிரிப்புத்தானு விடை?

"ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்? சற்றுமுன் சிலையாகிப் போனவன் மலைபோன்ற கேள்வியைக் கேட்கிருனேயென்று?"

"உங்களுடைய கேள்வி என்னைத் தத்துவ விசாரத்தில் தள்ளி விட்டதே யென்றுதான் அப்படிச் சிரிக்கிறேன். உங்கள் பேச்சில் அன்பு தெளிக்கப்பட்டிருக்குமென்று ஆவலோடு வந்தேன். ஆனுல், கட்டுக்கு மீறிய ஆத்திரமும் அதிகாரமும் ஆட்சி செலுத்துகின்றன். உங்களுடைய முகத்திலும் நெற்றி மேட்டிலும் விதவிதமான ஆச்சரியக் குறிகள் கிழிக்கப்பட்டிருக்கின்றனவே?... ஏன்?... அளவுக்கு மீறிச் சிரிக்கிறேனே யென்று? எல்லை தாண்டி வந்து விட்டேனே யென்று?...வரம்பை மிஞ்சிப் பேசுகிறேனேயென்று?"

"..............."

"மௌனம் பொன்னுனதென்பதை நிரூபிக்கப் பார்க்கிறீர்களா?"

"..............."

"மிஸ்டர் கரிகாலன்! பெண் என்ருல் அழமட்டும்தான் பிறந்தவளா? என் பெண்மை வகுத்துத் தரும் அளவுக் கோட்டில் உலவ எனக்கு உரிமை கிடையாதா? தேவைப்படும்போது பெண் வாய் திறந்து பேசவில்லையானுல், அப்புறம் அவளைப் பேதையாக்கி விடுமே இந்த உலகம்? இது நீங்கள் அறியாததல்லவே?"

"படப்பிடிப்பின்போது ஒப்புவிக்க வேண்டிய வசனங்களை இங்கே ஏன் அம்மா வீணுக வாரிக் கொட்டுகிறீர்கள்?"

"நான் நடிகையல்ல...!"

"உங்கள் கதை எனக்கு இப்போது அவசியமல்ல; முதலில் என் கடிதத்தைக் கொடுங்கள்!"

" உங்கள் கடிதம் இப்பொழுது எனக்குத் தேவையில்லை. ஆனால், என் கதை மட்டும் உங்களுக்கு அவசியம் தெரியத்தான் வேண்டும் !"

" என்ன, புதிர் போடுகிறீர்களா ?"

" பெண்ணைப் புதிராக்கி கண்ணாமூச்சி ஆடும் பணி இலக்கிய வட்டத்துக்கே உரியது. நான் புதிரல்ல !..."

" அப்படி யென்றால் நீங்கள் எழுத்துலகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையா ?"

" விசித்திரமான அந்த உலகத்தைச் சேர்ந்தவள்தான் இப்பொழுது பாவம், அபலையாகி நிற்கிறாளே ? அது போதாதா ?"

" நீங்கள் அழகி......?"

" நான், அழகியல்ல ; அவளது சிநேகிதி. சங்ககால இலக்கியங்களுடன் உங்களுக்கு ஒட்டுறவு உண்டா ? தலைவி ஒருத்திக்கு உண்மையான தோழி ஒருத்தி வாய்ப்பாளல்லவா ? அம்மாதிரிதான் நானும்... !"

" சந்தோஷம்," என்று சொல்லிவிட்டுக் கரிகாலன் ஆனந்தமாகச் சிரித்தான். அவனுடைய கைக்கு மாறிய அந்தக் கடிதத்தை அவன் முன்னும் பின்னும் புரட்டினான். தமிழ் எழுத்துக்கள் கிரந்தம் போல அவன் கண்களுக்குப் புலனாயின. மனக்கண் விழித்துக் கொண்டது. உயிர் தேய்ந்த சம்பவம் உயிர் மீண்டது.

அழகியின் எழிலுக்கு மாற்றுக் கூட்டிக் காட்டிய அந்த மங்கல நாணின் கதை படமாக விரிந்தது ; அழகிக்கு வாய்த்த கொண்டவன் திருத்தியமைத்த கதையின் கதை பற்றிய அசலும் நகலும் சலனப் படமாக ஓடியது.

கரிகாலன் அவற்றைத் திரும்ப எண்ணிப்பார்க்கவும் முடியவில்லை. எண்ணாமல் இருக்கவும் இயலவில்லை. இமை விளிம்பில் ' சடுகுடு ' விளையாட, ' வேளை ' பார்த்துக்கொண்டிருந்த கண்ணீர் மணிகள் அந்தப் பெண் உருவைக் கண்டதும் கண் புதைத்து நழுவி விட்டன.

அப்பொழுது அங்கே சுசீலா வந்தாள். " சுசிலா அக்கா ! உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்," என்ற பேச்சரவம் கேட்டதும் திரும்பினாள். ஒன்றிரண்டு வினாடிப் பொழுது அவள் மனம் இறந்த காலத்தை ஆராய்ந்தது. விழிகள் அகல விரிந்தன. " அடடே, செந்தாமரையா ?..." என்றாள். கேள்வி வடிவான பேச்சு ஆனந்த வடிவம் பெற்றது.

வாயில் ஈ நுழைவதுகூடத் தெரியாமல் நின்ற தன் தம்பியைக் கண்டதும், சுசீலா வாய்விட்டுச் சிரித்தாள் ; " செந்தாமரையை

உனக்கு அதற்குள் மறந்துவிட்டதா, தம்பி ? ஓஹோ, அதுதான் அப்படிச் சத்தம் போட்டு என்னவெல்லாமோ குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தாயோ ?... ''

கரிகாலன் கண்களை இறுக மூடிக்கொண்டான் ; திடீரென்று அவன் நெஞ்சில் மின்னுணர்வு ஒன்று பிறந்தது. '' ஓ, ஞாபகம் வந்துவிட்டது ! தஞ்சாவூரில் நம் அப்பா தாசில்தாராக இருந்த போது நமக்கு அடுத்த வீட்டில் இருந்த செந்தாமரையா ?... என்னோடு அடிக்கடி வம்புக்கு வரும் அந்தச் செந்தாமரைப் பெண்ணு ? அழகுக் கலையில் இந்தக் காலதேவனுக்கு ஈடு அவனேதான் போலிருக்கிறது !'' என்றான்.

அவனுடைய பேச்சில் தொனித்த அன்பு அவனது கண்களில் ஒளியைப் பாய்ச்சியது ; அந்த ஜோதிப் பிழம்பு செந்தாமரையின் கண்ணின் மணிகளில் பிரதிபலித்தது.

சுசீலா மௌனப் புன்னகை புரிந்துகொண்டே உள்ளே சென்றாள் ; வெளியில் வரும்போதும் அதே புன்னகை உதட்டில் தேங்கியிருந்தது.

தமிழ்ப் பண்பாட்டில் எப்பொழுதுமே விருந்தோம்பலுக்குத் தான் தலைமை இடம் உண்டு.

'' என்ன விசேஷம், தாமரை ?... ''

'' அழகி உங்களைப் பற்றி ரொம்பவும் பெருமையாகச் சொன்னாள். அவள் எனக்கும் சிநேகிதி என்பதை உங்களிடம் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். அவளது வாழ்க்கைக் கதையைப் பெரும்பாலும் புரிந்து கொண்டிருக்கிறேன் ; ஆனால் அவளைத்தான் தினையளவுகூடப் படிக்க முடியாமல் திக்குமுக்காடி வருகிறேன். அவளுடைய புதிய பயணத்திற்கு ஆண்டவன் பச்சைக் கொடி காட்டினான் ; ஆனால் விதி சிவப்புக் கொடி காட்டி விட்டது. பிளவுபட்ட அவளின் தாம்பத்தியக் கண்ணாடியைப் பிணைக்கப் பாடுபட்டேன். அழகியின் கணவர் அழகேசனை நான் அறியேன். ஆனாலும் அறிமுகப்படுத்திக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும், அவள் மாத்திரம் அன்றைக்கு திடுதிப்பென்று நர்ஸ் விடுதியிலிருந்து மறையாம லிருந்திருந்தால் ! என்னென்னவோ கனவுகள் கண்டேன்—அவள் வாழ்க்கையில் சிந்து பைரவி பண் பாடச் செய்ய ! எல்லாவற்றையும் என் காலடியிலேயே போட்டு மிதித்துவிட்டு, என்னைக் கண்டு கும்மாளங் கொட்டிச் சிரிக்கிறது அந்தப் பாழாய்ப்போன விதி. விதி !—எங்கே இருக்கிறது அது ? விதியையும் தன்னம்பிக்கையையும் எடைபோட்டு நிறுக்க நான் ஒரு எமர்ஸன் அல்லதான் ; ஆயினும் அதைப்பற்றி எண்ணக்கூடத்

நடையிருக்காதல்லவா ? என்னவோ சொல்ல வந்தேன் ; ஏதோ சொல்கிறேன். ஆம் ; அழகியைப் போலவே எனக்கும் கூட வாழ்க்கை அலுத்துத்தான் போய்விட்டது. இந்த லட்சணத்தில், அலுத்துப்போன உள்ளங்களுக்கு அன்பு மழை பொழிவது என் பணி. வேடிக்கையான பிழைப்புத்தான் !

" விதி, கடவுள் என்றால் தொண்டை வறளும் பரியந்தம் எதிர் வாதம் செய்யும் அவள், ஹாஸ்டலில் எனக்கு எழுதி வைத்துச் சென்ற கடிதத்தில் விதி சிரிப்பதாகக் குறிப்பிட்டிருந்தாள். என்னை விரைவிலேயே சந்திப்பதாகவும் உத்தரவாதம் கொடுத்திருந்தாள். அக்கா ! ஆனந்தம் சுரக்கும் நெஞ்சோடு, அன்பு பெருக்கெடுக்கும் இதயத்தோடு, பாசம் புரளும் உள்ளத்தோடு அழகியை வரவேற்க நான் இரண்டு கைகளையும் நீட்டிக் காத்திருக்கிறேன். அவளைக் கண்டுவிட்டால், எனக்குக் கோடிப் பொன் கொட்டிக் கொடுத்த சந்தோஷம் உண்டாகும். மிஸ்டர் அழகேசனையும் விரைவில் சந்தித்துப் பேசுவதாக யிருக்கிறேன். அழகியின் இருப்பிடம் கூடத் தெரியவில்லை... உங்களுக்குத் தெரியுமா, அக்கா ? ஏதாவது லெட்டர் வந்ததா ?...

" ம்... ! ஒற்றைத் தனி உயிராக வாழமுடியாது—இந்த உலகத்திலே ; வாழவும் அனுமதிக்காது—இந்த உலகம் ! உயிர் போகிற தென்றால்கூட கையளவு தண்ணீர் கொடுக்க மாட்டார்கள் ! பாசம் காட்டலாகாதா என்றால், அது காசு எத்தனை என்பார்கள் ! இப்படிப்பட்ட விசித்திரமான லோகத்திலே முன்பின் தெரியாத ஒரு அழகியை முன்னும் பின்னும் அறிந்துகொண்டு, அவள் பேரில் தம் உயிரையே வைத்திருக்கின்ற ஜீவன்கள் நீங்கள், உங்கள் தம்பி, பரிமேலழகர், நான் ! நாம் நம்பிக்கையின் முனையில் நின்று அவளை அண்டி அண்டிச் செல்கிறோம் : அவளோ விரக்தியின் விளிம்பில் காலூன்றி நம்மை விட்டுப் பிரிந்து பிரிந்து செல்கிறாள். இந்த நம்பிக்கையும் விரக்தியும் கைகுலுக்கிக் கொண்டு, அழகியை நம் முன் கொண்டு வந்தால் எவ்வளவோ நன்றாக யிருக்கும்... !" என்று சொல்லி நிறுத்தினாள் நர்ஸ் செந்தாமரை.

முதற் பிறை முத்துப் பல்லொளி சிந்திச் சிரித்துக் கொண்டிருந்தது—படப்பிடிப்பின்போது சிரிக்க வேண்டுமென்பதற்காக வீட்டிலே சிரிக்கப் பழகிக் கொள்ளும் 'நட்சத்திரம்' மாதிரி.

" இன்னிக்குக் காலையிலே இந்த லெட்டர் வந்திச்சு ; அழகி எழுதி யிருக்குது," என்ற முன்னறிவிப்புடன் கடிதத்தைக் கொடுத்தாள் சுசீலா.

செந்தாமரைக்குப் படபடப்பு அதிகமாகி விட்டது. உன்னிப்புடன் படிக்கலானாள்.

'அன்புள்ள சுசீலா அக்கா அவர்களுக்கு,

வணக்கம்,

இந்தக் கடிதம் உங்களுக்கு அத்து மீறிய அதிசய உணர்ச்சியைப் பாய்ச்சும் என்பதில் சந்தேகமில்லை. அழகியைப் புதுமைப் பெண்ணாக மட்டுமே நீங்களும் உங்கள் தம்பியும் இதுவரை நினைத்திருப்பீர்கள். தற்போது புரட்சிப் பெண்ணாகவும் அழகி ஆகிவிட்டாள். காதலுக்கு மறுபெயர் புரட்சி என்று எங்கோ படித்தது நினைவிற்கு வருகிறது. என்வுரைக்கும் காதல் இல்லை; ஆனால் புரட்சி விளைந்திருக்கிறது. முள்வேலி கட்டி ரோஜாவை மலரச் செய்து வேடிக்கைப் பார்க்கிறது உலகம். நான் உலகத்தின் பாதத்தில் நிற்க விரும்பவில்லை; உச்சியில் நின்றேன்; சுழலும் உலகைத் திரும்பிப் பார்த்தேன். சுழலும் முட்களைத்தான் என்னால் காண முடிந்தது. முள் வேலியைக் காலால் எட்டி உதைத்து விட்டுத் தனி ரோஜாவாக—ஒற்றை ரோஜாவாக என்னால் நிற்க முடியும்—என் நெஞ்சில் தவழும் நேர்மையை மறக்காமல்—என் உள்ளத்தில் ஒளி உமிழும் தாலியை மறக்காமல்! ஆனால் என் மனச்சாட்சிக்குப் புரட்சி மனப்பான்மையில்தான் ஈடுபாடு அதிகம். 'மை'யினால் என்னை மயங்கச் செய்த—ரோஜாவில் மயக்க மருந்தைத் தடவி நினைவிழக்கச் செய்த 'அவரைப்' பழிக்குப் பழி வாங்கப் போகிறேன்; நல்லவர்கள் ஏன் வாழ முடியாது என்பதை நாலு பேருக்கு எடுத்துக் காட்டப் போகிறேன். என் கட்சிக்கு ஆதாரங்கள் இருக்கின்றன. நியாய மன்றத்திலே அவர் பேரில் வழக்குத் தொடுக்கப் போகிறேன். கல்லானாலும் கணவன் என்கிறார்கள்; கல்லைக் கடவுளாகக் கருதுபவர்கள் இருக்கையில், அதைக் கணவனாகவும் கருத முயல்வதில் எனக்கு ஆட்சேபணம் எதுவுமே இல்லைதான்; ஆனால் அந்தக் கல்லிலே கடுகத்தனை கருணை ஒட்டியிருக்க வேண்டாமா? கல்லாம்—கடவுளாம்; புல்லாம்—புருஷனாம்!

நாஸ்திகம் பேசுகிறேனே என்று நீங்கள் தப்புக் கணக்குப் போட்டு விடாதீர்கள். அது எனக்கு கொஞ்சமும் உடன்பாடு அல்ல! ஆனாலும், என் வார்த்தைகளைத் தனித்திருந்து ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகச் சிந்தித்துப் பாருங்கள். வாழ்வின் ஆனந்தமிதப்பிலே உல்லாச நீச்சல் போட்டு விளையாட வேண்டிய நான், துன்பச் சுழியில் சிக்கித் திக்குமுக்காடுகிறேன். நான் பட்ட வேதனையை—அனுபவிக்கும் அல்லலை ஆண்டவன் அறியவில்லை என்று எப்படிக் கருதமுடியும்? படைத்தவன் படைப்புப் பொருள்முன் தோன்றவேண்டாம்; என் பேரிலே பச்சாதாபமாவது காட்ட வேண்டாமா?

விசித்திரமாகத் தோற்றம் தருகிறேனா நான்? விந்தைப் பெண்ணாக உங்களுக்குக் காட்சியளிக்கிறேனா? சூழ்நிலைகள் என்னை

அவ்வாறு தம் வலைகளில் விழச்செய்து விட்டிருக்கின்றன. நான் என்ன செய்யட்டும் ? என் வாழ்க்கை அப்படி ; நான் அப்படி !

தஞ்சாவூரில் என்னுடைய ஒன்றுவிட்ட தமக்கை வீட்டிலிருந்து இக்கடிதத்தை எழுதுகிறேன். வெகு சீக்கிரமாக நான் அழகேசனைச் சந்திக்கப் பட்டணத்திற்குப் பயணப்படுவேன். உங்களை அவசியம் சந்திப்பேன். உங்கள் தம்பி திரு கரிகாலன் அவர்களுக்கு என்னுடைய பணிவன்பு கலந்த வணக்கத்தைத் தெரியப் படுத்துங்கள். உடன் பிறவாச் சகோதரர் அவர். என்னைப் பறித்துக் கொண்டவர் செய்த சதியால் என் நினைவைப் பறிகொடுத்துக் கிடந்த அன்றைக்கு என் பெண்மையைக் காத்த—என்னைக் கை கொடுத்துக் காப்பாற்றிய அவர், என் பாசமிக்க இதயத்திலே நீங்காத இடம் பெற்றுவிட்டிருககின்றார்.

அன்புச் சகோதரி ! ஒன்றைமட்டும் தீர்மானமாக நினைவு வைத்துக் கொள்ளுங்கள். இந்த அழகி தமிழ்ப் பெண் ; புதுமைப் பெண் ; புரட்சிப் பெண்ணுங்கூட ! என் கழுத்தில் மின்னும் தாலிச் சரடு அழகேசன் அவர்களுக்குச் சொந்தம்தான் ; ஆனால் நான் அவருக்குச் சொந்தமல்ல... !

முன்னர் நான் எழுதிய "சொல்லடி பராசக்தி" என்ற கதை உங்கள் ஞாபகத்தில் ஊசலாடுகிறதா ? நான் என்ன செய்வேன் ?

அழகி வடிக்கும் ரத்தக் கண்ணீருக்குச் சாட்சிவைக்க என்னைப் படைத்தவனைக் கூவிக்கூவி அழைக்கிறேன்—'அவனை'க் கண்ணால் காணவே முடியவில்லையே !

பிற நேரில்.

அழகி."

மணல்வீடு கட்டி விளையாடும் பெண் குழந்தை விம்முவது போல, நர்ஸ் செந்தாமரை விம்மல் நிரம்பிய உள்ளத்தோடு கண்ணீர் பெருக்கினாள். "பலகாலம் உயிருக்குயிராகப் பழகியிருந்தும், அழகியை என்னால் இன்னமும் புரிந்துகொள்ள முடியவில்லை ; தன் உள்ளத்தைப் பிறர் அறியக்கூடச் சந்தர்ப்பம் கொடுக்காமல் நழுவி விடுகிறாள் ; இங்கக் கடிதமும் அவள் கதையை முழுமையாகச் சொல்லக் காணோமே ?... நல்ல வேளை. இதில் தன்னுடைய விலாசத்தையாவது எழுதினாளே, மகராஜி !" என்றாள் செந்தாமரை.

ஜாஸ் அலாரக் கடிகாரம், 'மணி எட்டு !' என்றது.

"கரிகாலன், நான் போய் வருகிறேன். நீங்கள் என்னை அடையாளம் கண்டு கொள்கிறீர்களா யென்பதை அளந்தறியத்தான்

அப்படி வரம்புமீறி உங்களிடம் பேச்சுக்கொடுத்தேன். தயவு செய்து தவருக எண்ணுதீர்கள்,'' என்ருள் செந்தாமரை.

என்ன சமாதானம் சொல்வது, எப்படிச் சமாதானம் சொல்வது என்று தெரியாமல் விழித்த கரிகாலன் தன் தமக்கையைப் பார்த்தவாறே சிரித்தான். மௌனச் சிரிப்பின் மூலம் பலர் பல இக்கட்டுகளிலிருந்து தப்ப முடியுமல்லவா ?

பிறகு, சுசீலாவிடம் விடை பெற்றுக்கொண்டு செந்தாமரை புறப்பட்டாள்.

அடுத்த ஐந்தாவது நிமிஷம்—

கரிகாலனைத் தேடிக்கொண்டு போலீஸ் ஜவான் ஒருவர் அங்கே நுழைந்தார். சட்டம் பிறந்தது ; "அழகேசன் ஸில்க் எம்போரியத்தில் கொள்ளைபோன விஷயமாக அழகேசனின் சந்தேகத்திற்கு இலக்கானவர்களில் கரிகாலனும் ஒருவன் ; அவன் உடனே போலீஸ் ஸ்டேஷனிலே ஆஜராக வேண்டும் !''

# 8. கண்ணீரின் இதயம்

'அழகியைப் பார்த்துவர முதலில் தஞ்சாவூருக்குப் போய் வருவோமா? அல்லது, அழகேசனைக் கண்டு பேசி அவரது மனநிலையை ஊகித்தறிந்த பிற்பாடு, அழகியைச் சந்திக்கலாமா?' என்ற போராட்டத்தில் நர்ஸ் செந்தாமரை உழன்று கொண்டிருக்கையில், அன்றையச் செய்தித் தாள் அவள் மேஜைக்கு வந்தது. முதல் பக்கம் தந்த முக்கியச் செய்திகளைப் படித்த அவள் கடைசிப் பக்கத்திற்கு வந்தாள்.

கால மணல் வெளியில் அடிச்சுவடுகளைப் பதித்தவுடன், விநாடி, நிமிஷம், மணியெல்லாம் விடை பெற்றவாறிருந்தன.

ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட வேண்டுமென்ற ஞாபகம் வந்தது. நிலைக்கண்ணாடி அவளது 'நர்ஸ் வேஷ'த்திற்குச் 'சரி' சொன்னது. சாவின் சந்நிதியில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த உயிர்க் கணவனின் பாதத்தடியில் அமர்ந்து கண்ணீரைத் தன் மாங்கல்யத்திற்குக் காணிக்கை வைத்துக்கொண்டிருந்த ஓர் அபலைப் பெண்ணின் உருவம் அவள் மனக்கண்ணில் தெரிந்தது. அதே சடுதியில், அவளது மனக்கூடத்திலே அழையாத விடடில் நுழைந்த விருந்தாளியாக அழகியும் பிரவேசித்தாள். பெண் பிறவிகள் இருவரையும் மனத்தராசில் ஏற்றி எடை போடப்போன தருணம், அவளுடைய மண்டை வெடித்துவிடும் அளவுக்கு அப்படிக் கனத்தது.

ஆஸ்பத்திரியில் அவள் நுழைவதற்குப் பதிலாக அவளுடைய கையொப்பமிட்ட 'லீவ் லெட்டர்' நுழைந்தது. மருத்துவ மனையில் அவளுடைய இன்முகத்திற்காக ஏங்கிக்கிடந்த நூற்றுக்கணக்கான ஜீவன்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருந்த அவளது நெஞ்சின் அடிவாரத்திலே, உலகத்தின் ஏதோ ஒரு முடுக்கிலே உயிர் வாழ்ந்து கொண்டிருந்த அந்த அபலை அழகி ஒருத்திமட்டும் அத்தனை பேர்களுடைய இடங்களையும் வட்டியும் முதலுமாகக் கவர்ந்து பற்றிக் கொண்டிருந்தாள்.

அன்பு விசித்திரமான நோய்; அந்த நோய்க்குப் பெயர்வைக்க எந்த டாக்டராலுமே முடியாது. இப்படிப்பட்ட விசித்திர நோய்க்கு மருத்துவப் பணிப்பெண் செந்தாமரை மாத்திரம் எப்படித் தப்ப முடியும்?

அழகி அவளை அழைக்கவில்லை ; ஆனால் அவள் அழகியைக் கூப்பிட்டாள். வெள்ளை அங்கிகள் பீரோவில் அடைக்கலம் புகுந்தன.

" செந்தாமரை, நாலுநாள் முந்தி உனக்கு ஒரு லெட்டர் வந்திருக்கிறது. அதை கடைசி ரூமில் போஸ்ட்மேன் போட்டுச் சென்று விட்டானாம். ஸ்டெல்லா சொன்னாள்," என்ற விளக்கத்துடன் செந்தாமரையிடம் அக் கடிதத்தைத் தந்தாள் அவளுடைய தோழி.

நட்சத்திரங்களை எழுத்துக்களாக வடித்ததுபோல அவ்வளவு அந்தமாக விலாசம் எழுதப்பட்டிருந்தது. 'ஆமாம், இது என் அழகியின் கையெழுத்தேதான். சுசிலாவுக்கு லெட்டர் போட்டவள் எனக்குப் போடவில்லையே என்று குறைப்பட்டுக் கொண்டிருந்தது எவ்வளவு பெரிய தப்பு?' என்று எண்ணிப் 'பாவ மன்னிப்பு' பெற்றுக்கொண்டு உறையைக் கிழித்தாள் தாமரை.

அழகியின் கடிதத்திற்கு மட்டும் அற்புதமாகப் பேசத் தெரியும் !

**"அன்புமிக்க தோழி செந்தாமரை,**

விடியாத இரவை வாழ்த்திக்கொண்டே துயர் வற்றாத உள்ளத்திலிருந்து எழும் பெருமூச்சுக்களைச் சொற்களாக மாற்றி இக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன். ஓடும் ரயில் ; உறங்கும் உலகம் ; விழித்திருக்கும் பேதை நெஞ்சம்—இப்படிப்பட்ட சூழலுக்கிடையில் காலத்தையும் தூரத்தையும் பொய்க் கணக்காக்கி விட்டு, உன்னோடு நான் நெஞ்சோடு நெஞ்சம் கலந்து பேசப் போகிறேன்.

என்னுடைய தபால் உன் பார்வைக்கு வந்திருக்கும். 'விரைவிலேயே உன்னைச் சந்திப்பேன் ; அப்போது அழகியிடமிருந்து புதிய பல திடுக்கிடும் விஷயங்களை அறிந்து கொள்வாய் !' என்ற அபாய அறிவிப்பை நீ மறந்திருக்க முடியாது. நேரில் சொல்ல வேண்டிய சில விஷயங்களைக் கடிதத்தில் குறிப்பிட எண்ணுகிறேன். இரண்டொரு நாளில் நான் சென்னைக்கு வருவேன். அப்பொழுது என் நிலை, போக்கு, முடிவு எப்படியாகுமோ ?—அது என் வரைக்கும்கூட ரகசியந்தான்... !

செந்தாமரை ! அன்றைக்கு உன்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டேன் அல்லவா ? விதி இழுத்த இழுப்பிலே நான் போக மறுத்தேன் ; ஆனால் என் கால்கள் அழைத்த திசைக்கு மறுகி மறுகிப் போனேன். அப்பொழுது ஒரு மனிதர் என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். காமிரா தோளில் இழைந்தது ; கையில் 'ஸ்டேட் எக்ஸ்பிரஸ்' இருந்தது. 'டீக்'காக உடுத்து இருந்தார்.

என் மஞ்சள் தாலி என்னை அடிமையாக்கி, திருவாளர் அழகேசன் அவர்களுக்கு அதுவே உரிமைப் பட்டயமாகவும் ஆன அன்று தினம் மாலையும் கழுத்துமாக என்னை இவர் கண்டாராம். இவருடைய பெயரைக் கேட்டேன். கஜேந்திரனும் இவர்! அடுத்த இரண்டாவது வினடியில், அவர் தன்னை மன்னிக்கும்படி வேண்டினர். கடைசியில் காரணத்தையும் சொன்னர். அதிசய மையினுல் என் சிந்தையைச் சூன்யமாக்க—ரோஜாப் பூவினுல் அன்றைக்கு எனக்கு மயக்கத்தை உண்டாக்க—இந்தப் புண்ணியவான்தான் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிருர். அங்கேயும் இவரை அழகேசன் ஏமாற்றி விட்டிருக்கிருர். தன் தம்பிக்கெனச் சொல்லி, எப்படியோ அந்தச் சாதனங்களைப் பெற்று, என் பேரில் துஷ்பிரயோகம் செய்து விட்டாராம் அழகேசன்.

"அழகி, உங்களுக்கென்று தயாரிக்கப்பட்ட சதி இது என்ற ரகசியம் உங்களது கழுத்தில் தாலி ஏறியவுடன்தான் எனக்குத் தெரியும். தயவு செய்து என்னை மன்னியுங்கள். நானும் உங்களைப் போல பெண்ணுடன் கூடப் பிறந்தவனே. ஆனுல் ஒன்று. உங்களை வஞ்சித்த அதே அழகேசனை நான் வெகு சீக்கிரத்திலேயே பழிக்குப் பழி வாங்காமல் போகமாட்டேன். இந்தச் சீட்டு என் விலாசத்தைக் தெரியப்படுத்தும் என்னை அவசியம் வந்து சந்திப்பீர்களா?... அழகேசனைப் பற்றிய பயங்கர உண்மைகளை உங்களுக்குச் சொல்கிறேன்," என்ருர். நாங்கள் பிரிந்தோம்.

என் அத்தான் முரளியின் கண்களில் இன்னமும் நான் படவில்லை. எப்படி விழிப்பேன் நான்? பாம்பு தேரையைப் பிடித்துக் கொண்ட வெறியில் சிரிக்கிறது; தேரையோ விதியை எண்ணிக் கதறுகிறது.

இன்றளவில் நான் எனக்கு மாத்திரம்தான் அழகி. ஆனுல் உலகத்தின் கண்களுக்கு மிஸஸ் அழகேசன்! ஆனுல்...? புன்னகைவராளி மிதந்தோடும் அழகு நிலாப் பெரு வெள்ளத்திலே, கவலையற்றுத் திரிந்தோடும் காவேரியின் புதுப் புனலினூடே நான் ஒரு நாள்கூட அழகேசனைக் காண இயலவில்லை. எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் என் அத்தான் முரளிதான முரளிதரனுகக் காணப்படுகிருர்...!

சர்க்கஸ் கூடாரத்திலே, புலிக் கூண்டிலே ஓர் ஆட்டுக்குட்டியை நீ கண்டிருக்கலாம்; அந்த அதிசயத்தில், நீ என்னை அழகேசனிடம் ஒப்படைக்க ஆசைப்படுகிருயா? வாழ்நாளெல்லாம் நான் அவரிடம் எப்படி 'அடிமை'யாக இருக்க முடியம்? என்னுடைய முக்காலமுமே ஒரே இருட்டடிப்பு மயந்தானு...? என் வாழ்வில் ஒளிச் சுடர் தோன்றவே தோன்ருதா? என் பெயர்

இறந்த காலப் பெயரான பின்னர்தான், அமர ஒளியைக் காண முடியுமா ?

கஜேந்திரனைச் சந்திக்க வேண்டும் ; அழகேசனைப் பற்றிய பெரிய ரகசியங்கள் சிலவற்றைச் சொல்லப் போகிறாராம். நான் உன்னைச் சந்திக்காமல் இருப்பேனா ?

திருச்சி வந்து விட்டது. ஐயோ, என் அத்தான் முரளி என்னைக் கண்டுவிடப் போகிறாரே ? அவர் இங்கே எப்படி வந்தார் ?

அழகி.''

செந்தாமரை கடிதத்தை டிராயரில் வைத்தாள். 'ஆமாம், சுசீலாவுக்கு எழுதுவதற்கு முன் அவள் இதை எனக்கு எழுதியிருக்கிறாள். சுசீலாவை எனக்குத் தெரியுமென்பதை அவள் எப்படி அறிவாள் ? ம்... !' என்று பெருமூச்சு விட்டாள்.

செந்தாமரை வழி மிதித்து, வழி திரும்பி நடந்தாள்.

'அழகேசன் விலாசம்' வந்தது. உலகறிந்த கபாலீஸ்வரர் உச்சிக்காலப் பூஜைக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டதை உலகிற்கு அறிவிக்கும் பொறுப்பு கண்டா மணியின் தலையில் விழுந்திருக்க வேண்டும் !

பொட்டுப் பொழுது நின்றாள் ; நிதானிக்க முடியவில்லை அவளால். 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற எச்சரிக்கைப் பலகைக் கருகில், நாய் எதுவும் இல்லை ; நல்ல வேளை, கூர்க்கா நின்றான். நாய் என்றால் அவளுக்கு ஓர் ஈடுபாடு ; நன்றி மறக்காத ஜந்து ஆயிற்றே !—அதற்காகத்தான் ! கூர்க்காவைக் கண்டதும், 'பூ' என்றாள் அலட்சியமாக, 'ஆ !' என்று அவன் அவளுக்குப் புரியாத ஹிந்தியில் என்னவோ சொன்னான். அவனுக்குப் புரியாத தமிழில் அவள் 'போ !' என்று கூறிக்கொண்டே 'விடுவிடு' வென்று உள்ளேயே போய்விட்டாள்.

கூடத்தைச் சுற்றுமுற்றும் பார்வையிட்டாள். அரசியல் முத்திரை பெற்ற பிரமுகர்கள் சிலர் காட்சியளித்தார்கள். புராண முத்திரை பெற்ற சில மனிதர்கள் புன்னகை புரிந்தார்கள்.

வேலைக்காரி ஒருத்தி வந்தாள். அவளைத் 'தாஜா' பண்ணினாள் செந்தாமரை. அசோக சக்கரம் ஒன்று சிரித்தது. வேலைக்காரி விட்டுக்காரியானாள். அவள் சொன்னாள் : "அச்சாணி இல்லாத தேர் முச்சாண்கூட ஓடாதின்னு எங்க பாட்டி சொல்லுவாங்க. அதைப் போல, இந்த வீட்டிலே ஒரு பெண் தெய்வம் இல்லாததாலே, இத்தனை பெரிய வீடு பாழடைஞ்ச கோயிலாட்டம்தான்

கண்ணுக்குத் தோணுது. அழகி அம்மாவை அன்னிக்குக் கண்ணுலத்திலே பார்த்தது ; இப்போ எனக்குக் கண்ணுக்குள்ளேயே நிக்குது. இங்கே சின்ன எசமானர் அழகேச ஐயா கல்யாணம் கட்டியும் பிரம்மச்சாரியாகயிருக்காரு. என்ன காரணமோ, அழகி அம்மா உலகமே வெறுத்துப்போய் எங்கேயோ அஞ்ஞாதவாசம் செய்யறுங்க. கொஞ்ச நாளைக்கு முந்தி அழகி அம்மாளுக்கு ரொம்ப உடம்புக்கு முடியலென்னு தந்தி வந்திச்சாம் ; மூணு நாள் யோசிச்சுப்பிட்டு நாலாம் நாள் போய் விசாரிச்சாங்க ; அழகியை ஆஸ்பத்திரியிலேயிருந்து அனுப்பிவிட்டதாகத் தகவல் கிடைச்சதும், வீட்டுக்கு வந்து மலங்க மலங்கக் கண்ணீர் வடிச்சாங்க சின்ன ஐயா. அன்னிக்கு ராத்திரியே அவருக்கு மயக்கம் வந்திடுச்சு ; சேந்தாப்போல ரெண்டு நாழிப் பொழுதுக்கு அவருக்குப் பேச்சு மூச்சு இருக்கலே.

" டாக்டர் நாலு பேர் வந்தாங்க ; தெரிஞ்சவங்க வந்து பார்த்தாங்க. கடைசியா, இவருக்கு யாரோ பில்லி சூன்யம் வச்சிருக்க வேணும்னு முடிவு செஞ்சிருக்காங்க. அதை எடுக்கறதுக்கு மலையாளத்தான் ஒருத்தனுக்கும் ஆள் போயிருக்குது. இத்தனை தீவினையும் போதாதின்னு, நேத்திக்கு முதல் நாள் ஐயா ஜவுளிக் கடையிலோ யாரோ புகுந்து ரொம்பப் பணத்தைக் கொள்ளையடிச்சிட்டுப் போயிருக்காங்க. எனக்கு என்னமோ ரெண்டு பொழுதா ஒரு சம்சயம் மனசிலே உறுத்திக்கிட்டே யிருக்குதுங்க அம்மா. ஏழை, பாழைங்க அழுத கண்ணீர் யாரையும் சும்மா விடாதின்னு பேச்சுக்குச் சொல்றது நெசந்தான் போலே ! ஒரு வேளை, கண்ணுலத்தன்னிக்கு மணவறையிலே அழகி அம்மா மூணும் பேருக்குத் தெரியாமல் வடிச்ச கண்ணீர்தான் இப்படி இவரை ஆட்டிப் படைச்சுத் திருவிளையாட்டுப் பண்ணுதோ, என்னமோ ? எங்க அழகேச எசமானர் மாத்திரமில்லே—உங்க அழகி அம்மாகூட ஒரு விடுகதை கணக்கிலேதான் இருந்து வர்ருங்க !"

மாயக் குயவன் மண் பிசைந்து ' ஏழை ' என்ற அச்சை எழுதி முடித்ததும் உயிர்ப்பிச்சை அளிப்பதற்கு முன், மறந்துபோய் விடாமல் வைத்தது ஒன்றே ஒன்றுதான்—அதுதான் இந்தப் பாழாய்ப் போன இதயம். வேலைக்காரி வடித்த கண்ணீரின் இதயம் விம்மி விம்மி வெடித்தது.

செந்தாமரைக்கு மயிர்க் கூச்செறிவு ஏற்பட்டது. சூன்யத்தைத் துண்டு போட அண்டிச் சாடின கண்கள். பட்டமளிப்பு விழா உடையில் காட்சியளித்த அழகேசனின் போட்டோ அவளது இமை வட்டங்களை விரியச் செய்தது. பைத்தியம் பிடித்தவளைப் போல வெளியே வந்தாள். பளிங்குக் கற்கள் அவளுக்குப் பாத பூஜை பண்ணின.

அந்த ஒரு கணம்—

செந்தாமரை அப்படியே மெய்ம்மறந்து போனாள். எதிர்ப்புறமிருந்த 'காமதேனு'விலிருந்து அழகியும் அழகேசனும் தோளோடு தோள் பிணைத்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். 'ஆஹா! நான் கண்ட கனவு நனவாகி விட்டது!' என்று வாய்திறந்து சொன்னாள் செந்தாமரை.

அப்பொழுது மருத்துவப் பணிப்பெண்ணிடம், "அம்மா, அம்மா! கடைக்குப் போயிருந்த அழகேச ஐயாவுக்கு வழியிலே மயக்கம் வந்து காரிலே அடிபட்டு ரொம்ப ஆபத்தாயிருக்குதாம்!" என்று பதட்டத்துடன் சொன்னாள் வீட்டுப் பணிப்பெண்.

தன்னுணர்வைச் சுண்டியிழுத்து முறுக்கேற்றிக் கொள்வதற்குள், பங்களா போர்டிகோவில் பிளஷர் வந்து நின்றது. அழகேசனைப் பற்றித் தன் தோள்மீது சாய்த்தபடி வந்த அந்த இரு உருவங்களைக் கண்டதும் செந்தாமரைக்குக் காண்பது முன் மாதிரி கனவா, அல்லது நனவே தானா என்ற சந்தேகம் வந்து விட்டது!

செந்தாமரையின் இதயத்தின் இதயம் அவளை நச்சரித்தது; "அழகி எப்படி இங்கே வந்தாள்? அவள் அத்தான், ஆம்; முரளி எப்படி—ஏன் இங்கே வந்தார்?"

கூடத்தைத் தாண்டியிருந்த அறையில் அழகேசனைப் படுக்கையில் கிடத்தினாள் அழகி. மறுகணம் ஆடாத—அசையாத அழகுப் பதுமையாகி விட்டாள் அழகி. அந்தப் பதுமைக்குக் கண்ணீரை மாளாமல் வடிக்க யார் கற்றுக் கொடுத்தார்களோ?

அழகேசனின் தந்தை கண்ணீருடன் தம் மகனைப் பார்த்துவிட்டுத் திரும்பினார்; அழகியிடம் சென்றார். "எங்கள் தெய்வம் எங்களைத் தேடி வந்துவிட்டதா?... ஆஹா, என் மகன் அழகேசன் இனிமேல் கட்டாயம் பிழைத்துவிடுவான்; டாக்டர் கூடத் தேவையில்லை; கண்காணாத எந்தத் தெய்வத்தின் துணையும் இனித் தேவையில்லை!... கண்கண்ட இந்தத் தெய்வத்தின் துணை ஒன்றே போதும்!" என்று வெறிகொண்ட பாவனையில் பேசலானார் கிழவர் சோமனாதன்.

சற்றுமுன் கண்ட வினாடிப் பொழுதுக் கனவு இப்பொழுது வாழ்நாள் முழுதும் நிறைவேறப் போகும் நனவாகத் தோன்றியது செந்தாமரைக்கு. அவளுக்குக் கங்கு கரை தெரியாத பூரிப்பு.

ஆனால்......?

"அத்தான்! போவோம், புறப்படுங்கள்!" என்றாள் அழகி. முரளி எழுந்தான். கோழி மிதித்த குஞ்சாகத் தன் கண்ணீர் முத்

துக்கங்களைத் தன் கால்களாலேயே மிதித்துவிட்டு அவள் நடந்தாள்; நடந்துகொண்டே யிருந்தாள்!

கைத்தலம் பற்றியவனுடைய 'ஆசை'யைப் பூர்த்தி செய்ய எண்ணி, அந்த நோயாளிக் கணவனைக் கூடையில் வைத்துத் தலையில் சுமந்து கொண்டு, அவன் விரும்பிய விலைமாதின் வீட்டுக்குச் சென்ற நளாயினியின் சித்திரம் சிந்தாத கண்ணீரைச் சிந்திக் கொண்டிருந்தது!

## 9. "நாளை, புது நிலவு!"

அந்த இன்ப ஸ்பரிசம் அழகியின் உள்ளத்தோடு உள்ளமாகப் பரவி நின்றது; உணர்ச்சியோடு உணர்ச்சியாக ஊடுருவி நின்றது, தன்னுள் எழுந்த இந்தப் புதிய உணர்வு அவளுக்குப் புதிய அனுபவம். புதிய உலகம் ஒன்றில் காலெடுத்து வைத்திருப்பது போலவே அவளுடைய 'மனம்' அவளுக்குச் சொன்னது. அவள் நம்பினாள்; 'சரி!' என்று அவள் ஆதரித்த சமயம், 'இல்லை' என்று மறுமொழி கூறியது அவளுடைய 'மனச்சாட்சி.'

துல்லிய வெண்மை நிறப் புடவை அவள் கண்களில் பட்டுத் தெறித்தது; அவள் நடுங்கிப் போய் விட்டாள். சேலையில் பட்டுத் தெறித்தன ரத்தத் துளிகள். அவள் துடி துடித்து விட்டாள். அழகி அந்த லஸ் முனையிலேயே நின்றுகொண்டிருந்தாள். அவளது சுய நினைவு 'அழகேசன் விலாச'த்தில் போய் நின்றது. களவுபோன நினைவுகள் களம் புகுந்தன.

அழகேசனைச் சந்தித்த சம்பவத்தை அழகி எண்ணிப் பார்த்தாள். அப்போதும் அவளுக்கு அது கனவு நிகழ்ச்சிபோலத்தான் பட்டது; இப்போதும் அவளுக்கு அது கனவு நிகழ்ச்சி மாதிரியே தான் தோன்றியது.

அந்தச் சம்பவம்—

அழகி அன்று காலையில் எழும்பூரில் ரயிலிலிருந்து இறங்கி வெளியேறினாள். அதே சமயம் அவளுடைய அத்தான் முரளியைச் சந்தித்தாள்; அல்ல, அவன் அவளைச் சந்தித்தான்.

"கடிதங்கள் மூலம் தூதுவிட்ட கூக்குரல் பலன் சொல்லவில்லை; ஓடோடி வந்தேன். ஆண்டவன் புண்ணியத்தில் உன்னைச் சந்திக்க முடிந்தது, அழகி!" என்றான் அவன்.

அவள் விரக்தியுடன் சிரித்தாள்.

"எழும்பூரில் அறை யொன்று வாடகைக்கு எடுத்துத் தங்கி விடலாம்," என்றான் முரளி.

"இல்லை. எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கிறது. அத்தான்! திருவல்லிக்கேணியில் என் தோழி பூங்குழலி இருக்கிறாள்; கோமதி இருக்கிறாள்; அல்லி இருக்கிறாள். அங்கேயே போய்க் குளித்துவிட்டு நான் உடனடியாகப் புறப்பட வேண்டும்."

இரண்டெட்டில் அவள் அவனை விட்டுப் பிரிந்தாள்.

பொழுது வளர்ந்தது. அழகி தன் தோழியின் வீடு சென்று திரும்பினாள், புதுமெருகுடன். திருவல்லிக்கேணி பஸ் அவளை மவுண்ட்ரோடு முனையில் கொண்டு சேர்த்தது. இறங்கினாள். கொஞ்ச தூரம் நடந்தாள். 'ரவுண்டானா' வந்தது. திரும்பும் போது, அவள் தன் அத்தான் முரளியைப் பார்த்து விட்டாள். மறுக எண்ணியது நெஞ்சம்; ஆனால், கால்கள் மறுக மறுத்துவிட்டன. முரளி, "அழகி, அழகி!" என்று கூப்பிட்டுக்கொண்டே எதிர்ச் சாரியிலிருந்து வந்தான். இருவரும் சந்திக்கும் சமயத்தில் பிளஷர் கார் ஒன்று அசுர வேகத்தோடு 'காரினும் கடிது' பறந்து வந்தது. சந்தித்த இருவரையும் பிரித்துவிட நினைத்தது போலும்! பாவம், விதி என்ற ஒன்று அவர்களை என்றோ பிரித்துவிட்டதை அந்தக் கார் எப்படி அறிய முடியும்?

மயிரிழை தப்பினாள்; அழகியின் உயிர் தப்பியது. அதே கணம், "அழகி, அழகி!" என்ற கூப்பாடு விண்ணைச் சாடி எதிரொலித்தது. திரும்பக்கூட நாழியில்லை. அழகேசன்—அழகியின் உரிமைக்காரன் தட்டுத் தடுமாறியவாறு குறுக்கே நடந்து வந்தான். அழகி தன்னுணர்வைத் தன்வசப் படுத்திக் கொள்வதற்குள், அழகேசன் நடுத்தெருவில் மயங்கிக் கிடந்தான்; அருகே நின்ற பிளஷர் அவனை வஞ்சம் தீர்த்துக் கொள்ள எண்ணித் தோல்வியுடன் நின்றுகொண்டிருந்தது. அழகேசனுக்குப் பிரக்ஞை வரவில்லை; ஆனால், அவனது நெற்றி மேட்டிலிருந்து குருதி வெள்ளம் மட்டும் புதுப்புனலாகப் பாய்ந்தது; ரத்தத் துளிகள் 'க்யூ' முறையை அனுஷ்டித்தன. தெரியாதவர்கள் ஓடோடி வந்தார்கள். ஆனால், தெரிந்தவளோ ஜவுளிக்கடை முகப்பிலுள்ள அழகுப் பொம்மையாக நின்றாள். ரத்த நாளங்கள் வெடித்து, அவற்றிலுள்ள ரத்தம் முழுவதும் மண்டை உச்சிக்கு ஏறிவிட்ட மாதிரி உணர்ந்தாள். மவுண்ட் ரோடின் பொதுத் தோற்றம் அவள் முன் ஆலவட்டம் சுற்றியது. தன்னைத் தானே ஒரு கணம் பார்த்துக் கொண்டாள். வெள்ளைப் புடவை, கறுப்பு ரவிக்கை—மறைவிலிருந்து தன் உயிரை யாரோ பறித்துக்கொண்ட மாதிரி அஞ்சினாள்; அயர்ந்தாள்; அலறினாள். கழுத்தில் தொங்கிய அந்தத் தாலி ஊசலாடிக் கொண்டிருந்தது. கண்கள் வடித்த கண்ணீர்த் துளிகள் அதற்கு நிவேதனம்!

"ஏம்மா, நீ பொம்பளை தானா? ஒனக்கு நெஞ்சே கிடையாதா?... பாவம், யாரோ பெரிய இடத்துப் புள்ளை கணக்கிலே தோணுது. கல்லாட்டம் சும்மா நிக்கிறீயே? எங்காலும் போய் கொஞ்சம் தண்ணி கொண்டாரப்புடாது?... நீயும் கண்ணாலம் கட்டின பொண்ணுத்தானே தோணுது?..." என்றான் பட்டிக்

காட்டுக் கிழவன் ஒருவன்—அருகில் நெருங்கி நின்ற முரளியை 'ஒரு மாதிரியாக'ப் பார்த்தவண்ணம்.

மறு விநாடி, அழகி எல்லோரையும் விலக்கிக்கொண்டு அழகேசனை நெருங்கினாள். நாசியடியில் கைவைத்துப் பார்த்தாள். சுவாசம் லேசாக வந்தது. அதே சமயம் அழகேசனுடைய டிரைவர் ஓடோடி வந்தான்.

" அத்தான், ஒரு கை பிடியுங்க !" என்றாள் அழகி. முரளி உதவ வந்தான். வந்த வேகத்தில் அவள்மீது மோதி விட்டான். அழகியின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது. தாலி பக்கவாட்டில் ஆடி நின்றது.

" அத்தான்...!" என்று இரைச்சல் போட்டவள், உடனேயே தன்னை ஒரு தப்படி பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

அழகியின் நெற்றியின் பாதத்தில் வியர்வைத் துளிகள் மின்னின ; முரளியின் கண்களின் பாதத்தில் கண்ணீர்த் துளிகள் ஓய்வு பெற்றன.

நிமிஷங்கள் 'ஜதி' நடை பயின்றன. அழகேசன் விலாசத்தில் அழகேசனைச் சேர்த்த கடமை உணர்வு அவளுடைய நெஞ்சில் நிறைந்தது. மனத்தையும் மனச்சாட்சியையும் 'சீல்' வைத்துப் பூட்டிவிட்டு வெளியேறி விட்டாள் அழகி.

அப்பொழுது மணி இரண்டு. கொல்லன் பட்டறையில் செருகப் பட்டு வெளியே எடுக்கப்பட்ட காய்ச்சிய தகட்டின் தீ நிறம் இன்னும் மங்கவில்லை ; மாறவில்லை.

மைலாப்பூரின் இருதயப் பகுதியில் அவள் நின்றுகொண்டிருந்தாள். எங்கோ ஓர் உலகத்தைக் கண்டுபிடித்து, அதில் தன் போக்கில் சுற்றிக் கொண்டிருந்தாள். அந்த உலகிலே அன்பு இருந்ததா ? காதல் இருந்ததா ? பாசம் இருந்ததா ? மனிதத் தன்மை இருந்ததா ? வாழ்க்கை நியதி இருந்ததா ? தெய்வம் இருந்ததா ?—அவளுக்கே தெரியாது. சிந்திக்கும் தன்மை தடம் புரண்டு விட்டாற் போன்ற ஓர் அதிசயமான உணர்வு பிறந்தது.

" அழகி !..."

குரல் கேட்டது. அந்தக் குரலைப் 'பார்க்க' ஆசைப்பட்டாள்.

" அழகி !"

" முரளி அத்தானா ?......நீங்கள் புறப்படுங்கள் ; நான், பூங்குழலியின் வீட்டுக்குப் போகிறேன். இன்றைக்குள் கஜேந்திரனைச் சந்தித்தாக வேண்டும் ; 'அவரை'...அழகேசனைப் பற்றி எனக்குத் தெரியாத ஏதோ ரகசியத்தைச் சொல்வதாகச் சொல்லியிருக்கிறார் !..."

" அந்த ரகசியத்தை நீ அறிந்துகொண்டு இனிமேல் என்ன ஆகப் போகிறது, அழகி ?"

" நான் அழகேசன் பேரில் தொடுக்கவிருக்கும் வழக்குக்கு அவரைப் பற்றின துப்பு எதுவானுலுமே எனக்குப் பலம் தரும்; பலனும் தரும்...... !"

" நிஜமாகத்தான் நீ கேஸ் போடப் போகிருயா, அழகி ?" என்ருன் முரளி.

" ஆம் !"

அவள் பேச்சு அவனுடைய சந்தோஷத்தை ' பீட் ' அடித்து விட்டுக் கோபமாக ஒலித்தது.

" பின், எதற்காக அழகேசனை காரில் கொண்டு போய்ச் சேர்த்தாய் ? கடைசியில் ஏன் கண்ணீர் சொரிந்தாய் ?"

" பெண் என்ருல் பேய்கூட இரங்கும் என்பார்களே ? ஆனால், ஒரு பெண்ணுக்கு ஒரு பேய் இரங்கத் தவறி விட்டது; நானே அந்தப் பேய்க்காக அனுதாபப்படும் பெண்ணுக நிற்க விரும்பினேன் !"

" நீ விசித்திரமான பெண் !"

" நீங்கள்கூட விசித்திரமாகத்தான் காணப்படுகிறீர்கள் ?"

செயலற்று நின்ருன் முரளி. அழகி தன்னிடமிருந்து நழுவிச் சென்ற சம்பவத்தை நினைத்துப் பார்த்தான்; நான்கு நாழிப் பொழுதிற்கு முன் அவளது மேனியில் எதிர்பாராமல் மோதியபோது, " அத்தான் !" என்று காளிபோலச் சத்தமிட்ட நிகழ்ச்சியையும் எண்ணிப் பார்த்தான்.

" அத்தான், நான் போய் வரட்டுமா ?"

" அழகி ! மறுபடியும் உன்னை என்று, எங்கே, எப்போது நான் சந்திப்பது ?"

" ஏன் ?" என்று ஆத்திரம் பொங்கக் கேட்டாள் அவள். அது அவனைச் சுட்டிருக்க வேண்டும் !

" அ...ழ...கி !"

" ......... "

" உன்னை என்னல் புரிந்து கொள்ளவே முடியவில்லையே ?"

முரளி மறு பேச்சாடாமல் திரும்பிச் சென்ருன்.

' பாவம், அத்தான் !... அழகி தீ என்பதை முரளி அத்தான் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை போலிருக்கிறது !... ம் !...' என்று தன்னுள் பேசிக்கொண்டே நடந்து கொண்டிருந்தாள் அழகி.

"அம்மா, கண்ணில்லாத கவோதி அம்மா!... காலணு. அரையணு குடுங்க, தாயி!" என்ருன் ஒரு பிச்சைக்காரன்.

அழகி அவனைப் பார்த்துச் சிரித்தாள். 'கபோதி என்கிருன்; ஆனல் என்னை எப்படி 'அம்மா' என்று அழைத்தான்? ஒரு வேளை எனக்குக் கதைக்கு 'ப்ளாட்' தரத்தான் இப்போது இப் படிக் காட்சி அளித்தானே?... உலகம் வரவரக் கெட்டுப்போய் விட்டது!' என்று நெஞ்சில் நெளிந்த இவ்வரிகள், அவளுடைய இரண்டணு நாணயத்தை அவனுடைய நாணயமிழந்த தன்மைக்குப் பரிசு கொடுத்தன.

அடுத்த நிமிஷம், அந்தக் கிழவன் கண்களைத் திறந்து அழகியை வணங்கினன். "நீங்க ரொம்ப நல்லவங்களாகத் தோணுது! இது என் பொளைப்புங்க; இல்லாப்போனு காலணுக் காசுகூட யாரும் தரமாட்டேங்கிருங்க. பொய்தாம்மா என்னை இத்தனை காலமா வாழ வச்சிக்கிட்டு வருது...!"

அவன் சொன்ன 'உண்மையைக் கேட்டு அவள் திகைத்தாள்.

அந்தக் கிழவனின் உருவிலே அவள் இரண்டு உருவங் களைத் தரிசித்தாள்; ஒன்று, அவளைப் 'பெற்ற' தந்தை; மற் ருென்று, அவளை மருமகளாக 'ஆக்கிக் கொண்ட' மாமனர். "கண்ணே அழகி! நீ என்னமோ எனக்கு நெருப்பு போலத்தான் தோணுகிருய்; கெட்டதை நெருங்க விடாமல் காத்துக் கொள் கிறதுக்கும், கெட்டதைச் சுட்டுப் பொசுக்கிறதுக்கும் மாத்திரம்தான் நெருப்பு பிரயோசனப்பட வேணும், அம்மா! மற்றபடி, உன் நெருப்பு ஐஸ் கட்டி மாதிரிதானம்மா இருக்கவேணும்!" என்று அடிக்கடி 'எச்சரித்த' அவளுடைய தகப்பனரின் வார்த்தைகள் அவள் நெஞ்சில் எதிரொலித்தன. "என் மகன் அழகேசன் இனி மேல் பிழைத்துவிடுவான். டாக்டர்கூடத் தேவையில்லை. கண் கண்ட இந்தத் தெய்வத்தின் துணை ஒன்றே போதும்!" என்று வெறியுடன் பேசிய தன் மாமனர்க் கிழவரின் பேச்சில் ஊடாடி யிருந்த 'நம்பிக்கை' அவள் கண்களில் நிழலாடியது. ஆனல்...?

தூரத்தில் நிற்கப்போன 'டாக்ஸி'யைக் கைதட்டி அழைத் தாள் அழகி.

"அம்மா, நீங்க எங்கே போகணும்?"

நிமிர்ந்து பார்த்தாள் அழகி.

டாக்ஸி நின்றது; டாக்ஸி டிரைவர் நின்ருன்.

'எங்கே போவது?'—அவள் குழம்பினுள்.

அப்பொழுது, "டிரைவர்! நர்ஸ் ஹாஸ்டலுக்குப் போக வேணும்... ம்...! ஏற்க்கொள், அழகி!..." என்ற ஆணைக் குரல் கேட்டது.

நர்ஸ் செந்தாமரை, எண்ணியது நடந்துவிட்ட மகிழ்ச்சியுடன் அங்கே நின்று கொண்டிருந்தாள்.

"செந்தாமரை!..." என்று அழைத்து, அவளை அணைத்துக் கொண்டு விம்மினாள் அழகி.

செந்தாமரை பலத்த குரலில் சொன்ன சொற்களை அஞ்சல் செய்தது, பறந்துகொண்டிருந்த அந்த டாக்ஸி; "அழகி! இனி நீ தப்பவே முடியாது! நாளைப் புது நிலவு உனக்கு! ஆமாம்...!"

# 10. பாலைவனத்தில் சுடர் விளக்கு

'பெண் பல விதத்தில் ஆணைவிடச் சிறந்தவள். உண்மையாக, தன்னலப் பற்றில்லாமல், பெருமையாக, அன்பாக, தாயாக, தாதியாக, தியாகியாக, கொடையாளியாக, பிறர் நிமித்தம் வருந்துவதற்காக, பெண்ணுடன் ஆண் ஒருபோதும் ஒத்து நிற்கமாட்டான். அவளது இருதயத்திலிருந்து ஒழுகும் அன்பும், இவ்வுலகத்தில் அவளது தொழிலாகிய உற்பத்தியும் அவளை ஆணைவிட எவ்வளவோ உயர்த்திக் காட்டுகிறது.'

பிரித்து வைத்திருந்த புத்தகத்தில் காணப்பட்ட இவ்வாக்கியங்களை ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் படித்தாள் அழகி. சற்று முன் செந்தாமரை படித்து முடித்து அதை அழகியிடம் நீட்டினாள். இப்பொழுது அழகி சிரித்துக்கொண்டே அதைத் திருப்பிக் கொடுத்தாள்.

"ஏன் அப்படிச் சிரிக்கிறாய், அழகி ?"

"பெண்ணைப்பற்றி எழுதியிருக்கும் இந்த விளக்கவுரையைப் படித்ததும் சிரிப்பு வருகிறது."

"சிரிப்பதற்காக எழுதப்படவில்லையே இது ?"

"சிந்திப்பதற்காக எழுதப்பட்டிருக்கிற தென்றுதானே சொல்கிறாய், செந்தாமரை ?... சிந்திக்கத் தெரிந்தவர்கள் எல்லோருமே சிரிப்பார்கள் ; ஆனால், சிரிப்பவர்கள் எல்லோருமே சிந்திப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. நான் இந்த வாழ்க்கையைப் புரிந்துகொண்டுதான் இருக்கிறேன். நானும் பெண்தானே ? ஆகவே, ஒரு பெண்ணைப் பற்றியும், அவளுடைய ஆசாபாசங்களைப் பற்றியும், அவள் கொண்டிருக்கும் கனவு நனவுகளைப் பற்றியும் புரிந்துகொண்டுதான் இருக்கிறேன். ஆனால், அழகேசன் அவர்களைப் பொறுத்தமட்டில் என்னிடம் எவ்விதத் தியாக உணர்ச்சியோ, தயையோ, தாபமோ இருக்குமென்று நீ எதிர்பார்க்காதே ! விதி பெரும் பிழை செய்து விட்டது ; அதுவே விதியின் பிழையாகவும் ஆகி விட்டது. கோயிலில் உறையும் கல்லைக் கடவுளாகக்கூடக் கண்டிருக்கிறேன். ஆனால், அழகேசன் ஏனோ என்வரை வெறும் கல்லாகவே காணப்படுகிறார் ! இல்லையென்றால், அவர் என்னை ஏன் இப்படிக் கொல்லாமல் கொல்ல வேண்டும் ? மருந்தால் என்னை மயக்கி மணம் செய்துகொள்ள அனுமதித்த சட்டம், இப்

போது என்னை மருந்துகொடுத்து மடியச் செய்யவும் அனுமதிக்கு மல்லவா ? இந்தப் புண்ணியத்தையாவது அவர் ஏற்றுக்கொள்ள மாட்டேனென்கிருரே ?... அப்போதாவது எனக்கு விடிவு ஏற் படுமே ? மனிதத் தன்மையிழந்த பாவியாக—இருதயமற்ற அரக்கி யாக உன் கண்களுக்குக் காட்சியளிக்கும் என் கதையாவது முடிந்து விடுமே ?... செந்தாமரை, என்னைச் சோதிக்காதே !... இந்த மூன்று நாட்களாக என்னைக் கூண்டில் போட்டு அடைத்துவிட்டது போதும் ! நான் இப்பொழுதே கஜேந்திரனைச் சந்திக்கவேண்டும் ; கரிகாலனையும் அவர் சகோதரி சுசீலாவையும் சந்தித்துப் பேச வேண்டும் ; சுசீலாவின் கணவர் ராமலிங்கத்தை என் தரப்பு வக்கீ லாக நியமித்து, அழகேசன்மீது வழக்கு பதிவு செய்தாக வேண்டும்... !"

" அழகி, இப்போதுதான் நினைவிற்கு வருகிறது. மிஸ்டர் கரிகாலன் சமீபத்தில் கைது செய்யப்பட்டிருக்கிருராம்... !"

" என்ன, உண்மைதானு ?"

" ஆமாம், உன் கணவர் அழகேசனின் ஜவுளிக்கடையில் கிட்டத்தட்ட பத்தாயிர ரூபாய் பெறுமதியுள்ள சரக்கு, ரொக்கம் முத லானவை திருட்டு போய் விட்டதாம் ; அவரது சந்தேகத்திற்கு ஆளானவர்கள் ஒரு சிலரைக் கைது செய்திருக்கிருர்கள் போலீஸ் காரர்கள். எல்லாம் ஒரே புதிர் மயம்... !"

அழகியின் விழிக்கோடியில் துயரம் தேங்கியது. திருமண விழாவின்போது தன்னைக் காத்துக் காப்பாற்றிய அந்தப் 'புனிதச் சம்பவ'த்தை எண்ணி, மன உரைகல்லில் வைத்து உரைத்துப் பார்த்தாள். மாற்றுக் குறையாத் தங்கமாகக் கரிகாலனின் அன்பு உருவம் தெரிந்தது.

அவள் அழுதாள் ; அவளது நெஞ்சு அழுதது ; கண்கள் அழு தன ; அன்புப் பாசம் அழுதது — கரிகாலனுக்காக !

அழகி சுவர் அலமாரியைத் துழாவினுள், சிந்தனை வசப்பட்டவ ளாக. ஆங்கில நாவலொன்றைப் புரட்டும்போது, அதில் ஒரு போட்டோ காணப்பட்டது. 'யார், முரளி அத்தானு ?... இந்தப் படம் எப்படி, ஏன் இங்கே வந்தது ?...' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். அதற்குள் தாமரை வந்துவிடவே, படத்தை புத்தகத்தில் வைத்துவிட்டுத் திரும்பினுள். அவள் முகத்தில் ஈரம் சொட்டியது.

" சற்றுமுன் பெண்ணைப் பற்றிய விளக்கம் ஒன்றை என் னிடம் காட்டினுயல்லவா ? நான்கூட என் நாவலில் பெண்ணுக்கு ஒரு விளக்கம் தந்திருக்கிறேன். ஊன்றிப் படித்துப்பார், தாமரை !"

செந்தாமரை வாய்விட்டுப் படித்தாள் : ' ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவை, நட்பை, அன்பை, காதலை, பாசத்தை நிர்ணயித்துக் கொள்வது அவ்விருவரின் பிணைப்பைப் பொறுத்தது ; அன்பின் அமைப்பைப் பொறுத்தது.'

" இவ்வளவு பெரிய கதையை எந்தப் பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறாய் ?"

" ' தமிழ்த் தொண்டு ' நடத்திய ஐயாயிரம் ரூபாய் நாவல் போட்டிக்கு."

" என் அழகிக்கு மட்டும் ஐயாயிரம் ரூபாய் கிடைத்தால் ?"

" திருவாளர் அழகேசன் பேரில் வழக்குத் தொடுக்க எனக்குச் செலவுக்கு உதவும் !..."

" அழகி, உனக்கு இதயமே இல்லையா ?"

அன்றைக்கு அழகேசன் பங்களாவில், அரைகுறையாகக் கண்ட நளாயினியின் சித்திரம் தாமரையின் விழித்திரையில் படம் காட்டியது.

" செந்தாமரை, அந்த அழகேசனுக்கு இதயம் இருந்ததா, இருக்கிறதா, இல்லை, இனியாவது இருக்குமா ?"

அழகேசன் தன்னைப் பழி வாங்கிக்கொண்ட சம்பவங்கள் சலனப் படமாக ஏடு விரிந்தன.

முதல் பந்தி முடிந்து சிலர் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அழகியின் கையைப் பிடித்துக் கெஞ்சி அழைத்துக்கொண்டு போனாள் தாமரை. அவர்கள் சாப்பிட்டுத் திரும்பி அறைக்குள் நுழைந்ததும், அங்கே ஓர் அதிசயத்தைக் கண்டார்கள்.

" ஆ, மிஸ்டர் கரிகாலனா ?"

" நீங்கள்..."

" சொன்ன சொல்லைத் தொடர முடியாமல் நீங்கள் விழிப்பதன் காரணம் புரிகிறது !... நான் ஜெயிலிலிருந்து தப்பி வந்துவிட்டேனோ என்று சந்தேகப்படாதீர்கள். என் அத்தான் ஒரு வக்கீல் அல்லவா ? அவர் என்னை ஜாமீனில் விடுவித்தார். உங்கள் கணவர் என்மீது கொண்டுள்ள ஐயம் நீங்கும்வரை—அதாவது களவுபோன சரக்கு, பணம் அத்தனையும் திரும்பக் கிடைக்கும் வரை—என் பாடு ஆபத்துத்தான் ! அதோடு......"

" அப்புறம் என்ன, மிஸ்டர் கரிகாலன்... ?"

" கஜேந்திரன் என்பவரையும் போலீசார் சற்றுமுன் கைது செய்திருக்கிருர்கள்..."

" நிஜமாகவா ? ஐயோ, சட்டம் விசித்திரமாகப் பேசுகிறதே ? குற்றம் செய்தவர்களை வாழவைக்கிறது ; தவறு செய்யாதவர்களைத் தண்டிக்கிறதே ?"

" அப்படி யென்ருல், என்னை நீங்கள் நம்புகிறீர்களா ?"

" ஆண்டவனை நம்ப நான் இப்போதெல்லாம் ஒரு மணி நேரம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனல் உங்களை நான் என்ருே நம்பியவளாயிற்றே ?..."

" மிஸ்டர் கஜேந்திரன் கூட..."

" அவரைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாதே ?"

" உங்கள் நிமித்தம்தான் காலையில் என்னையும் 'தமிழ்த் தொண்டு' ஆசிரியர் பரிமேலழகரையும் அவர் சந்தித்தார்."

" அப்படியா ? ஆசிரியர் பரிமேலழகரைப் பார்க்க வேண் டுமே ? முடியுமா ?"

" அவர்களே உங்களை வந்து பார்ப்பார்கள் !"

" என் பாக்கியம் அது."

" ஆமாம், அத்தோடு உங்களுக்கு இன்னெரு பாக்கியமும் கிடைத்திருக்கிறது !"

" என்ன ? பாக்கியமா ?"

" உங்களுடைய 'அந்தி நிலா' நவீனத்துக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு கிடைத்திருக்கிறது !"

" ஆண்டவனே, நீ நல்லவன்தான் ! என் வழக்குக்கென்று தான் இப் பரிசு கிடைத்திருக்கிறது போலும் !... நிஜமாகவே அது என் பாக்கியமேதான்—வாழ்க்கையில் பாக்கியவதியாக ஆக வாய்ப்பு ஏற்படாது போனலும் ! கஜேந்திரனை நான் பார்க்க வேண்டுமென்றிருந்தேன். செந்தாமரை தடுத்து விட்டாள் !"

செந்தாமரை அவர்கள் இருவரையும் பார்த்தவாறு நின்ருள்.

" அழகேசனைப்பற்றி ஏதேதோ ரகசியங்களை யெல்லாம் அவர் சொன்னர் !" என்ருன் கரிகாலன்.

"அப்படியா ? தயவு செய்து எனக்குத் தெரிவிப்பீர்களா ? என் நல்வாழ்வுக்கு அவை வழிகாட்ட உதவாவிட்டாலும், தோண்டப் பட்டிருக்கும் தீக்குழியில் நான் விழாமலிருக்கவாவது பயன்படுமல்லவா ?"

"இதோ பாருங்கள், அழகி !"

கரிகாலன் நீட்டிய அந்தப் புத்தகத்திலுள்ள புகைப் படங்களைக் கண்ட அழகி, "ஐயோ, நான் பாலைவனத்துச் சுடர் விளக்காகி விட்டேனே !" என்று ஓலமிட்டு மயங்கிக் கீழே சாய்ந்தாள் !

## 11. ஆறு புகைப்படங்கள் போட்ட ஒரு விடுகதை !

மருத்துவப் பணிப் பெண்கள் விடுதியின் முகப்பில் காட்சி யளித்த கடிகாரம் பெருமூச்செறிந்தது. அதன் பார்வை, தரையில் ஒதுங்கிக் கிடந்த அந்தப் புகைப்படங்கள்மீது பின்னி யிருந்தது.

"டாக்டர் ஸார், அழகி மயங்கி விழுந்து இருபது நிமிஷங் களுக்கு மேல் ஆகப் போகிறதே ?... ஏற்கனவே இவளுக்கு வந்த மயக்க நோய் மறுபடியும் திரும்பாமல் இருக்கவேண்டும் ; கவனித் துப் பாருங்கள்," என்ருள் நர்ஸ் செந்தாமரை.

"புதிதாகத் தருவிக்கப்பட்டிருக்கிற ஜெர்மன் இஞ்செக்ஷனைத் தான் அழகியின் உடலிலே செலுத்தியிருக்கிறேன். நீங்கள் பயப் படாதீர்கள், தாமரை," என்ருர் டாக்டர்.

மருத்துவ நிபுணரையும் மருத்துவப் பணிப் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்தான் கரிகாலன். பிறகு, அழகியைப் பார்த்தான். நலங்கெடப் புழுதியில் வீசப்பட்ட நல்லதொரு வீணை போலக் கிடந் தாள் அவள். இன்பப் பண்ணைப் புதைத்து வைத்திருந்த வீணைக் கம்பிகள் மாதிரி அவளது இமைப் புருவங்கள் சலனமிழந்திருந்தன.

அழகு உறங்கிக் கொண்டிருந்தது ; அன்பு உறங்கிக்கொண் டிருந்தது ; அழகி மட்டும் உறங்கிக் கொண்டிருக்க வில்லை ; நினைவு களவாடப்பட்டுக் கிடந்தாள்.

"செந்தாமரை, எனக்கு ஒரு யோசனை தோன்றுகின்றது. அழகியை மறுபடியும் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு இட்டுச் செல்வது அவ்வளவு சிலாக்கியமாக இருக்காது ; இங்கே வைத்துப் பார்க்க வும் உங்கள் விடுதி விதிகள் அனுமதி தராது. ஆகவே, அழகியை எங்கள் வீட்டுக்கே அழைத்துச் சென்றுவிட்டால் என்ன ? நம் டாக்டர் ஐயாவும்கூட மண்ணடிப் பகுதியில்தான் இருக்கிருர்களாம் ; உங்களுக்கும் அது ஒன்றும் அவ்வளவு தூரமென்று சொல்வதற் கில்லை......புதிய சூழ்நிலை, இடமாற்றம் முதலியன தத்துவரீதிப்படி பார்த்தால்கூட நல்ல பலன் தருமென்றுதான் நான் நினைக் கிறேன்... !" என்ருன் கரிகாலன். நிதானம் இழை பின்னிய அவ னுடைய குரலில் அன்பு முறுக்கேறி நின்றது.

அடுத்த நூற்றெண்பது விஞடிகளில், அழகியின் நலன் குறித்து நான்கைந்து உள்ளங்கள் 'மந்திராலோசனை' செய்தன.

டாக்ஸி வந்தது ; கரிகாலனுடைய தமக்கையின் இல்லம் வந்தது.

"அக்கா, அழகிக்கு உங்களால்தான் இனி விமோசனமும் விடிவும் கிடைக்கவேண்டும். அத்தான் வந்ததும் சொல்லுங்கள்.

அழகியின் கதை விசித்திரமாகத்தான் இருக்கிறது. தன் புருஷன் பேரில் கேஸ் கொடுக்க எண்ணி, அத்தானைத் தன் கட்சிக்கு வழக்காட நியமிப்பதற்கு வரவிருந்தவர்கள், பாவம் இன்று மூச்சுப் பேச்சற்றுப் படுக்கையில் இருக்கிறார்கள்.

" நர்ஸ் ஹாஸ்டலில் எங்களுடன் நல்லபடியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள் ; என் நண்பர் கஜேந்திரன் அன்புரிமையோடு வேண்டிக் கொண்டபடியேதான் நான் அழகியிடம் இந்தப் போட்டோ ஆல்பத்தைக் காட்டினேன். உடனேயே, ' ஐயோ, நான் பாலை வனத்துச் சுடர் விளக்காகி விட்டேனே !' என்று ஓலமிட்டு மயங்கிக் கீழே விழுந்து விட்டார்கள்," என்று விளக்கினான் கரிகாலன்.

'போட்டோ ஆல்பம்' சுசீலாவைக் கூப்பிட்டது. அண்டினாள் ; பார்த்தாள்.

" ஆ !... என்ன விநோதம் இது ?... அழகேசனா இது ?..."

" ஆமாம், அக்கா ! அழகேசன் பட்டம் பெற்றவராம் ; ஆனாலும் பயங்கர மிருகம் ; இந்தப் பேய்க்குக்கூட ஒரு நாள் அழகி இரக்கம் காட்டி, விபத்தில் சிக்கிய அழகேசனைக் காப்பாற்றி யிருக்கிறார்களென்றால், அவர்களது நல்ல மனத்தைக் கைகூப்பிக் கும்பிடத்தான் வேண்டும் !"

சுசீலாவுக்குத் தன் கண்களை நம்பவே முடியவில்லை. ஆனால் மேஜைமீது விரிந்திருந்த மேற்படி படங்கள் ' நம்பு, தாயே, நம்பு !' என்று வேண்டிக்கொண்டன. கண்களையும் இப்போது நம்பினாள் ; நம்பவேண்டியவள் ஆனாள். நம்பிக்கை, மனித மனத்திற்குப் போதையாக மட்டும் அமையாமலிருந்தால், சரி !

அந்தப் போட்டோ ஆல்பம் !—

புகைப்படம் எண் ஒன்று ; அழகேசன், அழகியை ஆத்திரத்துடன் நெருங்கி அவளது கழுத்தைப் பிடித்து நெறித்தபடி நின்றான்!

புகைப்படம் எண் இரண்டு ; அழகி அருகே நின்றாள். அவளது பக்கத்தில் அஞ்சி ஒடுங்கி நின்ற அவளுடைய அப்பாவின் உயிருக்கு நேரே உயிர் பறிக்கும் துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்திக் கொண்டிருந்தான் அழகேசன் !

புகைப்படம் எண் மூன்று : மணவறையிலே அழகியின் கழுத்தில் தாலி பூட்டிக் கொண்டிருக்கிறான் அழகேசன் !

புகைப்படம் எண் நான்கு ; அழகேசன் கலியுகக் கிருஷ்ண பரமாத்மா போல, பத்துப் பதினைந்து பெண்கள் சூழ ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டிருக்கிறான் !

புகைப்படம் எண் ஐந்து : மைலாப்பூரிலிருக்கும் ' அழகேசன் ஸில்க் எம்போரிய 'த்தின் உள்ளே பீரோவிலிருந்த துணிமணிகள், இரும்புப் பெட்டியிலுள்ள பணம் முதலியனவற்றை திருடர் கூட்டத்

தினர் மூட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் அழகேசன் சிரித்த முகத்தோடு நிற்கிறான்!

புகைப்படம் எண் ஆறு : கஜேந்திரனின் முன்னே அழகேசன் ஆத்திரம் பொங்க நடந்து வந்து, அவரைச் சுடக் குறி வைக்கிறான்!

" அக்கா, என்ன அப்படியே சிலைபோல நின்று விட்டீர்கள்? அத்தான் வெளியூரிலிருந்து திரும்பியவுடன் அழகியின் விடுதலைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சீக்கிரமே செய்வீர்களல்லவா ?"

" தம்பி, அழகியை அழகேசனிடமிருந்து விடுவித்து விடுவது பெரிதல்ல ; இந்தப் புகைப்படங்கள் மட்டுங்கூடப் போதுமே, அவளுக்கு விடுதலை வாங்கித் தர ! ஆனால், அவளுடைய எதிர்காலத்தைப் பற்றியும் நாம் யோசிக்க வேண்டாமா... ?"

" வாஸ்தவந்தான். எல்லாம் ஒரே குழப்பமாகவும் புதிராகவும் இருக்கிறதே ?... ஒரு வேளை அழகியே தன் வருங்காலத்தைப் பற்றி ஏதாவது முடிவு செய்திருக்கலாம். அல்லது, செந்தாமரையிடம் சொல்லி இருந்தாலும் இருக்கலாம். நாளைக்கு செந்தாமரை நம் வீட்டுக்கு வந்தவுடன் நீங்களே இதைப்பற்றிக் கலந்து பேசுங்கள். ஒன்றிற்கும் உதவாத அப்பாவி மனிதன், அன்பு அன்பு என்று கதறுகிறான் ; சர்வ வல்லமை பெற்ற ஆண்டவனோ மனிதனுடைய முகாரியை ஆனந்த பைரவியாக ராகம் மாற்றி, அத்தோடு திருப்தி அடையாது, நிலை கொள்ளாமல் சிரிக்கவும் சிரிக்கிறான். இரண்டு பிரகிருதிகளுக்கும் நடுவே விதி கள்ளத்தனமாக நின்றுகொண்டு கைகொட்டிச் சிரிக்கிறது. ஆனால் ஒன்று. அக்கா, இந்தப் படங்களையெல்லாம் நானே பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்பது கஜேந்திரனுடைய உத்தரவு. தப்பித்தவறி இப்படங்களை மறுபடியும் அழகிக்குக் காட்டி விடாதீர்கள் !" என்றான் கரிகாலன்.

அழகு நிலா அமுதக்கதிர் வடிவெடுத்து வந்தது—அழகியைக் கண்டு ஆறுதல் சொல்ல. அழகி படுத்திருந்த இடத்தை நாடிச் சென்றாள் சுசீலா. திரும்பிப் பார்த்த கரிகாலன் முகத்தைத் திருப்பிக் கொண்டு வெளியே வந்தான். அழகியின் உடைகளைச் சீர் செய்தாள் சகோதரி ; பளிங்கு நெற்றியில் நிழலாடிய கறுப்பு இழைகளை ஒதுக்கிவிட்டாள். அவளுடைய விரல்களில் ஈரம் சுரந்திருந்தது. முகம் பூராவிலும் வியர்வை மணிகள் கோர்க்கப்பட்டிருந்தன. சுசீலா நல்ல மூச்சு விட்டாள். அழகிக்கு நல்ல மூச்சு வந்துகொண்டிருந்தது.

விடிந்தது. ' கிழ்த் திசையில் ஞாயிறு தன் கேடில் சுடர் விடுத்தான் !'

அழகி சோம்பல் முறித்துக்கொண்டே படுக்கையை விட்டு எழுந்தாள். அவளுக்கருகே காப்பியும் கையுமாக சுசீலா நின்றாள். பின்புறம் சுசீலாவின் கணவர் ராமலிங்கம் வெற்றிலையின் நரம்புகளைப் பிரித்தபடி நின்றார். கரிகாலன் அப்பொழுதுதான் வீட்டிற்குள்

நுழைந்தான் ; அவனுடைய கழுத்தை காஷ்மீரச் சால்வைத்துண்டு அலங்கரித்தது. கரிகாலனைப் பார்த்த அழகிக்குச் சிரிக்கவேண்டும் போலிருந்தது. ' நான் இங்கே இருக்கிறேனும். அதனால், இந்தப் பத்து நாளாக பாவம், எங்கேயோ கட்டுச் சோறு கட்டிக்கொண்டு போயல்லவா இரவு படுத்துத் தூங்கிவிட்டு வருகிருர் ! நான் அவரது உடன் பிறவாச் சகோதரி என்று அடிக்கொருதரம் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னார் ; ரத்தத்தோடு ரத்தமாக அவ்வுணர்ச்சி இன்னும் கூட்டுச் சேரவில்லையோ, என்னவோ !'—இப்படித் தன்னுள் எண்ணங்களை எழுதிப் படித்தாள் அழகி.

' சுறு சுறுப்பு ' என்ற சொல் காலத்தின் கைப்பிடியிலிருந்து உதிர்ந்ததல்லவா ?

அழகியின் எதிர்காலம் பற்றி அவளுடைய அபிப்பிராயத்தை அன்றைக்கே அறியத் துடித்தார்கள் ராமலிங்கம் தம்பதிகள். மறு கணம் தம் எண்ணங்களை மாற்றிக் கொண்டார்கள். வேறு என்னென்னவோ பேசினார்கள். கடைசியில், கரிகாலனுக்காகப் பார்த்து வந்திருந்த திருச்சிப் பெண்ணைப் பற்றி அழகியிடம் குறிப்புகள் வழங்க எத்தனித்தார்கள்.

" என் வாழ்த்துக்கள் !"

" முதலில் உங்கள் வாழ்வுக்கு விடிவு ஏற்படட்டும், அழகி !" என்றான் கரிகாலன்.

" அது வேறு விஷயம். முதலில் உங்கள் வாழ்க்கையில் புது அத்தியாயம் ஆரம்பமாகட்டும். பரிசு பெற்ற என்னுடைய ' அந்தி நிலா ' நாவலை ஆரம்பத்திலிருந்தே படிப்பதற்கு இன்னும் இரண்டு ரசிகர்கள் அதிகமாகக் கிடைக்க முடியுமல்லவா ?" என்று சொன்னாள் அழகி.

எல்லோரும் சிரித்தார்கள்.

" பேஷ், பேஷ் ! அப்படியென்றால் அழகிக்குப் பரிசு கொடுத்துப் பாராட்டும் விழாவுக்கு நாமெல்லோரும் கட்டாயம் போய்வர வேண்டியதுதான் !" என்றாள் சுசீலா.

" நம்மோடு திருவாளர் அழகேசன் அவர்களும் மேற்படி விழாவுக்குக் கட்டாயம் வருவார்கள் !" என்ற முன்னுரையோடு அங்கே நடையில் வந்து நின்றாள் நர்ஸ் செந்தாமரை.

' டீபா 'விலிருந்த காப்பித் தம்ளர் தரையில் சரண் புகுந்தது. செந்தாமரை தப்பித்தாள் !—அழகிக்கு நெற்றியில் கண் இல்லை !

" தாமரை !..." என்று கூவி யழைத்தவாறே பற்களை ' நறநற ' வென்று கடித்தாள் அழகி. அழகேசன் அவளுடைய பற்களுக்கிடையில் நசுங்கி உயிரைப் போக்கிக் கொண்டிருந்தானோ, என்னவோ ?

## 12. 'கன்னி வயதில் உன்னைக் கண்டதில்லையோ?'

''வருக, வருக !'' என்று ஊர் பேர் தெரியாத—ஆனால் 'இனம்' தெரிந்த டாக்ஸியை வரவேற்றது- 'அழகேசன் விலாசம்' பங்களா.

டாக்ஸிக்குத் 'துட்டு' கொடுத்து அனுப்பிய பின்னர் இரண்டு மூன்று கணப்பொழுதிற்கு அங்கேயே நிற்கவேண்டும் போல ஓர் ஆசை தோன்றியது நர்ஸ் செந்தாமரைக்கு ; நின்றாள். தொடர்பு அறுந்து போயிருந்த சம்பவங்களை 'எடிட்' செய்து அந்தச் சலனப் படத்தை தன் கற்பனைத் திரையில் ஓட்டிப்பார்க்க வேண்டுமென்ற அபிலாஷை குருத்து விட்டது ; முடித்தாள். ஆசையும் அபிலாஷையும் இறந்த காலத்தின் தேதிப் படங்களையும், நிகழ்காலத்தின் நடப்புக்களையும் ஒன்று கூட்டிக் காட்டின. பயன்—பெருமூச்சு, பெருமூச்சு, பெருமூச்சுத்தான் ! ஆனாலும், அவளுக்கு ஒரு நிறைவு—பிறர் நலனில் நாட்டம் செலுத்தி மகிழும் அமைதி—கடமையுணர்ச்சி பிறந்தது. ஆமாம் ; கை நொடிப் போதிற்குள் ஒரு பெண்ணால் உணர்ச்சி மயமான நீண்ட பொழுது வாழ்ந்துவிட முடியும் !

செங்கதிர்ச் செல்வனின் இளங்கிரணங்கள் அவளுக்குச் சூடாக யிருந்தன. வியர்வைத் துளிகள் ஊற்றெடுத்தன. அவற்றிற்குச் சங்கமத்தலம் அவளுடைய கைத் துண்டு. புடவையைச்சரி செய்துகொண்டே உள்ளே பிரவேசித்தாள் தாமரை. அவளது பெண் மனம் தயங்கியது ; அவள் தயங்கவில்லை.

''அழகி, இனி நீ தப்பவே முடியாது ! நாளைப் புது நிலவு உனக்கு !'' என்று, அன்று ஒரு நாள் இதே செந்தாமரைப் பெண் தானே அழகியிடம் கூறினாள்...?

அழகிக்குப் பரிசு வழங்கும் விழாவிற்கு திருவாளர் அழகேசன் அவர்களும் கட்டாயம் வருவாரென்று, தான் உத்தாரம் சொன்ன வார்த்தைகளையும் அவள் நினைத்துப் பார்த்தாள்.

முன்னம் ஒரு நாளிலே அழகியிடம் 'உன்னிடம் தனித்துப் பேசவேண்டிய சில விஷயங்கள்—ஆம் ! அழகேசனைப் பற்றிய ரகசியங்கள் இருக்கின்றன' என்பதாகச் சொல்லி 'ஏமாற்றிய'தையும் எண்ணத் தவறவில்லை அவள். கடைசியில், கரிகாலன் அன்று காட்டிய புகைப் படங்களில் தெரிந்த அழகேசனின் 'உண்மைப்

பயங்கர சொரூபம்' நினைவில் மிதந்தபோது, அவளுக்குப் பாதாதி கேசம் வரை நடுக்கம் ஏற்பட்டது. காட்டு வழியிலே கள்ளர் மத்தியில் சிக்கிக் கொண்டு விட்டாற்போன்ற பயம் உண்டாயிற்று. தூங்காமல் தூங்குவதாக விளம்பப்படும் 'அவன்'பேரில் பாரத்தைப் போட்டுவிட்டு, மேலும் நடந்தாள் செந்தாமரை.

மையத்திலிருந்த கூடத்தில், அன்றைக்கு வந்திருந்தபோது பார்க்காத பெரிய புகைப் படத்தைக் கண்டாள்; தாமரைக்குச் சிரிப்பு வந்தது. தம்பதி சமேதராகக் காட்சியளித்த அழகேசன்— அழகி இருவரையும் இமைநோகும் பரியந்தம் பார்த்தாள்; சந்தோஷம் நிலைகொள்ளாமல் தத்தளித்தாள்.

அப்பொழுது, "யாரை அம்மா பார்க்கிறீர்கள் ?" என்ற இதமான குரலொன்று கேள்வி தொடுத்தது. திசைமாறித் திரும்பினாள். இங்கிதமான பண்புச்சிரிப்பு துலங்கும் முகத்துடன் ஓர் உருவம் நின்றது. அவளுக்குப் புரியாமல்போய் விடுமா ?—அவன் அழகேசன் !

"...வந்து...என் சிநேகிதி அழகியை... உங்கள் மனைவி அழகியைப் பார்க்கவேணும்..." என்று மிகவும் நிதானமாகச் சொன்னாள்.

"அப்படியா ? மெத்த சந்தோஷம். ஏ, வள்ளி ! அம்மாவுக்கு காப்பி கொண்டுவந்து கொடு. நம்ப அழகிக்கு வேண்டிய வங்களாம் !..." என்று பணித்தான்; கையிலிருந்த சிகரெட்டைப் பற்ற வைத்தான் அழகேசன்.

செந்தாமரைக்குச் சிந்திக்கும் சக்தி இற்றுப் போனாற்போல ஓர் உணர்வு; சிந்திக்கத்தெரியாமல் இருப்பதே பாக்கியம் என்கிறார்களே ? அப்படி யென்றால் அழகேசன்...? ஒருவேளை அவனும் பாக்கியவான்தானோ...?

எதையோ நினைத்தாள்; எதையோ எண்ணி முடித்தாள். இந்த மனம் இருக்கிறதே அது, பால் குடி மறக்காத பாப்பா; எடுப்பார் கைப்பிள்ளை !

முன்பொரு தருணம் இதே செந்தாமரை இதே வேலைக்காரியை இதே பங்களாவில் சந்தித்தாளல்லவா ? இப்போது காப்பியுடன் வந்த அவள் தாமரையைக் கண்டதும் கச்சிதமாகச் சிரித்தாள். அடையாளம் காட்டினாள், 'அப்பாலே நாம் தனியாப் பேசிக்கிடலாம்' என்று.

"சாப்பிடுங்க !"

"ஆகட்டுங்க !"

" ம்......!"

" அழகியைப் பார்த்துப் பேச அனுமதி தருவீங்களா ?"

" அவளை உங்களுக்கு எப்படித் தெரியும் ?"

" அவளும் நானும் எஸ். எஸ். எல். ஸி-யில் ஒரே செக்ஷன். அதோடு ஒரே ஊர். அது மட்டுமல்ல ; அவள் எழுதும் கதைகளென்றால் எனக்குப் பிராணன். "

" அப்படியா ? ரொம்ப சரி. அவள் எழுதியிருக்கும் 'அந்தி நிலா' என்ற நாவல் முதல் பரிசு பெற்றிருக்கிறதே, தெரியுமா ?"

" ஓ, தெரியுமே !...பத்திரிகையில் பார்த்தேன்."

" சரி. அழகிக்கு கொஞ்ச நாளாக உடம்பு சரியில்லை. தஞ்சாவூருக்கு அனுப்பி யிருக்கிறேன். எனக்கும் சில வாரமாக உடல் நலமில்லை. இப்போது ஏதோ கொஞ்சம் பரவாயில்லை. அடுத்த மாசம் வாருங்கள். அவசியம் பேசலாம்," என்றான் அழகேசன்— அன்பு அமைத்துக் கொடுத்த பின்னணியுடன்.

அழகேசனின் பாதங்கள் மாடிப் படியில் பதிந்தன.

'அன்பு, அன்பு என்று சிலர் பேசுவார்கள் ; எழுதுவார்கள். ஆனால், அதைக் கடைப்பிடிக்க மாத்திரம் கணக்காக மறந்து விடுவார்கள். ஒரு வேளை, நெஞ்சில் நஞ்சும் உதட்டில் அமிர்தமும் பெற்ற 'பெரிய மனிதர்'கள் பட்டியலுக்குரியவர்தானோ இவரும்... ?'

சொல்லாமல் கொள்ளாமல் நழுவி ஓடிவிடத் துடித்தாள் தாமரை : 'அட கடவுளே... இந்தப் பைத்தியத்திடம் யார் மாரடிப்பதாம் ?'

ஆனால், இந்தப் 'பைத்திய'த்தைக் கண்டு பேச ஒரு நாளா, இரண்டு நாளா, பல வாரங்களாக அல்லவா அவள் திட்டம் போட்டிருந்தாள் ? மனித மனம் எண்ணுவதற்கு 'ஓ. கே' சொல்லும் பண்பாடு, இந்தத் தெய்வ மனத்துக்கு என்றைக்குத்தான் உதயமாகுமோ ?

அவள் மனம் 'பல்லீங் சடுகுடு' விளையாடியது ; கோட்டைத் தாண்டி விழுந்தது ; தோல்வி ! செந்தாமரைக்கு அழுவதா, சிரிப்பதா என்று தோன்றவில்லை.

'அழகியின் இருப்பிடத்தை இவரிடம் சொல்லிவிட்டால் என்ன ?' என்று யோசித்தாள் தாமரை. 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காக முடிந்து விட்டால் என்னவது ?' என்ற அச்சம் அவளுக்கு அபாய அறிவிப்புக் காட்டியது. 'அழகேசனின் நிழல் பட்

டால் கூட என் உயிர்ப்பூ வாடிக் கருகிவிடும்; தயவு செய்து அவரிடம் என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே !' என்று அழகி அன்று கெஞ்சிய வார்த்தைகளை அவள் மறக்கமுடியுமா ?

இப்போது செந்தாமரைக்குத்தான் கிறுக்குப் பிடித்துவிடும் போலிருந்தது.

'சிவனே' என்று அங்கிருந்து ஓடிவிட எண்ணி மறுகி மறுகி நடந்து கொண்டிருந்தாள். மாடிப் படியிலிருந்து கிளம்பிய புகைச் சுருள்கள் சங்கிலிக் கோர்வையாக இணைந்து கைகுலுக்கிக் கொண்டன.

" அம்மா !" என்ற சன்னக் குரல் கேட்டது. வேலைக்காரி தொடர்ந்தாள் : " அம்மா, எங்க ஐயாவுக்கு புத்தி தட்டுக் கெட்டுப் போயிடுச்சு. ஒரு பொழுதுக்கு இருக்கிற புத்தி அடுத்தாப்பிலே இருக்கிறது கிடையாதுங்க. அவரைப் பார்த்தா யாருமே சம்சயப் படவே இயலாது. இப்போதான் கொஞ்சம் எழுந்து நடமாடுறுங்க. மலையாளத்தார் வந்தார் ; வேறே யாரோ வந்தாங்க ; டாக்டர் பத்துப்பேர் வந்தாங்க. எப்படியோ ஒரு மாதிரி மயக்கம் வர்றது மட்டும் நின்னு போச்சு. ஆனா, இந்த மாதிரிப் புத்தி தடுமாற்றந் தான் இப்போ புது வியாதியா வந்திருக்குது. கோட்டையிலே பொறந்தாலும் போட்ட சுழி தப்பியா போயிடும் ? ஆனா ஒரு நல்ல சேதி அம்மா ! இப்போ எங்க சின்ன எஜமான் சதா 'அழகி, அழகி'ன்னு புலம்பிக்கிணு இருக்கிறதை நான்கூட அடிக்கடி கேட்டுக்கிட்டு வர்றேனுங்க... என்னமோ, கற்பகாம்பா கிருபையாலே அழகி அம்மா இங்கே வந்து ஐயாவோடே சேர்ந்து இருந்திட்டாங்கண்ணா, அதுவே போதும் ; நீங்க பட்ட கஷ்டத்துக்கும் பலன் கிடைக்கும். பெரிய எஜமானர் ஐயாவுக்கு அழகி அம்மாவைப் பத்தின கவலைதான் பூராவும் : அதுதான் அவரைப் படுக்கையிலேகூடத் தள்ளிடுச்சு... !"

அழகேசன் ரேடியோவின் விசையைச் சரி செய்து கொண்டிருந்தான். ரேடியோ பாடிற்று.

**கன்னிவயதிலுனைக் கண்டதில்லையோ—கன்னங்**
**கன்றிச் சிவக்க முத்தமிட்டதில்லையோ ?**
**அன்னியமாக நம்முள் எண்ணுவதில்லை—இரண்டு**
**ஆவியுமொன்றுகுமெனக் கொண்டதில்லையோ ?**

ஜீவநாதம் நின்றது. அழகேசன் விம்மிக் கொண்டிருந்தான் : 'அழகி... ! வந்தவர்கள் போனவர்களிடம் என் கௌரவத்திற்காக இப்படி எத்தனை நாளைக்குத்தான் பொய் சொல்லித் தப்பிக்க முடியும் ?... நாம் இரண்டு பேரும் புருஷன்—மனைவியாக ஆகவே முடியாதா... ?'

செந்தாமரைக்குத் தலை சுற்றியது.

அந்த நேரத்தில்—

யாரோ சிலர் அதிர்ந்து நடந்து வரும் பூட்ஸ் சத்தம் எழும்பியது.

" இங்கே ஒரு மைனர் வந்தானே, எங்கே அம்மா ? " என்ற சில குரல்கள் ஒரே மாதிரியான சுருதியில் ஒலித்தன.

கண்களைத் திறந்து பார்த்தாள் நர்ஸ் செந்தாமரை. போலீஸ் ஜவான்கள் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். அவளுக்கு எதுவும் பிடிபடவில்லை. யதேச்சையாகக் கிழக்கு மூலையில் திரும்பியபோது அங்கே ஓர் உருவம் தெரிந்தது. இமை பொருத்தி இமை பிரிக்கும் நேரம் அவளுக்கு உலக நினைவே உண்டாகவில்லை. மறுகணம், " ஸார், இங்கே யாருமே வரவில்லை ... அடுத்த வீட்டுப் பக்கம் ஓடிப்போன மாதிரி தெரிந்தது !..." என்று அழுத்தமாகக் கூறினாள்.

சட்டம் வேலி கட்டப் பார்த்தது. பாவம், வேலிக்குள் சட்டம் அகப்பட்டதுதான் மிச்சம் !

' நீங்களா ? மிஸ்டர் முரளியா ? ' என்று கேட்க வாயைத் திறந்தாள். ஆனால், நாக்கு மேலண்ணத்தில் சமாதி அடைந்து விட்டது.

செந்தாமரை முரளியையே பார்த்தது பார்த்தபடி நின்றுகொண்டிருந்தாள் ; முரளி செந்தாமரையையே பார்த்தது பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

அவள் கண்கள் முரளியின் கையிலிருந்த அந்த விளம்பரத்தைப் படித்தன.

' என்ன, புதுக் குழப்பம் இது ? தமிழ்த் தொண்டு நாவல் போட்டியில் பரிசு பெற்ற அழகிக்கு அழகேசன் தலைமையிலா பரிசு வழங்கப் போகிறார்கள் ?... அழகிக்கு இவ்விஷயம் தெரிந்தால், தமிழ்த் தொண்டு ஆபீசையே ஆட்டிப் படைத்து விடுவாளே ? தெய்வமே, முள் இல்லாமல் ரோஜாப் பூக்களைப் படைக்கப் பழகிக் கொள்ளக் கூடாதா ? ஐயனே, பதில் சொல்... ! '

## பகுதி—இரண்டு

# ரோஜா

### 1. சிரிக்காத ரோஜா சிரித்தது !

முள் இல்லாத அந்த ஒற்றை ரோஜா சந்தம் சேர்த்து, கந்தம் இணைத்து, அந்தமாகச் சிரித்துக்கொண்டிருந்தது. ரோஜாவிற்கு இதயம் இருந்தது. பேசவும் தெரிந்தது—அதிசயமாக இருக்கிறதா ?

நிலைக் கண்ணாடியின் முன் நின்று அழகு பார்த்துக்கொண்டிருந்தாள் அழகி. வராந்தா கைப்பிடிச் சுவர் மேல் பூத்தொட்டியிலிருந்த ரோஜாப்பூ அவளிடம் என்னவோ சொல்லித் துடிப்பது போலத் தோன்றியது அவளுக்கு. அவள் கேட்டாள். பூவின் மனத்தைப் புரிந்து கொண்டாள் ; கதை எழுதுபவள் அல்லவா ?

'இன்று மாலை என் நாவலுக்குப் பரிசளிப்பு விழா நடக்கப் போகிறது ; என் சந்தோஷத்தில் இதற்குப் பங்கு கேட்கவில்லை ; அதன் சந்தோஷத்தில்தான் எனக்குப் பங்கு கொடுக்கிறது ; ரோஜாப் பூவாகவேனும் உருமாறிவிட்டால் தேவலாம் போலிருக்கிறது ; கூடுவிட்டுக் கூடு பாய எனக்குக் கற்றுத் தர யார் இருக்கின்றார்கள் ?... பழைய விக்கிரமாதித்த மகாராஜா அரசாண்ட அதிசய காலங்கூட இப்போது மாறிப்போய் விட்டதே ?...... ரோஜாவாக மாறிவிடுவது சரி ; ஆனால் முள் முளைக்காமல் இருக்க வேண்டாமா ? விசித்திரமான சிந்தனைதான் ; ஆமாம் ; சிந்தனை மனிதனை வாழவைத்து 'கெட்டிக்காரன்,' என்ற பட்டமும் சூட்டுகிறது ; இதே சிந்தனைதான் மனிதனை வீழ வைத்து, 'பைத்தியக்காரன்' என்ற பட்டமும் கொடுக்கிறது...! இதே கதைதான் எங்கள் குலத்திற்கும் !...... அந்த நாள் ! ஓடுகிறது மனம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தி நான்காம் வருஷம், அக்டோபர் மாதம் பத்தாம் நாள் ! பொன்னாக அமையுமென்று கனவு கண்டேன் ; கண் விழித்தபோது நான் மண்ணாகிப் போயிருந்தேன். அக்கினி சாட்சி சொல்லிற்று ; அருந்ததி சாட்சியம் கூறினாள்—நான் திருமதி அழகேசன் என்று ! ஆனால் என் இதயத்தின் இதயம், மனச்சாட்சியின் மனம் ஒப்ப வேண்டாமா ? அன்றைக்கே நான் 'அவரு'டைய உள்ளத்தில் கூடுவிட்டுக் கூடு பாய்ந்திருக்க வேண்டும் ; ஆனால் அவர் என்றைக்கோ யார் யாருடைய உள்ளத்திலெல்லாமோ கூடு

விட்டுக் கூடு பாய்ந்து விட்டாரே ? ஆனால், இன்று என்னுடைய எழுத்துலக வாழ்க்கையின் புனித நாள். மாலையில் எனக்குப் பரிசு கொடுக்கப் போகிறாராம் கல்வி மந்திரி !... என் பேனாவை நான் மறக்க முடியுமா ?... கீழ்ப்பாக்கத்திலே பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே இருக்கவேண்டிய நான், இவ்வாறு செம்புதாஸ் தெருவில் நல்லபடியாக வசித்து வருவதற்கு வழி வகுத்துக் கொடுத்தது என் பேனாவே யல்லவா ? அன்பில்தான் ஆண்டவனைக் காண முடியும் சிலருக்கு ; எனக்குத் துன்பத்தில்தான் ஆண்டவனைக் காணத் தெரியும். என் போக்கு இப்படி. நான் இங்கே இருக்கிறேன் ; என் உயிர் மைலாப்பூருக்கு அடிக்கடி பறந்து சென்று விடுகிறதே ? நான் ' அவருடைய ' மறுபாதி என்பதனாலா ? ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை ! நான் பாழ் ; என் கனவு பாழ் ; எல்லாமே பாழ் !... சே, சே... !'

பிறை வடிவில் துண்டு போடப்பட்டிருந்த தங்கப்பாளம் போன்றிருந்த நெற்றியின் எல்லையில் தொல்லை தந்து கொண்டிருந்த கேசச் சுருள்களை ' தாஜா ' பண்ண வேண்டித் தூதுவந்த சீப்பைத் தூக்கி வீசி எறிந்தாள் அழகி. உச்சி வெய்யில் அதை இரண்டாக்கி விளையாடிக் கொண்டிருந்தது.

மெல்லிய பாதம் வைத்த வெள்ளை பூட்ஸ் சத்தம் பானை அடிக் கல்லில் பதிந்து பிரியும்போது ஏற்படுமல்லவா ஒருவகை மெல்லிய நாதம், அது இப்போது கேட்டது. கண்களுக்கு இதயம் உண்டு ; இதயத்திற்கும் கண்கள் உண்டு.

நர்ஸ் செந்தாமரை நின்றுகொண்டிருந்தாள்.

உதட்டோரத்துப் பனிச் சிரிப்பு முகமன் மொழிந்தது.

" அழகி, சாயந்திரம் விழா. அதற்கு இப்பொழுதிருந்தே டிரஸ் செய்து கொள்ளத் தொடங்கி விட்டாயா ? பேஷ் !..." என்று கேலி பண்ணியவாறு, அவளை ஒரு முறை பார்த்தாள் தாமரை. தாலி தெரிந்தது. அன்றொரு நாள்—போலீஸ்காரர்கள் துரத்தி வந்த முரளியைக் காப்பாற்றிக் கொடுத்த பிறகு, அவன் கையில் வைத்திருந்த அந்த விளம்பரம் திரும்பவும் ஒரு முறை தெரிந்தது—கண்ணிலே, கருத்திலே, கனவிலே !

' தமிழ்த் தொண்டு ' நாவல் போட்டியில் பரிசு பெற்ற அழகிக்கு அழகேசன் தலைமையில் பரிசு வழங்கப் போவதாக விளம்பரம் போடப்பட்டிருந்ததே ? என்ன அதிசயம் இது ? ' என்று எண்ணங்களைத் தன்னுள் தொடர் சேர்த்துப் பார்த்துச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், அழகி அவளைக் கூப்பிட்டாள். தன் கையிலிருந்த விளம்பரத்தாளை மருத்துவப் பணிப் பெண் செந்தாமரை

யிடம் காண்பித்தாள். கல்வி அமைச்சரின் தலைமையில் 'அந்தி நிலா' பரிசு பெறப் போவதைப் பற்றிய செய்தி இருந்தது.

தாமரையின் மனம் அழுதது. அழ அழச் சொல்லுவார்கள் தம் மனிதர்; சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார்கள் மற்றவர்கள்.

சில நாட்களுக்கு முன்னர் நடந்த இந்த விளம்பர விசித்திரத்தைப் பற்றி—அழகியின் அத்தான் முரளியின் எதிர்பாராத சந்திப்பு குறித்து—அவளிடம் சொல்ல வேண்டுமென்று ஆணை பிறப்பித்தது தாமரையின் நெஞ்சு. 'ஐந்து நாட்களாக என் இதய அடிவாரத்தில் புதைந்து விட்டிருக்கும் விஷயங்களை இப்போது எப்படிச் சொல்வது?...ஊஹூம், கூடாது; கூடவே கூடாது; அழகேசனின் தந்திரங்களிலே இதுவும் ஒன்றாய்த்தான் இருக்கவேண்டும்; இல்லையென்றால், அழகேசன் தலைமையில் எப்படி இலக்கிய விழா நடைபெறும்?...இல்லை, அழகிதான் பரிசைப் பெறுவாளா?...மேலும், 'தமிழ்த்தொண்டு' ஆசிரியர்தான் அழகியின் கதை முழுமையையும் அறிவாரே!...நான் ஒருத்தி குழம்புவதுடன் நிற்கட்டும்; பாவம், அத்தி பூத்த மாதிரி இப்போதுதான் அழகி சிரிக்கக் காண்கிறேன் நான்!...'

ஒலிப்பதிவு செய்யப்பட்ட 'டேப் ரெகார்டர்' விசை அழுத்தம் பெற்றதும், திரும்பவும் தன்னுடைய இதய ஒலியை அஞ்சல் செய்யுமல்லவா, அதுபோலத்தான் இப்போது தாமரையின் மனம் பேசியது.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் வாடை பிராட்வேயில் வீசியது.

சாப்பாட்டுக்கு அழைத்தாள் சுசீலா. உடனிருந்த தாமரையும் அழைக்கப்பட்டாள். இருவரும் சுசீலாவைப் பின் தொடர்ந்த போது, "அழகி..." என்ற குரல் கேட்டது.

அழகி மட்டுமல்ல, செந்தாமரையும் திரும்பினாள்.

'அனுமதியின்றி உள்ளே பிரவேசிக்கக் கூடாது' என்ற எச்சரிக்கைப் பலகையில் பார்வையை முளையடித்து விட்ட மாதிரி முரளி நின்று கொண்டிருந்தான்.

அழகி தன் அத்தானையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். சில மாதங்களுக்கு முன்னே நடந்த அந்தச் சந்திப்பை எண்ணினாள். கண்களில் எரிமலை வெடிக்க, சினம் தேக்கி அவனிடம் பேசின வார்த்தைகள் நினைவில் தலை தூக்கின.

முரளியின் விழிகளில் பனித்துளிகள் இடம் மாறித் தவித்தன.

அழகி பெருமூச்செறிந்தாள். மேல்ச் சேலையைச் சரி செய்ய விரைந்தது வலது கை. பிறகு, செந்தாமரையைத் திரும்பிப் பார்த்தாள்.

நர்ஸ் செந்தாமரை சில அடி தூரம் தள்ளி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கையிலிருந்த புத்தகம் அவளுடைய கண் வழியே பலன் பெற்றிருக்க முடியாது.

ஒரு சமயம், அழகி நர்ஸ் விடுதியில் தங்கி யிருந்தபோது, செந்தாமரையின் புத்தகமொன்றில் தன் அத்தான் முரளியின் புகைப் படத்தைப் பார்த்த காட்சியை அவள் எண்ணத் தவறுவாளா ? அல்லது, 'முரளி என்னை மறந்தார் ; நான் இந்த உலகத்தையே மறந்துவிட்டேன் !' என்று தாமரை தன் நெஞ்சம் திறந்து ஒருநாள் கூறின சொற்களைத்தான் மறப்பாளா ?

செந்தாமரை பார்வையைத் திருப்பினுள் ; முரளியின் பார்வையும் திரும்பியது.

'மைலாப்பூரில் அழகேசன் விலாசம் பங்களாவில் முரளியைத் துரத்திக்கொண்டு போலீஸ் ஜவான்கள் வரக் காரணம் என்ன ?' என்ற கேள்வியை தாமரையின் மனச்சாட்சி கேட்டது ; அதைத் திருப்பி அவள் அவனிடம் கேட்க முடியவில்லை. அன்று, பைத்தியக்காரன் மாதிரி விரக்தியுடன் சிரித்தபடியே திடீரென்று மறைந்துவிட்ட முரளியின் போக்கைப் பற்றியும் தாமரை அனுமானம் ஏதும் செய்ய முடியவில்லை.

கையிலிருந்த பத்திரிகையைப் படித்துக்கொண்டே முரளியை நெருங்கினுள் அழகி ; அவன் சட்டைக் காலரை நெருடி விட்டுக் கொண்டு புதிர்ச் சிரிப்புடன் அழகியிடமிருந்து விலகினுன்.

அழகி தீ என்பதைப் புரிந்துகொண்டு விட்டாளு ?

தீ சிரித்தது ; "தாமரை, இவர்தான் என் அத்தான். பெயர் முரளி. அன்று என் கனவுக்கெல்லாம் வடிவம் தந்தவர் ; இன்று இவரே கனவின் வடிவாக ஊசலாடுகிருர். விதி பிழை செய்து விட்டது, தாமரை ; விதி பிழை செய்து விட்டது !"

தீயின் இரண்டாவது சிரிப்பொலி இதோ : "அத்தான், என்னுடைய உயிர்த் தோழி இவள். செந்தாமரை என்று பெயர் ; நான் மறந்துவிட்ட ஒரு முடிவை இவள் ஆரம்பமாக்கி விளையாட ஆசைப்படுகிருள். என்னுடைய வாழ்க்கைச் சீட்டாட்டத்தில் துருப்புச் சீட்டு இடம் மாறி, கைமாறிப் போய் விட்டதே ! தெய்வம் வஞ்சித்து விட்டது, அத்தான் ; தெய்வம் வஞ்சித்து விட்டது !"

மறுபடியும் உணவு வேளைக்கு நினைவுக் குறிப்பு வந்தது.

தன் அத்தானை உணவுக்கு அழைக்க விரும்பித் திரும்பினுள். அங்கே முரளி இருந்தால்தானே ? அடுத்த விளுடி, வீட்டு வாசலை

எட்டிப் பார்த்து மறைந்த சில சிவப்புத் தொப்பிகளையும் அழகி பார்க்கத் தவறவில்லை. அவள் மனம் குழம்பினாள். கண் கலங்கினாள்.

அப்பொழுது—

அழகியின் பெயருக்குத் தபால் ஒன்று வந்தது.

அவசரம் அவசரமாக அதைப் பிரித்துப் படித்தாள்.

ஆட வந்த பொற்பாவை ஆடாமல் சிலையாகிவிட்டாள்.

அவளுடைய கண்ணீர்த் துளிகள் உறையின்மீது தெறித்து விழுந்தன. உள்மனம் பெயரை உச்சரித்தது: "...அழகேசன்!..."

பொய்யாய், கனவாய், பழங்கதையாய் ஆகிவிட்ட சூன்ய வெளியிலே நின்று 'விதி' ஊழிக் கூத்து ஆடிக்கொண்டிருந்தது. இதயம் இழந்த அதற்கு இதைத் தவிர வேறென்னதான் தெரியும்?

## 2. 'அந்தி நிலா'வும் அந்தி நிலாவும்!

'தமிழ்த் தொண்டு' பத்திரிகை நடத்திய நாவல் போட்டியின் பரிசளிப்பு வைபவம் தமிழ்த் திருவிழாவைப்போல அப்படி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், நட்சத்திரங்கள் இவ்வாறு இலக்கியத்தையும் கலையையும் இணைத்துப் பார்க்கும் பிரமுகர்கள் பலர் வந்திருந்தனர். 'ஜே... ஜே' என்றிருந்தது அரண்மனைக்காரத் தெரு.

'தமிழ்த்தொண்டு' ஆசிரியர் பரிமேலழகர், பரிசுபெற்ற நாவலாசிரியையை அறிமுகம் செய்தார்; கல்வி அமைச்சர் பரிசு வழங்கினார்.

கையிலிருந்த ரோஜாமாலை உதிர்த்துவிட்ட இதழ்கள் சில 'ஜிகினா'க் கம்பிகளில் செப்பிடுவித்தை செய்து கொண்டிருந்தன. 'அந்திநிலா' பரிசு பெற்ற ஐயாயிர ரூபாய்க்குரிய 'செக்' அழகியின் இடது கையில் பத்திரமாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

சுசீலா, செந்தாமரை இருவரும் பின்பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள்; அடிக்கொருதரம் அவர்கள் அழகியைப் பார்ப்பதும் சிரிப்பதுமாக இருந்தார்கள்.

முன்வரிசை ஆசனத்தில் இருந்த பணக்கார அம்மணி ஒருத்தி வெளியேறினாள். அந்த இடத்தில் வேறு பெண் உட்காரலானாள்.

"அழகி, என் வாழ்த்துக்கள்!" என்ற குரல் கேட்டு வலது பக்கமாகத் திரும்பினாள். அவள் அழகியின் பள்ளித்தோழி. பெயர் சூடாமணி; நல்ல பெண், கெட்டிக்காரி.

" அழகி, உன் கல்யாண விவரத்தை பத்திரிகையில் நீ போட்டிருந்த போட்டோவைக் கண்டதும்தான் அறிந்து கொண்டேன்; ஆமாம், உன் புருஷன் உன்னோடு வரவில்லையா?..."

"சூடா, அவருக்குக் கொஞ்சநாளாக உடம்பு குணமில்லை..." என்றாள் அழகி, தாழ்குரலில்.

சீனு வெடி வெடித்தது போல 'கைதட்டல்' எழுந்தது.

'வாழிய செந்தமிழ்!
வாழ்க நற்றமிழர்!
வாழிய, பாரத மணித் திருநாடு!'

ஆசனத்திலிருந்து எழுந்து பின் பக்கம் திரும்பினுள். மூன்ருவது வாசற்படியில் நின்ற ஓர் உருவத்தைப் பார்த்ததுதான் தாமதம். அழகிக்குத் தலை சுற்றியது.

அவள் பார்த்த உருவம் வேறு யாருமல்ல—சாட்சாத் திருவாளர் அழகேசன் !

"போகலாமா அழகி ?" என்று கேட்டபடி, சுசிலாவும் நர்ஸ் தாமரையும் வந்தார்கள்.

"ஓ...போகவேண்டியதுதான்...இந்த செக்கை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், அக்கா !" என்று சொல்லிப் பரிசை சுசீலாவிடம் சேர்ப்பித்த பிறகு, மேடையின் பாதத்தில் போய் நின்ருள். ஆசிரியரிடம் விடை பெற்ருள். சிவப்பு ரோஜா இதழ்கள் இரண்டை உதட்டு நுனியில்வைத்து மென்ற வண்ணம், நாலு பக்கங்களிலும் பார்வையை நழுவவிட்டவளாக மெல்ல நடந்து வந்தாள் அழகி.

மூவரும் புறப்பட்டார்கள்.

அழகியின் மனம் மாத்திரம் 'டக்டக்'கென்று அடித்துக்கொண்டது.

அரமனைக்காரத் தெருவில் கச்சாலீஸ்வரர் சந்நிதியைத் தாண்டினுர்கள். அழகியின் இடது காலில் முள் குத்தி விட்டது. பின் தங்க வேண்டியவளானுள் அழகி; சுசீலா, தாமரை இருவரும் கொஞ்சம் முன்னே நடந்தார்கள்.

முள்ளை எடுத்துவிட்டுத் திரும்பின வேகத்தில், எதிர்ச் சந்தில் மடங்கித் திரும்பி வந்த அந்தப் பிளஷரை அழகி கவனிக்க முடியவில்லை. கார்மீது மோதிய அவள், மறுகணம் நினைவு தப்பித் தரையில் சாய்ந்து விட்டாள்.

"அழகி !" என்று கூப்பிட்டுக் கொண்டே திரும்பி வந்த சுசீலாவும் செந்தாமரையும் அழகியின் அவல நிலையைக் கண்டதும், பதை பதைத்துப் போய் விட்டார்கள்.

அதே சமயம்—

"ஐயோ, என்னுடைய அழகியா ?" என்ற வார்த்தைகளுடன் காரிலிருந்து இறங்கி வந்த அவ்வுருவத்தைப் பார்த்ததும், பெண்கள் இருவரும் பெண்பதுமைகளாயினர். 'அழகேசன்...!' என்ற குரல்கள் புறப்பட்டன.

அழகியின் நெற்றி, மூக்கு, கண் இவற்றிலெல்லாம் ரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது.

இரவின் தொடுவளையத்தில் நின்று அந்திநிலா தாளக்கட்டு மாருமல் சதிராடிக் கொண்டிருந்தது.

சுற்று முற்றும் பார்த்தான்; பிறகு கைச்சட்டையை மடக்கி விட்டுக் கொண்டு அழகியைத் தூக்கிக் காரின் பின் ஆசனத்தில் கிடத்தினன்—அழகேசன்.

"அழகி... அழகி !" என்று சத்தமிட்டார்கள் தாமரையும் சுசிலாவும். கரிகாலன் வேறு வந்து சேர்ந்தான்.

அதற்குள் அழகேசனின் 'ப்யூக்'கார் பறந்து விட்டது.

பாதை ஓரத்தில் நழுவிக்கிடந்த அழகியின் தாலி, யார் கண்ணுக்கும் தென்படாமல், தன்னை மறைத்துக்கொள்ள எத்தனம் செய்துகொண்டிருந்தது. சுசிலா, தாமரை, கரிகாலன் ஆகிய மூவரின் கண்களிலும் அந்தத் தாலி தென்பட்டது.

"அழகி, அழகி !" என்று நெஞ்சு வெடிக்கப் புலம்பிக் கொண்டிருந்தன—மூன்று உள்ளங்கள்.

## 3. "எனக்கு நானே விடுகதை ஆனேன்.... !"

'அழகேசன் விலாசம்' பங்களாவிற்குள் அந்தக் கார் நுழைந்தது; குழல் ஒலி கேட்டு வாசற் கதவுகளைத் திறந்த பணியாள், கேள்விக் குறியை நெற்றியின் வரம்பில் தேக்கியவாறு நின்று கொண்டிருந்தான். வேலைக்காரி வள்ளிதான் காரின் கதவுகளைத் திறந்து விட்டாள். அவளுக்கு உதடு கொள்ளாத சிரிப்பு; உள்ளம் கொள்ளாத மகிழ்ச்சி. இல்லற தெய்வத்தைத் தரிசித்துவிட்டாளல்லவா...?

அழகேசன் முன் கதவைத் திறந்துகொண்டு இறங்கினான். தன்னுடைய பங்களா அன்றைக்கு—அப்பொழுது அவனுக்குப் புதுமையைக் காட்டிக் கொண்டிருந்தது. எண்ணும் எண்ணத்தில் புதுமை; காணும் காட்சியில் புதுமை; நோக்கும் பார்வையில் புதுமை. புதுமை அவனுள் ஒரு பகுதியாக மாறியது; அவன் புதுமையினுள் ஒரு பகுதியாக மாறினான்.

இளந் தேனிலவு எங்கும் பொழிந்து கொண்டிருந்தது.

"ஏ, வள்ளி! கொஞ்சம் இப்படி வருகிறாயா? அழகியை உள்ளே கூடத்துக்குக் கொண்டுபோக வேண்டும்," என்றான் அழகேசன்.

உத்தரவு புறப்படுவதற்குமுன், அவளாகவே புறப்பட்டு வந்து தயாராக நின்று கொண்டிருந்தாள்.

கூடத்தில் இருந்த 'ஸ்பிரிங்' கட்டிலில் பட்டு மெத்தையில் அழகி கிடத்தப்பட்டாள்.

அழகேசன் பெருமூச்சு விட்டவாறு, 'எங்களுடைய முதல் இரவுக்காக—சாந்தி முகூர்த்தத்துக்காகத் தயாரிக்கப்பட்டவை இந்தக் கட்டிலும் பட்டு மெத்தையும்! அந்த முதல் இரவு என்றுதான் வருமோ?...மலர்ந்த ரோஜாவாக இனிய மணம் வீசி நிறைந்திருக்க வேண்டிய அழகியை வாடிய பூவாகக் கண்டு எடுத்து வந்து இப்போது மெத்தையில் கிடத்த வேண்டியிருக்கிறதே!...' என்று நினைத்தான். அவளுக்காக அனுதாபப்பட வேண்டிய அவன், தனக்காக அனுதாபப்படலானான்.

உலக உருண்டை அப்பொழுது அதிசயப் பெட்டிக்குள் சுழன்றது. 'ஆல் இண்டியா ரேடியோ-செய்திகள் வாசிப்பது பூர்ணம் விசுவநாதன்' என்று பேசியது ரேடியோ.

நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டு, மின்சார விசிறிக்கு உயிர் தந்தான். கூடத்து வாசலில் ஒன்றும் தோன்ருமல், கண்கலங்க சோமநாதன் நின்றுகொண்டிருந்தார்.

"அப்பா, நம் அழகி ..என் மனேவி அப்பா...! அதோ பாருங்கள்!" என்ருன் அழகேசன்—மகிழ்ச்சி பொங்க.

"அழகியா? நம் அழகியா ? கற்பகாம்பிகை, இப்போதுதான் உனக்கு மனம் இரங்கியதா?" என்று கேட்டுக் கொண்டே தள்ளாடி நடந்து, அழகி படுத்திருந்த கட்டிலே நெருங்கினுர் சோமநாதன்.

அழகியின் கண் இதழ்கள் குவிந்திருந்தன. மூக்கின் நுனியிலும் இமைப் பகுதியிலும் ரத்தக்கறை படிந்திருந்தது.

"என்ன தம்பி, இதெல்லாம்?"

"காரில் அடிபட்டு விட்டது அப்பா. ஒன்றும் பயமில்லே; மயக்கமாக இருக்கிருள் என் மனேவி. டாக்டருக்கு போன் செய்யப் போகிறேன். ஒரு சமயம் நீங்கள் மனம் நொந்து என்னிடம் சொன்னீர்களே, நினேவிருக்கிறதா, அப்பா?...'பெற்ற பாசம் அடையும் வேதனே என்னே உயிரோடு சாகடித்து விடும் போலிருக்குது!' என்றீர்களே?...ஓடிப்போன இறந்த கால நினேவுகளேத் தேடிப் பிடித்துச் சாட்சி சொல்ல அழைக்கிறேனே யென்று நீங்கள் ஆச்சரியப் படுகிறீர்களா? ...அன்று உங்களிடம் நான் சொன்ன சமாதானத்தைத்தான் இப்பொழுதும் திரும்பப் படிக்கிறேன்......என்னே நம்புங்கள் அப்பா, நம்புங்கள். நான் தவறு ஏதும் செய்யவில்லே அப்பா...!"

"சரி, சரி! அழகேசன் விலாசம் இப்பொழுதுதான் களேகட்டியிருக்கிற மாதிரி எனக்குத் தோன்றுகிறது; முன்பொரு நாள் உன்னேத் தோளில் சார்த்திக்கொண்டு வந்து நல்லபடியாக இங்கே சேர்ப்பித்தாள் அழகி. அப்பொழுது, 'எங்கள் தெய்வம் எங்களேத் தேடி வந்து விட்டது!' என்று கூத்தாடினேன் நான். ஆனுல் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள், கண்ட இன்பக் கனவு, துன்பக் கனவாக மாறி விடை பெற்றுச் சென்றது. அழகி போய் விட்டாள்!...அப்பொழுது போன என் உயிர் இப்பொழுது எப்படியோ மீட்கப்பட்டிருக்கிறது. உயிரை மீட்டுத் தந்தவள் என் மருமகள் அழகியேதான்! ஆகவே, மனே மிதித்த சீதேவியை மனே விளக்காக்கி ஒளி காட்டச் செய், அழகேசா. உன்னுடைய நாடகத்தைப் பற்றியெல்லாம் இப்போது சிந்திக்க எனக்குத் திராணி வற்றி விட்டது. வயசு காலத்தில் ஒரு மாமனுருக்குச் சிசுருஷை செய்யவாவது ஒரு மருமகளே வாழ வைத்துவிடு. தேடிக் கிடைக்காத தங்கம் அழகி; அவள் காணக்கிடைக்காத சிப்பி முத்து. சீக்கிரம்

டாக்டருக்கு போன் செய்; அல்லது காரை எடுத்துகொண்டு போய்க் கையுடன் அழைத்துவா. ஓடு!" என்று உத்தர விட்டார் பெரியவர். உடலின் தளர்ச்சி குரலில் இல்லை. நடந்து வந்த பாதையின் பழைய முட்பாதை ஒவ்வொரு மைல் கல்லாக அவருடைய நெஞ்சிலும் நினைவிலும் தோன்றி உறுத்திக்கொண்டிருந்தது. ரத்தக் கண்ணீர்த்துளிகள் வழிந்தோடின.

கையில் வைத்திருந்த வெள்ளிப் பூண் இட்ட பிரம்பு கை நழுவியதுகூட அவருக்கு நினைவில்லை. கட்டிலின் அருகிருந்த நாற்காலியில் அமர்ந்தவாறு, தன் மருமகளை விழி வலிக்க, நெஞ்சு இனிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார் முதியவர் சோமநாதன்.

டெலிபோனில் எண்கள் திருப்பப்படும் ஓசை கிழவருக்கு நிம்மதி தந்தது.

மங்கிய நிலவு உறங்கிக்கொண்டிருந்தது; வாடியரோஜா துயில் வளர்ந்து கொண்டிருந்தது; இசை கூட்டும் எழில் யாழ் நாதம் பரப்ப விருப்பமற்று, பஞ்சு மெத்தையில் தஞ்சம் அடைந்திருந்தது.

சோமநாதனுக்கு, உலகம் என்ற ஒன்று இருக்கிறது என்னும் ஞாபகங்கூட உதிக்கவில்லை. மனத்தில் நிம்மதி நிரம்பி வழியும் போது, மனிதனுக்கு உலகம் மட்டுமென்ன, உலகத்தைப் படைத்த அலகிலா விளையாட்டுடையானைப்பற்றிக் கூடச் சிந்தனை பிறப்பது கிடையாது. ஒரு வினாடி, அப்படிப்பட்ட மன நிலைதான் உருவாகியிருந்தது. பொழுது விடிந்து பொழுது போனதும், 'கற்பகாம்பிகே, என் மருமகளை என் மகனிடம் கொண்டுவந்து சேர்த்துவிடு. உனக்குத் தேனுபிஷேகம், பாலாபிஷேகம் செய்கிறேன். சந்தனக் காப்பு சாத்துகிறேன்; தங்கக் கண் மலர் செய்து அணிவிக்கிறேன்' என்று வேண்டுதல் விடுத்துக்கொண்ட அவர், அப்பொழுது தெய்வத்திற்கு நன்றி செலுத்த ஏனோ மறந்து விட்டார்.

அம்பிகை சுவரில் இருந்தாள். கிழவர் விழிப்புப் பெற்றார். ஓடினார்; தண்டனிட்டு விழுந்தார். அழுதார், அழுதார், அப்படி அழுதார்; "தாயே, நீ கண்கண்ட தெய்வம். என் மருமகளை என் மகனிடமிருந்து மறுபடியும் பிரித்து வைத்துவிட மாட்டாயே?...அழகிக்கு நல்ல மனசைக் கொடு!...உன்னுடைய திருவாசலுக்கு நாங்கள்—நான், என் மகன், என் மருமகள் மூன்று பேரும் வந்து திருவிளக்கு ஏற்றி வைத்து மகிழ அனுக்கிரகம் செய், அம்மா!" என்று புலம்பினார்.

இரவுப் பூஜை நடந்து கொண்டிருந்தது, கபாலீஸ்வரர் கோயிலில் மணி ஒலித்தது. "ஆஹா, தாயே! நல்ல சகுனம் காட்டுகிறாயா?...ஆஹா!" என்று மெய்ம்மறந்து பேசினார்—தனக்கு மட்டும்

கேட்கும்படியாக—அல்ல, தனக்கு இவ்வளவு சந்தோஷத்தை வாரிக்கொடுத்த தெய்வத் தாய்க்கும் கேட்கும்படியாகப் பேசினார்.

நிலைப்படியில் ஒற்றைக் காலால் நின்று கொண்டிருந்தவேலைக் காரி வள்ளி, வெளி வாசலில் வந்து நின்ற காரைக் கண்டவுடன் இரட்டைக் காலால் நடந்துபோய் டாக்டருடைய மருந்துப் பையை வாங்கினாள். அழகேசன் டாக்டரை வரவேற்றான்.

தன்னை மறந்தோ, மறக்காமலோ—அல்லது மறக்க முடியாமலோ துயில் புரிந்து கொண்டிருந்த ஓர் உள்ளத்திற்காக நான்கு உள்ளங்கள் கண்ணில் விளக்கெண்ணெயை ஊற்றிக்கொண்டு கண்காணித்து வந்தன.

நாடிக்குழல், ஒரு மடக்கு மருந்து, இஞ்செக்ஷன், இரண்டு மாத்திரைகள் அனைத்தும் 'மந்திராலோசனை' செய்தன; வாதப் பிரதிவாதம் நடந்தது; கருவுற்ற திட்டம் உருப்பெற்றது. 'சபாஷ், வெற்றி!' என்று கொக்கரித்தன அவை.

கடிகார முள்ளின் முனையில் தங்கள் இதயங்களைத் தொங்கச் செய்து, கண்களை அழகியின் கண்களில் பொருத்திவிட்டு, ஆதர வற்றவர்கள் போல—அனாதைகள் போல நின்[illegible]—[illegible]தையும் தனயனும்.

வாரிச் சுருட்டிக் கொண்டு படுக்கையை விட்டெழுந்தாள் கதாசிரியை திருமதி அழகி. "சுசீலா அக்கா, செந்தாமரை" என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டாள். சுற்று முற்றும் கண்களைத் தேடச் சொன்னாள். 'காணவில்லை!' என்ற ஒரு வரி விளம்பரத்தை அவளுடைய மனப்பத்திரிகை படித்தது.

"அழகி, நீ உன் வீட்டில்தான் அம்மா இருக்கிறாய்!" என்றார் சோமநாதன், கண்ணாடியைச் சரியாகப் பொருத்திக்கொண்டு.

'ஐயோ, சிங்கத்தின் குகைக்கு மறுபடியும் வந்துவிட்டேனா? என்ன விந்தை! என் வீடாமே! யார், எப்போது ஏன் கட்டித் தந்தார்கள்? தன்னுடன் 'ஸ்கிப்பிங்' விளையாட்டு விளையாட விதி அழைத்தது; நான் மறுத்தேன். அதற்குப் பழி வாங்கவா அது இப்படி இங்கே என்னைத் தள்ளிவிட்டிருக்கிறது!...இதயத்தை விலைகொடுத்து வாங்கவேண்டிய நிலையில் தங்களைப் பக்குவப் படுத்திக் கொண்டிருக்கிறவர்களிடமா நான் அடைக்கலம் புகுந்தி ருக்கிறேன்? அடைக்கலமா?... என்ன சோதனை இது...? ஏதோ சூது நடந்திருக்கிறது. அழகேசன் தான் எல்லா சாகஸச் செயல்களிலும் வல்லமை படைத்தவராமே! திருமணப் பந்தலி லேயே என்னை மயங்கச் செய்வதற்கு, மயக்கும் ரோஜாப்பூவை

நாடி என்னையே ரசாயன மாற்றம் செய்யத் துணிந்த புண்ணிய வானாயிற்றே அவர்!... அந்த ஆறு புகைப்படங்கள் போட்ட விடு கதைகளுக்கு இத்தனை நாளாகியும் இன்னமும் என்றால் விடை காணமுடியவில்லையே ? என்னைப் படைத்தவன் விடுகதையாகி விட்டான் ; வேலி கட்டி சுற்றும் உலகம் விடுகதை ஆகிவிட்டது. என் கைத் தலம் பற்றியவர் விடுகதை ஆகிவிட்டார்; ஏன், எனக்கு, நானே விடுகதையாகி விட்டேன் ; ஆக்கிக்கொண்டு விட்டேன் ; அல்ல, ஆக்கப்பட்டு விட்டேன் !'

எள்ளத்தனை பொழுதில் ஓராயிரம் நினைவுகள் புயல் வேகத்தில் புறப்பட்டுச் சீறின ; சிரித்தன !

நட்சத்திரக் குழந்தைகள் ஆடிய பின்னல் கோலாட்ட விளையாட்டுக்கு நிலவுச் சிறுமி 'இங்கிலீஷ் ட்யூன்' அமைத்துப் பின் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தாள்.

புடைத்தெழுந்தன நரம்புகள். தலையைப் பிடித்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தாள் அழகி. ஒரு சில நிமிஷங்களை இறந்த காலமாக்கிய பிறகு, அவள் தலையை நிமிர்த்தினாள். படுக்கையைப் பிரிந்து எழுந்தாள்.

'அழகி' என்று அழைத்தபடி, அவளை நெருங்கினான் அழகேசன்.

அவள் நிற்க வில்லை.

"அம்மா அழகி ! நீ போய்விட்டாயானால் என் உயிரும் போய் விடும்" என்று கெஞ்சிய வாறு ஓட முடியாமல் தொடர்ந்தார் சோமநாதன்.

வெளிக் கதவைத் திறந்துகொண்டு வெளியேற முதல் அடி எடுத்து வைத்தாள் அழகி.

"அழகி...அம்மா அழகி... !"

கண்ணீரைப் பாத காணிக்கையாக வைத்து, புவிகாக்கும் உலக மாதாவாக அவளை ஆக்க எத்தனிக்க வில்லை கிழவர் ; கண்ணீரினால் அவளுடைய கல் நெஞ்சைக் கரைத்து மனித உணர்ச்சியைச் சுண்டிவிடத்தான் நினைத்தார் அவர்—அழகேசனின் தந்தை.

"ஐயோ! நான் உங்கள் மருமகள்! எழுந்திருங்கள்...! யாராவது பார்த்தால், என்னைத் திட்டுவார்கள்...! என் உயிர் போனாலும் போகட்டும் ; உங்கள் உயிர் போகவிடவேமாட்டேன்... எழுந்திருங்கள் மாமா...எழுந்திருங்கள் !" என்று விம்மினாள் அழகி.

# 4. ஆம்; அழகிக்கு ஓர் அயோத்தி!

அழகுச் சாதனங்கள் என்றென்றும் மனத்திற்கு ஆனந்தம் தருபவை. கண்ணாடிப் பெட்டியில் நிறைந்திருந்த தண்ணீரில் மேலும் கீழுமாக ஓடியாடி நீந்திக்கொண்டிருந்தது பெரியமீன் ஒன்று. பச்சை, சிவப்பு போன்ற அதன் மாறுபட்ட நிறங்களையும், அது உணவு உண்ணும் அழகையும் வெகு நேரம் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாள் அழகி.

"அம்மா, காப்பி பலகாரம் சாப்பிடுங்கம்மா!" என்று உபசாரம் செய்தாள் வள்ளி.

பலகாரத் தட்டை எடுத்து வந்து, தரைமீது விரிக்கப்பட்டிருந்த செட்டிநாட்டு வர்ணப் பாயில் வைத்தவாறு உட்கார்ந்தாள் அழகி. வெள்ளித் தம்ளரில் தண்ணீர் நிறைத்து வைத்தாள் வள்ளி.

ஒரு நினைவு எழுந்தது.

தன் நிலைமையையும் அந்த மீனின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தாள் அழகி. அவளுக்குச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. அவளுக்கும் உணவு கிடைக்கிறது; அதற்கும் உணவு கிடைக்கிறது; அவளுக்கும் அரண் இருக்கிறது; அதற்கும் இருக்கிறது; அந்த அரணையும் மீறிய ஒரு தூண்டில் அவளைப் பிடிக்கக் காத்திருக்கிறது; மீனுக்கும் அத்தகைய சங்கடம் உண்டு. அதற்கு விடுதலை இல்லை; அவளுக்கும் விடுதலை கிடையாதா? கிடையவே கிடையாதா?

உணவு கொள்ளவில்லை; இன்று மட்டுந்தானா? அழகேசன் விலாசத்தின் காற்று மேனியில் படிந்த கடந்த ஏழெட்டு நாட்களாகவே உற்சாகம் சிறிதுமின்றிக் காணப்பட்டாள் அவள். கொண்டவன் இருக்கும் இடமாயிற்றே அது?... ஸ்ரீராமபிரான் இருக்கும் இடந்தானே சீதைக்கு அயோத்தி? ஆனால்...? அழகேசன் அந்தப் புராண புருஷனின் நிழலிலாவது ஒதுங்க முடியுமா?... 'அவன்' பெயரை மனத்தால் தீண்டி, நினைவால் உறவாடி, நெஞ்சில் நிறைத்துக் கொள்ளவாவது அழகேசன் எத்தனம் செய்ய முடியுமா?

சோமநாதன் வந்தார். மாமனாரைக் கண்டவுடன், இட்டிலித் துண்டுகளைத் தொண்டைக் குழிக்குள் வேகமாகத் திணித்தாள் மருமகள்.

" சாப்பிட்டிட்டியா, அம்மா ? "

" ஆமாங்க...நீங்க... ? "

" நீ சாப்பிட்டதும், வழக்கம்போலே உன் கையாலேயே பலகாரம் கொண்டு வாம்மா. இந்த ஏழெட்டு நாளாகத்தான் நான் வாய்க்கு ருசியாக என்னமோ சாப்பிடறேன்," என்று உள்ளம் திறந்து, கண் மூடிப் பேசினர் அவர். கண்ணீரை அழகி கண்டு விடக் கூடாது என்ற நினைவு அவருக்கு.

வள்ளி பலகாரம் தயாரித்து வந்தாள். வள்ளியின் பதவியை ஏற்ருள் அழகி. சோமநாதன் ருசி பார்த்து அனுபவித்துச் சாப்பிட்டார்.

" நீ மாடிக்குப் போ, அம்மா. உன் எழுத்து வேலையைப் பார். என்ன யோசிக்கிருய் ?... அழகேசன் உன் கண்ணில் படவே மாட்டான்—பயப்படாதே ! உன் விருப்பத்திற்கு விரோதமாக எந்த ஒரு சிறு காரியமும் நடக்க நான் சம்மதிக்க மாட்டேன்," என்ருர் பெரியவர்.

அழகி சிரிப்பைப் பதிலாக்கி நன்றி சொல்லிய பிறகு, கூடத்தைக் கடந்து மாடிப் படி நோக்கிக் குறி வைத்தாள். கண் கொத்திப் பாம்பு ஏதாவது சுவரிடுக்கில் தலைநீட்டிப் பார்க்கிறதா என்பதை அறியவே அந்தக் குறி வைக்கப்பட்டது. ' நல்ல வேளை, அந்தப் புண்ணியவானைக் காணோம் ! ' என்றெண்ணி, மனத்தில் நிம்மதிக்குத் திசை காட்டியவாறு மாடிப்படி ஏறிப் போனுள்.

அப்பொழுது, " அழகி !..." என்ற குரல் கிணற்றடியிலிருந்து செத்து மடிந்து கேட்பது போல ஒலித்தது. யார் வள்ளியா ? இல்லை, சோமநாதனு ?... இல்லை, இல்லை ! அதோ அந்தக் கண்கொத்திப் பாம்பு... !—அதோ, அந்தப் புண்ணியவான் !—ஆமாம், திருவாளர் அழகேசன் !

அழகி திரும்பினுள். அவளுடைய பிம்பத்தைப் படம் பிடித்துக் காட்டிய நிலைக் கண்ணுடியில் தன் உள்ளத்தோடு உருவத்தையும் ஒட்டிப் பார்த்தாள். ஒட்டும் இரண்டு உள்ளங்களையா கண்டாள் ? எப்படிக் காண்பாள் ? காணுதல்தான் சாத்தியமா ?... ஒரே ஒரு நெஞ்சத்தை மட்டும்தான் அவளால் காண முடிந்தது ; ஒரே ஒரு பிம்பத்தை மாத்திரம்தான் காண முடிந்தது. அது அழகேசனுடையதாக எப்படி இருக்க முடியும் ? முடியாது, முடியவே முடியாது ! அணைபோட்டுத் தடுக்கப்பட்ட அகழியில் பொங்கிப் புரளும் புது வெள்ளத்தின் சுழிப்பை, தாபத்தை, தாகத்தைத்தான் அவள் தன்னுள்—தன்னில் கண்டாள். அந்த நிலையை ' எக்ஸ்ரே ' பிடித்துக்

கண்டு கொண்டானே அழகேசன் ? அதற்கு அவனுக்கு அதிகாரம் ஏது... ?

ஏக்கத்தைக் கண்களில் தேக்கி, பெருமூச்சு முழுவதையும் இதயத்தில் அடைத்து நின்ற அழகேசன் தன் ' உரிமை 'யை உரிமையுடன் பார்த்தான்.

" நீங்கள் யார் ? " என்று கேட்டாள் அழகி. உதிர்ந்த அந்தக் கேள்வி உலருவதற்குள் மாடியில் போய் நின்று விட்டாள். அரண் அமைந்து கொண்டது. அழகி நெஞ்சு பிளக்க விம்மினாள்.

' நீங்கள் யார் என்று அவரைக் கேட்க நான் யார் ?...' என்று அவளது ' மனச்சாட்சி ' வினவியது.

' கையில் விரல் நெரித்துக் கால் தளர்ந்து வாய் புலர்ந்து ' உட்கார்ந்தாள் அழகி—பெதும்பைப் பெண் கடற்கரையில் பிசைந்து வைத்த பெண் பாவை போல.

பார்வைக்குக் கடிவாளம் போட்டது கண்ணீர். சுவரில் ரவி வர்மாவின் சித்திரம் ஒன்று இருந்தது ; அதில், அசோகவனத்துச் சீதை ' புனையா ஓவிய 'மாக இருந்தாள்.

" என் நிலையைத்தான் பிரதிபலிக்கிறாயா, தாயே ? ' என்று மனத்துள் கேள்விக்கணை தொடுத்தாள். பேசும் சித்திரத்திற்கே பேசத் தெரியாமலிருக்கையில், பேசாத சித்திரத்திற்குப் பேச எப்படி முடியும் ?

பிரிந்து கிடந்த புத்தகத்தில் சிந்தை பதித்தாள் அழகி.

' அழுவதற்கும் ஒரு காலம் உண்டு ; சிரிப்பதற்கும் ஒரு காலம் உண்டு ; ஓலத்திற்கும் ஒரு காலம் உண்டு ; நடனத்திற்கும் ஒரு காலம் உண்டு.'

உலகம் வாழ, தன் உயிரைச் சிலுவைக்குப் பணயம்வைத்துச் சிரஞ்சீவி வழிகாட்டியாக மாறின புனித உள்ளம் அவளுக்குப் புதிதல்ல.

மற்றுமொரு சம்பவம் :

மயிலாப்பூரில் அவள் சேர்ப்பிக்கப்பட்ட தினத்திற்கு மறுநாள், நர்ஸ் செந்தாமரையும் சுசீலாவும் அழகியை வந்து பார்த்தார்கள். " அழகி, உன்னை அழகேசன் அவர்கள் இங்கு கொண்டுவந்து சேர்த்ததாக எண்ணாதே ; தெய்வம்தான் சேர்த்திருக்கிறது. எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் முடிவு வேண்டாமா ? ஆகவே, நீ அழகேசன் பவனத்தின் குடும்ப விளக்காக அமைந்து பிரகாசிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய இன்பக் கனவு. சுசீலா அக்காவுக்கும் இதேதான் ஆசை. கரிகாலனும், அவர் அத்தான் ராமலிங்கம் அவர்

களும் செய்தி கேட்டு சந்தோஷம் கொண்டார்கள். முன்பு ஒரு நாள் உன் கணவர் தனக்குத் தானே சொல்லிக்கொண்ட வார்த்தைகளை நான் உன்னிடம் சொல்லி யிருந்தேன். இப்பொழுது திரும்பவும் ஞாபகமூட்டுகின்றேன். 'அழகி! வந்தவர்கள் போனவர்களிடம் என் கௌரவத்திற்காக இப்படி எத்தனை நாளைக்குத்தான் பொய் சொல்லித் தப்பிக்க முடியும் ?... நாம் இரண்டு பேரும் புருஷன்—மனைவியாக ஆகவே முடியாதா ?...' என்று அழகேசன் மனம் நொந்து சொன்ன சொற்களை நான் மறக்க முடியவில்லை. நீயல்லவா மறக்காமலிருக்க வேண்டும் ?... பெண்ணுக்கென நம் தமிழ்ச் சமுதாயம் அமைத்துக் கொடுத்திருக்கும் கட்டு திட்டங்கள் மிக அதிகம் ; ஆனால் நியதிக்கு உட்பட்ட சுதந்திரங்களோ மிகக் குறைச்சல். ஆம் ; நீ வாழவேண்டும்—உன் கணவருடன். நீ சிரித்து மகிழ வேண்டும்—உன் புருஷனுடன். இதுவேதான் எங்கள் எல்லோருடைய ஆசையாகும். தெய்வம்போல ஒரு மாமனார் உனக்குக் கிடைத்திருக்கிறார்; ஆகையால் உன் சந்நிதானத்தில் அழகேசன் பேயாக மாறி அடியெடுத்து வைக்க இசையமாட்டார் ; பேயை, இதயமுள்ள நல்ல மனிதராக உருமாற்றிய பிறகுதான் உன் கண்ணில் தென்பட வைப்பார். இனியாவது சிரி, அழகி ! ஆமாம். வாய் திறந்து மனம் திறந்து அற்புதமாகச் சிரி, அழகி. நீ பரிசு பெற்ற ஐயாயிரம் ரூபாய் செக்கை சுசீலா அக்காவிடமிருந்து பெற்றுக் கொள். நாங்கள் போய் வருகிறோம், '' என்றாள் தாமரை.

அழகியால் அழத்தான் முடிந்தது. பெண் அழும்போது மட்டும் அவளுடன் சேர்ந்து யாருமே அழமாட்டார்கள்.

மத்தியான்னம் சாப்பாடு முடிந்ததும் சோமநாதன் பின்கட்டில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். ' அழகேசன் ஸில்க் எம்போரிய 'த்தில் களவு போன விஷயமாக போலீஸ் ஜீப் இரண்டு முறை அழகேசனைத் தேடி வந்தது. இது விஷயமாக அவனுக்கு வெளி வேலைகள் இருந்தன. வள்ளியின் கணவனுக்கு உடம்பிற்குச் சுகமில்லை. அவளும் போய்விட்டாள். ஆகவே, அழகி மாத்திரம்தான் பாக்கி.

பிள்ளையார் சுழி போட்டிருந்த புதிய கதையைத் தொடங்க எண்ணி, வெள்ளைத்தாளும் வெள்ளை உள்ளமுமாகக் கட்டிலில் வந்து உட்கார்ந்தாள் நாவலாசிரியை அழகி.

" அழகி !... அழகி !" என்று கூப்பிட்டுக்கொண்டே அழகேசன் வந்தான்.

அவளுக்கு மேனி சிலிர்த்தது.

"அழகி, என்னுடைய உறவினர் இருவரும் ஒன்றுவிட்ட தம்பியும் வந்திருக்கிறார்கள். நீ கதாசிரியை என்பதை அறிந்து உன்னைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். காப்பி மாத்திரம் தயார் செய்துகொண்டு வா. என் கௌரவத்தைக் காப்பாற்று. அழகி, நான் புது அழகேசன். இது சத்தியம்...!" என்று பச்சைப் பாலகன் மாதிரி செருமினான்—முப்பது வயது ஆண் பிள்ளை.

அவர்கள் வந்தார்கள். வணக்கம் தெரிவித்தார்கள். பதில் வணக்கம் சொன்னாள். பிறகு காப்பி கொணர்ந்தாள். இலக்கியப் பயிற்சி பற்றிப் பத்திரிகை நிருபர்கள்போல அவர்கள் கேட்டகேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடியவற்றுக்கு மட்டும் விளக்கம் தெரிவித்தாள். அவர்கள் போய் விட்டார்கள்—அழகேசன் உள்பட.

இதயம் கனியப் பெருமூச்சு விட்டவாறு கட்டிலில் வந்தமர்ந்த அழகி, அப்படியே கொத்தும் குறையுமாகப் படுத்துத் தூங்கி விட்டாள். யாரோ தன்னைத் தொட்டதறிந்து அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தாள் அவள்.

அழகேசன் கண்ணீருடன் நின்று கொண்டிருந்தான். அழகியின் கைகள் மூளியாக யிருந்தன. ஒரு நாள் ஜவுளிக்கடையில் கிடந்தெடுத்த அந்த ஒற்றை வளையின் ஞாபகம் உண்டானது. மற்றொரு வளையல் எங்கே ?—சிந்தை தடுமாறியது !

"கண்ணே ! என் நிலையை இன்னுங்கூட உன்னால் புரிந்து கொள்ள முடிய வில்லையா ? அழகி, நான் உன் கணவன் அல்லவா ? அழகி...!" என்று கேட்டுக் கொண்டே, அழகியை நெருங்கினான் அழகேசன்.

புயல் வெறியாட்டம் ஆடத் தளம் பரப்புமுன்னர், தென்றல் கதறியது : "ஐயோ !...மாமா !...மாமா !..."

விசித்தெழுந்த சோமநாதன் விசையாக ஓடிவந்தார் ; வழியில் இருந்த கூடத்துக் கதவு தடுத்தது. அவர் நிலை குப்புறச் சாய்ந்து விட்டார். அவர் 'அழகி, என்னம்மா நடந்தது ?' என்று தேய்ந்த குரலில் விசாரித்தார்.

அழகி பதில் எதுவும் சொல்லத் தெம்பின்றி, சோமநாதனின் நெற்றியில் வழிந்த ரத்தத்தைச் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்களிலே தீப்பொறி பிறந்தது.

பாவம், அழகேசன் சாம்பராகிக் கொண்டிருந்தான்...!

## 5. எழுதிச் செல்லும் விதியின் கை—
## எழுதி எழுதி மேற்செல்லும்...... !

'தமிழ்த் தொண்டு' ஆண்டு மலர் தபாலில் வந்திருந்தது. இலக்கிய நெஞ்சம் தூண்டிய ஆர்வத்துடன் அழகி மலரைப் புரட்டிக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்ணோட்டம் பக்கங்களின் மீது மேலோட்டமாக ஊர்ந்தது. எழுத்துலகிலே தனி இடம் அமர்த்திக்கொண்டிருக்கின்ற பேனு மன்னர்கள் பலருடை பெயர்கள் அவளது விழி விரிப்பில் மோதின; விலகின. அவரவர்களின் கதை, கட்டுரை, கவிதைகளுக்குக் கீழே அவரவர்களைப் பற்றிய குறிப்புக்கள் வேறு வெளியிடப்பட்டிருந்தன. பரிமேலழகர் புதுமையை விரும்புவரென்பதை அழகி ஏற்கனவே அறிந்திருந்தாள். இப்போது அதற்கு அத்தாட்சியாக அமைந்தது 'தமிழ்த் தொண்டு' மலர்.

ஒரு பகுதியில் தமிழ் வளர்க்கும் காவலர்கள் பலரின் நிழற் படங்கள் அச்சாகியிருந்தன. ஏடுகள் புரண்டன. அழகியின் கண்கள் நிலைத்து நின்றன. அவளுடைய இதயத்தின் அடிவாரத்தில் சிற்றலை பரப்பிய ஓர் இன்ப உணர்ச்சி அவளது கண்களின் விளிம்பிற்கு மிதந்து வந்தது. இமைக்க மறந்தன கண்கள். ஆனல், மனம் எண்ண மறக்க முடியுமா?

ஐயாயிரம் ரூபாய் பரிசுபெற்ற அழகியின் நவீனம் 'அந்தி நிலா' ஆரம்பமாகியிருந்தது. நெஞ்சம் புனைந்த கதை உருப்பினர்களை ஓவியர் எவ்வாறு படம் பிடித்துக் காட்டிருக்கிருரென்று பார்க்கத் துடி துடித்தாள். ஆனல், அதைவிடப் பதட்டம் ஏற்படத்தக்க ஒரு நினைவுக் குறிப்பை உள்மனம் அறிவித்து விட்டது.

தன்னை ஆசிரியர் எப்படி அறிமுகப்படுத்துகிருர் என்ற விவரத்தை அறிய ஆவல் கொண்டாள். ஆகவே, நவீனத்தின் முதல் அத்தியாயத்தின் கீழ்ப்பகுதிக்குப் பார்வையை இறக்க வேண்டியவளானுள் அழகி.

இதயம் எண்ணங்களுக்குச் சுமைதாங்கி; அப்போது அது காற்று நிரம்பிய பலூனுகவும் மாறிவிடும். அழகி பெருமூச்செறிந்தாள். அதன் வெம்மையில், சூடு கண்டாள்; சுவையும் காணத் தவறவில்லை. அதாவது, அந் நிலைக்கு ஆசிரியர் அவளை ஆளாக்கியிருந்தார் என்ற அர்த்தம்.

இவ்வாறு எழுத்துக்கள் ஓடின.

' திருமதி அழகி வெறும் அழகி அல்ல; திருமதி அழகேசனுங் கூட. பெயரின் எழிலுக்கு எழில் சேர்க்கும் பாங்குபெற்ற நாவலாசிரியை இவர். காதலொருவரைக் கைப்பிடித்து, அவர் காரியம் யாவிலும் கை கொடுக்கும் புதுமைப் பெண் அழகி. பெண்ணுக்குப் பெண்தான் கண்ணுடியாக அமையக்கூடும். ஆகவே, ஆசிரியையின் 'அந்தி நிலா' பெண் ஒருத்தியின் உள்ளத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. இதழுக்கு இதழ் நீங்கள் கண்ணீர் சொரிய நேரிடும்; காரணம், கதைக்குரிய நாயகியின் நிலை அப்படி; அவள் படும் அல்லல்கள் அவ்வாறு. கொண்டவனுக்கும் கொண்டவளுக்கும் இடையே திருமணப் பந்தலிலேயே திரை போட்டு வேடிக்கை பார்க்கிறது விதி. தன்னம்பிக்கை கொண்டவள் அவள். எமர்ஸனின் கொள்கையில் அவளுக்கு ஈடுபாடு. விதியை மறுக்கிருள். ஆனுல் விதியோ அவளை மடக்குகிறது. முடிவுதானே...? ஆமாம், காத்திருந்து சுவையுங்கள்!...திருமதி அழகி அவர்களின் தாம்பத்தியம் சிறக்கவும், அவர்களது இலக்கியப் பணி வளம் பெறவும் வாழ்த்துகிறோம்.

ஆசிரியர்.

எங்கிருந்தோ மிதந்துவரும் காற்று எங்கேயோ இருக்கின்ற சாளரத்தின் கதவுகளைத் தொட்டுப் பார்த்து விளையாடுவதில்லையா? அம்மாதிரிதான் இந் நிகழ்ச்சியும் நடந்திருக்கிறது. இலக்கிய உள்ளத்தை விளக்க வேண்டிய ஆசிரியரின் பேனு, அந்த வரம்பையும் தாண்டி விட்டிருக்கிறதே என்பதை எண்ண எண்ண அவளுக்கு மனம் நிரம்பி வழிந்தது—ஆனந்தத்தால் அல்ல—ஆத்திரத்திஞல். ஏன் இந்தக்காற்று வீச வேண்டும்? ஏன் அவளது மனச்சாளரம் 'பட பட' வென்று இப்படி அடித்துக்கொள்ள வேண்டும்? ஏன் இவ்வாறு 'அத்துமீறிய' அறிமுகத்தில் பரிமேலழகர் இறங்க வேண்டும்? காற்று, வீசுந்தென்றல் அல்லவே?—சூறைக் காற்ரு அது? எழுதிச் செல்லும் விதியின் கையா அது ? எழுதி எழுதி மேற் சென்று விட்டதா ? இல்லை, செல்கின்றதா?

'பரிசளிப்பு விழாவில் என்னை பொதுவாக—அதாவது, இலக்கிய ஆர்வம் படைத்த பெண் என்ற அளவில் மட்டிலுந் தானே அறிமுகம் செய்வித்தார்?......ஆனுல் இப்போது .....?' என்று எண்ணிப் பார்க்கத் துணிந்த அழகிக்கு அதற்கு மேலே நினைக்கத் திடம் இல்லை.

தடம் புரண்டு கிடந்த சேலைத் தலைப்பைச் சீர்படுத்திக் கொள்ளப் பணித்தது அழகியின் சுய நினைவு. பெருமூச்சும் கண்ணீரும் அவளுக்குப் புதிதல்ல; அவை அவளுடைய பிரத்தியட்ச வாழ்விலே

எந்த ஒரு நல்ல முடிவையும் காட்டத் தயங்கினாலும், நல்ல வேளையாக அவை அவளுடைய கற்பனை உள்ளத்திற்கு உரம் ஊட்டின; வளப்பம் தந்தன; உண்மை உலகத்தைக் காட்டின.

அவள் தன்னை மறந்த லயந்தன்னில் இந்நேரம் இருந்தாள். சிரிக்கத் தோன்றவில்லை. சிரிப்பில் அழுகை குரல் கொடுத்தது. கையிலிருந்த மலரை மேஜைமீது வீசினாள்.

'தமிழ்த் தொண்டு' அவளுடைய நெஞ்சில் ஏற்றி வைத்த பாரம் இன்னமும் குறையவில்லை; ஒருவேளை, அது நிரந்தரமாகவே நிலைத்து விடுமோ?

மனக் கண்களுக்குத் தீட்சண்யத்தைப் பாய்ச்சி எதிரே நோக்கினாள் அழகி. கூடத்தில் வீணை ஒன்று காட்சியளித்தது. ஒரு கணம் அவள் விழிகளை மூடினாள்; 'என்னைப் படைத்தவனே, எனக்கு அமைதி தரமாட்டாயா?' என்று நெஞ்சுருகப் பிரார்த்தித்தாள். 'இதோ அமைதி, அழகி, அழகி!' என்று பேசியது மாசில் வீணை.

இரண்டே எட்டில் பாய்ந்தாள் அவள். வீணையை எடுத்துக் கொண்டு வந்து தரையில் உட்கார்ந்தாள். தந்திகளை மீட்டினாள். தமக்கு மாத்திரம் கேட்கும் அளவுக்கு பைரவி ராகத்தை இசைக்கத் தொடங்கின உதடுகள்.

**'தாயே ஏழைபால் தயை செய்குவாய்—அம்மா**
**தயாபரி, பூரணி, தாயே..!'**

தியாகராஜர், சாமா சாஸ்திரிகள், தீட்சதர் போன்ற சங்கீத மேதைகளின் நினைவுகளைக் கிளறி விட்டார் பாபநாசம் சிவன். தெய்வ ஸாந்நித்யத்தின் மகிமையை யார் வர்ணிக்க முடியும்!

அவள் பாடும் வீணையானாள். பாடும் வீணை அவளாக உரு மாறியது. நாதவெள்ளம் உருகி ஓடியது. பெருகி வழிந்தது!

"அழகி...அழகி!" என்ற குரல் கேட்டது.

தட்டுத் தடுமாறிக் கொண்டு அவள் விழித்தாள். கண்ணீர் வழிந்தது. கூடத்தைக் கடந்து அவள் நிலைப்படியில் நின்றாள். வீணை கோபாலய்யர் வந்திருந்தார்.

"வாருங்கள், ஸார். அப்படி ஈஸிச்சேரில் உட்காருங்கள்; காப்பி வரவழைக்கிறேன்," என்றாள் அழகி.

வீணை உபாத்தியாயர் அமர்ந்தார்.

"அம்மா, காப்பி யெல்லாம் வேண்டாம். நீ ஒரு முறை, ஒரே ஒரு முறை வீணை வாசி அம்மா," என்றார் அவர்.

அவரைச் சாயல் மாயலாய் ஏற இறங்கப் பார்த்தாள் அழகி. உச்சி வெயிலின் தகிப்பை அவரது முகத்தில் உணர்ந்தாள்.

" என்னவோ மாதிரி பேசுகிறீர்களே, ஏதாவது விசேஷம் உண்டா ?..."

" நீ வீணை வாசிப்பதை இப்பொழுது நான் கடைசி முறையாகக் கேட்கப் போகிறேன் ; வாசியம்மா ! "

" உங்களிடம் மாமா ஏதாவது சொன்னார்களா ? "

" அவர் தங்கமானவராயிற்றே... ! "

" பிறகு... அத்தான் இட்ட சட்டமா இது ? "

" அம்மா, நான் இன்று வந்து நாளை போய் விடுபவன். நாடோடி. குடும்பத்திலே உனக்கோ, உன் கணவருக்கோ என்னால் பூசல் ஏற்பட விரும்பவில்லை ; அதன் காரணமாக உங்களது தாம்பத்தியம் சலனமடையவும் ஒப்ப மாட்டேன்... இஷ்டப்பட்டால், வீணை வாசி அம்மா... ! நான்கே நான்கு மாதங்களில் அற்புதமாகக் கற்றுக்கொண்டு விட்டாய் ! " என்றார். கண்கள் கொந்தளித்தன. கட்டுப்படுத்தப் பாடுபட்டார் அவர். முடியவில்லை.

" ஐயா, சற்று பொறுங்கள். மாமாவிடம் சொல்லி அவருடைய முடிவைக் கேட்டு வருகிறேன். அவர்கள் தானே உங்களை நியமித்தார்கள் ! " என்று ' குடுகுடுப் 'புடன் சொல்லி உள்ளே செல்லத் திரும்பினாள். அப்போது, ' கட கட ' வென்ற சிரிப்போசை அழகேசன் பவனத்தில் எதிரொலித்தது. யார் சிரித்தது ? விதியா ? விதியாவது, மண்ணாவது ... !

அழகேசன் மாடிப் படியில் ஓயிலாக நின்று கொண்டிருந்தான். எஞ்சி நின்ற இரண்டு படிக்கட்டுக்கள் கூட அவன் கவனத்துக்கு வரவில்லை போலும் !

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டம் ஒன்றிலே சிலம்புச் செல்வர் வருணித்த அந்த அரக்கர் சிரிப்பைப் பற்றி இப்போது அவள் நினைத்துப் பார்த்தாள்.

' இத்தனை நாளாகப் பெட்டிப் பாம்பாக இருந்த இவருக்கு இப்போது என்ன கிறுக்கு வந்துவிட்டதாம் ?... மாமா என்ற மகுடியை மாத்திரம் ஆண்டவன் என் கண்களுக்குக் காட்டாமல் இருந்திருந்தால், அழகேசன் என்ற இந்தக் கட்டுவிரியன் பாம்பு என்றைக்கோ என்னை விழுங்கி ஏப்பம் விட்டிருக்குமே ! '—இப்படி மனச் சிலந்தி வலை பின்னிக் கூடு அமைத்துத் தன்னையும் அதற்குள் சிறைப்படுத்திக் கொண்டு, பிறகு நெஞ்சு தாளாமல், கண்ணீர் மாளாமல் விம்மி விம்மி அழுதது.

அழகேசனுக்குச் சிரிக்க மாத்திரந்தான் தெரியும். அழகிக்கு அழமட்டுந்தான் தெரியும்.

தண்ணீர் நெருப்பாக உருமாறியது.

அழகி முகங் கருகினாள்; 'நெருப்பெழ நிமிரப்' பார்த்தாள். அவள் பார்வையில் என்னதான் மந்திர சக்தி இருந்ததோ? அவ்வளவு தான்—அழகேசன் மீண்டும் பொசுங்கிக் கொண்டிருந்தான்.

அழகி வேகமாக உள்ளே ஓடினாள். சோமநாதன் படுக்கையில் புரண்டு படுத்தார்.

"மாமா, சாப்பிட எழுந்திருங்க..." என்று எழுப்பினாள்.

பெரியவர் மெல்ல எழுந்தார்.

அவசரமாகத் திரும்பிய அழகி, வீணை கோபாலய்யரிடம் சொன்னாள்: "வாத்தியார் ஐயா, நீங்கள் வழக்கம் போல சாயந்திரம் வாருங்கள், அத்தான் சொல் நிலையல்ல. மாமாவுக்கும் எனக்கும் இந்த வீணை ஒன்றுதான் ரொம்பவும் ஆறுதல் தருகிறது. வாய் பேசத் தெரிந்த என் பேரில் இருக்கிற ஆத்திரத்தை பாவம், வாய் பேசத் தெரியாத அந்த வீணையிடம் காட்டுகிறார் என் அத்தான். உங்கள் அன்பு இந்த அபலை மீது என்றைக்கும் இருக்கவேண்டும். உங்களைப் பார்க்கும் போதெல்லாம் என் அப்பாவைத்தான் நான் நினைத்துக் கொள்வேன். இதோ, நான் வீணை வாசிக்கிறேன்...!"

உணர்ச்சிப் பெருக்குடன் வெந்த மனம் பேசியது.

'கல்யாணி' காற்று வழியில் மிதந்தது. ஏழைக் குடிலையும் அரண்மனை போல உணரச் செய்யும் தன்மை கொண்டது அது. அழகேசன் பங்களா சுவர்க்கமாகக் காட்சியளிக்கக் கேட்க வேண்டுமா?

வீணை உபாத்தியாயர் விடை பெற்றுச் சென்றார்.

ஹாலில் நின்றிருந்த அழகி, மாடியை நோக்கினாள் அவளைப் பார்த்த கையோடு, அழகேசன் உள்ளே மறைந்து கொண்டதையும் கவனித்தாள்.

'கொஞ்ச காலமாகப் பொழுது ஏதோ கொஞ்சம் நிம்மதியாகப் போகுது; அதுக்குள்ளே பழையபடியும் இந்த வேதாளம் முருங்கை மரம் ஏறிடுதே!' என்று யோசித்தாள். வீணை ஆசிரியரிடம் இனிப் பாடம் சொல்லித்தர வேண்டாம் என்று அழகேசன் உளறிக் கொட்டிய வார்த்தைகளைக் கற்பனை மூலம் நினைவுக் குழியிலிருந்து தோண்டி யெடுத்து சஸ்திர சிகிச்சை செய்யலானாள். பாதாதி கேசம் வரை நடுங்கியது. 'தமிழ்த் தொண்டு ஆசிரியர் பரிமேலழகர் என் கதை முழுவதையும் அறிந்தவராயிற்றே? மேலும், கரிகாலன் வேறு

அவரிடம் தனிப்படச் சொல்லியிருப்பதாகத் தெரிவித்தாரே? நானும் அழகேசனும் என்னவோ உயிரும் உடலுமாக உறவு கொண்டிருப்பது போல ஏன் அவர் எழுத வேண்டும்? எல்லாம் புதிராக இருக்கிறதே?'—திரும்பவும் சிந்தித்த அவளுக்குக் கடந்த சம்பவம் ஒன்று பசுமை காட்டியது. ஒரு சமயம், உறவினர் வந்திருப்பதாகக் கூறி, சுய கௌரவத்தைக் காப்பதற்காக அழகியைக் காப்பி கொண்டு வரும்படி அழகேசன் கெஞ்சியதை அழகி மறக்க முடியாது.

'ஒருவேளை, இவர்தான் தமிழ்த் தொண்டு அலுவலகத்துக்குப் போய் இப்படிப் போட வேண்டுமென்று சொல்லி யிருப்பாரோ?'

ஒவ்வொரு வாதப் பேச்சுக்கும் ஒவ்வொரு காரணம் அனுசரணையாக அமைந்து, அவள் மூளையை மேலும் மேலும் குழப்பியது.

பிரளய தாண்டவம் ஆடியது பேய் மனம்.

கிழவர் சோமநாதன் அவர்கள் உண்டு முடிந்து ஓய்வு கொண்டார்.

ஓணான் வேலிக்கு இழுத்தது; தவளை தண்ணீருக்குக் கூப்பிட்டது. அழகியின் நெஞ்சம் இரண்டுங் கெட்ட நிலையில் தவியாய்த் தவித்தது.

பஞ்சணையில் தாறுமாறுகக் கிடந்தன புத்தகங்கள் சில. தனக்குப் பிடித்தமான பத்து நாவல்களை எடுத்து விமரிசனம் செய்திருந்தார் ஸாமர்ஸட் மாகம்.

'வாழையடி வாழையாகப் பிறக்கும் வாசகர்களிலே எவனோ ஒருவனுக்கு நான் எழுதிக்கொண்டிருப்பதாகவே மதிக்கிறேன்' என்ற புதுமைப் பித்தன் அவர்களின் துணிவுப் பேச்சும் எதிரொலித்தது.

'நான் எழுதுகிற கதைகள் அமர இலக்கியம் என்பது அடியேனுடைய தாழ்மையான அபிப்பிராயம். தாழ்மையான அபிப்பிராயமே இப்படியிருந்தால், உயர்வான அபிப்பிராயம் எப்படி இருக்கும் என்று சொல்லவேண்டியதில்லை யல்லவா?' என்று கூறி அமரராகி விட்ட பேராசிரியர் கல்கி அவர்களது நினைவும் எழுந்தது.

ஆஹா, இலக்கிய நினைவுகளுக்கு மாத்திரம்தான் இந்த நிம்மதி சொந்தமாம்...!

அழகிக்குத் தரையின் நினைவு வந்தது. தாலி மார்பகத்தில் புரண்டது. பரிசு பெற்றுத் திரும்பும்பொழுது அவளது தாலி நழுவிக் கீழே விழுந்துவிட்டது அல்லவா? அது சுசீலா, செந்தாமரை, கரிகாலன் ஆகிய மூவர் கண்களிலே பட்டது. அந்த மங்கலச் சின்னத்தை அவர்கள் கொண்டு வந்து தன்னிடம் கொடுத்து அணிந்து

கொள்ளச் செய்த நிகழ்ச்சி அவளுடைய இதயத்தைத் தொட்டு நின்றது. ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருந்த கஜேந்திரனைச் சந்தித்துப் பேச சசிலாவின் வீட்டுக்கு அன்று சாயந்திரம் வருவதாகச் சொல்லியனுப்பியதை அழகி மறக்கவில்லை.

" அம்மா, அம்மா !...பெரிய எசமானுக்கு மறுபடியும் மயக்கம் வந்திடுச்சுங்க அம்மா..." என்று பதட்டத்துடன் செய்தி சொன்னாள் வேலைக்காரி வள்ளி.

" சின்னவர் இருக்காரு ? இல்லை, ஜவுளிக் கடைக்குப் போயாச்சா, பாரு, வள்ளி !"

" மேலே தானுங்க இருக்காங்க, அம்மா !"

அழகி ஓட்டமாக ஓடினாள், கிழவர் சோமநாதன் படுக்கையில் சுருண்டு கிடந்தார். முகத்தில் சலனம் இல்லை. ஒதுங்கிப்போய் விட்ட கண்கள் மூடியவை மூடியவாறே இருந்தன.

"வள்ளி, நீ, போய்ச் சுடு தண்ணீர் வை; நான் டாக்டருக்குப் போன் செய்கிறேன்..." என்று சொல்லி ஹாலுக்கு விரைந்தாள் அழகி. எல்லாம் முடிந்து திரும்பிய போது, சோமநாதனின் உடல் நிலை அவளைக் கலவரத்திற்குள்ளாக்கியது. ஏதோ விபரீதமான நினைவொன்று நெஞ்சிலிருந்து புறப்பட்டு நினைவில் மிதந்தது. 'ஐயோ, மாமா ! நீங்கள் இந்த உலகத்தில் இல்லையென்றால், அப்புறம் இந்த அழகியும் உதிர்ந்து போய்விட வேண்டியதுதான் !' என்று தன்னுள் புலம்பினாள்.

" அழகி, அழகேசா !" என்று பெரியவர் முண முணத்தார்.

இக்கட்டான நிலையில், ஓர் உயிரை ஊசலாட வைத்துக் கொண்டு எந்த விஷப் பரீட்சையையும் செய்ய ஒப்பவில்லை அவள். ஆதலால், உடனடியாக மாடிக்கு ஓடினாள். "அத்தான், மாமாவுக்கு ஆபத்து. உங்களைக் கூப்பிடுறாங்க," என்றாள்.

பருவத்தின் வளப்பத்தில் பதிந்த பார்வை; பதட்டத்தின் ஒலியில் சிந்தை தடுமாறியது. தன் மனைவியைப் பார்த்துக் கொண்டே அறையிலிருந்து வேகமாக வெளியே வந்தான் அழகேசன். வந்த சடுதியில் அவள் மீது மோதிவிட்டான். அவள் நாவடைத்துப் போய்விட்டாள் ; புடவையைச் சரிப்படுத்திக்கொண்டு துரிதமுடன் நகர்ந்தாள்.

அழகேசன் படி யிறங்கினான்.

அழகி அவனைத் தொடர்ந்த சமயம், அழகேசனின் அறைக்கு வெளியே கடிதமொன்று காற்றில் பறந்து வந்து கிடந்தது. அதை நலியாமல் எடுத்துப் பார்த்தாள். திகைத்துப் போனாள். அடுத்த விநாடி, கீழே ஓடிவிட்டாள்.

டாக்டர் வந்து கிழவரைப் பார்த்தார்; பரிசோதனை செய்தார். அவரது முகம் ஏனோ விகாரம் அடைந்தது. "அழகி, உங்கள் மாமாவிற்கு நான் கொடுத்த மருந்தில் யாரோ விஷத்தைக் கலந்து கொடுத்திருக்கிறார்கள்... திரை மறைவில் ஏதோ சூழ்ச்சி நடை பெறுகிறது... கவனியுங்கள், மிஸ்டர் அழகேசன்!" என்று டாக்டர் பயத்துடன் எச்சரித்தார்.

கயல் எழுதி, வில் எழுதித் தீட்டப் பெற்ற அஜந்தாச் சித்திரம் அழுதுகொண்டிருந்தது. அழகேசனைத் தலை நிமிர்த்திப் பார்த்தாள் அவள்.

அவன் மௌனமே உருவாக நின்று கொண்டிருந்தான்.

"டாக்டர் ஸார், எனக்கு ஒன்றும் மட்டுப்படவில்லை. பணத்தைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். எனக்குப் பரிசாகக் கிடைத்த ஐயாயிரம் ரூபாயை என் பேரில் பாங்கியில் போட்டிருக்கிறேன். எல்லாவற்றையும் செலவழித்தாலும் சரி, மாமாவுக்கு உயிர் மாத்திரம் தந்து விடுங்கள்...!"

"இப்போது என்னாலானதைச் செய்கிறேன். முடிவு ஆண்டவன் கையில் அம்மா... நாளை விடிந்தால்தான் எதையும் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்," என்றார் டாக்டர் சுந்தரவதனம்.

ஆலைக் கரும்பானாள் அழகி.

## 6. யார் இந்த முரளி ...?

நல்ல பொழுதாக விடிய வேண்டுமே யென்று கற்பகாம்பாளைத் தியானித்து விட்டுப் படுத்துக் கொண்டாள் அழகி. நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும் என்று சாதாரணமாகப் பேசிக் கொள்ளுவார்கள். ஆனால், அழகியைப் பொறுத்தவரையில் அவள் நினைத்ததற்கு அந்தப் பெண் தெய்வம் ஒன்றும் எதிர்ப்புக் காட்டவில்லை. ஒருவேளை, பெண்ணுக்குப் பெண் ஏற்படும் இன உணர்ச்சியோ, என்னவோ ? அவள் பிரார்த்தித்துக் கொண்டதற்கு இணங்க, அடுத்த நாள் பொழுது நல்ல பொழுதாகவே விடிந்தது.

வாரிச் சுருட்டிக்கொண்டு படுக்கையை விட்டு எழுந்தாள் அழகி. கண்களைத் துடைத்துக் கொண்டாள் ; எதிரே பார்த்தாள். அவளுடைய மாமனார் சோமநாதன் கட்டிலிலே புரண்டு படுத்தார். அண்டிச் சென்றாள். அசதியும் ஆற்றாமையும் அவரிடம் இருந்தன. அவளது நெஞ்சு படபடத்தது.

படுத்திருந்த ஜமக்காளத்தை மடித்துப் போட்டாள். அழகேசன் விலாசத்தின் அந்தப்புரம் அவளை அழைத்தது. போனாள் ; திரும்பினாள். இப்பொழுது, சுட்டும் விழிச்சுடரிலே அழகு கொழித்தது. நெற்றித் திலகத்தில் பக்தி கனிந்தது. 'தாயே, கற்பகாம்பிகை, என் மாமாவைக் காப்பாற்று,' என்று தியானம் செய்தன அவளுடைய உதடுகள்.

சிங்காரத் தொட்டிலில் கண்வளரும் பச்சைக் குழந்தை தன்னை மறந்து சிரிப்பது மாதிரி, இளம் பரிதி செவ்விதழ்களைப் பிரித்துப் புன்னகை புரியத் தொடங்கியிருந்தான். 'ஞாயிறு போற்றுதும்...!'

அழகி, பூஜை அறையைத் தாண்டி மறுபடியும் கூடத்தின் உள்ளே நுழைந்தாள். இன்னமும் பெரியவர் கண் திறக்கவில்லை. அவர் உடம்பெல்லாம் வியர்வைத் துளிகள். சேலைத் தலைப்பினால் ஒத்தி எடுத்தாள். விசிறி அவள் கைக்குத் தாவியது.

"அம்மா, சுடுதண்ணி கொண்டாந்திருக்கேங்க, அம்மா," என்று செய்தி சொன்னாள் வேலைக்காரி வள்ளி. வெந்நீர்க் கோப்பையை ஸ்டூலில் இறக்கி வைத்துவிட்டுக் கிழவரைப் பார்த்தாள்.

"அம்மா, ஐயாவுக்குக் காச்சல் விட்டுப்போச்சு போலேயிருக்குங்க," என்றாள் வள்ளி.

"நிஜமாகவா ?"

"ஆமாங்க, வேர்வை வர ஆரம்பிச்சிட்டுதின்னு, அப்பாலே ஒண்ணும் பயயில்லேன்னு எங்க காவேரிக்கரைப் பாட்டி சொல்லு வாங்க!"

கிட்டத்தட்ட ஐநூறு ரூபாயை 'ஏப்பம்' விட்ட அவ்வளவு பெரிய வியாதியை வேலைக்காரி அவ்வளவு லகுவாக ஓட்டிவிடப் பார்த்தாள்.

ஏழையின் வாக்கு பொய்க்காமல் இருக்கவேண்டுமே யென்று நினைத்தாள் அழகி. சோமநாதனின் கட்டிலை யடைந்து, "மாமா!" என்று மெல்லக் கூப்பிட்டாள். அடித்துப்போட்டாற் போலக் கிடந்தார் அவர். பேச்சில்லை ; மூச்சிருந்தது.

உள்ளும் புறமும் அவளுடைய கண்கள் அலைந்தன. டாக்டரைத்தான் அப்பொழுது அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். முதல் நாள், "இப்போது என்னாலானதைச் செய்கிறேன். முடிவு ஆண்டவன் கையில், அம்மா!" என்று சுந்தரவதனம் எச்சரித்ததை நினைவு சேர்த்துக் காட்டியது அபலை நெஞ்சம்.

'கடந்த இரண்டு மாசமாக இந்த டாக்டர்தானே என் நெஞ்சிலிருந்த பயத்தை விலக்கிக்கொண்டிருக்கிறார்! என்னுடைய பயத்தை ஒரு நாள் டாக்டரிடம் ஆதியோடு அந்தமாக விளக்கிச்சொன்னதைக் கேட்டதும், அவர் அப்படியே திகைத்து விட்டாரே!'

"அழகி அம்மா, உங்கள் கதை விசித்திரமாகத்தான் இருக்கிறது. அழகேசனைப்பற்றி நீங்கள் சொல்லும் கதையைக்கூட என்னால் அவ்வளவு தூரம் லேசில் நம்பிவிட முடியவில்லை. அதற்காக, உங்கள் பேச்சை நம்ப மறுக்கிறேன் என்பதாகத் தயவுசெய்து நினைத்துவிடாதீர்கள். தொட்டுத் தாலிகட்டிய உங்கள் கணவரிடமிருந்து நீங்கள் பாதுகாக்கப்பட உங்களுடைய மாமனார்தான் இப்போது முள்வேலியாக அமைந்திருக்கிறார் என்று சொல்கிறீர்கள். ஆகவே, பெரியவருக்கு எவ்விதமான குந்தகமும் வாலாகாது என்றும் ஆசைப்படுகிறீர்கள். நான் மூன்றுமவன். உங்களுடைய குடும்ப டாக்டர் என்ற உரிமை இருந்தாலும், உங்களது குடும்ப நோய்க்கு நாடி பிடித்துப் பார்த்து வைத்தியம் செய்யும் உரிமை எனக்குக் கிடையாது ; அது வேண்டவும் வேண்டாம். ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன். உங்கள் விருப்பப்படி, ஸ்ரீமான் சோமநாதன் அவர்களின் உடம்பு நலம்பெற்று தேறச்செய்வதற்கு நான் பொறுப்பு!' என்று மென்று விழுங்கிப் பதில் சொன்ன டாக்டர் நேற்று ஏன் அப்படி ஒட்டாமல் கொள்ளாமல் பதில் சொன்னார்?... மாமாவுக்கு அவர் கொடுத்த மருந்திலே யாரோ விஷத்தைக் கலந்து கொடுத்து விட்டிருப்பதாகச் சந்தேகப் பட்டாரே?...யார் செய்த சூழ்ச்சி அது? ஒரு வேளை...ஒரு வேளை...' என்ற வரம்புவரை

தான் அவள் சிந்தை வேலை செய்தது. தொடர்ந்து கற்பனை செய்து பார்க்கத் திராணி பெற்ற சமயம், அவளுடைய மனக்கண்களின் விரிப்பிலே அழகேசனின் கம்பீரமான அழகுருவம் தெரிந்தது. கன்னச் சிவப்பு கண்களுக்கு இடம் மாறியது. உதட்டுச் சிரிப்பு உள்ளத்தை அழவைத்தது.

டெலிபோன் மணி 'ட்ரிங், ட்ரிங்க்!' என்று மூச்சுப் பிடிக்கச் சத்தம்போட்டது—வானத்து நிலவைத்தன் கையில் பிடித்துக்கொடுத்தால்தான், பிசைந்திருக்கும் சாதத்தை உண்ண முடியுமென்று அடம் பிடிக்கின்ற விதரணை புரியாத பாப்பா மாதிரி.

அழகிக்கு நடந்துபோகும் அளவுக்குப் பொறுமை இல்லை; ஓடினாள்: உடுத்துயிருந்த 'கிரேப் ஸில்க்' கால்களிலே பின்னிக் கொண்டது. சரிப்படுத்தினாள். "ஹலலோ, யார் டாக்டர் ஸார் தானே பேசறது ?... என்ன... இல்லீங்களா ?... பின்னே யார் ? யார், கஜேந்திரன் ஸாரா ? ஆமாம், அழகியேதான் பேசுகிறேன்... ஆமா, அழகியேதான் ! அழகேசன்... ஓ, அவரையா கேட்கிறீர்கள்? மாடியில் இருக்கிறாரென்று நினைக்கிறேன்...! சரி அடுத்தவாரம் உங்களைச் சந்திக்கிறேன். இப்போது மனம் சரியாகயில்லை. மேலும், போனில் பேசுவதென்பதும் சரியில்லை. நன்றி... என் பேரில் நல்லெண்ணம் வைத்திருப்பதற்கு ரொம்ப ரொம்ப நன்றி, ஸார் ! ஆமாம், உங்களை சுசீலா அக்கா வீட்டிலேதான் நான் சந்திக்க முடியும். வருகிற ஞாயிற்றுக்கிழமை காலையில் பத்து மணி சுமாருக்குச் சந்திக்கிறேன்... நன்றி !"

ரிஸீவரை 'ரெஸ்டில்' வைப்பதற்கும் மாடிப்படியிலிருந்து பூட்ஸ் ஒலி புறப்பட்டுத் தொடர்வதற்கும் கணக்காக இருந்தது.

அழகி எதிர்பார்த்தது நூற்றுக்கு நூறு சரி. அழகேசன்தான் அது ; ஆம் ; 'அது !' அவளுடைய நெஞ்சில் தீப்பந்தம் காட்டினாற் போலச் சுட்டது. முதல்நாள் சம்பவத்தைக் கிளறினாள். 'அவருடைய அப்பாவின் நிலை கவலைக்கிடமாக யிருக்கிறதென்று டாக்டர் சுந்தரவதனம் சொன்னதைக் கேட்டு, அவர் ஏன் அப்படி அரச மரத்துப் பிள்ளையார் மாதிரி 'கப் சிப்' என்றிருந்தார் ?'—சிவராத்திரியாகக் கழித்த அந்த விடியாத நீண்ட இரவைப் பற்றிய ஞாபகம் ஓடியது. அழகேசன் பவனத்திலே எரிமலை வெடித்த அதிசயத்தை—பூகம்பம் வாய் பிளந்த நிகழ்ச்சியை அங்கம் அங்கமாக, காட்சி காட்சியாக எண்ணலானாள். 'சூழ்ச்சி' என்ற நாலெழுத்து வார்த்தைதான் அவளது மனச்சாட்சியின் தளத்தில் நின்று அறக்கப்பறக்கக் குரல் தந்தது.

'பெற்ற தந்தைக்கே பிள்ளை துரோகமா? ஒரு சமயம், அவர்... அவரேதான் மருந்தில் மாற்று மருந்தை அல்லது, டாக்டர் சொன்னது

போல விஷத்தைக் கலந்து விட்டிருப்பாரோ ?...ஏன், எனக்கு மாமா பாதுகாப்பளிக்கிருரே என்ற ஆத்திரமா ? ஐயோ, என்ன கொடுமை இது ! நெஞ்சிரக்கமற்ற பிண்டமா இவர் ? இதயம் என்ற ஒன்றைப் படைக்கவே மறந்து விட்டானே ஆண்டவன் !'

மறுபடியும் ஓயாத ஒழியாத சிந்தனைக் குமைச்சல். அக்கினிப் பாளத்தில் கால் பாவி நின்ருள் அவள். சுட்டது, சுட்டது, சுட்டுக் கொண்டே யிருந்தது.

தேடி வந்த தெய்வமாக டாக்டர் தோன்றினர். ஓடிப் போய், "வாங்க, ஸார் !" என்று வரவேற்ருள். "வள்ளி, வள்ளி !" என்று கூவினுள். வேலைக்காரியைக் காணேம். மருந்துப் பையை வாங்கிக் கொண்டாள்.

டாக்டர் சோதனை செய்தார். அவருடைய கழுத்தில் தொங்கிய 'ஸ்டெதஸ்கோப்'பில்தான் தன்னுடைய உயிர் அடங்கியிருப்பது போன்ற ஓர் உணர்வுடன் டாக்டரின் முகக்குறிப்பையே பார்த்தவாறு நின்ருள் அழகி.

டாக்டரின் உதடுகளில் சிரிப்பு உதித்தது. "அம்மா, நல்லவர்களின் நம்பிக்கை ஒருபோதும் வீணுவதில்லை. உங்கள் மாமா இனிப் பிழைத்துக் கொள்ளுவார்கள். நேற்றுச் செலுத்திய ஜெர்மன் ஊசி கைமேல் பலன் காட்டி விட்டது," என்ருர்.

"என் உயிர் பிழைத்தது, டாக்டர் ஸார் !" என்ருள் அழகி. கண்கள் இரண்டினையும் மூடிக்கொண்டே இவ்வாறு சொன்னுள். அவள் விழிகளைத் திறந்தபோது, கண்ணீர் வெள்ளம் வழியத் தொடங்கியது.

வள்ளி காப்பி கொண்டு வந்தாள். டாக்டரிடம் நீட்டினுள். "அம்மா, சின்ன ஐயா வெளியூருக்குப் போயிட்டாங்க. முன்னுலே நடந்ததில்லே, ஜவுளிக் கடை கேசு, அது விசயமாம் !" என்ருள் அவள்—அழகியிடம்.

இந்தச் சேதி அழகிக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'பெற்றெடுத்த தகப்பஞருக்கு உடம்புக்கு முடியலை. அதைக்கூட என்ன ஏதுன்னு கேட்காத பாவி மனுஷர் வெளியூர்ப் பயணம் வேறே வச்சிட்டாரே ?'

அழகேசனின் நடவடிக்கைகள் அனைத்தும் மூடுமந்திரம் போலவே இருந்துவந்த விஷயம் அவளுக்கு இன்று நேற்றைய ரகசியமல்லவே !

சுந்தரவதனம் மருந்துப் பில்லைகள் அடங்கிய பொட்டலம் ஒன்றையும், கலக்கப்பட்ட தண்ணீர் மருந்து நிறைந்த சீசா ஒன்றையும்

7

நீட்டினர். "இனி நானே பூட்டி வைத்துக் கொடுப்பேன், ஸார்," என்று கூறினாள் அழகி.

"அழகி, நான் செத்துப்போக மாட்டேன் அம்மா! உன்னை அழ விட்டுவிட்டு என்னைக் கூட்டிப் போகமாட்டான் எமதர்ம ராஜன். அவன் நல்லவனும்; நெஞ்சு உள்ளவனும்," என்று சொல்லிக் கொண்டே படுக்கையிலிருந்து எழுந்தார் பெரியவர் சோமநாதன்.

"அப்படியே இருங்கள், மாமா. வெந்நீர் ஆறிவிட்டது. பல் விளக்குங்கள். மருந்து சாப்பிடலாம்," என்றாள் மருமகள்.

"அது சரி, அழகேசன் எங்கே அம்மா?"

"அவர் காலையில் எங்கேயோ வெளியூர் போய்விட்டாராம்!"

"தொலைந்து போகட்டும், பாவிப் பயல்!...ம்...!"

"மாமா..."

"ஏனம்மா, உன் குரல் கம்முகிறது? உன் கழுத்திலே ஊசலாடுகிறதே அந்தத் தாலிக்கயிறு, அது உன்னை அனுதாபம் காட்டத் தூண்டுகிறதா? அவனுக்காக ஒரு துளி கண்ணீரைக்கூட விரயம் செய்யாதே, அழகி...! எல்லா நாடகமும் எனக்குப் புரிந்து விட்டது. இனி என் கண்ணிலே அவன் எப்படி விழிக்கிறானென்று பார்க்கிறேன்...ம், பாவிப் பயல்!"

அப்பொழுதுதான் அழகேசன் பவனத்தில் அமைதி தலைகாட்டியது போலிருந்தது. ஆனால் அதற்குள் புதுக் குழப்பம்!

டாக்டர் விடை பெற்றுச் சென்றவுடன், அழகி தன் மாமனாருக்கு வேண்டிய பணிவிடைகள் செய்வதில் முனைந்தாள். பதினைந்து இருபது நிமிஷங்கள் வரையிலும் கடமை செயலாற்றியது.

அன்றைய 'ஹிந்து' பத்திரிகையைப் பெரியவர் கையில் கொடுத்துவிட்டு, 'சாப்பிட்டேன்' என்று பெயர் பண்ணிய கையோடு தன் அறைக்கு நடந்தாள் அவள்.

அழகியின் நெஞ்சிலும் நினைவிலும் நிம்மதி சில இழைகள் பின்னியிருந்தது. ஆனாலும், தனிமை அவளுக்குப் பயமாக யிருந்தது. விருந்து முடிந்ததும் வீடு சோபை தவிர்த்துக் காணப்படுமல்லவா அதுமாதிரி இருந்தது அவளுடைய அறை. தேர் திருநாள் நிறைவு பெற்றவுடன், காளி கோயில் கலகலப்பிழந்து காட்சியளிக்குமே, அதுபோன்றே விளங்கியது அவளது இருப்பிடம். இந்த மாற்றம் அவளுக்கே ஆச்சரியமாகக்கூட இருந்தது. பார்க்கப் போனால், அன்றுதான் அவளுக்குத் துளியாவது நிம்மதி கிடைத்ததென்று அர்த்தம். பெரியவரின் வாழ்க்கை ஜாதகத்தில் திடீர் மாற்றம்

எதுவும் ஏற்படாமல், நல்ல பலனையே காணமுடிந்தது. அப்படி யென்றால், ஏன் இந்தப் பரிவுணர்ச்சி ? அழகேசன் வெளியூர் சென்று விட்டானே யென்று ? பூ...நல்ல வேடிக்கை !—அவ னுக்கு நினைவுகூட்டிப் பார்க்கவும் சிந்தை இல்லை.

தனிமையைப் போக்கத் துணை நாடினாள் அழகி. பேசாத வீணையைத் தேடினாள். கடிதம் ஒன்று தட்டுப்பட்டது. பழைய கடிதம் அன்று தன் மாமனுக்கு உடல் நலமில்லையென்று தன் கணவனை அழைக்க மாடிக்குப் போய்த் திரும்புகையில், பாதத்தில் தஞ்சம் அடைந்து பேசிய கடிதம் அது. இப்பொழுது பேசச் சொன் னால் மாத்திரம் பேசாமல் இருந்து விடுமா ?

**"திருவாளர் அழகேசன் அவர்களுக்கு,**

முன்பின் அறிமுகமில்லாத ஒருவன் எழுதும் கடிதம் இது. ஆனாலும், உங்களுடைய வாழ்க்கையில் அக்கறை கொண்டவன் எழுதுகிறேன். வியாழக்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்கு மவுண்ட் ரோடில் உள்ள 'ஹோட்டல் பூலோக சொர்க்க'த்திலே நாற்பத்தொன்பதாவது அறையிலே என்னைச் சந்தியுங்கள், சில ரகசியங்களை—உங்கள் வாழ்வு சுமுகமாக அமைவதற்கு நீங்கள் எச்சரிக்கையோடு கண்காணிக்க வேண்டிய மர்மச் சுழல்களை— உங்களுக்கு விளக்குகிறேன். ஆச்சரியமாகயிருக்கிறதா ? மற்றச் செய்திகள் நம் சந்திப்பில் விளக்கப்படும் !

இப்படிக்கு,
**முரளி."**

அழகி தன் மனத்தைக் கேள்வி கேட்டாள் ; 'ஆமாம், யார் இந்த முரளி ? என் அத்தான் முரளியா இவர் ? யாரைப் பற்றி என்ன ரகசியங்கள் அப்படித் தெரியுமாம் முரளி அத்தானுக்கு ? ஒருகால், என்னை வஞ்சம் தீர்க்க அத்தான் முரளியும் இவர் மாதிரி ஏதாவது சதி நடத்தப் போகிறாரா...? ஆ, இன்றைக்குத்தானே வியாழக்கிழமை ?'

அழகேசனின் கவனத்தைக் கவர்ந்து, பிறகு நினைவுபடுத்த மறந்த அக்கடிதத்தை மடித்து மேஜை டிராயருக்குள் திணித்தாள் அழகி. அந்தப் பூலோக சொர்க்கத்தின் 'போன்' எண்ணைக் காண 'டெலிபோன் டைரக்டரி'யைத் தேடினாள். கிடைத்தது. ஏடுகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தபோது, அவள் முன்னே அவளது அத்தான் முரளி நின்று கொண்டிருந்தான் !

## 7. மாங்கல்யத்தின் உயிர்

ஜெனரல் ஆஸ்பத்திரி 'லீவ்ரிஜிஸ்த'ரில் நர்ஸ் செந்தாமரையின் பெயரும் ஒன்ருயிருந்தது. காலையில் அழகேசன் பவனத்திற்கு விஜயம் செய்தாள் அவள். தோழிகள் இருவரும் ஒரு நிமிஷத்தைக் கூட வீணுக்கவில்லை. பேசினர்கள் ; என்னவெல்லாமோ பேசினர்கள். பெண்கள் இருவர் சேர்ந்து விட்டால் பேச்சுக்குத்தானு பஞ்சம்?—ஒரு வரியில் சொன்னல், உலக உருண்டை அவர்களது உதடுகளுக்கிடையில் அகப்பட்டுச் சுற்றித் தீர்த்து விட்டது !

இரவு மணி ஏழு நாற்பது !

வான மங்கைக்குப் பிறைத் திலகம் எடுப்பாகத்தான் அமைந்திருந்தது.

'தமிழ்த் தொண்டு' மாத இதழில் வெளியான அழகியின் பரிசு நாவல் 'அந்தி நிலா'வைப் பாராட்டினள் செந்தாமரை.

"ரொம்பவும் நன்றி."

"அழகி, பார்த்தாயா, சொல்ல மறந்தே போனேன்."

"என்ன, சுபச்செய்திதானே ?"

" ஆமாம் !"

"செந்தாமரை தேவியாருக்குத் திருமணமோ ?"

"பேஷ்... பேஷ் ! நான் மறந்து பல வருஷமாகிவிட்ட ஒரு விஷயத்தை நீ ஞாபகமூட்டுகிருயே ? அழகி, நான் சொல்லவாயெடுத்தது... ஆமாம், சுசிலா அக்காவுக்கு ஞாயிற்றுக்கிழமை வளைகாப்பு விழாவாம். வெகு விரைவில் நாமெல்லாம் ஒரு பிள்ளைக் கனியமுதுக்கு அன்பு முத்தங்கள் வழங்கப் போகிருேமாக்கும் !..."

"மிகமிக மகிழ்ச்சியான சேதிதான். அப்படியென்ருல், வருகிற ஞாயிற்றுக்கிழமை யன்றைக்கு நான் செம்புதாஸ் தெருவுக்கு வருகிறேன். நீயும் வந்துவிடு. அன்றைக்கே கஜேந்திரன் அவர்களையும் சந்திப்பதாகவும் ஒரு நாள் 'போனி'ல் தெரிவித்தேன். ஆக, எல்லாம் ஒன்று கூடுகின்றன—ஒன்றே ஒன்றைத் தவிர !"

"ஆமாம், அந்த ஒன்றுதான் எனக்கும் பெரிய குறையாகத் தோன்றுகிறது !"

"உன் கல்யாணத்தைப் பற்றித்தானே சொல்கிருய், தாமரை?"

"அல்ல, உன்னுடையவாழ்க்கையில் வசந்தம் பண்பாடவேண் டுமே யென்பதைப்பற்றிக் குறிப்பிடுகிறேன்."

"நீ சற்றுமுன் சொன்னுயே, மறந்துபோன ஒரு விஷயமென்ப தாக! அதையே திருப்பி அனுப்புகிறேன் உன்னிடம். அது என் னுடைய மறந்த தகவல் மட்டுமல்ல; எப்போதோ மறைந்துவிட்ட சம்பவங் கூட!"

"அப்படியென்ருல், உன்னுடைய எதிர்காலம்...?"

"முதலில் உன்னுடைய எதிர்காலத்தைக் கணி, தாமரை!"

"குதர்க்கம் பேசுகிருய்!"

"எங்களுக்கு—அதாவது கதை எழுதுபவர்களுக்குக் குதர்க் கம் தேவை. ஆனல், நோய் தீர்க்கும் மருந்து நீ, உனக்கு அது ஒப்பமாட்டாது!"

"வேண்டாததைச் சொல்கிருய்!"

"நீயோ வேண்டாததைச் செய்கிருயே, செந்தாமரை!"

"உன் வாழ்க்கையை நிரந்தரமான சோக நாடகமாக மாற்றிக் கொள்ளப் போகிருயா, அழகி?"

"உன் நாடகம் இன்பியலாக அமையட்டும். அதுவே எனக்குச் சந்தோஷம் தரும், தாமரை."

"பெண்களுக்குத் தன்னலம் அதிகமென்று பேசுவார்கள். நீ விலக்கு விதி போலும்!"

இயற்கையின் பரிசோதனைக் கூடமாக வாய்த்திருந்த அமுதச் சூழலிலே, இருவரும் பேச்சைத் தொடராமல்—தொடர முடியாமல், ஒருவரை யொருவர் பார்த்தது பார்த்தபடியே இருந்தார்கள்.

மறுகணம், அழகியின் கற்பனையில் காட்சி ஒன்று விரிந்தது. தன் அத்தான் முரளியும் தன் சிநேகிதி செந்தாமரையும், கையோடு கை இணைத்து, நெஞ்சோடு நெஞ்சு பொருத்தி, உறவோடு உறவு கூட்டிக் காட்டிய திருமணக் கோலம் அது. 'என்னுடைய சொந்தக் கனவுதான் பலிக்கவில்லை. எனக்காக இருந்த இடத்தை என் தோழிக்குக் கொடுப்பதில் எனக்குப் பெருமை மட்டுமல்ல, நிம்மதி யும் உண்டு. மண்ணும் விண்ணும் மலிந்திருப்போனே! இந்த ஒன் றையாகிலும் ஈடேறச் செய்யமாட்டாயா?' என்ற அழகான சிந்தனை யும் அவளைத் தன்வயப்படுத்தியது.

போன வாரம், அழகேசன் பவனத்தில் அவள் முரளியைக் கண்டாளல்லவா? எதிர்பாராத அவனுடைய வருகையினல் அவள் அடைந்த அதிர்ச்சி மாறியவுடன், "அத்தான்" என்று அன்புப்

பெருக்குடன் பேசி வரவேற்ருள். தன் அத்தானுடைய இதயம் அறிந்து, செந்தாமரையின் மனத்தைப் படித்துக்கொண்டு, அவ்விரு வரையும் தம்பதியாக்கத் திட்டமிட்டாள். அதே சமயம், அழகேச னுக்கு வந்திருந்த அந்தக் கடிதத்திலே முரளி என்று பெயரிட்டிருந் தது நினைவில் மிதந்தது. 'அத்தான், நீங்களா இவருக்கு லெட்டர் போட்டீங்க ?' என்று கேட்க வாயைத் தூக்கினுள். ஆனால் முர ளியோ, பேயடித்தவன் போல பொலிவிழந்து காணப்பட்டான். குடலைப் புரட்டும் ஏதோ ஒரு வாடையையும் அவள் நுகர்ந்தாள். "அழகி, பத்து ரூபாய் மாத்திரம் கொடுப்பாயா ?... அவசரமாகத் தேவைப்படுது," என்ருன் முரளி. அவள் கொடுத்தாள். அவன் நிற்கவில்லை. மறைந்துவிட்டான். இந்த லட்சணத்தில் பேச நாழி ஏது ? ஆனால், அவன் விடைபெற்றுச் சென்றதும், சிவப்புத் தொப் பிகள் சில வட்டமிட்டதை அறிந்தபோது, முரளியும் ஒரு புதிராகவே தோன்றினுன். பாவம், அழகிக்கு ஓர் உண்மையைச் செந்தாமரை தெரிவிக்கவில்லை. ஒரு நாள், தாமரை, தன் தோழிக்கு நல்வாழ்வு தர அழகேசன் பவனத்திற்கு வந்தபோது, முரளி அங்கே ஓடிவந்து ஒண்டிக் கொண்டதையும், பிறகு போலீஸ் ஜவான்கள் இந்த மைனரைத் தேடி வந்ததையும், அவள் இல்லையென்று சொன்ன தையும் அழகியிடம் அம்பலப்படுத்தாமல் இருந்ததுதான் அந்த உண்மை.

படப் பிடிப்பிற்குத் தயாராகும் கதாநாயகி ஒளி விளக்குகளின் முன்பாக நிற்கும்போது, அவளுடைய சுந்தரவதனம் அழகு ஜோதி யாக மின்னுவது இயற்கை. அம்மாதிரியே நிலவுப் பெண் காணப் பட்டாள்.

செந்தாமரை அழகியிடமிருந்து விடை பெற்றுச் சென்ருள்.

மேஜை விளக்கை ஏற்றிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தாள் அழகி. அன்று படித்த கடிதம் அவள் பார்வையில் ஏழாவது தவணை யாகப் பதிவானது. 'வியாழக்கிழமை ஹோட்டல் பூலோக சுவர்க் கத்திற்கு இவர் போயிருப்பாரா ? ஊருக்குப் போன மனிதரைக் காணவில்லையே ?... வெளியூருக்குத்தான் போனுரா, அல்லது பூலோக சொர்க்கத்திலேயே ஆழ்ந்து போய் விட்டாரா ?'

என்னவோ, சென்ற சில நாட்களாக அவளுக்கு இல்லாததும் பொல்லாததுமான நினைவுகள் எழுந்தன.

"அம்மா, யாரோ பூங்குழலியாம் ; உங்களைப் பார்க்க வேணு மாம்." என்று தூது வந்தாள் வள்ளி.

பூங்குழலியை அவள் சிலவாரங்களுக்கு முன்னர் சந்தித்தாள். அவள் இப்போது குமரியல்ல ; திருமணமானவள். இரட்டை உயிர்களை ஓருயிராக்கிக் கொண்டு விளங்குபவள்.

"அழகி, கபாலி கோயிலுக்கு வந்தேன், அப்படியே உன்னைப் பார்த்துப் போகலாமென்று ஆசைப்பட்டேன்" என்றாள் பூங்குழலி. அன்றைக்கு அழகியின் திருமணத்தின்போது 'அம்பிகைக்கு அவள் எடுத்துப்போட்ட பூ நல்ல பூ !' என்று தத்துவம்பேசிய இதே பூங் குழலியின் வார்த்தைகள் அழகியின் காதுகளில் லேசாக ஒலித்தன. அவளைப் பார்த்தாள் அழகி. வருணனைக்குக் கட்டுப்படாத அமைதி யும் நிறைவும் அவள் முகத்தில் காணப்பட்டன. ஒரு பெண்ணின் கனவை நனவாக்கும் பொறுப்பில் பூரண பங்கு பெறுவது மணப் பந்தல் தான். ஆமாம், மெய்தான் போலும் ! ஆனால் அழகி...!

"வேறொன்றும் விசேஷம் இல்லையே ?..."

"ஊஹூம்...வந்து.."

"என்னம்மா, சொல்லு...வாய் ஓயாமல் அரட்டை யடிப்பவளா யிற்றே நீ ?"

பூங்குழலி அமர்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து வந்து அழகி யின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு எதிரே சுட்டிக் காட்டினாள். வானப்படுதாவில் இயற்கை ஓவியன் வரைந்த பாற்குடம் தெரிந்தது.

"சுட்டெரிக்கும் நிலவைச் சொல்கிறாயா?"

"ஆமாம், இனி என்னைச் சுட்டெரிக்க முடியாது அந்த நில வால்...!"

"அப்படியா, பூங்குழலி ?"

"ஆமாம்...இனி அந்த நிலவை நான் வீணாக்கமாட்டேன் ; வீணாக்கவும் முடியாது...!"

"ஓஹோ, புரிந்துகொண்டேன் !" என்று சிரித்தாள் அழகி. 'முதல் இரவு' விழாவுக்குப் பூங்குழலி தயாராகிக்கொண்டிருக்கின் றாளாம்...!

அழகியின் மனம் அழகேசன் பங்களாவில் இருந்த 'பள்ளி யறை'க்குத் தாவியது. வாசனைத் திரவியங்கள் விளையாடவேண்டிய அவ்விடத்தில் வௌவால்கள் விளையாடின ; பேய் பிடித்த அறை கண்ணீரை வரவழைத்தது.

"உன் வாழ்வு சிறப்படையப் பிரார்த்திக்கிறேன். குழந்தை பிறந்ததும் செய்தி அனுப்பு. என்னுடைய பரிசு ஒன்று காத்திருக் கும்..." என்றாள் கதாசிரியை.

'கடமையைப் போற்றுதல் கணவனின் இயற்கை ; அவனுக் காக வீட்டில் வாழ்பவள் மனைவி. அவனுக்குப் பல வகையிலும் துணையாக இருந்து உதவுபவள் அவள்.'

'நடக்கமுடிதாத ஒன்றை—என்வரை நடக்கமுடியாத ஒன்றை அல்ல, என்வரை நடந்துகாட்டாத ஒன்றைப்பற்றி வேதாந்தம் பேசுசிறது இந்தக் குறுந்தொகை!' என்று ஆத்திரப்பட்ட அவள், அதைத் தூர வீசினாள்.

கண்ணாடி அவள் பிம்பத்தைக் காட்டிற்று. ஒரு நகை இல்லை. அழகேசன் அவளுக்குத் திருமணப்பரிசாக அனுப்பிய வைரநகைகள் பெட்டியில் உறங்கின. தவறிப்போன ஒற்றை வளையலின் ஞாபகம் வந்தது. ஒருமுறை அழகேசன் கடையில் அவள் தன் தோழியுடன் திரை மறைவில் செல்லவேண்டிய சங்கடமான நிலை உருவானபோது, அது நழுவி விழுந்து, இப்போது உரிமைக்காரனிடம் சேர்ந்திருப்பதை அவள் அறியமாட்டாள்!—பெருமூச்சு!

நினைவுக் குறிப்புப் புத்தகம் வந்தது, விடிந்ததும், கஜேந்திரனைச் சந்திக்க வேண்டுமென்று சொன்னது அது.

பூங்குழலி படியிறங்கிப் பிரிந்தாள். படி ஏறிவந்த டிரைவர், "அம்மா, நம்ப சின்ன எஜமானரை மவுண்ட் ரோட்டிலே ஏதோ ஹோட்டலிலே யாரோ பிடிச்சு வச்சிருக்காங்களாம்...!" என்றான்.

அபலையின் கழுத்தில் தொங்கிய மாங்கல்யம், 'விதி'யின் கழுமரத்திலே ஊசலாடிக்கொண்டிருந்தது.

அழகி, "மாமா, மாமா!" என்று அலறிப் புடைத்து ஓடினாள்!

## 8. அழகி ! இதோ, எரிமலை...புயல்...பூகம்பம் !—

மனம் ஒரு நீதி மன்றம். நீதிபதி இந்த மனச்சாட்சி. இதயத்திற்குள்ளே ஓர் இதயம் உண்டு. இதற்கு மாத்திரம் நாக்குகள் இரண்டு. நீதி, அநீதிகளுக்கு வழக்காடவேண்டாமா ? விந்தை மிகுந்ததுதான் இந்த நீதிமன்றம்...!

மனச்சாட்சியின் தீர்ப்புக்குக் காத்திருந்தாள் அழகி. உயிர்த் துடிப்பு நின்று விடுமோ என்று ஒரு பயம் ஏற்பட்டது. இதயம் பூராவுமே பாழ் வெளியாகி விட்டதோ என்று ஒரு சந்தேகம் எழுந்தது. இனம் பகுத்துப் பார்க்க முடியாத வேதனை அவளை ஆட்டிப் படைத்து அலைக்கழித்துக் கொண்டிருந்தது. "மாமா.....மாமா!" என்று அலறிப் புடைத்துக்கொண்டு மாடிப்படியிலிருந்து கீழ்த்தளத்துக்கு ஓடி வந்தவள் பேய்பிடித்தவள்போல அப்படியே நின்று விட்டாள். கடைசிப்படி தாண்டினுல், நடை. அவளை வரவேற்கத் தவியாய்த் தவித்துக்கொண்டிருந்தது அது. ஆனுல், அவள் தவித்த தவிப்பை அது அறிய முடியாது. முடியவே முடியாது—நிச்சயமாகத்தான் !

இமைகளின் சங்கமத்தலத்தில் கண்ணீர் ஈரம் பாய்ந்திருந்தது.

தேய்ந்த லாடங்களாயின, ஒரு சில நிமிஷங்கள்.

அழகி அப்பொழுதுதான் தன்வயப்பட்டாள். கண்களை மூடி மூடித் திறந்தாள். இதயத்தின் இதயம் திறந்து திறந்து மூடிக்கொண்டது. எண்ணினுள்; எண்ணினுள்; மூளை நரம்புகள் அறுந்தன. உதிரம் சொட்டியது. மனத்தில் அச்சடிக்கப்பட்ட கடுதாசி ஒன்று கிடப்பதைக் கவனித்தாள் அவள்.

தீர்ப்பு கிடைத்தது :

"அழகி, ஓடு...உன் மாமாவிடம் சேதியைச் சொல்...உன் கணவனைக் காப்பாற்று...இதுவே உன்னுடைய கடமை...ஓடு, அழகி, ஓடு !...சீக்கிரம் ஓடு !"

அழகி, 'தெய்வமே...!' என்று விம்மியவாறு, கடைசிப் படியையும் கடந்து, கூடத்தை அடைந்து நாற்காலியில் உட்கார்ந்தாள். வெங்காயவெடியை யாரோ தன் தலையில் வீசிவிட்டமாதிரி அவள் துடிதுடித்தாள். 'கணவர்...என் கணவர்!...' என்று பித்துப்பிடித்தவள் போன்று தனக்குத் தானே பிதற்றினுள். 'கடமை...என் கடமை !'

என்ற வார்த்தைகள் உதடுகளில் பிளவிலிருந்து நழுவி விழுந்தன. கைகளைப் பிசைந்தாள் ; தலைமயிரைப் பிய்த்தாள் ; பேயாகச் சிரித்தாள் !

பூதலம் சுழன்றது. அதிலே அழகி ஓர் ஆடும் பம்பரம் !

இருபது இருபத்தைந்து நிமிஷங்களுக்கு முன்பு இருந்த அழகியை எண்ணிப் பார்த்தாள். தன் கணவனுக்கு— அதாவது அழகேசனுக்கு ஆபத்து என்று டிரைவர் சொல்லக்கேட்டதும், அவள் அடைந்த பதட்டம் கொஞ்ச நஞ்சமல்ல ; அவளது நெஞ்சத்தில் தஞ்சமடைந்த திகிலுணர்ச்சிக்கு அளவு சொல்வது சாத்திய மல்ல; அவள் கண்கள் துடித்த துடிப்பிற்கு ஒன்று, இரண்டு என்பதாக எண்ணிக்கைக் கூறமுடியாது ; எல்லாவற்றையும் விட, அவளுடைய மங்கல நாண் அழுத அழுகையை இட்டு நிரப்பப் பெரிய தோண்டிகூடப் பற்றாது. அவளுக்கு நிழல் தந்து, கண்ணில் விளக்கெண்ணெயை ஊற்றிக் கொண்டு அவளுடைய நிழலைக்காத்து வந்த அன்பு மனிதர் —அவளது மாமனாரிடம் தான் கேள்விப்பட்ட தகவலைச் சொல்லி, அழகேசனுக்குக் கைக்கு மெய்யாக உதவி செய்யவேதான் அவள் அப்படி 'மாமா...மாமா' என்று இளைத்துக் களைத்து ஓடிவந்தாள்.

அந்த அழகி இப்போது எங்கே ? முதல் அழகி எங்கே ஓடி மறைந்தாள் ? எங்கே அந்த அழகி ?

இரண்டாவது அழகிக்கு மூளை வலித்தது. மனச்சாட்சியின் நீதி நெஞ்சில் நெருப்பை வைத்தது. ஏவுகிறவனுக்கு வாய்ச் சொல்லோடு சரி; இயற்றுகிறவனுக்கல்லவா தலைச்சுமை...?

'திருடர்கள் ஜாக்கிரதை' என்ற எச்சரிக்கைப் பலகைகளுக்குப் பதிலாக பங்களாக்களிலே நாகரிகமான ஓர் உபாயம் கையாளப் படுவது உண்டு. அதாவது, அங்கே ஆஜானுபாகுவான கூர்க்கா ஒருவன் நின்று கொண்டிருப்பான். இங்கே அழகேசன் பவனமும் அதற்கு உடன் பட்டதுதான். அந்தக் காவலாளியையும் ஏமாற்றி விட்டு, கேள்வி முறையில்லாமல் உள்ளே நுழைந்துவிட்டாள் நிலவுப் பெண். நுழைந்த சுட்டிப் பெண் வாய் பொத்திக் கண்பொத்தி இருந்திருக்கக்கூடாதா ? அதுதான் இல்லை. கன்னங்குழியச் சிரித்தாள். விம்மிவெடித்துக்கொண்டிருந்த அழகியிடம் 'கிச்சு கிச்சு தாம்பாளம்...' பாடினாள். அழகி சிரிக்கவில்லை ; சிந்தித்தாள். அவள் திருமதி அழகேசனாக மாறிய —அல்ல, மாற்றப்பட்டதற்குப் பின்னர் உருவாகியிருந்த சோகசரிதையின் பக்கங்கள் அவளுக்குக் கதை சொல்லிக் கொண்டிருக்கையில், அவள் எப்படிச் சிரிப்பாள் ? இல்லை, சிரிக்கத்தான் அவளால் முடியுமா ?... அதனால்தான் அவள் சிந்தித்தாள் ; அதுமட்டுமல்ல ; சீறினாள். அவள்தான் இந்தப் புது

அழகி. அன்புக்கு அப்பாற்பட்டவளாக மாறியவள், இப்போது கடமைக்கும் அப்பாற்பட்ட வளாக மாறிவிட்டாள்.

'...என் கணவராமே? உடல் தீண்டித் தாலி பூட்டி, ஆனால் நெஞ்சைச்தீண்ட முடியாதவராயிற்றே அந்த மகராஜன்...! அவருக்கு உதவுவதுதான் என் கடமையாமே? மனம் கணத்துக்கு கனம் மாறும் ஒரு பச்சோந்தி; மனச்சாட்சி, பலூன் கண்ட இடத்தில் விம்மும் கைக்குழந்தை. இவை இரண்டும் என்னை ஏவுவதா?...அழகேசன் கட்டிய தாலியை நான் ஏந்திக்கொண்டிருக்கும் தோஷத்திற்குத்தான் நான் கண்ணீரைப் பரிகாரமாக்கிக் கொண்டிருக்கிறேன். அது போதாதா? மாமாவிடம் நான் ஏன் இதைப் போய்ச்சொல்ல வேண்டும்? அவர்தான் அழகேசன்பேரில் ஆத்திரமாக இருக்கிறாரே?...அழகேசனின் நாடகத்தைவேறு புரிந்துகொண்டதாகவும் சொன்னாரே? விடியட்டும் பொழுது...!' என்று மனம் குழம்பினாள் அவள்.

அழகி எங்கோ மிதந்தாள். உலகங்கள் ஒவ்வொன்றாக வழி விட்டன. உயர உயரப் பறந்தது பருந்து; உச்சி முகட்டில் நிலைத்தது; எங்கும் இன்பம்; காணும் பொருளில் எல்லாம் ஆனந்தம் நோக்கும் திசை முழுதும் கள் வெறியின் ஆரவாரம்.

அழகியின் மார்பகம் ஏறியது; இறங்கியது.

சுட்டெரித்த விண்மதி தட்டி அழைத்தது.

போதையை போதத்திலே ஒளித்து வைத்து, தூய மதுக்குடம் ஏந்தி நின்ற புத்தம் புதிய ரோஜாப்பூ நிலவைச் சுட்டெரித்துச் சபித்துக் கொண்டிருந்தது.

கண்களைத் துடைத்தபடி அழகி எழுந்தாள். கூடத்துக்கு நடந்தாள்.

சோமநாதன் எதிர்ப்பட்டார்.

"என்ன அம்மா, சாப்பிடவில்லை?" என்று விசாரித்தார்.

"உங்களுக்குச் சாப்பாடு பரிமாறத்தான் வந்தேன்..." என்றாள் அழகி.

"என்னைப் பற்றியே நாளெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாயே, அழகி? உன்னைப் பற்றியே நீ கவலைப்பட மாட்டேன் என்கிறாயே?" என்று கேட்டார் பெரியவர்.

"என்னைப் பற்றித்தான் நீங்கள் வினாடிக்கு வினாடி கவலைப்படுகிறீர்களே, மாமா? அது போதாதா?" என்று சிரித்தாள் சின்னவள்—அழகி

"முகனைப்புக்கு வேண்டுமானால், அல்லது ஒப்பனைக்கு வேண்டுமானால் நீ இப்படி என்னை உயர்த்திப் பேசலாம். ஆனால் நான் பாவி! அழகி நான் மகாபாவி...கொடும்பாவி!" என்று விம்மினார் சோமநாதன்.

"மாமா, அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நீங்க பெரியவங்க. என் அதிர்ஷ்டம் இப்படி... நீங்க என்ன செய்வீங்க?... நீங்க எதுக்கு அழணும்...? என் தந்தை மாதிரி யிருக்கிற நீங்க தானே எனக்கு இப்போது ஆதரவு...! கண்ணைத் துடைச்சிக்கிட்டு வாங்க, சாப்பிடலாம்...அதோ, வள்ளி வெள்ளித் தட்டைக் கழுவி வந்து விட்டாள்..." என்று நிதானம் பிறழாத தொனியில் வார்த்தைகளை வெளியேற்றினாள் அவள்.

பெரியவர் அவளை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு, "எனக்கு சாப்பாடு வேண்டாம், அழகி!" என்று தீர்மானமாகச் சொன்னார்.

மின்னல் துவளும் நேரத்திற்குள் அழகி துவண்ட கொடியானாள். "மாமா, இப்போதுதான் உடம்பு கொஞ்சம் தேறி வருது. இராச் சாப்பாட்டை தள்ளக் கூடாதுன்னு நீங்களே எனக்குப் புத்தி சொல்லுவீங்களே?...வாங்க, தக்காளி ரசம் இருக்கு.. ரசஞ் சாதமாச்சும் சாப்பிடுங்க...அப்புறம் பால் சாப்பிட்டு நிம்மதியாகப் படுத்துக் கொள்ளுங்கள்..." என்று மறுபடியும் கெஞ்சினாள்.

விரக்தியுடன் சிரித்தார்—அழகேசன் ஸில்க் எம்போரியத்தின் சொந்தக்காரர். "உன்னுடைய நிம்மதியைப் பறித்துக் கொண்ட என்னை நிம்மதியாகத் தூங்கச் சொல்லுகிறாயா?... வேடிக்கையான விண்ணப்பம்தான். அழகி, என்னைத் தயவு பண்ணி மன்னித்து விடு..." என்று அவளை நெருங்கி, அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார்.

"மாமா, நான் உங்கள் மருமகளாயிற்றே? நான் மன்னிப்பதா?... நீங்கள் ஒன்றும் தவறு செய்யவில்லையே?..."

"எங்கோ பிரகாசிக்க வேண்டிய குலச் சுடரை இந்த வெறும் வீட்டில் அடைத்து வைத்து விட்டேனே, இந்தப் பாவத்துக்கு எனக்கு ஏழேழு பிறப்புக்கும் மன்னிப்பு கிடைக்காதே அம்மா! உன் கல்யாணத்தை முடிவு செய்தவன் அழகேசன். அந்தச் சமயம் பார்த்து எனக்கு பாழும் காய்ச்சல் வந்தது. சாகப் பிழைக்கக் கிடந்தேன். இல்லையென்றால், நான் உன் சம்மதத்தைக் கேட்காமல் இருந்திருப்பேனா? அழகேசனுடைய உண்மை சொரூபத்தை அவனைப் பெற்ற அப்பனான என்னாலேயே புரிந்துகொள்ள முடியாமல் போய் விட்டதே? இந்தக் கல்யாணம் உன் அப்பாவின் உயிரைக் குடித்து, உன் உயிரையும் அணு அணுவாகச் சாகடித்துக் கொண்டிருக்குமென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே! அம்மா

அழகி, உன்னை இங்கே கொண்டு வந்து சேர்க்கும்படி நான் எல்லாத் தெய்வங்களிடமும் வேண்டியதற்குப் பலன் கிடைத்தது. தள்ளாத வயசில் உன்னை எங்கே கண்டு என்னால் தேட முடியும்? அழகி, நீ இங்கே அடியெடுத்து வைத்த அன்றைக்கே உன் காலில் விழுந்து கதறி அழவேண்டுமென்றிருந்தேன். அம்மா, என்னை மன்னித்துவிடு...நீ என் மருமகள்...ஆமாம், மருமகள்! மன்னிப்பாயா, அழகி...?"

அழகி பேசாமல் நின்றாள். கண்கள் பேசிக் கொண்டிருந்தன.

அழகி கண்கலங்கி நின்றாள். கண்கள் விழி பிதுங்கச் சிரித்தன.

"இரவு மணி பத்து," என்றது கடிகாரம்.

மாமனாரின் கைகளைப் பிடித்து அழைத்துச் சென்று 'தடுக்கில்' உட்கார வைத்தாள்; உணவு பரிமாறினாள்; உண்டு முடிந்ததும், பசும் பால் கொடுத்தாள்; படுக்கையை உதறிப் போட்டாள்; வெற்றிலைத் தட்டைச் சரிபார்த்து வைத்தாள்.

சோமநாதனைப் பற்றி அழகிக்குக் கரைதலைப் பாடம். ஆகவே, இதுதான் சமயமென்று நினைத்து, அவரிடம் ஏதோ ஒன்றைத் தெரிவிக்க எத்தனித்தாள்.

ஏதோ ஒரு நல்ல காரியத்தைச் செய்யப் போவதில் அவள் மனம் மகிழ்ச்சியால் நிறைந்தது; இந்த முடிவுக்கு அவள் வருவதற்குள், அவள் பாடு மலையைக் கில்லி எலி பிடிப்பதுபோலத்தான் ஆகிவிட்டது. மனச்சாட்சிக்குச் சரித்திரம் உண்டா? பூகோள சாஸ்திரம்தான் உண்டா? எல்லாம் சடுதியில் ஏற்பட்ட முடிவு!

"சரி, சரி... நாழிகை ஊர்ப்பட்டதாச்சு. நீ சாப்பிட்டுவிட்டுத் தூங்கம்மா!" என்று துரிதப்படுத்தினார் அவர்.

"மாமா, நான் இதோ போய் விடுகிறேன். உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்..." என்று மென்று விழுங்கினாள் அழகி.

"நான்கூட உன்னிடம் ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்த வேண்டுமென்றுதான் நினைத்தேன்...!" என்று தயங்கினார் அவர்.

"என்ன, சொல்லுங்கள்...!"

"நீ முதலிலே சொல்...!"

"ம்... வந்து..."

"நீட்டி நெளிக்காமல், கதை எழுதுகிறமாதிரி பளிச்சென்று சொல்லம்மா," என்று சிரித்தார் அவர்.

அந்தச் சிரிப்பைத்தான் இத்தனை வினாடிகளாக அவள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

" நம்ப...அத்தானை யாரோ பிடிச்சு வச்சிருக்காங்களாம், டிரைவர் சொன்னார்..."

அழகியின் குரலில் துயரம் தெறித்தது.

' கட கட 'வென்று சிரித்தார் சோமநாதன்.

" மவுண்ட் ரோட்டிலே ஹோட்டல் பூலோக சொர்க்கத்தில் தானே உன் அத்தானை—அல்ல, என் அருமைப் பிள்ளையை அடைத்து வைத்திருக்கிறார்கள்...?"

" ஆமாம்..."

" ம்....."

" உங்களுக்கு முன்னாடியே தாக்கல் வந்துவிட்டதா ?"

" ம்..."

" மாமா, உங்களை இப்போது என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லையே ?... யார் அவரை அடைத்து வைத்தார்களாம் ?"

" குற்றவாளி அடைபட்டுக் கிடக்கிறான். நீ ஏன் அம்மா அவதிப்படுகிறாய் ? உன்னைக் கூண்டில் அடைத்து வைத்து விட்டானே அந்தப் பாவிப் பயல் ?..."

" மாமா, வெள்ளம் தலைக்கு மிஞ்சி வந்திருக்கிறது ; அத்தானைக் காப்பாற்றுங்கள்...!"

" முடியாது !"

" ஏன் ?"

" பழிக்குப் பழி வாங்கப் போகிறேன்...!"

" பெற்ற பிள்ளையிடமா ?"

" பெற்ற அப்பனிடமே அவன் வஞ்சம் தீர்த்துக்கொண்டு விட்டானே ?"

" அப்படி என்ன செய்தார் ?"

" உன்னைக் காய்ந்த பூங்கொடியாக, கருகிய மொட்டாக, வாடிய ரோஜாவாக ஆக்கிவிட்டானே ?"

" அப்படியென்றால், அவருடன் நானும்தான் உங்களுக்கு இப்போது பாரமாக இருக்கிறேனா ?"

" என்னம்மா சொல்கிறாய் ?" என்று பதட்டத்துடன் கேட்டார் சோமநாதன்.

" யார் அவரை அடைத்துப் போட்டிருக்கிறார்கள் ?..."

" அவசியம் உனக்குத் தெரியத்தான் வேண்டுமா ?"

" ஆமாம்..." என்று அழுத்தந் திருத்தமாகப் பதில் விடுத்தாள் அவள்.

" நானேதான் ! "

" ஆ, நீங்களா ? " என்று அலறினாள் அழகி. குருதிக் குழல்களின் ரத்தம் அவ்வளவும் அப்படி அப்படியே—ஆங்காங்கே உறைந்து குளிர்ந்துவிட்டது.

" மாமா, எனக்காக நீங்கள் அவரை ஏன் கொடுமைப்படுத்த வேண்டும் ? இப்போதே மவுண்ட் ரோட்டுக்குப் புறப்படுவோம், வாருங்கள். அவரைக் காப்பாற்ற வேண்டாமா ?..."

" அன்றைக்கு ஒருநாள் காலையில் நான் உனக்கு எச்சரித்தேனே, அழகேசனுக்காக நீ துளி கண்ணீரைக்கூட வீணடிக்கக் கூடாதென்று ... மறந்துபோனாயா ? " என்று ஆத்திரத்துடன் சொல்லிவிட்டுப் படுக்கையில் படுத்துக்கொண்டார் அவர்.

" அப்படியென்றால், நீங்கள் அவரைக் காப்பாற்ற முடியாதா ?...சரி, இதோ இப்பொழுதே நான் ஒருத்தியாகவே போகிறேன்...! அவர் உங்கள் மகன் என்பதற்காக அல்ல ; அல்லது, அவர் எனக்குரியவராக ஆக்கப்பட்டாரே என்பதற்காகவும் அல்ல ; பாவம், ஒரு மனிதர் வீணாக நரக வேதனைப் படுகிறாரே என்ற பரிதாப உணர்ச்சியினால் உந்தப்பட்டுத்தான் அவருக்கு உதவப் போகிறேன்...! " என்று கூறி முடித்ததும், 'விருட்'டென்று வெளியேறினாள் அழகி.

அப்போது, சோமநாதன் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார்.

" அழகி, நில் ! உன் அத்தான் இந்நேரம் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டிருப்பான் !... "

புதிய குண்டல்லவா இது ?

தங்கப்பதுமை வெள்ளியானது.

காற்றோடு கலந்த நினைவுச் சிதறலொன்று குரல் கொடுத்தது. சோமநாதன் என்னவோ சொல்ல வேண்டுமென்றாரே...?

அழகி விடாப்பிடியாகக் கேட்டாள்.

" முதலில் போய்ப் படுத்துத் தூங்கு. தன்னாலே எல்லாம் தெரியும்," என்ற பதில்தான் கிடைத்தது—அவளுக்கு.

செவிடுபட அலறிக்கொண்டிருந்தது ஆந்தை.

அழகி அங்கிருந்து கிளம்பினாள்.

" இந்தாம்மா, புதிய புத்தகம் இது. எடுத்துக்கொண்டு போய்ப் படி அழகி " என்று கூறி, புத்தகமொன்றை நீட்டினார் சோமநாதன். அவருடைய கை நடுங்கியது.

கூடத்தை அடுத்திருந்த அவளது அறையில் நுழைந்தாள் அழகி ; இதுவரை உணர்ந்திராத புதிய திகில் ஏற்பட்டது. கையி லிருந்த அந்தப் புத்தகத்தை அலுப்புடன் வீசிப் போட்டாள். அதற் குள்ளே யிருந்து ஓர் உறைக் கடிதம் பிரிந்தது.

“ **அன்புமிக்க மருமகள் அழகிக்கு,**

உன்னிடம் நேரில் சொல்ல நினைத்த விஷயங்கள் இவை. உன் வாழ்வைப் பாலைவனமாக்கி விட்டதற்கு என்னை மன்னித்து விடு. என் வாழ்வின் கடைசிக் கட்டமும் இன்றோ நாளையோ என்று நெருங்கிக் கொண்டிருக்கிறது. நான் பெற்ற மகனே என்னை விஷமிட்டுக் கொல்ல முயன்றிருக்கிறான். அத்தகைய பாவி, எனக்குப் பிறகு உன்னை என்ன பாடுபடுத்துவானோ தெரியாது.

நீ புதிய ரோஜா ; அதிலும் ஜாதி ரோஜா. நீ வாடிக் கருகி மண்ணோடு மண்ணாக மக்கி வீணாகப் போய்விடக் கூடாது. நீ மணம் பரப்பவேண்டிய இடமும் இல்லாமல் இல்லை. உன்னுடைய முறை அத்தான் முரளி உன்பேரில் ஒரே பைத்தியமாக இருக் கிறான். ஆரம்ப நாளிலே நீங்கள் பழகிய விவரங்களையும் கேட்டுத் தெரிந்துகொண்டேன். உனக்கும் அவர்மீது ஆசை யிருக்கு மென்று நம்பியே நான் உன்னிடம் ஒரு வேண்டுகோளை யாசிக் கிறேன். உன்னை முரளியுடன் மனப்பூர்வமாக ஒப்படைக்க நான் தயார். நீ இதயம் திறந்து சிரிக்கத் தொடங்கிவிட்டால், நான் நிம்மதியாகச் செத்துப் போவேன். உன்னுடைய எதிர்காலத்தை யும் உன்னுடைய கனவுகளையும் அழகேசனின் காலடியிலே ஒப் படைத்த நீ, புனிதம் நிறைந்த உன்னுடைய இருதயத்தை முரளி யிடம் அடைக்கலம் வைத்து விடுகின்றாயா ? அழகேசன் பேரில் நீ வழக்கு தொடுப்பதாகவும் நான் கேள்விப்பட்டேனே ?... உன் பதில் தெரிந்துதான், அழகேசனைப் பற்றி நான் ஒரு முடிவுக்கு வர வேண்டும் ; என் சொத்துக்களின் உரிமைக்கும் உயில் தயார் செய்யவேண்டும்.

இப்படிக்கு உன் மாமனார்,

**சோமநாதன்.”**

தண்மதி உதிர்த்த கண்ணீர் விண் எங்கும் காட்டாற்றின் வெள்ளமாகப் பாய்ந்தது !

## 9. இறங்காத விஷம்—மாறுத சாபம்!

ஜார்ஜ் டவுனில் செம்புதாஸ் தெரு அவ்வளவு பிரசித்தமென்று சொல்ல முடியாது. அங்கே இரும்புக் கடைகள் பலவுண்டு. அதே மாதிரி தங்கமான உள்ளங்களும் இருக்கின்றன.

அதிசயமான உலகத்திலே உள்ளங்களைக் காட்டுவார்கள் கதாசிரியர்களும் கதாசிரியைகளும்; இவர்களுடன் நாவலாசிரியர் களும் நாவலாசிரியைகளும் கை கோத்துக் கொள்ளுவது அதிசய மல்ல. உள்ளங்களில் உலகத்தையும் காட்டத் தெரியும், தனிப்பட்ட இந்த இனத்தவர்களுக்கு. இவர்களின் உலகமும் உள்ளமும் அலாதி; ஆனல், ஒதுங்கி விடாது—அதாவது, இவர்கள் ஒதுங்க அனுமதி தரமாட்டார்கள் ரசிகர்கள்.

செம்புதாஸ் தெருவில் இருந்த பொன் நெஞ்சங்களில் குறிப் பிடத் தகுந்த பெயர்கள்: ராமலிங்கம், அவரது மனைவி சுசீலா, இந்த அம்மணியின் தம்பி கரிகாலன்.

அன்றைக்கு வெள்ளிக்கிழமை.

சுசீலா குளித்து முழுகினுள். சுருள் அலை படிந்த கேசத்தில் ஒட்டிக் கொண்டிருந்த ஈரத்தைப் பிரிக்க முயன்று கொண்டிருந்தாள். பிறகு, கூடத்திற்கு நடந்தாள். பீரோ ஏந்தி நின்ற கண்ணுடி, அவள் உருவத்தைப் படம் பிடித்துக் காட்டியது. நெற்றி மையம் குங்குமம் தாங்கியது. தன்னைத் தானே—தனக்குத் தானே ஒரு முறை பார்த்துக்கொண்டாள். நெஞ்சம் தாங்கிய பிஞ்சின் இன்ப நினைவு அவளைத் திக்குமுக்காடச் செய்தது. பல் இடுக்குவரை வந்த நமட்டுச் சிரிப்பு இதழ்க்கடை வழியாகவும் எட்டிப் பார்த்தது. வடிவாம்பிகை அம்மனை நினைத்தாள். வயிறு நிறைந்ததுபோலவே நெஞ்சும் நிறைந்து விட்டது.

காப்பி கொண்டு வந்தாள். ராமலிங்கமும் கரிகாலனும் பருகி ஞர்கள். தம்ளர்களை சமையலறையில் வைத்தாள். தெருவில் காய்கறி வண்டிக்காரன் புரியாத பாஷையில் பெரிய குரலெடுத்துக் கூவிக் கொண்டிருந்தான். சாமான்கள் வாங்கி முடிந்து திரும்பும் போது, தொலைவிலே ஓர் உருவம் தென்பட்டது. உன்னிப்பாகப் பார்த்தாள் சுசீலா. 'ஆமா, அழகியேதான்!' என்று அவள் தீர் மானித்ததுதான் தாமதம்; மறுகணம் அவளையும் அறியாமல் அவள், "அழகி...அழகி!" என்று கூச்சல் போட்டாள். அழகியின்

ஜோடி விழிகள், "இதோ வந்து விட்டேன் !" என்றன. அதற்குள் அவளே வந்து சேர்ந்தாள்.

முகத்தில் நகை அணிந்திருந்தாள் சுசீலா. அழகியின் கண்கள் முத்துக்கள் பூட்டி யிருந்தன.

" அழகி ! "

ஒரு நாள் பார்க்காவிட்டால் உயிரே பிரிந்தாற்போல வேதனைப் படுபவள் சுசீலா. அப்படிப்பட்டவள் ஒன்பது வாரங்களாக அழகியைக் காணமுடியவில்லை. அழகியைப் பொறுத்த மட்டில், சுசீலாவின் கணக்கில் பற்று நின்ற அன்பிற்கு வட்டியும் முதலும் சேர்த்துக் கொடுத்தது ' அழகி ' என்ற அந்த அன்புக் கூப்பாடு.

" அக்கா, சௌக்கியமா ?..."

" ஆமா, அழகி... அது கிடக்கட்டும். நீ என்னவோ ஒரு மாதிரியாக இருக்கிறயே ?..."

" ஒண்ணும் இல்லை. அக்கா, உங்க வளைகாப்பு விசேஷத்துக்கு வரவேண்டியவள், மூணுநாள் முந்தியே வந்திட்டேன்."

" இதிலே எனக்கு மூணு மடங்கு சந்தோஷம்...! "

" அக்கா !" என்று புதிதாக ஏதோ சொல்ல வாயைத் தூக்கினுள். வார்த்தைகள் சேர மறுத்தன. ஆனுல், கண்ணீர்த் துளிகள் சேர ஒப்பின.

" அழகி, என்னம்மா விஷயம் ? ஏன் இப்படிக் கண் கலங்குகிருய் ?.. " என்று தாழ்ந்த குரலில் கேட்டு, அழகியின் கைகளைப் பிடித்துக் கெஞ்சினுள் சுசீலா.

" இப்போ எனக்கு மனசு சரியில்லை."

" உன் மனசு சரி இல்லாமல் போனது இன்றைக்கு நேற்றுத்தாஞ ?... ஒரு வருஷம் தாண்டிப் போன சங்கதியாச்சே, அழகி ?... தயவு பண்ணி கொஞ்சம் விவரமாகத்தான் நடந்ததைச் சொல்லேன். உன் அத்தான்..."

" அக்கா ! " என்று அலறினுள் அழகி.

சுசீலாவுக்கு அப்போதுள்ள ' உடம்பில் ' அரை நாழிப் பொழுது நிற்பதென்பது கஷ்டம்தான். அவள் ஏறிட்டுப் பார்த்தாள். மாங்கல்யமும் கழுத்துமாகக் காட்சியளித்த அழகி, அப்பொழுது சுசீலாவை எங்கோ அழைத்துச் சென்ருள். காலப் பனி மூட்டம் வழி திறந்தது. அழகி திருமணக் கோலத்தில் நின்ருள்—அள்ளக் குறையாக் கண்ணீருடன்.

சுசீலா தன்வயப்பட்டாள். ஏறக்குறைய அதே நிலையில்தான் அழகி இப்பொழுதும் காணப்பட்டாள்.

"அக்கா, எனக்கு ஏகப்பட்ட அலுவல்கள் இருக்கு. நான் இன்றைக்கே தஞ்சாவூருக்குப் போகவேணும்; அதற்குள்ளே உங்களைப் பார்த்துப் போகத்தான் வந்தேன். லெட்டர் போஸ்ட் பண்ண வேண்டியிருந்துச்சு. தபாலே பெட்டியிலே போடவேணும் என்கிற ஞாபகங்கூட இல்லே, ஓடி வந்திட்டேன்!" என்று கூறினாள் அழகி. அவளது விரல் இணைப்பில் தூங்கி வழிந்தது உறைக் கடிதம் ஒன்று. சூரியனின் இளங்கதிர்கள் அந்தக் கடிதத்தின்மீது விளையாடின. தலைப்பில் எழுதப்பட்டிருந்த விலாசத்தைத் தற்செயலாகக் கவனித்தாள் சுசீலா. முள் எடுக்கும் நேரம் வரை அவளுக்குக் கையும் காலும் ஓடவில்லை. 'அழகி அவளுடைய மாமனுருக்கல்லவா கடிதம் எழுதியிருக்கிருள் போலிருக்கிறது? அப்படியென்ருல்...இவள் அங்கே இல்லையா?... ஒரு வேளை, அந்த வேதாளம் அழகேசன் பழையபடியும் முருங்கை மரத்தில் ஏறி விட்டாரோ, என்னவோ?' என்று சிந்திக்கத் தலைப்பட்டாள்.

"அழகி, எனக்கு வயசு ஆனதுதான் மிச்சம். பார்த்தாயா, வந்த காலோடு உன்னை வழியில் நிறுத்திவச்சுப் பேசிக்கிட்டிருக்கேன்," என்று சொல்லி, அழகியை வீட்டிற்குள் அழைத்துச் சென்ருள் சுசீலா. குடும்ப ரேடியோ காலைச் செய்திகளை ஒலி பரப்பியது. "அழகியா?" என்று ஓடோடி வந்தான் கரிகாலன். அவனைத் தொடர்ந்து, கையில் பிரிந்து கிடந்த தினசரியுடன் நடந்து வந்தார் ராமலிங்கம்.

"அழகி, உங்கள் 'அந்தி நிலா' மிகவும் விறு விறுப்பாக ஓடுகிறது; என் நண்பர்கள் எல்லோரும் ஒருமுகமாகப் பாராட்டுகிருர்கள். கதையென்ருல் காததூரம் பயந்து செல்லும் எங்கள் செக்ஷன் சூப்பிரண்டெண்ட்கூட உங்கள் தொடர்கதையைச் சேர்க்க ஆரம்பித்து விட்டாராம். ஆண்களே இப்படியென்ருல், பெண்கள் வட்டாரங்களில் உங்கள் எழுத்துக்களுக்கு அமோகமான வரவேற்பு இருக்கும் என்பதிலே சந்தேகமே கிடையாது!"

இலக்கிய ஆர்வத்துடன் வார்த்தைகளைச் சரமாரியாக வெளியேற்றினுன் கரிகாலன்.

"ரொம்பவும் புகழ்கிறீர்கள். நன்றி. நீங்கள் எனக்குப் புகழ்ப் புராணம் பாடியதற்கல்ல, என் பேரில் நீங்கள் வைத்திருக்கும் அன்புக்குத்தான் இந்த நன்றிக் கடன்," என்று சிரித்தாள்—சிரிக்க முடியாதவள்!

"இப்போதைய எழுத்தாளர் வட்டாரத்திலே,நீங்கள் ஒரு தனி ரகம். எழுத்தாளன், கலைஞன், இவர்களுக்கெல்லாம் புகழ்தான்

சோறு போடுமென்பதாக நான் எங்கேயோ படித்த ஞாபகம். புகழ்—அது வலிய வரும் ஸ்ரீதேவி அல்ல ; தேடிப் போய் அடைய வேண்டிய மூலிகை.''

கரிகாலன் சிரித்தான்.

'' கரிகாலன், உங்களுடன் எதிர்வாதம் புரியும் நிலையில் இப்போது நான் இருக்கவில்லை. ஆனாலும், என்வரை உங்களை நான் மறக்கவே முடியாது. என் கழுத்தில் மணமாலை தாங்கி நின்ற அன்றைக்கு என்னைக் காத்துப் புகலிடம் தந்தவர்களல்லவா நீங்கள்? இந்தக் குடும்பத்தை உயிருள்ள மட்டும் நினைப்பு வைத்துக் கொண்டிருப்பேன் ! ''

'' பேச்சு இருக்கட்டும்; முதலில் காப்பி சாப்பிடம்மா,'' என்றார் ராமலிங்கம்.

சுசீலா இதழ் விரியச் சிரித்தபடி, டபராவை அவளிடம் நீட்டினாள்.

ஆகாயத்தில் சிந்தை செலுத்தி யிருந்தாள் அழகி. பூமியின் எண்ணம் அவளுக்கு எப்படி இருக்க முடியும் ? ஆகவே, சுசீலா நீட்டிய காப்பியை நினைவு மறந்த நிலையில் பற்றினாள். காப்பி டபரா உள் தாழ்வாரத்தில் உருண்டது.

அழகி, '' அ...ம்...மா ! '' என்று வேதனைக் குரல் கொடுத்தாள்.

'' ஐயையோ, காப்பி காலிலே கொட்டிப் போச்சா ? ''

ஒன்றல்ல, அனுதாபம் நிறைந்து மூன்று கேள்விகள் தொடுக்கப் பட்டன.

' டிங்ச்சர் ஐயோடின் ' சுவாசத்தைக் குடைந்தது.

''அக்கா, போலீசுக்கு மறைந்து வாழ்ந்து கொண்டு வரும் என் அத்தான் முரளி உங்கள் வீட்டுப் பக்கம் தலைகாட்டினாரா ? ''

'' முதலில், பாதத்திலே பட்டிருக்கிற கொப்பளத்தைப் பாரம்மா ! ''

'' கொதிக்கும் காப்பியினால் என்னை ஒன்றும் செய்துவிட முடியாது, அக்கா ! என் அத்தான் முரளி என் நெஞ்சில் திராவகத்தை ஊற்றி விட்டார்...! அந்த வேதனை தந்த கொப்புளம் இப்போது ஆறாத புண்ணாகிவிட்டது. சீழ் பிடித்துப் புரையோடிவிடும் நிலையிலிருக்கிறது. அதன் கொடுமை தாளாமல்தான் என் அன்னையைக் கூவி அழைத்தேன். என்னைப் பெற்றவருக்கும் என்னைச் சுமந்தவளுக்கும் என்னைப்பற்றின நினைவு அழிந்துபோய் வருஷக்கணக்

கில் ஆகிவிட்டதே !... சுசீலா அக்கா, நான் அபாக்யவதி—தாலி மார்பில் கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்த போதிலும் !...நான் கொடுத்து வைக்காதவள்—நிதி தந்த வாழ்வு மைலாப்பூரிலே எனக் காகக் காத்திருந்த போதிலும்...!''

அறியாப் பருவம் தாண்டிய குழந்தை ஒரு காரணத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, மேற்படி காரணத்துக்குரிய காரியம் செயற்படாமலிருக்கக் கண்டு கதறி அழுமல்லவா, அந்தப் பாங்கிலே அழகி அழுதாள்.

''தங்கச்சி...!''

அழைப்பு வந்தது ; அது விம்மலையும் கூட்டி வந்தது.

வழிந்த கண்ணீரைப் பிழிந்துவிட மனமில்லை. எம்பித் தணி யும் நெஞ்சைச் சாந்தப் படுத்தவும் மறந்தாள்.

'' அக்கா, என்னைத் தங்கச்சி என்று அழைத்தீர்கள். முதன் முறையாக, என்னை நானே மறந்து போனேன். உங்களோடு உடன் பிறவாத தங்கச்சி நான். ஆஹா, எனக்கும் ஒரு அக்காள் இருக்கிருர்கள். இனி நான் யாருக்கும்—எதற்கும் பயப்படத் தேவை யில்லை. அக்கா, முதலில் என்னை மன்னித்துவிடுங்கள். உங்க ளிடம் பொய்சொல்லி, இங்கிருந்து விடைபெற்றுச் சென்று, பிறகு உலகை விட்டே பிரிந்துவிடத் தீர்மானம் செய்திருந்தேன்.. !''

''ஆ !'' என்றுள் சுசீலா.

'' என்னை மன்னித்து விடுங்கள்...அக்கா...மன்னித்து விடுங் கள் !''

'' அழகி, முதலிலே இந்தக் காப்பியைச் சாப்பிடுங்கள். அப்பு றம் ஆற அமர உட்கார்ந்து பேசுங்கள், அதுதான் அக்காளுக்கும் நல்லது,'' என்று தெரிவித்த கரிகாலன், பத்திரமாக காப்பி டபரா வையும் தம்ளரையும் அழகியின் கையைத் தொட்டுக்கொடுத்தான். பாசத்தின் ஜீவநாதம் உயிரைத் தழைக்கச் செய்யும் அருமருந்தா யிற்றே !

அழகி முதலில் கண்களைத் துடைத்தாள் ; பிறகு பட்டுப்புடவை யின் தலைப்பு உதடுகளில் இழைந்தது.

''அழகி, என்னென்னவோ உளறுகிருயே ? நீ ஏனம்மா ஊரை விட்டு, உலகத்தை விட்டுப் போகவேண்டும் ? அப்படியெல்லாம் அபசகுனமாக இனிப் பேசக்கூடாது. இன்றிலிருந்து நீ எனக்குக் கட்டுப்பட்டவள். நான் உன் தமக்கை. ஆதலால், நீ என் சொல்லைத் தட்டமாட்டாயென்று நம்புகிறேன். உனக்கு ஒரு தமையனும் இருக்கி

ஞன். அத்தோடு, ஒரு அத்தானும் இருக்கிறார். ஆகவே, முக்கோணத்தில் அகப்பட்டுள்ள ஒரு புள்ளி நீ என்பதை அச்சடித்து வைத்துக்கொள்,..!''

உரிமைப் பேச்சிற்கு அழுத்தம் அதிகம் இருந்தது.

''சற்று முன்பு நானேதான் சொன்னேனே, அக்கா !... இனி மேல் சத்தியமாக உங்கள் நிழலைவிட்டு, உங்கள் உத்தரவில்லாமல் நான் எங்குமே போகமாட்டேன்.''

'' அப்படியா ?''

'' ஆமாம் !''

''அப்படி யென்ருல் ஒரு சின்ன உதவி கேட்பேன்; சம்மதிப்பாயா ?''

''சின்னவளிடம் நீங்கள் அப்படி யெல்லாம் பேசக்கூடாது.''

''ம்....சரி. இப்போதைக்கு உனக்கு நான் நிற்க நிழல் தருவேன். ஆனல், நீ ஒண்டவேண்டியது அழகேசனின் நிழலில் என்பதை மறக்காதே...!''

''அக்கா, இப்போது என் வாழ்க்கைப் பாதையில் புதிதான ஒரு திருப்பத்தை ஏற்படுத்த முனைந்து விட்டார் என் மாமனர் !''

''நிஜமாகவா ?''

''இதோ பாருங்கள்'' என்று சொல்லி, அதற்கு நிருபணமாக, புத்தகத்தில் வைத்திருந்த கசங்கிய காகிதம் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள் அழகி.

கடிகாரம் என்னும் சொக்கட்டான் விளையாட்டுப் பலகையில் நிமிஷ முள்ளும் விநாடி முள்ளும் சோழிகளாகித் தமக்குத் தாமே விளையாடிக் கொண்டிருந்தன.

சுசீலா அந்தக் கடிதத்தைத் திருப்பிக் கொண்டாள். அதில் இப்பொழுது கனம் ஏறியிருந்தது. 'ஈரம்' காட்டாத லெட்டரில் ஈரம் இருந்தது.

''அழகி, இதற்காகத்தான் உன்னுடைய அத்தான் முரளியைப் பற்றி விசாரித்தாயா ?''

''ஆமாம்.''

''சந்தித்து....''

''சந்தித்து, என்னைப்பற்றி என் மாமாவிடம் என்ன உளறிக்கொட்டினரென்று கேட்கவேண்டும். ஒழுங்குமுறையாகச் சொன்னல் தப்பித்தார்..! இல்லையென்ருல், அப்புறம் அழகி உண்மையிலே தீக்குழம்புதான் என்பதை அந்தப் புண்ணியவான் அனுபவபூர்வமாகத் தெரிந்து கொள்ளும்படி செய்து விடுவேன்.''

அப்படி யென்ருல்....?''

' ஐயோ...என்ன அக்கா திரும்பத்திரும்ப குண்டு போடுகிறீர்களே?....என் மாமாவின் இந்தக் கடிதம் கிளப்பிவிட்ட புயல், எரிமலை, பூகம்பம் எல்லாம் என் உயிரைக் குடித்துக்கொண்டிருக்கின்றனவே, போதாதா ?....அக்கா நான் தமிழ்ச் சாதிப் பெண். எனக்கென நானே வகுத்துக் கொண்டிருக்கும் ஒரு கோடு உண்டு; அதற்கு ஒரு முடிவும் இருக்கிறது. காலம் வரும்; விளக்கமாக உங்களிடம் என் இதயத்தைச் சமர்ப்பிக்கிறேன். ஆனல், முரளியிடம் என் கைகளை ஒப்புவிப்பேனென்று நீங்கள் கனவு காணுகிறீர்களா? அப்படி யிருந்தால், அது என் துரதிர்ஷ்டம்தான். அதற்காக, என்னை நீங்கள் புரிந்துகொள்ளவில்லையே யென்றெண்ணி அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசிவிடமாட்டேன்! உங்களிடம் எனக்கு மட்டு மரியாதை நிறைய உண்டு. அக்கா, என்னைப்பற்றி, பல விவரங்களை நீங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. இப்போதைக்கு என்னைப் பற்றியும் அத்தான் முரளியைப்பற்றியும் மாத்திரம் ஓரளவுக்குச் சொல்லுகிறேன். முரளி அத்தான் என் நினைவிலும் நெஞ்சிலும் நீக்கமற நிறைந்திருந்த காலம் ஒன்று உண்டு. அந்தக் காலம் தான் என் பிஞ்சுப்பருவம். அப்போது பஞ்சும் நெருப்பும் பக்கம் பக்கமாக இருந்தன. ஆம்; நாங்கள் ஒன்றுசேர்ந்தே உண்டோம்; விளையாடினேம்; உறங்கினேம்; கதிரவனின் முத்தத்தில் நாங்கள் எழுப்பிய அந்த மணல் வீடுகளைக் கேட்டால்கூட எங்கள் அன்பை—அபிமானத்தை—பாசத்தைச் சொல்லும். சோழகுலம் தழைக்கப் பாடுபட்ட இராஜராஜனின் கோயிலிலே நாங்கள் போட்ட ஆட்டங்கள் கொஞ்ச நஞ்ச மல்ல. தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனிலே வந்து நிற்கும் ரயில்களைக் கண்டு நாங்கள் அடைந்த குதூகலத்துக்கு அளவே யிருக்காது. ஒரு நாள் நாங்கள் இருவரும் புருஷன்—பெண்சாதி விளையாட்டு விளையாடினேம். அப்போது அத்தான், 'அழகி, அழகி! நீ என்னைத்தான் அப்பாலே கட்டிக்கிடணும்!' என்று கெஞ்சினர். கையடித்துக் கொடுக்கும்படி நச்சரித்தார். சரியென்று அவ்வாறே செய்தேன். ஆனல், விதி என் இதயத்திலிருந்த அத்தானின் அழகுருவத்தை அழித்து விட்டது. பாவம், என் அத்தான் முரளி இப்போது தாறுமாருகக் காணப்படுகிருராம்! நாலு பேர்கள் நாலு விதமாகச் சொன்னர்கள். ஏன், நானும் கண்டேன். நான் கூட அவரை அன்று முறைமீறித் திட்டிவிட்டேன். நடந்துவந்த நெடுந்தூரத்தை எண்ணினல் பெருமூச்சு வருகிறது. கடந்து வந்த நெருஞ்சிமுள் காட்டை நினைத்துக் கண்ணீர் பெருக்குகிறேன். நடந்த தூரமும் கடந்த காடும் எனக்கு ஓர் அயோத்தியாகத் தோன்றியிருக்கலாம்—சீதாப் பிராட்டிக்குக் கிடைத்த அந்த ஸ்ரீமன் ராமபிரானைப்போன்று எனக்கும் கிடைத்திருந்தால்...! பெண்ணுக உலவ

வேண்டிய என்னை ஒரு அழகேசன் பேயாக்கிவிட்டது போதா தென்று, என்பேரில் அக்கறை கொண்ட என் மாமாவும் இப்போது என்னை விரட்டியடிக்கப் பார்க்கிறார்கள். அம்மம்மா, என்னால் இனி யும் இந்த நரக வாழ்வைத் தாளவே முடியாது !''

ஒரு தடவை இருமினாள்.

'' அப்படியென்றால், உன்னுடைய முடிவு...?'' என்று பதட்டத் துடன் வினவினாள் சுசீலா.

''நான்தான் உங்களிடம் என்னையே ஒப்படைத்துவிட்டேனே?''

''நீ உன்னை உன் புருஷன் அழகேசனிடம் ஒப்படைத்துக் கொள் என்றல்லவா நான் ஆயிரம் தடவை படித்துப் படித்துச் சொல்லி வருகிறேன் ?''

''அந்த ஒரு முடிவு இந்தப் பிறப்பிலே ஏற்படாது ! அழகிக்குக் கிடைத்த மாறாத சாபம் அது ; இறங்காத விஷம் இந்த அழகி...!''

''அப்படி யென்றால், அழகேசன் பேரில் வழக்குத் தொடுப்ப தாக முடிவு செய்துவிட்டாயா ? ஆங்கில நாகரிகம் இதற்கும் பயன் படட்டுமே என்று கருதும் விசித்திரப்பெண்களோடு என் அழகியும் சேர்ந்து விட்டாளென்று அர்த்தமா ? மூடிமூடிப் பேசாதே ; வெள்ளை யாகப் பேசு. தங்கச்சி, நீ தமிழ்ப் பெண். உன் கழுத்தில் அசைந் தாடிச் சிரிக்கிறதே, அந்தத் தாலியை மறந்து விடாதே ; மதிக்கக் கற்றுக் கொள். 'கல்லானாலும் கணவன் ; புல்லானாலும் புருஷன்' என்ற பெரியவர்களின் வாசகத்தை ஞாபகப் படுத்திக்கொள். அழகி !'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பேசிய சுசீலா, வியர்வை யைத் துடைத்த வண்ணம் கண்களை உயர்த்தினாள். அங்கே அழ கியைக் காணவில்லை. பதறினாள். தாழ்வாரத்தில் மயங்கிக் கிடந் தாள் அழகி.

''தங்கச்சி !'' என்று அழ ஆரம்பித்து விட்டாள் சுசீலா.

ராமலிங்கம் தண்ணீருடன் வந்து அழகியின் முகத்தில் தெளித் தார். • கரிகாலன் மண்ணடிக்கு ஓடினான்—'ஸ்டெதாஸ்கோப்'பை அழைத்து வர !

யாரும் எதிர்பாராத விதமாக அழகி கண்களைத் திறந்தாள். ஆற் றாமையோடு மெல்லத் தலையை உயர்த்தி எழுந்தாள். பிறகு, தரை யில் கிடந்த கடிதத்தை எடுத்தாள். ''அக்கா, இந்தாங்க...இதை முதலிலே படியுங்க...'' என்று சொல்லி, ஒட்டப்பட்டிருந்த உறை யைக் 'கன்னா பின்னா'வென்று கிழித்து, கடிதத்தை மட்டிலும் நீட் டினாள்.

சுசீலா படித்து முடித்தாள். பிறகு, மேற்படி கடிதத்தைக் கசக் கித் தூர வீசி யெறிந்தாள் !

# 10. " அழகி வெறும் ரோஜாவல்ல !—ஜாதி ரோஜா!"

**தா**தி, ''இந்தாங்க அம்மா, உங்களுக்கு காகிதம்!'' என்ருள்.

'பாசமுள்ள சிநேகிதி செந்தாமரைக்கு' என்று ஆரம்பமான கடிதம் 'இப்படிக்கு உன் அன்புத்தோழி அழகி' என்று முடிந்திருந்தது.

கடிதத்தின் இருதயப் பாகம் இது :

''...நெஞ்சடியில் கொதித்துக்கொண்டிருக்கும் ரத்தக் கண்ணீருடன் உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இது எனக்கு உயிர்ப் பிரச்சினே. ஆகவே, தயவுசெய்து கவனமாகப் படி.

உன்னிடம் நேரில் கேட்கவேண்டுமென்று சேமித்து வைத்திருந்த விவரங்கள் சிலவற்றை இப்போது சொல்லப்போகிறேன். என்னுடைய அத்தான்—ஆமாம், என்னுடைய சொந்த அத்தான் முரளியை நீ சர்வ நிச்சயமாக அறிந்திருப்பாய் என்றே நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். ஒரு நாள் நர்ஸ் விடுதியில் எனக்கு சாப்பாடு போட்டாயல்லவா ? அன்று உன் அறையிலிருந்த புத்தகத்தில் ஒரு புகைப்படத்தைக் கண்டேன். அது என் அத்தான் முரளியினுடையது. முன்னொரு நாளில், 'முரளி என்னே மறந்தார் ; நான் இந்த உலகத்தையே மறந்துவிட்டேன் !' என்று நீ உன்னே மறந்து—ஏன், என்னேயும் மறந்து நீ பேசினுய். பின்னொரு நாள், நம் சுசீலா அக்கா வீட்டில் நாம் சந்தித்தபொழுது, என்னே அழைத்தபடி எதிர்பாராத விதமாக அங்கே வந்து சேர்ந்த முரளியைப் பார்த்தவுடன், உன் கண்ணேட்டத்தின் மூலம் உன் இதயத்தைப் படித்துக்கொண்டேன் நான்.

துர்ப்பாக்கியம் நிரம்பின என் வாழ்க்கையில் வசந்தம் நிலவ நீ மேற்கொண்ட ரகசியமான முயற்சிகளுக்கெல்லாம் கிடைத்த பலன் ...உன்னே நான் தோற்கடித்து விட்டேன்...! என்னே மன்னித்துவிடு சகோதரி ! என்னுடைய நன்றி உனக்கு என்றும் உண்டு.

ஆனல், இப்போது நான் உன்னிடம் ஒரு பிச்சை கேட்கப் போகிறேன். இது உயிர்ப்பிச்சை ! ஆம் ; என் உயிர்ப் பிச்சை. அதிசயப் படுகிருயா, தாமரை ?

புதிர் போடவில்லே நான். பதிலுக்கு நீயும் புதிர்போடாமல் இருக்க வேண்டும்., நான் ஆண்டவனே ஏசிப் பேசினவள். நான் கண்ட கனுக்களேப் பாழடித்து விட்டானே 'அவன்?'...விதியை நையாண்டி செய்தவள் நான். மறுக்கவில்லே. 'அது' என்னே நையாண்டியும் நயித்தியமும் பண்ணிவிட்டதே ? படைத்தவனும் விதியும் அமைத்துக் கொண்டிருக்கும் புதிர் வளேயத்திலிருந்து விடுபடத்

திட்டமிட்டேன்—முந்நாள் இரவு. ஆனல் பொழுது விடிந்ததும் என்னை நானே மாற்றிக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. எனக்கு ஒரு அக்காள் கிடைத்தார்கள். சுசீலா அக்காளைத் தான் இங்கு குறிப்பிடுகிறேன். இனி நான் அவர்களுக்குச் சொந்தம். அவர்களது உத்தரவன்னியில் இந்த உயிரை என்னல் எதுவுமே செய்ய முடியாது. ஆகவே, நான் வாழவேண்டியவளாக ஆகிவிட்டேன். ஆனபடியால், இப்போது என் வாழ்க்கைப் பிரச்சினையைக் காட்டிலும் என் உயிர்ப் பிரச்சினை அதிக முக்கியத்துவம் பெற்றுவிட்டது. இந்தக் காரணம் கொண்டுதான், சற்றுமுன் நான் உன்னிடம் உயிர்ப்பிச்சை கேட்பதாக எழுதலானேன்.

சகோதரி ! நான் உயிர்தரிக்க வேண்டுமா ? அப்படியென்ருல், நீ என் அத்தான் முரளியைப் பற்றிச் சற்றே சிந்தனை செய்வாயா ? முரளி பைத்தியமாகி விட்டிருக்கிருர். பைத்தியம்—அழகிப் பைத்தியம்...! கண்டதெல்லாம் உளறுகிருராம். என் நெஞ்சில் அவருக்கு இடம் வேண்டுமென்கிருர். அவருடைய பைத்தியக்காரத்தனமான உளறலைக் கேட்டுவிட்டு, என் மாமா வேறு என்னை முரளியின் நிழலில் ஒப்படைக்க எனக்கு ஹிதோபதேசம் செய்திருக்கிருர். என் மாமனுர்தான் இன்னமும் இந்த அழகியைப் புரிந்துகொள்ள வில்லை. நீ கூடவா புரிந்துகொள்ளாமல் இருக்கிருய்...?

நான் உயிருடன் வாழவேண்டுமல்லவா ? அது உண்மையானல், என் அத்தானுடன் நீ வாழவேண்டும். நீ என் முரளி அத்தானை அன்று காதலித்தாய். இன்று உன் காதல் வெற்றி பெறப் போகிறது. இப்போதுதான் முரளியின் கண்கள் திறந்திருக்கின்றன. நீ உன்னுடைய முதற் காதலுக்கு மதிப்பு தந்தால், அத்தான் மறு பிறவி எடுத்து விடுவார்.

நான் தீ என்பதை அத்தானிடம் இரண்டொரு சந்தர்ப்பங்களில் காட்டியதுண்டு. ஆனல் தீயின் நாக்கில் குளிர்ச்சியும் உண்டு என்பதை அவருக்கு நிரூபித்துக் காட்ட ஒரு வாய்ப்பு கொடு. என்னைச் சுயநலக்காரி என்கிருயா ?

தாமரை ! நீ, நான், அத்தான் மூவரும் காவிரியின் மடியில் வளர்ந்தவர்கள் தாம். ஒருவரை விட்டு இன்னெருவர் ஏன் விலக வேண்டும் ? ஏன் மறைய வேண்டும் ?

நேற்று அந்தியில் இங்கே ஒரு சம்பவம் நடந்தது.

சுசீலா அக்கா வீட்டில் வாசல் திண்ணையில் உட்கார்ந்து, மினர்வா தியேட்டரில் ஆடிக்கொண்டிருந்த ஒரு கதையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது, “அழகி ! அழகி !”

என்று ஓலமிட்டவாறு முரளி அத்தான் ஓடி வந்தார். "அழகி, முதலில் என்னை மன்னித்தேனென்று சொல்லம்மா! உன்னைப் பற்றித் தப்பும் தவறுமாக உன் மாமாவிடம் சொல்லி விட்டேன் இந்தப் பாவி...! உண்மையில் பித்தான நான் பேயாகி விட்டேன். இதற்கு முன்னே, உன் புருஷனுக்கும் கடிதம் வேறு போட்டேன், உன்னைப் பற்றிச் சில ரகசியங்களைத் தெரியப்படுத்துவதாக. நல்ல வேளை, இந்தக் கொலை பாதகனின் ஆசை நிறைவேற வில்லை. அழகேசனைச் சந்திக்க விடவில்லை விதி !" என்று விம்மினார்.

நானோ கல்லாகிப் போனேன். திடுதிப்பென்று கல்லுக்கு உணர்வு வந்தது. திரும்பவும் அத்தான் பேசினார். ஐந்து வயதிலே—அறியாப் பருவத்திலே நானும் அவரும் பழகிய பாசத்தில் விளைந்த அன்பு காதலாகி விளையாடியதென்றும், அந்த முதற் காதலை அவரால் மறப்பது சாத்தியமாக அமையவில்லை யென்றும், என்னை மறக்க அவர் மதுவை நினைக்கத் தொடங்கியதாகவும், பின்னர் அதிலும் விடிவு ஏற்படாமற் போகவே, உலகத்தையே மறந்துவிடத் துணிந்த சமயத்தில் கார் விபத்திற்குள்ளானதாகவும், நேற்று நீ அவரைக் காத்தருளிய விவரத்தையும் ஆதியோடந்தமாகச் சொன்னார்.

என் முதற் காதல் தோற்றது. என்வரை அது 'நடந்த கதை.' அந்தக் கதை இனி உன் முடிவில் 'சுபம்' அடைய வேண்டும். ஆம், உன் முதற் காதல் வெற்றிபெற வேண்டும். உனக்கு ஆறுதல் மருந்து தர மகாத்மா இப்போது மனோதத்துவ டாக்டராக மாறி எனக்கு உதவுகிறார். அவர் சொல்கிறார், 'காதல் இல்லாத கல்யாணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது' என்று. 'ஊம்' என்று ஒரு வார்த்தை சொல், சகோதரி. நான் சிரிப்பேன்; என் அத்தான் சிரிப்பார்.

நான் எழுதிப் பரிசு பெற்ற ரூபாய் ஐயாயிரத்தையும் உங்கள் இருவர் பேரிலும் பாங்கியில் போட உத்தேசித்திருக்கிறேன். இதற்கு என் மாமனாரிடம் ஏற்பாடு செய்வேன்.

தாமரை, என்னை வாழ வைப்பாயா ? என் அத்தானை புனர் ஜென்மம் எடுக்கச் செய்ய மாட்டாயா...?

வா ! பறந்தோடி வா ! நாளை சுசீலா அக்காவுக்கு வளைகாப்பு அல்லவா ? நல்ல சேதி கொண்டு வா...! ஓடோடி வா !..."

பக்கக் கணக்கில் வளர்ந்த மேற்படி கடிதத்தை மடக்கினாள், நர்ஸ் செந்தாமரை. தன்னை மறக்காமல் சிரித்தாள்; சிரிப்பு மாத்திரம் தன்னை மறந்தது.

'ஒரு பிறவி எடுத்தவர்களுக்கு மறு பிறவி தரவல்லது ஆஸ்பத்திரி என்பது மெய்தானா ? ஜெனரல் ஆஸ்பத்திரி காதல்

நோயாளியான என்னையும் புதுப் பிறப்பெடுக்கச் செய்துவிட்டதோ ? மு...ர...ளி !... முர...ளி ! முரளி !... முரளி !...'

இப்படி எண்ணிய நர்ஸ் செந்தாமரை மாடியில் நின்று கொண்டு எதிரே பார்வையை வீசினாள். சென்ட்ரல் ஸ்டேஷன் முகட்டில் வில்லுப் பாட்டுப் பாடி மகிழ்ந்து திளைத்திருந்த இயற்கையின் பின்னணியில் முரளி நின்று கொண்டிருப்பதை அவளது மனக் கண் தரிசித்தது.

செந்தாமரை கண்களைப் பொத்திக் கொண்டாள். அந்த முதற் சந்திப்பை நினைத்தாள். அன்று அவள் புஷ்பவதியானாள். மூன்று, நான்கு நிமிஷங்கள்தாம் ஆகி யிருக்கும். வீட்டில் பெண்கள் சுற்றிச் சூழ்ந்தனர். தனி அறையிலிருந்த ஒரு ஜன்னல் வழியே வீதியை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள் தாமரை. அவள் பூப் பெய்தியவுடன் அவளது கண் விரிப்பில் முதல் சந்திப்பு தந்த முதல் மனிதன் இந்த முரளி. ஆடம்பரமான உடைகளும் அழகான உருவ அமைப்பும் முரளியிடமிருந்து மாறி செந்தாமரையின் நினைவில் இடம் பெற்றன. ஒருவருக்கொருவர் 'நான் இன்னவன்; நீ இன்னவள்' என்ற அறிமுகம் ஆவதற்கு முன்பே, அவளிடம் இனம் புரியாத இதயப் பிணைப்பு ஏற்பட்டது. காதல் பிறந்தது.

அந்த முதற் காதல் பலிதமடைய வேண்டு மென்றுதான் செந்தாமரை ஆசை கொண்டாள். தன் ஆசையில் அழகி மண்ணைப் போட்டாள் என்பதை அறிந்ததும், அழகி—முரளியின் வாடை அடிக்காத இடமாகப் பார்த்து ஒதுங்க எத்தனம் செய்தாள். தஞ்சாவூர் சென்னைக்கு மாறியது. மாதங்கள் பல கழிந்து ஒரு நாள் சென்னையிலும் தஞ்சையையே திரும்பவும் காணப்போகிறாள் என்று ஊகித்துக்கொள்ள அவளுக்கு அப்போது 'ஞான திருஷ்டி'யை யாரும் அருளவில்லை !

தாமரைக்கு விடுதலை அளிப்பதற்கென்று இன்னொருத்தி வந்தாள். செந்தாமரை அவளிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டாள். ஜெனரல் ஆஸ்பத்திரி அவளுக்குச் சொர்க்கமாகத் தோன்றியது. அண்ணாமலை மன்றமும் மின்சார வண்டியும் அவளிடம் மானசீகமாகப் பேசியிருக்க வேண்டும். அவள் தன்னுலே சிரித்தாள். 'ஆமாம்; அழகியின் வேண்டுகோளை நிறைவேற்றுவது என் கடமை. இதில் என் சுயநலமும் ஆட்சி புரிகிறதென்பதை நான் மறுக்க முடியாது. எப்படியாவது என் எண்ணம் பலிக்கட்டும். ஆண்டவன் இருக்கிறான். அவன் நல்லவன்தான் ! அழகி என்னிடம் பிச்சை கேட்டாள். நாளை நான் அவளிடம் ஒரு பிச்சை கேட்கவேண்டும். ஆனால், அந்தப் பிச்சை !—அவளால் தப்ப முடியாது ! என் லட்சியமும் நிறைவேறி விட்டால்... ? புனிதமான

ஞாயிற்றுக்கிழமை எங்கள் வாழ்க்கையிலே ஆனந்தமான திருப்பத்தை—அற்புதமான நிகழ்ச்சியை ஏற்படுத்தட்டும். எங்கும் நிறைந்தோனே, அழகிக்கு மறுபிறவி தா !...' என்ற பிரார்த்தனையுடன் நுழைந்த நர்ஸ் செந்தாமரையை பணிப் பெண் விடுதி இன் முகங் காட்டி வரவேற்றது.

வளைகாப்பு விசேஷம் நடந்து முடிந்தது.

" தங்கச்சி," என்று கூப்பிட்ட சுசீலாவிடம் எட்டி நடந்தாள் அழகி.

" அழகி, நீ போட்ட லெட்டர் கிடைத்ததாமா ? செந்தாமரை ஏதாவது சொன்னுளா ? இன்றே உன் அத்தான் முரளி விஷயத்துக்கு ஒரு முடிவு கட்டு. அப்பால், உன் எதிர்காலத்தைப் பற்றித் தீர்மானம் செய். உன் மாமனுருக்கு நீ போடவேண்டுமென்று சொன்ன தபாலை அப்படியே மறந்துவிடு. பெரியவர் பாவம், செத்து விடுவார் !.. மற்றவர்களுடைய நல்வாழ்க்கைக்கு மூச்சுப் பிடிக்க உழைக்கிற நீ உன்னைப் பற்றி ஆயிரத்தில் ஒரு பங்காவது யோசிக்க வேண்டாமா ? எப்போது கேட்டாலும் 'சொல்றேன், சொல்றேன்'னு பதில் தெரிவித்தால் மாத்திரம் போதுமா ?...உன் கணவர்...கோபிக்காதே !...அழகேசனைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை என்றுயே, அவரைத் தேடுவதாக உத்தேசம் இருக்கிறதா ? உன் மாமாவுக்கு நல்லதனமாக வேறொரு கடுதாசி எழுதிப் போடும்படி சொன்னேனே, அதையாவது நாளை விடிந்தவுடன் செய்..." என்று அபிப்பிராயம் கூறினுள் சுசீலா. மூச்சு வாங்கியது.

" அக்கா, இன்றைக்கு ஒரு நாளாவது நான் சிரித்துப் பேசிக் கொண்டிருக்க ஆசைப்படுகிறேன். அனுமதியுங்கள். பத்துப் பதினைந்து மாசத்துக்கு மேலாக அல்லும் பகலும் அழுமூஞ்சியாகவே இருந்த நான் இன்றாவது சிரித்த முகத்துடன் காணப்படுவதில் உங்களுக்கு ஆசை கிடையாதா ?... அக்கா, முதலிலே முரளி அத்தான்—தாம்ரைக்கு 'லாலி' பாடுவோம். நான் சற்று ஓய்வாக இருந்தால்தான் நல்லது. தலை சுற்றுகிறது. கரிகாலன் ரூமிலே போய் இருக்கிறேன். செந்தாமரையை இங்கே அனுப்புங்கள்...! அதோ, பந்தியில் உட்கார்ந்து விட்டார்கள். கரிகாலனைக் கவனிக்கும்படி சொல்லுங்கள். நீங்கள் குனிந்து நிமிரக் கூடாது !" என்ருள் அழகி. அவள் வார்த்தைகள் தேய்வதற்குள், அவள் நுழைந்த அறைக் கதவு மூடிக் கொண்டது. விஞடிப் பொழுதுக்கு அவளுக்குக் கிறுகிறுத்தது. கட்டிலில் அமர்ந்து தலையை அதன் மேல் போட்டாள். அடுத்த பத்தாவது நிமிஷம், பக்கத்து ஊாலிலே

முரளியைத் தேடினுள். அவன் இல்லை. தற்செயலாக சுசீலாவின் வீட்டுத் தோட்டப் பகுதியில் அவளது பார்வை திரும்பியது. அங்கே நாகரிகமாக உடுத்தி யிருந்த இரு உருவங்கள் தெரிந்தன. ஒன்று ; தாமரை. அவள் முகம் தெரிந்தது ; மற்ருென்று, முரளி. அழகி யின் அனுமானம் சரி.

அழகிக்கு ஏற்பட்ட ஆனந்தம் அவ்வளவு இவ்வளவல்ல. வெளிக் கதவைத் திறந்தபோது, அவளுடைய காலடியில் ஒரு 'போட்டோ ஆல்பம்' இடறியது. தீக்கணப்பில் இதயத்தைப் புதைத்தது போலத் துடித்தாள். எந்த ஒரு நினைவை ஞாபகப் படுத்திக் கொள்ள முயன்று முயன்று, அன்று வரை தோல்வி கண்டாளோ, அந்த ஒரு நினைவு இப்பொழுது சிலிர்த்தெழுந்தது. முன்னெரு சமயம், அவளிடம் ஆறு புகைப் படங்கள் புதிர்போட்ட அதிசயம் ' பொருக் 'கென்று சிந்தனையில் புகுந்து விட்டது.

' அழகேசன் ! ஈரமில்லாத பாவி அவர் !...ஐயோ, அப்பா ! என்னைச் சூறையாடிய அழகேசன் உங்கள் உயிரையும் குடித் தாரா ?... அவர் கலியுக கிருஷ்ண பரமாத்மாவா ? என்னை மயக்கிய அந்த விஷ ரோஜாப்பூவுக்குப் பலியானவர்கள் இன்னும் எத்தனை சகோதரிகளோ ? அழகேசன் சில்க் எம்போரியத்தில் திருட்டுப் போய் விட்டதென்ற சேதி அழகேசன் கட்டிவிட்ட கதைதானு ? என்பேரில் அக்கறை கொண்டிருக்கிற கஜேந்திரனையும் அழகேசன் பழிவாங்கி விடுவாரோ ?... அவர்... அழகேசன் எங்கே ?...'

அழகியின் உள்ளம் பொங்கத் தொடங்கியது. கையிலிருந்த ' ஆல்பம் ' கைநழுவியது. அதை எடுக்கப் போனவளின் வலது கையில் கசங்கிய தாள் ஒன்று கிடைத்தது.

**"மதிப்புக்குரிய மாமா அவர்களுக்கு,**

அழகி பாதம் பணிந்து எழுதுவது:

தங்கள் அன்பினுல் ஆனந்தக் கடலாடிக் கொண்டிருந்த என்னை அணு அணுவாகச் செத்து மடியச் செய்து விட்டது, நீங்கள் புத்தகத்தில் வைத்திருந்த கடிதம்.

ஜாதி ரோஜாவை வெறும் ரோஜாவாக்கப் பார்க்கிறீர்களே ? நான் உங்கள் புதல்வரின் கையினுல் மூன்று முடிச்சு பெறுவதற்கு முன் என் நினைவெல்லாம் என் அத்தான் முரளியைப் பற்றியேதான் இருந்தது. ஆனுல், நான் சாஸ்திர ரீதியாக 'அவருக்கு'—உங்கள் குமாரருக்கு உரியவளாக ஆக்கப்பட்ட பிறகு நான் என்னையே மறந்தேன்.

முரளி உங்களிடம் வாய்க்கு வந்ததை உளறியிருப்பாரென்று உங்கள் கடிதத்தின் வரிகளிலிருந்து உணருகின்றேன். அழகி நெருப்பு. இதை மாத்திரம் தயவு செய்து நினைவு வைத்துக்

கொள்ளுங்கள். முரளியைப் பழிவாங்கி முடிந்தவுடன், என் இரண்டாவது பழி உங்கள் மகன்மீதுதான் திரும்பப் போகிறது !...

என்னைப் பற்றி இனி நீங்கள் ஏன் கவலைப்படப் போகிறீர்கள் ? ஆகவே, என்னைத் தேட வேண்டாம். அதற்குப் பதிலாக, உங்கள் மகனை உங்களிடம் அழைத்துக் கொள்ளுங்கள். என்னால் உங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு மன்னிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். உப்பிட்ட கைக்கு—அன்பு பேணிய இதயத்துக்கு ஏழேழு பிறப்புக்கும் நன்றிக் கடன் செலுத்தக் கடமைப் பட்டவள் இந்த அபலை.

மறுபடியும் நினைவு படுத்துகிறேன்—அழகி வெறும் ரோஜா அல்ல ! ஜாதி ரோஜா !

அழகி.”

சாப்பிட அழைத்தாள் சுசீலா. கசங்கிப் போயிருந்த கடிதத்தைப் பந்தாக உருட்டி வீசினாள் ; பிறகு அவளைத் தொடர்ந்தாள். முரளி—செந்தாமரை ஜோடியை மறுபடியும் தேடினாள். இன்னமும் அவர்கள் எழுந்திருக்கவில்லை. சோகம் நிறைந்த அழகியின் உதடுகளில் முறுவல் எட்டிப் பார்த்தது.

சாப்பாட்டு இலையில் உட்காரப் போனாள் அழகி. அப்போது போலீஸ்காரர்கள் ‘ திமுதிமு ’ வென்று வாசற்படியில் ஏறிக்கொண்டிருந்தார்கள். ‘ ஐயோ, முரளி அத்தானையா தேடிக்கொண்டு வந்து விட்டார்கள் ? ’ என்று பயந்தாள் !

“ அழகி என்கிறது யாருங்க, அம்மா ? ” என்றார் ஒரு ஜவான்.

“ ஏன், நான்தான் !” என்று பதில் கொடுத்த வண்ணம் வந்த அழகி, வீதியில் நின்ற அந்த மனிதரையும் பார்க்கத் தவறவில்லை.

சிவப்பு மனிதர்களைச் சட்டை செய்யாமல், “ மாமா ! மாமா !” என்று கூப்பிட்டுக்கொண்டே வாசலுக்கு ஓடினாள் அழகி.

கிழவர் சோமநாதனின் பாதங்களிலே நெடுஞ்சாண் கிடையாக அழகி விழுந்து எழுந்த போது, கஜேந்திரனுடன் அழகேசனும் நின்று கொண்டிருந்தான் !

## 11. அந்திச்செவ்வானம் அப்போதே மழை !

" ஆமாம், அழகியேதான் ! எங்கள் அழகி !...என் மருமகள் அழகியேதான் !"

பெரியவர் சோமநாதன் தன்னை மறக்காமல் விம்மினார் ; தன்னை மறந்து பேசினார் ; அந்தரத்தில் பறந்தது அவர் உள்ளம் ; அது 'சிரி சிரி'யென்று சிரித்தது. நடுங்கும் கைகளால் மருமகளின் தோள்களைத் தொட்டுத் தூக்கினார் அவர். ஊன் உருகியது ; உள்ளம் உருகியது. ஏன், அவரே உருகி வழிந்து கொண்டிருந்தார் !

அழகி கண்களைத் திறந்தாள். பார்வைக்குக் கண்ணீர் வெள்ளம் அணை கட்டியது. சித்தம் பறிபோனவளைப் போல அங்கும் இங்கும், அப்படியும் இப்படியும் பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் பேசத்தோன்றவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டமாதிரி இருந்தது அவளுக்கு. உணர்ச்சி வெறியில் 'அள்ளாடித் தள்ளாடி' ஓடிக்கொண்டிருந்த மனக் குதிரையின் லகானைப் பிடித்து இழுத்தாள். சுய நினைவு சிறுகச் சிறுக அவளோடு ஒட்டி உறவாடியது.

கொஞ்சப் பொழுதிற்கு முன்னதாக 'மாமா...மாமா !' என்று கதறிய சொற்களை எதிரொலித்துக் காட்டியது சுற்றுப்புறம். விழிகளை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து பார்த்தாள் அழகி. வாய் ஓயாமல் இன்னமும் அழுது கொண்டுதான் இருந்தார் அழகேசனின் அப்பா.

"மாமா, என்னை மன்னிச்சிடுங்க...! என்னை மன்னிச்சிடுங்க, மாமா !" என்று செருமினாள் அவள்.

"அம்மா அழகி, நானா உன்னை மன்னிக்க வேணும் ?...இல்லே அம்மா !...நீ தான் என்னை மன்னிக்கணும் !...குற்றம் செய்தவங்கதானே மன்னிப்பை யாசிக்க வேணும் ?" என்று சொல்லி மறுபடியும் விம்மினார் அவர்.

"நீங்க பெரியவங்க ; என் மாமனார். அப்படியெல்லாம் சொல்லாதீங்க...!" என்று அழகி கூறிக்கொண்டிருக்கும்போது, சுசீலா, அவள் கணவர் ராமலிங்கம், அவள் தம்பி கரிகாலன் மூவரும் அங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து செந்தாமரை வந்து நின்றாள் ; இரண்டு விநாடி கழித்து முரளி வந்தான்.

"வாங்க ஐயா !" என்று சோமநாதனை வரவேற்றாள் சுசீலா. சொல்லி முடிந்து திரும்பியபோது, அங்கே அழகேசனும் கஜேந்திரனும் நிற்பதைக் கண்டாள். "உள்ளே வாங்க" என்றாள். முள் எடுக்கும் நேரம் அவளது கண்ணின் மணிகள் துடிப்பை மறந்தன.

அந்த ஒரு நாளிலே, அழகியின் கழுத்திலே தாலி கட்டிய அழகேசனிடமிருந்து ஓடோடி வந்தவளுக்கு அடைக்கலம் அளித்தபோது வெறி கக்கும் கண்களுடன் பேசிய அந்த அழகேசனின் உருவத்தை சுசீலாவின் மனம் நினைவு படுத்தி யிருக்கவேண்டும். காட்டுப் புலி அமைதி நிறைந்த கொம்புமானாக உருமாறி விட்டதா ?... இல்லை, சர்க்கஸ் கூண்டிலே புலியை அடைத்துப் போட்டு அதன் பற்களைப் பிடுங்கி எறிந்து விட்டார்களா ? பயம் சுழித்தோடும் அழகேசனின் அந்தக் கண்கள் எங்கே...?

கஜேந்திரன் தோளில் சுமந்திருந்த காமிராவுடன் உள்ளே நடந்தார்.

அழகேசன் தயங்கித் தயங்கி, அடிமேல் அடியெடுத்து வைத்து உள்ளே நுழைந்தான்.

சோமநாதன் திரும்பினார் ; திடுக்கிட்டார். "யார், நீயா ?... அழகியைக் கொன்று போடவா வந்து விட்டாய் ? ..அடைத்துப் போட்டிருந்த அறையை உடைத்துக் கொண்டா வெளியே ஓடி வந்து விட்டாய் ?... அட பாவி ! என் தெய்வத்தின் உயிரைக் குடிக்கவா துப்புத் தெரிந்துகொண்டு வந்து விட்டாய் ?" என்று ஓலம் பரப்பியவாறு தம் 'பிண்டத்'தை நெருங்கினார் ; இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி அறைந்தார்.

"மாமா...மாமா !" என்று ஓடிவந்தாள் அழகி.

மருமகளின் அழைப்புக் கேட்டுத் திரும்பிய கிழவர் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

முன்னொரு நாள் விபத்துக்காளான தம் மகனை தம் மருமகள் காப்பாற்றி வீட்டில் சேர்த்துவிட்டு மறைந்ததை நினைத்தார்.

அழகேசன் ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தான். மறுகணம், அவன் திரும்பி நடந்தான்.

செந்தாமரை விசையாக அழகேசனைத் தொடர்ந்து சென்றாள். "ஸார்...!" என்று அலட்டினாள். அவன் திரும்பிப் பார்க்கவில்லை. அவள் திரும்பி வந்து, "ஐயா, என் திட்டத்தை யெல்லாம் பாழாக்கி விட்டீங்களே ?" என்று வேதனையுடன் பெரியவர்மீது குற்றஞ் சாட்டினாள்.

தன் தோழி செந்தாமரை கூடகமாகப் பேசிய பேச்சின் ' குரலை ' நிதானிக்க மாட்டாமல் விழித்தாள் அழகி.

" என்னம்மா சொல்றே நீ ?..." என்று கேட்டார் சோம நாதன்.

இவ்வளவு நாழிகை வாய் மூடியிருந்த கஜேந்திரன் பெரியவ ரிடம் போய், " ஐயா, இப்போதுதான் உங்கள் பையனுக்குக் கண் கள் திறந்திருக்கின்றன. திறந்த கண்களை நன்றாக விழித்துப் பார்க் கிற நேரத்திலே, மறுபடியும் கண்களை மூடிக்கொள்ளச் செய்து விட்டீர்களே, சோமநாதன் ! " என்று உரிமையுடன் வாதாடினார்.

" ஐயோ, அந்தப் பாவியின் கண்கள் திறக்கவே வேண்டாம். மூடியே இருக்கட்டும். ஐயா, இந்த ஒரு உதவியையும் எனக்குச் செய்யுங்கள் ; ஒரு வேளை திறந்திருந்தாலும், அவன் கண்களைக் கோந்து போட்டு ஒட்டி விடுங்கள். இல்லையானால், அவன் தன் னுடைய பாவக் கண்களால் என் குல தெய்வத்தைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கி, அதை நெற்றியில் பூசிக்கொண்டு உலகத்தையே அழித்து விடுவான் !... அவன் போகட்டும், தொலையட்டும் !..." என்று வீறுகொண்டு கத்தினார் சோமநாதன்.

எல்லோருக்கும் நாற்காலிகள் கொண்டு வந்து போட்டான் கரிகாலன். பெரியவர் நாற்காலியில் குந்தப் போனார்.

" அப்படியென்றால், எங்கள் அழகியின் தாலிக்கு யார் பதில் சொல்வது ?" என்ற சொற்களைத் தூவிக்கொண்டே அண்டி வந் தாள் தாமரை. அவளது முகத்தில் ' பாத்தி ' கட்டி ஓடிக்கொண் டிருந்த ரத்தம் அவளுடைய கண்களுக்குப் பாய்ந்தது.

" என்ன ?..." என்று சொன்ன பெரியவர், வார்த்தைகளுக் குத் தொடர்பிணைத்துப் பேச முடியாமல், நட்ட மரம் போல அப் படியே எழுந்து நின்றார்.

தலையில் கையை வைத்த வண்ணம் நாற்காலியில் உட்கார்ந்து விட்டாள் அழகி. " ஐயோ அம்மா !" என்று முனகினாள் அவள்.

" செந்தாமரை, எல்லாவற்றையும் அப்புறம் பேசிக் கொள்ள லாம். மறுபடியும் அழகிக்கு மயக்கம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். போய்க் கவனி அழகியை !" என்று யோசனை கூறி னான் முரளி. நல்ல மாற்றம் !

முரளியையும் செந்தாமரையையும் மாறி மாறிப் பார்த்தார் சோமநாதன். அழகி விரும்பினால் முரளியின் கைகளில் அவளை ஒப்ப டைக்கத் தமக்குச் சம்மதம் என்று தெரிவித்த பழைய கடிதத்தை நினைத்துக்கொண்டார். பைத்தியம் பிடித்தவர் போல மண்டையில் அடித்துக்கொண்டார். வாதம் கெட்டால் பைத்தியம் என்பார்களே !

"மாமா!" என்று கூப்பிட்டுப்பார்த்த அழகி, அவரது கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டாள்; பிறகு அவற்றைத் தடவி விடலானாள்.

"அக்கா, நான் அபாக்கியவதி! மகாபாபி!...பேதை நான்! பேய் நான்!..." என்று முழங்கிய அழகியின் குரல் செம்புதாஸ் தெரு முழுவதையும் திடுக்கிடச் செய்திருக்கவேண்டும். ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்கள் ஓடோடி வந்தார்கள். எல்லோரையும் கண்டதும், அழகிக்குத் தூக்கிவாரிப் போட்டது. நடந்த சம்பவங்கள் இணைத்துக் காட்டிய பழைய உலகத்தில் சற்றுமுன் அவள் சஞ்சரித்ததை உணர்ந்தாள். அம்பாரம் கட்டிக் குவிந்துபோன நினைவுகளின் விளைவுதான் தன்னுடைய இந்தத் தடுமாற்றம் என்பதையும் அழகி அறிந்தாள்; நெட்டுயிர்த்தாள்.

"அழகி, நீ சற்று நேரமாவது தூங்கம்மா!" என்று அன்பு பாராட்டி வேண்டினான் முரளி.

முரளியின் மேலுடையில் செந்தாமரையின் பட்டாடை உரசிக்கொண்டிருந்தது. அவர்கள் இருவரையும் பார்த்தபடி, "ஆமாம், இனி நான் தூங்கி விடுவேன்...ஆமாம், இனி நான் தூங்கிவிடுவேன்!" என்று உரைத்த அழகி, படுக்கையில் தலை சாய்த்தாள். அவளுடைய கூந்தலை அலங்கரித்த ஒற்றை ரோஜாப்பூ நழுவிக் கீழே விழுந்தது.

பதித்த கண் பிரிக்காமல் அந்த 'உயிலை' சுசீலா பார்த்துக்கொண்டிருந்தாள். உடன் இருந்த ராமலிங்கம் அடைந்த திகைப்பு அதிகம். கணவனும் மனைவியும் சோமநாதன் அவர்களைத் தலை நிமிர்த்திப் பார்த்தார்கள்.

"அம்மா சுசீலா, என்னுடைய மருமகப் பெண்ணுக்கு நான் செய்த பாவத்துக்கு என் உயிர் உடலில் இருக்கையிலேயே ஏதாவது பிராயச் சித்தம் செய்து கொண்டால்தான் இந்தக் கட்டை வேகும். ஆகவேதான் இந்த ஏற்பாடு. ஆனால் இந்த உயிலைக் கண்டு அழகி என்ன சொல்லப்போகுதோ என்றுதான் எனக்குப் பயமாக இருக்குது. சுசீலா, எப்படியாவது நீயும் உன் புருஷனும் சேர்ந்து சொல்லி அழகியின் மனசை மாற்றி, அழகி எப்படியாவது உயிலை வாங்கிக் கொள்ளும்படி செய்திடம்மா. சோலையாக இருக்க வேண்டிய அழகியின் வாழ்க்கையைச் சுடுகாடாக்கி விட்டான் என் மகன். அழகியை மயக்கி கல்யாணம் செய்து கொண்டது எப்படி என்வரைக்கும் மூடு மந்திரமாக்கப் பட்டதோ, அதே போலத்தான் மத்தியானம் அவன் இங்கே திடுதிப்பென்று வந்து நின்றதும் எனக்குப் புதிராகத் தோணுது.

"அந்தப் பாதகன் அழகேசனை பத்து நாளைக்கு எங்கேயாவது கண் காணாத இடத்திலே அடைச்சுப்போட்டிருந்தாலாவது மனசு

தெளியுமா என்று சோதிச்சுப்பார்க்கத்தான் கஜேந்திரனைக் கொண்டு ஒரு திட்டம் போட்டேன். முரளியைத் தன்னக்கட்டி அவரைக் கொண்டே அழகேசனுக்குத் தபால் எழுதவும் செய்தேன். திரை மறைவிலே நாடகமாடிய கஜேந்திரன் அழகேசனிடம் ரகசியம் பூராவையும் சொல்லிவிட்டாரோ, என்னவோ ?... அழகேசனுக்கு ஒரு பாவத்தையும் செய்யாமலிருக்கும் போதே என்னை விஷம் கொடுத்துக் கொல்லச் சதி பண்ணிய துரோகி அவன் ; ஆனால் இப்போது என் ரகசியத் திட்டம் அம்பலமானால், நாளைக்கே-அல்ல, இன்று ராத்திரிக்குள்ளேயே என்னைத் தீர்த்துக் கட்டி விடுவான். என் மகன் என்று அவனைச் சொல்லிக் கொள்வதற்குக்கூட வெட்கப்பட வேண்டியவன் நான். அப்பன் அருமை அப்பன் மாண்டால்தான் தெரியும் !... கஜேந்திரன் என்னைக் காட்டிக் கொடுப்பதைப் பற்றிக் கவலையில்லை.

"அழகேசனிடமிருந்து அழகியைக் காப்பாற்ற நான் வேலியாக அமைந்தபோது மாத்திரம் என் உயிர் எனக்கு வெல்லக் கட்டியாகயிருந்திச்சு. ஆனால் இப்போது என் எண்ணமெல்லாம் புழுதி மண்ணாகி விட்டது. சுசீலா, நான் இன்னொரு பெரிய தப்பு செய்திட்டேன். அது உங்களுக்கெல்லாம் தெரிஞ்சிருக்கத்தான்வேணும். முரளி பைத்தியக்காரத்தனமாக அழகியைப் பற்றிச் சொன்னதை வைத்துக் கொண்டு, அழகிக்கு கடுதாசி எழுதி புத்தகத்திலே வச்சிட்டேன். இங்கே கீழே குழாயடிக்குப் போனபோது கசங்கிப்போன கடுதாசி கையிலே தட்டுப் பட்டது. அழகி எனக்கு எழுதின பதில் போலத்தான் தோணுச்சு. முரளியும் நேற்று வந்து தன் குற்றத்தை எடுத்துச் சொல்லி மன்னிக்கும்படி வேண்டினார். அவர் மூலம் தான் எனக்கு அழகியின் இருப்பிடம் தெரிஞ்சுது. அழகியை உயிரோடு காணுகிற வரைக்கும் என் உயிர் என் வசமில்லை ; ஏதாவது எக்குத்தப்பாக நடந்திடக்கூடாதே யென்றுதான் முன்னாலேயே போலீசுக்கு வேறே 'போன்' மூலம் தகவல் அனுப்பிச்சேன். அது தான் அவங்களும் எனக்கு முந்திக்கொண்டு வந்திருக்கிறாங்க. சரி, விஷயத்துக்கு வருவோம். எனக்கு என்னவோ இனம் புரியாத ஒரு பயம் மனசுக்குள்ளேயே சுத்திக்கிட்டிருக்குது. என்ன கெட்ட காரியம் நடக்கப் போகுதோ, என்னவோ ?... அந்தக் கெட்டது என்னை ஒட்டி—அதிலும் என் பிள்ளையைக் கொண்டுதான் முக்கால் வாசி நடக்க வேணும். உயிர் போனதற்குப் பின்னாலே பெற்ற பிள்ளை கையாலே நெய்ப் பந்தமும் பிடி அரிசியும் வாங்கிக்கிறதுக்கு முன்பு, நான் என் உயிரையே அவனுக்கு எழுதிக் கொடுத்திட முடிவு செய்திட்டேன். ஆக, அவன் என்னை மட்டும் எதுவும் செய்யட்டும் ; எனக்குப் பயமில்லை. பாவம், அவனுக்கு என் சொத்தைக் கொடுக்காத நான் என்னுடைய உயிரையாவது கொடுக்க வேண்டாமா ?

அருமை மகனைப் பெற்றவனுக்கு இப்படியாவது ஒரு நிம்மதி கிடைக் கட்டுமே! காசி ராமேஸ்வரம் க்ஷேத்திராடனம் செய்து பெற்ற மாணிக்கக் கட்டியாயிற்றே என் செல்வன்!...சுசீலா, இந்த உயிலை அழகி மறுக்காமல் பெற்றுக்கொள்ள வழிசெய்துவிடு, போதும். என்னுடைய சுயார்ஜித சொத்துத்தான் இதில் குறிக்கப்பட்டிருக்கிற பத்து லட்ச ரூபாயும். பங்களாவும் அதுக்கேதான். அப்புறம் அழகியைப் பற்றின இன்னொரு விஷயத்தையும் நீயே தீர்மானிக்க வேண்டும். அதுதான் அழகியின் எதிர்கால வாழ்வு. அழகேசனைப் பழி வாங்குவதாகவும் அவன் பேரிலே கேஸ் போடப்போவதாகவும் அடிக்கடி அழகி சொல்லுது. இதுக்கும் ஒரு முடிவு கட்டவேணும். என் மருமகளுக்குக் கிடைத்த பரிசுப் பணம் ரூபாய் ஐயாயிரத்தையும் தனியே பாங்கில் போட்டு விடுகிறேன்: அது தனிப் பணம். அழகியிடம் பேசி ஒரு தீர்மானத்துக்கு வந்தாகவேணும். இனியும் நாள் கடத்தித் கொண்டு போவது அவ்வளவு உசிதமல்ல. அழகேசனின் நிழலில் அழகி ஒண்டுமென்று எனக்குத் தோன்ற வில்லை. அழகி என்னுடைய உயிலுக்கு சம்மதம் சொல்லிவிட்டால், இன்று வேணுமானாலும், அழகேசனுக்கு 'விடுதலைப் பத்திரம்' கொடுத்து விடுகிறேன். அவன் செய்த அக்கிரமங்களே அவனைப் பழிவாங்கி விடும்; அவன் கம்பி எண்ணாமல் தப்பிக்கவும் முடியாது. அநியாயமாக ஒரு ரோஜாப் பூவைக் கருகிக் காயச் செய்து விட்டானே கொடுமைக்காரன்!..."

சோமநாதனுக்கு அதற்குமேல் பேசத் தெம்பில்லை. இருமல் துளைத் தெடுத்தது. கண்ணீர் தொண்டைக் குழியில் தேங்கியது.

கோடைக்குப் புதிதாக அமைத்திருந்த மாடிப் பந்தலில் மாலைக் காற்று வெண்சாமரம் வீசியது; கடலை அணைத்துப் பிறந்த தென்றலல்லவா?

சுசீலாவுக்குப் பெரியவரிடம் என்ன ஆறுதல் கூறுவதென்று நிதானப்படவில்லை. ஆகவே, காப்பி கொண்டு வருவதாகச் சொல்லிக் கீழே இறங்கினாள், ராமலிங்கத்திடம் எல்லாவற்றையும் வெளியிட்டாள்.

"இன்று இரவு பெரியவர் இங்கேயே தங்கட்டும். காலையில் அழகியைக் கலந்து பேசி முடிவு சொல்வதாகத் தெரிவித்து விடு," என்றார் சுசீலாவின் கணவர்.

காப்பி தயாரிக்கச் சமையல் அறைக்குச் சென்றாள் சுசீலா. அப்போது கஜேந்திரன் வாசற்படியில் நின்றதைக் கவனித்தாள். உடனே திரும்பி வந்தாள்.

"அழகியை எங்கே காணோம்? இன்னுமா தூங்குகிறீர்கள்?" என்றார் கஜேந்திரன்.

"அழைக்கிறேன். தயவு செய்து முதலில் என்னுடைய கேள்விகளுக்குப் பதில் கொடுப்பீர்களா?"—விசாரித்தாள் சுசீலா.

"கேளுங்கள்!"

"அழகேசனை நீங்கள்தான் கூட்டி வந்தீர்களா?"

"ஆமாம்."

"ஏன்?"

"அழகியிடம் மன்னிப்பு கேட்க...!"

"யார்?"

"ஏன், அழகேசனேதான்...!"

"அப்படியென்றால், பெரியவர் சோமநாதன் போட்ட திட்டம் பலித்து விட்டதென்று அர்த்தமா?"

"ஆமாம்; ஆனால் அதற்குள்தான், திரண்டு வந்த வெண்ணெய்த் தாழியை இந்தக் கிழவர் உடைத்து நொறுக்கிவிட்டாரே?"

"சரி, நடந்ததைப் பற்றிப் பேசி இனி புண்ணியம் இல்லை. நடக்க வேண்டியதைப் பேசுங்கள். இன்னொரு முக்கியமான விஷயத்தையும் உங்களிடம் கேட்க வேண்டும்."

"கேளுங்கள், அம்மா!"

"அந்தப் போட்டோ ஆல்பத்திலுள்ள படங்களில் காணப்படுகிறதெல்லாம் உண்மைதானா? இல்லை, உங்கள் காமிராத் திறமையைக் காட்ட கையாண்ட சாகஸமா?" என்று கொஞ்சம் தூக்கலான குரலில் கேட்டாள் சுசீலா.

"எல்லாம் உண்மை. அழகேசன் நேற்றுவரை பயங்கர மிருகமாகத்தான் இருந்தான். இப்போது மனிதத் தன்மை அவன் ரத்தத்தில் ஊறத் தொடங்கியிருக்கிறது. ஆல்பத்திலுள்ள புகைப் படங்களைப் பற்றி இனிச் சொல்லவேண்டும். அதில் காணப்பட்ட படங்கள் ஆறும் உண்மைப் போட்டோக்கள்தான். சிறிது நேரம் அவற்றை மனசால் நினைத்துப் பாருங்கள், சுசீலா! முதல் புகைப் படத்தில் அழகியை நெருங்கிய அழகேசன், அழகியின் கழுத்தை நெறித்துக் கொண்டிருக்கிறான். சோமநாதன் உடல் நலமில்லாமல் சுயநினைவு தப்பிக் கிடந்ததைப் பயன்படுத்திக் கொண்டான்! அழகியின் அப்பாவின் கடனை அடைக்க உதவிய அழகேசன் அழகியைப் பிடிக்க வலைவிரித்தான். முகூர்த்தம் குறிக்கப்பட்ட போது தான் அழகேசனது உண்மை சொரூபம் அழகிக்கு எட்டத் தொடங்கிற்று. அழகியின் அழகிலே வெறி கொண்டு பைத்தியமாகித் திரிந்த அழகேசன் அழகியை வலுக்கட்டாயப்படுத்தி தன் அறைக்கு

இட்டுவரச் செய்தான். அவளோ அவனைத் தாறு மாறுகத் திட்டிளுள். மனம் பொறுக்காத வேங்கை புள்ளிமானைக் கொல்லப் பார்த்தது. எனக்கும் தெரியாமல் நடந்த இச்செயலைத் தூர இருந்து படம் பிடித்து விட்டேன். அடுத்த படம்: அழகியின் அப்பாவைப் பணம் கொடுத்து ஏமாற்ற எத்தனம் செய்த அழகேசன், ஆரம்பத்தில் அதற்கு உடன்பட மறுத்த அக் கிழவரைத் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திளுன். தெய்வாதீனமாக நான் அங்கே போய்ச் சேர்ந்தேன். அப்போதும் படமெடுத்து விட்டேன். மூன்ருவது போட்டோவில் அழகிக்கு அழகேசன் தாலி பூட்டிய காட்சி உள்ளது. நாலாவது படம் அழகேசன் நவயுக கிருஷ்ண பரமாத்மா என்பதை நிரூபிக்கப் போதுமானதாகும்.

"ஐந்தாவது படத்தில்தான் பெரிய ரகசியம் இருக்கிறது. இவனே ஜவுளிக் கடைப் பணத்தைக் களவாடிவிட்டு, பணம் பத்தாயிரம் ரூபாய் இரவிலே திருட்டுப் போய் விட்டதென்று பொய் சொல்லி போலீசையும் ஏமாற்றி, தானே எல்லாப் பணத்தையும் பத்திரப்படுத்தி விட்டான்!

"ஆருவது போட்டோ என் சம்பந்தப்பட்டதாகும். இப்போது உங்களிடம் பழைய சேதி ஒன்றையும் தெரிவிக்கவேண்டும். அதாவது, அழகேசன் அழகியைக் குறி வைத்து வலை வீசி முடிந்து வெற்றி கிடைக்குமென்பது ஊர்ஜிதமானபோது, அழகியுடன் தான் வாழப் போவதைப் பற்றிச் சொன்னுன் அவன்.

"ஆனுல், அவள் ஒப்ப மறுத்ததைச் சொல்லவில்லை. தன் தம்பி தன் அப்பாவுடன் தகராறு செய்ததாகவும் அவன் மனத்தை மயக்கிச் சில மணி நேரம் கட்டுப்படுத்தி வைத்திருக்க ஏதாவது உபாயம் சொல்லும்படியும் கேட்டான். சரியென்று இணங்கி அவனிடம் ரோஜாப்பூவில் மயக்க மருந்தைத் தடவிக் கொடுத்தேன். அந்த விஷம் சாமான்யமல்ல!—எண்ணங்கள் அப்படி அப்படியே கட்டுப்பட்டு நிற்கும்! கடைசியில் திருமண விழாவிற்குப் போனபோதுதான் அழகேசனுடைய மூடு மந்திரத்தை என்னுல் புரிந்து கொள்ள முடிந்தது. என்னை ஏமாற்றியதைப் பற்றி அக்கறையில்லை. ஆனுல், அபலை ஒருத்தியின் வாழ்க்கையைச் சூறையாடி விட்டானே என்ற ஆத்திரம் தோன்றியபோது, அவனைப் பழி வாங்கினுல்தான் நல்லதென்று முடிவு கட்டினேன். நான் என்னையும் அறியாமல் செய்த ஒரு செயல்—அதாவது மேற்படி சம்பவங்களைப் புகைப் படங்களில் அடைத்த அச் செயல்—எனக்குப் பேருதவியாக அமைந்தது.

"ரகசியத்தை வெளிக்காட்டாமல், உள்ளூர அவனிடம் மனம் வெறுத்து நடந்து கொண்டேன். ஒன்ருகப் படித்தவர்கள் நாங்கள் என்பதை அவன் மறந்துவிட்டான். அவனுக்கு முன்னுல் நானும்

மறந்தேன். பொய்க் கேஸில் என்னை அகப்பட்டுக்கொள்ளச் செய்தான். உங்கள் தம்பியையும் சந்தேகப்பட்டு மேற்படி திருட்டு வழக்கில் இழுத்துவிட்டான். என்னிடம் உள்ள ' நெகடிவ் ' ரொம்பவும் உதவியது. ' உன்னை ஜெயிலில் அடைத்துவிட்டு மறு ஜோலி பார்க்கிறேன்' என்று அவனிடம் நான் சபதம் செய்தேன். அவன் ஆத்திரப்பட்டு என்னைச் சுட முயன்றபோது, 'கிளிக்' சத்தம் கேட்டது. திரும்பினுன் என் ஆள் அக்காட்சியைப் படமெடுத்துவிட்டான். கஜேந்திரனின் தந்திரங்களை அவன் இப்போதுதான் அறிந்துகொள்ள முடிந்தது போலும் ! நான்கு சுவர்களுக்கு மத்தியில்தான் அழகேசன் தன்னை உணர்ந்து கொண்டிருக்கிறுன். அவர் உயிர் என் பிடியில் அகப்பட்டிருப்பதை அவன் புரிந்துகொண்டு விட்டான். என் போட்டோ ஆல்பத்தை அழகியின் கண்களில் காட்டாமல் இருக்கும்படி உங்கள் தம்பி கரிகாலனிடம் வேண்டினேன். ஆனுல் அழகி அதைப் பார்த்து விட்டதாகவும் சேதி கிடைத்தது. எந்த ஒரு நடப்பையும் எத்தனை நாளைக்குத்தான் போர்வை போட்டு மூடி வைக்க இயலும் ?...அழகேசனைப் பற்றிய இந்த ரகசியங்களைச் சொல்லி, அழகியின் வாழ்வில் புதுமலர்ச்சியையோ அல்லது ஏதாவது ஒரு திருப்பத்தையோ உண்டாக்கச் செய்தால்தான் நான் அவர்களுக்குச் செய்த பாவத்திற்குப் பரிகாரம் கிடைக்கும் என்பது என் நினைப்பு. அதற்கு ஒரு வழி செய்யவே இன்று வருவதாகச் சொல்லி யிருந்தேன்... ! ''

பத்து நிமிஷப் பேச்சை முடித்தார் கஜேந்திரன்.

இப்பொழுதும் சுசீலா திக்பிரமை அடைந்தாள். குழம்பினுள் !

உலக மாதா கறுப்புத்திரையை அணிந்தாள். கண் பறிக்கும் நட்சத்திரப் பூக்கள் கண் சிமிட்டின.

" அக்கா,'' என்று விளித்து வந்தவள் நர்ஸ் தாமரை.

" அப்புறம் உன் திட்டம் என்ன ? " என்று வினவினுள் சுசீலா.

" அழகி என்னிடம் ஒரு விண்ணப்பத்தைக் கேட்டிருக்கிருள். நான் அழகியிடம் ஒரு வேண்டுகோளை யாசிக்கப் போகிறேன். அவள் எனக்கு நல்ல சொல் சொன்னுல்தான், அவள் விருப்பப்படி முரளியின் நிழலிலே நான் நிற்பேன்,'' என்று தீர்மானமாகப் பேசினுள் தாமரை.

" அழகியின் வேண்டுகோள், முரளியும் நீயும் காதலர்களாக —கணவன் மனைவியாக ஆக வேண்டுமென்பது. ஆனுல் அழகியிடம் நீ என்ன யாசிக்கப் போகிருய் ? "

" அவள் அழகேசனுடன் வாழ்க்கை நடத்த வேண்டும். இதுதான் என் கனவு. மிஸ்டர் அழகேசன் 'மனிதராக' ஆகிவிட்டாரென்று அறிந்தேன். ஆகவே, அவரை இனியும் பழிவாங்க

வேண்டுமென்பது அழகியின் லட்சியமானுல் அது தவறு. எந்த மனிதனும் என்றென்றுமே மிருகமாக இருக்கமாட்டான்; ஒரு நாள் மனிதனுக மாறித்தான் தீருவான். ஏன், முரளியைத்தான் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்களேன். அவர் ஆடாத ஆட்டமா? தகாத நடவடிக்கைகளின் காரணமாகச் சிவப்புத் தொப்பிகளுக்கு வேலே வைத்த மனிதர், இன்று நானே அதிசயப்படும்படி மாறி விட்டாரே ?... அழகேசன் மட்டும் ஏன் மாறமாட்டார் ?... நான் தஞ்சாவூரிலிருந்து திருச்சியில் உறவினர் வீட்டில் இருந்தபோது, அழகேசனுடைய தவருன போக்கைக் கேள்விப்பட்டேன். மைலாப்பூரில் திருமணத்துக்கு வந்து இறங்கியிருந்த அழகிக்கு லெட்டர் எழுதித் தெரிவித்தேன். அப்படிப்பட்ட அழகேசன்தான் புத்தி தெளிந்து விட்டாரென்று, அதே நான்தான் இப்பொழுது ஆயிரம் தரம் சொல்கிறேன்...! அப்படித்தான் அவர் மாருவிட்டால், இவள் அவரை மாற்ற முற்படவேண்டும். அழகி தான் ஒரு பெண் என்பதையே மறந்து விடுகிருள்...பாவம் !...''

மருத்துவப் பணிப் பெண்ணின் இதயம் உரைத்த பேச்சு சுசீலாவிற்கு அதிசயமாக யிருந்தது. பெரியவரை மாடியில் வைத்து விட்டுக் 'கதைத்துக்' கொண்டிருந்தது அவள் நினைவுக்கு வந்ததும், காப்பியுடன் உயரச் சென்ருள்.

மல்லிகேஸ்வரர் கோயிற் கோபுரம் ஒளி ஏந்தி நின்றது. "ஆண்டவனே, உன்னை நம்ப ஆரம்பித்திருக்கிருள் அழகி; அவளை அவள் கணவர் அழகேசனுடன் வாழ அனுக்கிரகம் செய் !'' என்று பிரார்த்தித்தாள்.

கீழே வந்தபோது, "அக்கா, அழகி எழுந்திருக்கவேயில்லை ! பூட்டின கதவும் திறக்கக் காணும். என்ன மாயமோ தெரியலேயே !'' என்று பதட்டத்துடன் சொன்னுள் வேலைக்காரி வள்ளி.

உள் அறையின் கதவுகளை உடைத்துத்தான் திறக்க முடிந்தது. அழகி செத்த பிணம்போல பிரக்ஞையின்றித் தரையில் கிடந்தாள். பக்கத்தில் கசங்கிய காகிதக் கிழிசல் காணப்பட்டது. அதில் வெள்ளைத் தூள் ஒட்டியிருந்தது. "ஐயையோ, விஷமா ?'' என்று அலறினுள் சுசீலா. அந்திச் செவ்வானம் அப்பொழுதேதான் மழை பொழியும் !

"பயப்படாதீர்கள், அக்கா ! உட்கொள்ளத் தயாரித்த விஷத் தூள் பொட்டலத்தை மாற்றி, தூக்க மருந்துப் பொட்டலத்தை அந்த இடத்தில் வைத்துவிட்டேன். அழகியை முழுக்க முழுக்க அறிந்தவள் நான். ஆனதால்தான் அவளையும் காப்பாற்ற முடிந்தது. அழகேசனுக்குச் சொந்தமான உயிரைப் போக்கடித்துக் கொள்ள இவளுக்கு ஏது உரிமை ? இவள் கழுத்தை அலங்கரிக்கும் மாங்கல்யத்துக்குத் துரோகம் செய்ய இவளால் முடியாது...! முடியவே முடியாது !'' என்ருள் தாமரை.

## 12. தெய்வத் திருவிளக்கு ஏற்றி வைத்தாள்!

"ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்... ?"

இந்த ஒரு கேள்வி—ஒரே ஒரு கேள்வி அழகியின் இதயத் தளத்திலிருந்து ஒன்பது கேள்விகளாக, தொண்ணூறு கேள்விகளாக, தொள்ளாயிரம் கேள்விகளாக மாறி எதிரொலி பரப்பிக் கொண்டிருந்தது. கைகொட்டித் தவழ்ந்த கடல் அலைகள் மெய் விதிர்த்து நின்றன. குரலெடுத்துப் பாட பண் சேர்த்து இசையமைத்துக் கொண்டிருந்த மாருதம் செயலற்றுப்போனது.

அழகி திக்கெட்டிலும் விழிகளைத் திசை திருப்பினாள். சூன்யம் அட்டகாசமாகச் சிரித்தது. 'விதியின் குரலா அது ? அல்லது, நியதியின் அழைப்பா அது? அல்லது, ஆண்டவனது தீர்ப்பின் ஓசையா? அல்லது, அவர்—அழகேசன்தான் கூப்பிடுகின்றாரா ...?'

தான் அழகி என்பதை உணர்ந்தாள். அப்போது வாலைக் குமரியான அழகி தோற்றம் தந்தாள். ஆசை நினைவுகளைக் கண்களிலே தேக்க விட்டு ஒயிலாக நின்றாள் அந்த அழகி. அப்பொழுது எதிர்காலம் அவள் முன் பசுஞ்சோலையாக—காதற் பூங்காவாக—கனவுகள் சிரித்து வரவேற்கும் பூலோக சொர்க்கமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். ஆனால் இப்போது அவள் மனக்கண் முன் வேறொரு அழகியின் உருவம் தோன்றியது; ரசமிழந்த கண்ணாடியில் தெரியும் முகம்போல பொலிவு மறைந்து காணப்பட்டாள். கண்ட கனவுகள் களவு போய்விட்டனவென்று மொழிந்தன அவை; வருங்காலம் பேய்க்காடாகி விட்டதே என்று அவை புலம்பின. அந்த அழகி வெறும் அழகியல்ல ; திருமதி அழகேசன் !—ஆமாம், அழகி அழகேசன்...!

'சிவனே' யென்று நிச்சிந்தையுடன் 'ஜலதரங்கம்' வாசித்துக் கொண்டிருந்தது விரிகடல். அதற்குப் பேசத் தெரியவில்லை. தெரிந்திருந்தால், அழகியின் கண்ணீரைத் துடைத்திருக்காதா ?...ஆனாலும் சூழல் கடலின் நோக்கு முழுவதும் அழகியைச் சுற்றியேதான் கட்டுண்டிருந்தது. 'அருகிருந்த தோழி தாமரையைப் பிரிந்து அவள் மெல்ல மெல்ல ஏன் தள்ளி உட்கார வேண்டும் ?' என்பதாக அதற்கு ஒரு குருட்டுச் சந்தேகம்.

"ஊஹூம், முடியாது ! அழகேசனுடன் நான் வாழவே முடியாது ! நான் ஜாதி ரோஜா. தேவலோகத்து ராஜாத்தி நான். அற்ப

மனிதன் ஒருவனுக்கு என் கழுத்தைக் கொடுத்தது போதும்; அத்துடன் அழகேசன் திருப்தியடையாமல்போனால், என்னுடைய உயிரையும் வேண்டுமானால் கொடுத்து விடுகிறேன். ஆனால் என் உள்ளத்தை ஒருபோதும் தாரை வார்த்துக் கொடுக்க மாட்டேன். செந்தாமரை, நீ யல்லவா என்னைச் சித்திரவதை செய்கிறாய்? நேற்று இரவிலிருந்து உன் கொடுமைதான் என்னை அணு அணுவாகச் சாகடித்துக் கொண்டு வருகிறது. நான் உயிர் துறப்பதைப் பற்றிக் கவலைப் படவில்லை. என்றோ நான் மடிந்து விட்டேன். அழகேசன் அவர்களின் கை ஸ்பரிசம் என் மேனியில் பட்டு, கழுத்தில் மங்கல நாண் ஏறிய அன்றைக்கே நான் நடைப்பிணமானேன்; ஆனால், இப்பொழுது எனக்குச் சாக மனமில்லை. என்னை உயிருடன் வாழ விடு. அதாவது நீ என் அத்தான் முரளியுடன் இதயத்தோடு இதயம் பிணைந்து, உயிருடன் உயிர் இணைத்து மணவறையிலே காட்சியளிப்பதைப் பார்த்து மகிழும்வரை என்னை வாழவிடு!...சகோதரி, என்னைச் சோதிக்காதே, நான் தெய்வமல்ல!—என்னிடம் வரம் கேட்கிறாயே? நான் என்ன செய்வேன்?... கொல்லும் புலியிடம் கொஞ்சும்கிளி தலைகொடுக்கும்படி பணிக்கிறாயே?...என் வேண்டுகோளுக்கு நீ மனம் இரங்கு. என் அத்தான், ஆமாம், என் அருமை அத்தான் முரளியின் வாழ்வில் வசந்தம் வரச்செய். அதற்காக என் வாழ்வைப் பணயம் கேட்காதே! தருமமல்ல இது; நியாயமல்ல இது! நேர்மையல்ல இது! அழகேசன் மிருகமாயிருந்தவர் மனிதராகி விட்டிருக்கலாம். ஆனாலும் என் உடலை அவருக்கு விற்க தயாராக இல்லை—என் மாமனார் ஏந்தி நிற்கும் பத்து லட்சம் ரூபாய்க்கு! அழகேசனுக்குத் தேவையெல்லாம் என் உடல்தான்; உள்ளமல்ல; அவருடைய மிருக வெறிக்கு மாடப்புறாவை—ரோஜாப் பூவை—பைங்கிளியைப் பலி கொடுக்கச் செய்துவிடாதே, தாமரை! கெட்டவராக யிருந்த முரளி அத்தான் நல்லவராக மாறிவிட்டாரென்றால், அவரை அப்படிச் செய்த பெருமையில் உன்னைவிட எனக்குத்தான் மிகுதிப் பங்கு உண்டு என்பதை மட்டும் மறந்து விடாதே!... அழகேசன் பெயரை உச்சரிக்கவே நா கூசுகிறது; அவர் எனக்கு எழுதிய ஒரு காதல் கடிதத்தைப் பார்த்தபோது, எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஒரு வகையில் நான் வாழ்க்கையில் தோற்றாலும், இன்னொரு வகையில் நான் வெற்றிதான் பெற்றேன். அழகேசன் என் எண்ணங்களை மயக்கி என்னைக் கடிமணம் செய்துகொண்டிருக்கலாம்; ஆனால் என் மட்டில் அவர் என்ன பயன் கண்டார்?—பொய்யாய், கனவாய், பழங்கதையாய் நான் எவ்வாறு ஆனேனோ, அப்படித்தான் அவர் கனவும் ஆசையும் இன்பமும் அழிந்து விட்டன. பெண்ணின் வாழ்வு தன் கணவனின் நிழலிலேதான் பூரணத்வம் அடையுமென்று நான் எழுதியதைச் சுட்டிக்காட்டுகிறாய்!—அந்தப் பூரணத்வம் எனக்கு வேண்டவே வேண்டாம்! நான் தமிழ்ப்பெண்

—மறக்க மாட்டேன். அதற்குத்தான் அழகேசன் பேரில் வழக்கு தொடுப்பதைக்கூட மறந்து விட்டேன், நேற்று இரவிலிருந்து. விதி செய்த பிழையைத் திருத்துவது முடியாது!—அழகேசனுடைய தாலி எனக்கு பூவும் மஞ்சளும் தரட்டும். தஞ்சை என்னை அழைக்கிறது. அங்கு என்னுடைய இலக்கியப் பணி தொடரும். ஓரளவு அமைதி பெறுவேன். என் மாமனர்—அவர் மட்டும் அன்றைக்கு உடல் நலத்தோடு இருந்திருந்தால், இந்த அபாக்கியவதி பாக்கியவதியாகத் திகழ்ந்திருப்பேன்!...எல்லாம் பழங்கதை! ஆறின கஞ்சி; பலிக் காத கனு!...''

அழகி இன்னும் என்ன வெல்லாமோ பேசத் துடித்தாள். அதற் குள் செந்தாமரை குறுக்கிட்டாள்: ''அழகி, எனக்கு மண்டை வெடித்துவிடும் போலிருக்கிறது; தயவுசெய்து அத்தோடு நிறுத்து!''

ஒரு கணம் அழகி சித்தபேத மடைந்தவள் மாதிரி 'கடகட' வென்று சிரித்தாள். மறுவினடி, ''பயப்படாதே, தாமரை!...என் வேண்டுகோளை நீ மறுத்தால், என் நிலை இப்படித்தான் ஆகுமென் பதற்கு இது ஒரு ஒத்திகை,'' என்று எச்சரித்தாள்.

மெரினு கடற்கரையில் அன்று அழகிக்கு உயிர் தந்தவன் கரி காலன். இன்று அழகிக்கு உயிர் கொடுக்க செந்தாமரை உறுதி பூண்டாள்.

கண்ணுமூச்சி விளையாட்டிலே கண்களை இறுகக் கட்டிக் கொண்ட குழந்தைக்கு எல்லாம் இருட்டாக இருக்கும்; அது திண் டாடும். ஆனல் அக்குழந்தையின் திண்டாட்டத்தைக்கண்டு, விளை யாட்டில் கலந்துகொண்ட மற்றப் பிள்ளைகள் கை கொட்டிச் சிரித்து வேடிக்கை பண்ணுவது உண்டல்லவா?

கண்கள் கட்டப்பட்ட குழந்தையின் நிலையில் இருந்தாள் அழகி. கண்டும் காணுமலும் உலகம் அவளை ஏளனம் செய்வதாகப் புலப்பட்டது. அவள் அழுதாள்; அரற்றினள்; அலறினள்; துடித் தாள்; துவண்டாள்; தன்னை யாரோ, துண்டு துண்டாக வெட்டிக் கூறு போட்டிருப்பதாக உணர்ந்தாள்.

முதல் இரவை ஆசையுடன் வரவேற்கக் காத்திருக்கும் குலச் சுடரின் குதூகலம்போல, நிறைமதிப் பெண் நல்லாள் பிறைத் திலகம் இட்டுக் கோலாகலமாகத் திகழ்ந்தாள்.

கூடத்துக் கண்ணாடியில் தெரிந்த தன் நெற்றிக் குங்குமத்தைக் கவனித்தாள் அழகி. சிறிதளவு கலைந்திருந்தது. சுட்டுவிரல் நகக்கண்ணினல் குங்குமம் எடுத்து அதை நெற்றியில் வைத்தாள். மறு கணம், அவள் உடம்பு நிலை பெயர்ந்து குலுங்கத் தொடங்கியது. 'உனக்கு மஞ்சள் குங்குமம் தந்தது யார்?' என்ற குரல் எங்கி

ருந்தோ புறப்பட்டது. 'யார், அழகேசன்!' என்று தன்னை மறந்து—தனக்குள்ளாகப் பேசிக்கொண்டாள் அவள்.

'அந்த அழகேசனை வாழவைக்கா விட்டால், உனக்கு வாழ்வு ஏது? வளம் ஏது? குங்குமம் ஏது? மாங்கல்யம் ஏது?' என்று மறுபடியும் ஒரு குரல் வெடித்தது.

அப்பொழுது, "அழகி, உன்னை அழகேசன் பார்க்கவேண்டுமாம்," என்ற செய்தியை அஞ்சல் செய்தாள் தாமரை.

'என்னைப் பார்க்க அழகேசன் வந்திருக்கிறாரா?' என்று தன்னைத்தானே கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள். அதற்குள் அழகேசன் உள் அறையில் பாதம் எடுத்து வைத்து விட்டான்.

விண் அரங்கில் நிலவுக் கன்னி 'ஸரிகமபதநிஸ' என்று ஸ்வரங்கள் பயின்று கொண்டிருந்தாள். அடைக்கப்பட்ட கதவுகளுக்குள்ளே இரட்டை உள்ளங்கள் சிறை யிருந்தன. அழகேசனைக் கண்டதும் அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. அவளையும் அறியாமல் எழுந்து நின்றாள்!—தீக்குச் சிரிக்கத் தெரியுமா?

"உட்கார், அழகி!" என்று பவ்யமாகச் சொன்னான் அழகேசன்!—தீ சுடாதோ?

அழகேசன் என்றுமில்லாத அழகுடன் விளங்கினான். மணவறைக் கோலத்தில் இருந்த அழகேசனை அவள் பார்த்தது சரியாக நெஞ்சில் தங்கி யிருக்கவில்லை. ஆனாலும், திருமணம் முடிந்து மயங்கிக் கிடந்த அவளை சைக்கிள் ரிக்ஷாவில் வைத்துக் கரிகாலன் இதே இல்லத்தில் சேர்ப்பித்த சில பல நிமிஷங்கள் கழிந்ததும், அழகேசன் அவளைத் தேடிவந்த போது தெரிந்த அழகேசனுக்கும் இவனுக்கும் மலைக்கும் மடுவுக்குமாக வித்தியாசம் காணப்பட்டது போல அவளுக்குத் தோன்றியது. 'எல்லோரும் சாதிப்பதுபோல இவரின் உள்ளம் திருந்திவிட்டிருக்கிறதா? இல்லை, உருவம் மாத்திரம்தான் மாறி விட்டிருக்கிறதா?' என்று அவள் மனச்சாட்சியைக் கலந்து ஆலோசித்தாள்.

அது தருணம், "...அ...ழ...கி!" என்றார் அழகேசன். "உன்னுடன் புதிய உருவம் புனைந்த அழகேசனாக நான் இப்போது பேசவில்லை; புத்தம் புதிய உள்ளம் கொண்டவனாகப் பேசுகிறேன். நான் செய்த தவறுகள் எனக்குக் குழி பறித்தன. அதில் நான் அழுந்தித் திக்குமுக்காடித் திணறினேன்; இன்று மனிதத் தன்மையை மீட்டுக் கொண்டிருக்கிறேன். மிருகமாக இருந்த அழகேசன் மனிதனாகி—மனிதப் புழுக்களில் ஒருவனாகி நின்று—மனிதத் தன்மைபெற்ற சில மனிதருள் ஒருவனாகத் தனித்து ஒதுங்கி நான் உன்னிடம் பேசுகிறேன். ஆபத்துக்கு எனக்கு உதவியவள்

நீ ; ஆனாலும் உன்னை ஆட்டிப் படைத்தேன். 'குற்றம் செய்வது மனித இயல்பு ; ஆனால் அதை மன்னிப்பது தெய்வப் பண்பு' என்ற பெரியோர் வார்த்தைகளை எனக்கு ஆரணாக்கிக்கொண்டு, என் தவறுகளுக்கு வக்காலத்து வாங்குவதற்கு இப்போது நான் உன்னிடம் வரவில்லை. நான் உனக்கு இழைத்த தீச்செயல்கள் ஒன்றிரண்டல்ல ; உன் பேரில் நான் பற்றியிருந்த காதல், வெறுங் காதலல்ல !—காதல் வெறி...! நான் உணர்ச்சிவசப்பட்டவன் !—உணருகிறேன். தஞ்சையிலே உன் முக தரிசனம் கிடைத்தது. உன்னுடைய தெய்வீக அழகு என்னைக் கிறுக்காக்கியது ; நான் புத்தியிழந்தேன். அதன் விளைவினால்தான், உன்னிடம் என் தாலியைச் சமர்ப்பிக்க முடிந்தது. தூரத்து உறவு என்றாலும், எட்டிய முறைமையானாலும், உன்னைத் திருமணம் முடித்துக் கொண்டால், நாம் ஒத்துவாழலாம் என்று ஆசையுடன் எண்ணி னேன். திருமண ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன. படுத்த படுக் கையாகக் கிடந்த என் அப்பா என் பெயருக்கு எழுதிக்கொடுத்த ஐயாயிரம் ரூபாய் செக் என் கௌரவத்துக்கு வாழ்த்துக் கூறியது. ஆனால், நீ தந்த விலாசங்களுக்கும் சேர்த்து கல்யாணப் பத்திரிகை அனுப்பிய சமயத்தில், திடுதிப்பென்று உன் மனம் என்னை விரும்ப வில்லையென்பதை உன் தகப்பனார் மூலம் அறிந்தேன். திருமண ஏற்பாடுகள் முடிந்து முகூர்த்தத் தேதி நெருங்கிக் கொண்டிருக்கை யில், நீ சொன்ன பதில் என் கௌரவத்தை விழுங்கிச் சாப்பிட்டு விட எத்தனித்தது ; நான் என் கௌரவத்தைக் காப்பாற்ற முயன் றேன். விளைவுகள் பயங்கரமாக விளைந்தன. உன் மீது நான் கொண்டிருந்த ஆசை அவ்வளவு இவ்வளவல்ல. என் ஆசை வெட்கமறியவில்லை. கடைசியில் நடந்த கதை என் அப்பாவுக்குத் தெரிந்தது. எங்கள் வீட்டு ரோஜாவான உனக்கு என் அப்பா முள்ளாக அமைந்தார்—உன்னை என்னிடமிருந்து காப்பாற்ற !... முள்ளைப் பிடுங்கித் தீயிலிடும் அளவுக்குக்கூட உன் அழகு என்னை மிருகமாக்கியது. நான் விந்தை மனிதன்தான் ! ஆனாலும் நேற்றுவரை, நான் உன்னுடன் வாழ முடியும் என்றுதான் கனவு கண்டேன் ; நீ மனம் திருந்தி—அல்ல, மனம் மாறி என்னை ஏற்றுக் கொள்வாயென்றுதான் கோட்டை கட்டியிருந்தேன். நான் திருந்தி னால், நான் போலீசில் கொடுத்த பொய்க் கேஸ் என்னைப் பாதிக் காமல் காப்பாற்றுவதாக கஜேந்திரன் உறுதி சொன்னார் ; தாமரை ஆறுதல் தந்தாள். ஆனால், இன்றோ என் கனவுக் கோட்டை இடிந்து நொறுங்கித் தரை மட்டமாகி விட்டது !..." என்று விம்மி னான் அழகேசன்.

"அப்படியென்றால் நீங்கள் ஏன் இங்கே மறுதபாலும் வந்தீர் கள் ?..." என்று கேட்டாள் அழகி.

" யாருமறியா வேளையிலே உன்னிடம் மன்னிப்புப் பெறுவதற்குத்தான் நான் வந்தேன், அழகி...!"

" உலகத்தைச் சுடுகாடாக்கி விட்டு ஊழித்தாண்டவம் ஆடும் கடவுளா நீங்கள்...?"

" ஐயோ! என்னைத் தெய்வமாக்காதே! ஊழித்தாண்டவம் புரிந்தவனைத்தான் நாமெல்லாம் இன்றுகூட வணங்குகிறோமே!... ஆனால் நான் சாதாரணமான மனிதன்; உன்னிடம் மன்னிப்பு கேட்க வென்றே ஓடோடி வந்திருக்கிறேன். நீ தேவலோகத்துக்குரிய ராஜாத்தி. வெறும் மனிதனான நான் அண்டவே முடியாது!... என்னை மன்னித்துவிடு. 'மன்னித்தேன்' என்று சொல். உன்னுடைய மன்னிப்பு கிடைத்து விட்டால்தான், என் மிருக வெறி அடங்கும்; அப்போதுதான் உலகம் என்னை மனிதனாக ஏற்கும். உன்னுடைய மன்னிப்பு என் காதுகளிலே விழுகின்ற அந்தக் கணத்திலே, நான் உன்னுடன் ஒரு நூறு வருஷம் வாழ்ந்துவிட்டது போன்ற ஆறுதல் பெற்று விடுவேன்; ஆனந்தம் எய்தி விடுவேன். ஆகவே, ஒரு கணப் பொழுதுக்கு என்னை வாழவிடு, அழகி! ஒரே ஒரு கணம் என்னை உன்னுடையவனாக வாழவிடு!..." என்று சொல்லிய அழகேசன் அழகியை நெருங்கி, அவளது கைகளைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான். அழகியின் பூங்கரங்களில் வெம்மை தணியாத கண்ணீர்த் துளிகள் பல விழுந்து தெறித்துக் கொண்டிருந்தன. அழகேசனுடைய கைகள் நடுங்கின; தன் இதயத்தைப் பிடித்து அழுத்தினான்; அவன் கண்கள் தத்தளித்தன.

" நீங்கள் துரோகி! நீங்கள் இந்த உலகத்திலே கணநேரங் கூட வாழக்கூடாது. என் முன்னாலே நிற்காதீர்கள்! ரோஜாப் பூவைக் கருகி மடியச் செய்துவிட்டு, கடைசிக் காலத்திலே மன்னிப்பு கேட்க வந்துவிட்டீர்களே! போங்கள்...உங்களைப் பெற்றவரிடம் மன்னிப்பு கேளுங்கள்; உங்களைப் படைத்தானே அவனிடம் மன்னிப்பு கோருங்கள்! அழகி உங்களை மன்னிக்கவே மாட்டாள்! இனியும் உங்கள் நிழல் என்மீது பட்டால் என் உயிர்ப்பூ கருகி விடும்! ஓடுங்கள்! நான் தீ!...கெட்டதை நெருங்கவிடாமல் காத்துக் கொள்வதற்கும், கெட்டதைச் சுட்டுப் பொசுக்கவும் நெருப்பு உபயோகப்பட வேண்டும் என்று என் அப்பா சொல்லுவார்கள். ஆகவே, ஓடி விடுங்கள்! நான் தீ!..." என்று அழகி வெறியுடன் பேசி முடித்துத் திரும்பியபோது, தடாலென்று சுருண்டு விழுந்தான் அழகேசன்.

தன்னையும் மறந்து " ஆ!... ஐயோ!" என்று அலறிவிட்டாள் அழகி.

செந்தாமரை, சுசீலா, வள்ளி மூவரும் முன்னால் ஓடி வந்தார்கள். அதற்குப் பிறகு, ராமலிங்கம், முரளி, கரிகாலன் மூவரும் வேகமாக வந்தார்கள்.

அழகேசனின் நிலையைச் சோதித்தாள் நர்ஸ் செந்தாமரை.

" ஐயோ, அழகேசனைக் கொன்று விட்டாயா, அழகி ?..."

" ஐயையோ ! தாமரை, நான் அவரைக் கொல்லவில்லை ...! என்று நடுங்கினாள் அழகி.

" இல்லை, நீதான் கொன்று விட்டாய் ! நீ சுயநலக்காரி !... உன் சுயநலம் அழகேசனைக் கொன்றது ; இன்னும் கொஞ்ச நாழிகையில் செந்தாமரையையும் பழிவாங்கப் போகிறது ...! உன் நெஞ்சில் பதியாத அழகேசனைப் பழிவாங்க துடித்த நீ, அந்த யோசனை கைநழுவிப் போனதை உணர்ந்து உன்னை நீயே சாகடித்துக் கொள்ள முயன்றாய் ; அது தோல்வியில் முடியவே, இப்போது திருந்திய அழகேசனைக்கொன்றுவிட்டாய் !... நீ பெண் அல்ல; பெண் பேய்... ! நீ ரோஜாவா ?... ஆம், ரோஜாவேதான் !... விஷரோஜா ! தீ ரோஜா ! அழகேசனின் மூச்சு உன் உடம்பில் பட்டால்கூட உன் உடல் சாம்பலாகி விடுமென்றாயே ?... அது பொய்; இப்போது உன் விஷக்காற்று அழகேசன் மீது வீசியதும் தான் அவர் சாய்ந்து விட்டார் ! நீ நெருப்பு ; அவரைப் பொசுக்கி விட்டாய் நீ ! அழகி, சிந்தித்துப்பார் ! நீ அந்நாளிலே கண்ட இன்பக் கனவை மாத்திரம் தியாகம் செய்துவிடச் சம்மதித்திருந்தால், அழகேசனிடம் நீ கொண்டிருந்த பழியுணர்ச்சி தணிந்திருக்காதா ? நீ உன்னையே தியாகம் செய்ய மனம் ஒப்பியிருந்தால், அழகேசனைத் திருத்தியிருக்கலாமே !...பெண்ணுக்குப் புதுமைப் பண்பு தேவைதான் ; புரட்சிப் பண்பும் தேவைதான் ! ஆனாலும், நம் தமிழ்ப் பண்பை நீ மறந்து விட்டாயே ?... விதி உன்னையும் அழகேசனையும் பிணைத்து விட்டது. இது விட்ட குறை தொட்ட - குறை !.. ஆனால் விதியையும் மீறி உன் போக்குக்கு உன்னை மாற்றப் பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்தாயே !... வென்றாயா ? இல்லை ! என் சுயநலத்தை உனக்காகத் தியாகம் செய்யும் படி கெஞ்சினாய் ; அதே சமயம் நீ எனக்காக உன் சுயநலத்தைத் தியாகம் செய்ய இன்று வரை ஒப்பவில்லையே ?... கருணை, தியாகம், மன்னிப்பு முதலிய தெய்வப் பண்புகளை மகாத்மா போதித்ததை ஆசிரியையான நீயே மறந்து விட்டாயே?... நீ உன்னை ரோஜா என்பாய்; அதே சமயம் முள் இருக்குமென்ற நியதியையும் நினைக்கவில்லை; அந்த முள்ளை நீக்கும் பண்பு, சாகஸம் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர் கையிலல்லவா இருக்கிறது !—உன் கல்யாணத்தின்போது நம் கரிகாலன் கொடுத்த பரிசுப் புத்தகத்தில் இதே குறிப்பைத்தானே எழுதி எச்சரித்திருந்தார் !...நீ உன்னை உணரத்

வறி விட்டாய்! ஆண்டவனை நீ நம்பு; நம்பாமல் இரு; ஆனல், அதே ஆண்டவன் கிழித்த வளையத்திற்குள்தான் வாழ்க்கை ஆட்டத்தை விளையாட வேண்டியவர்கள் நாம். இயற்கையின் நியதிக் கோட்டைத் தாண்ட நமக்கு அதிகாரம் ஏது? இப்போதாவது எண்ணிப்பார்! நீ அழகேசனுக்குச் சொந்தமான அழகி என்பதை அரைக் கணமாவது நினைத்துப் பார்! திருந்திய— திருத்தப்பட்ட புதிய அழகேசன் உன் கணவர் என்பதை எண்ணிப் பெருமைப்படு...! காணும் கனவுகள்—எண்ணும் ஆசைகள் நிறைவேறினல்தான், வாழ்வு ஆனந்தமாக அமையுமென்றல், அப்புறம் உலகமே சூன்ய வெளியாகித்தான் போகும்! நீ அழகேசனை மாத்திரம் அழிக்கவில்லை; உன்னையும் நீயே அழித்துக் கொண்டு விட்டாய்!"

செந்தாமரை உணர்ச்சிப் பெருக்குடன் பேசி நிறுத்தினள்.

சுற்றியிருந்தவர்களைப் பார்த்தாள்; எதிர்த்து ஒலித்த வார்த்தைகளைக் கேட்டாள். "ஆமாம்; நான் சுயநலக்காரி! நான் சுயநலக்காரி தான்!" என்று பிதற்றிக்கொண்டே, மயங்கிக் கீழே சாய்ந்தாள் அழகி.

டாக்டர் வந்தார். அழகியையும் அழகேசனையும் 'நாடிக் குழல்' பரிசோதித்தது.

"அழகி!...அழகி!" என்ற குரல் எழுந்தது. அழகேசன் எழுந்தான். புதிய உலகத்தில் அடியெடுத்து வைத்திருப்பவன் போல அவன் விழித்து விழித்துப் பார்த்தான். 'யானை அடி கல்' பதித்த தரையிலே அழகு ரோஜா கண் மூடிக் கிடந்தது. அவன் நெருங்கினன்; அழகியைத் தன் மடியில் கிடத்தியவாறு, அவளுடைய ரோஜா முகத்திலிருந்த பனித்துளிகளைத் துடைத்தான். இன்ப ஸ்பரிசம் பட்டதும், அழகி கண் மலர்ந்தாள். உதடுகள் துடித்தன; விழிநீர் சுரந்தது. "நீங்களா?" என்றள். தொடர்ந்து, "என்னை மன்னித்து விடுங்கள், அத்தான்!" என்று தேம்பினள்.

அழகேசன் உணர்ச்சி வசப்பட்டான்; விம்மினன்!

"அழகி, இப்பொழுதுதான் நீ தெய்வப் பெண்ணுகத் தோன்றுகின்றய். உன் வாழ்வை வளமாக்க வேண்டுமென்று பாடுபட்ட ...ங்கள் எல்லோரையும் வாழ வைத்து விட்டாய்!...உன்னையே ...தியாகம் செய்துகொண்டு, உன் புருஷன்—உன் அத்தான் ...ழகேசன் அவர்களின் வாழ்க்கையையும் மலரச் செய்து விட்டா...ல்லவா? ஆமாம், இனி நீ வெறும் ரோஜா அல்ல—ஜாதி ரோஜா! ...வலோகத்து ரோஜாவும் நீயேதான். நீ பிறவிப் பயன் பெற்று ...டாய்; நீ ஏற்றிவைத்த தெய்வத் திருவிளக்கின் ஒளியிலே உன் ...ணவர் புதுப் பிறப்பெடுத்து விட்டார். பெண்களிலே தனித்தியங்

ளுய் அன்று—உன் சுயநல உள்ளத்தின் விளைவினுல் ! ரோஜாப் பூக்களிலே தனித்த ரோஜாப் பூவாக மணம் பரப்புகின்ருய் இன்று —உன்னுடைய தியாகப்பண்பின் காரணமாக !...தீயிடம் தண்மை உண்டென்பதை நிரூபித்துக் காட்டிவிட்டாய் ; நீ இப்போதுதான் புதுமைத் தமிழ்ப்பெண் ; புரட்சிப் பெண். சகோதரி அழகி, சிரி, நன்ருகச் சிரி !...உங்கள் புதுமண வாழ்வு சிறக்க ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்,'' என்ருள் தாமரை.

தம்பதிகளுக்கு ஆரத்தி எடுத்தார்கள் சுசீலாவும் தாமரையும்.

அழகி குனிந்த தலையை உயர்த்தவில்லை. அவளது இதயம், "அலகிலா விளையாட்டுடைய ஆண்டவனே, என்னை மன்னித்து விடு; எனக்கு நல்வாழ்வு தா!'' என்று பிரார்த்தித்தது. அவள் விழி களை நிமிர்த்தியபோது, முரளியும் தாமரையும் இணைந்துநின்ருர்கள். அவளுடைய முகம் மகிழ்ச்சியால் நிறைந்தது. "என் கனவு இன்று தான் நிறைவேறியது!'' என்று புளகிதம் எய்தினுள் அழகி.

உயிர் மறந்து நின்ருர் பெரியவர் சோமநாதன். 'ஒரு மிருகம் மனிதனுக மாறிய அதிசயத்தை என் கண்ணுல் கண்டேன் ; ஒரு பெண் தன்னையே அழித்துக்கொண்டு தெய்வமாக மாறிய அதிசயத் தையும் இப்போதே கண்டேன் ! கற்பகாம்பிகைத் தா... உன் கருணையேதான்!.....' என்று தம்முள் சொல்லிக் கொண் டார்; கண்ணீர் சொரிந்தார்.

அழகிக்குக் கிடைத்த அயோத்தியிலே அழகேசன்—அழகி ஜோடிக்கு முகமன் கூறிக் கொண்டிருந்தது, அந்த முதல் இரவு ஆமாம்; அந்த முதல் இரவு !

**வாழிய, வாழியவே**